191

# ஹோமியோபதி

[ஹோமியோபதியர்களுக்கு மட்டுமின்றி பொதுமக்களுக்கும் பயன்படும் வகையில், ஹோமியோபதியின் முறைகள், ஆர்கனன், தத்துவஞானம், மெட்டீரியா மெடிக்கா, களஞ்சியம் மற்றும் பல பிரிவுகள் அனைத்தும் ஒன்ருய் சேர்க்கப்பட்டிருக்கும் ஓர் அரிய நூல்].

ஆசிரியர்:

ஜெ. பி. ஜெயா,

தலைவர்,

கன்னியாகுமரி ஜில்லா ஹோமியோபதியர்கள் சங்கம்,

நாகர்கோவில்.

L7
N61
101627

# ஹோமியோபதி

[ஹோமியோபதியர்களுக்கு மட்டுமின்றி பொதுமக்களுக்கும் பயன்படும் வகையில், ஹோமியோபதியின் முறைகள், ஆர்கனன், தத்துவஞானம், மேட்டீரியா மேடிக்கா, களஞ்சியம் மற்றும் பல பிரிவுகள் அனைத்தும் ஒன்றாய் சேர்க்கப் பட்டிருக்கும் ஓர் அரிய நூல்]


ஆசிரியர்:

ஜெ. பி. ஜெயா,

தலைவர்,

கன்னியாகுமரி ஜில்லா ஹோமியோபதியர்கள் சங்கம்,

**நாகர்கோவில்.**



[பதிப்புரிமை ஆசிரியருக்கே]

இப்புத்தகம் கிடைக்குமிடம்:—

**ஹோமியோ ஹவுஸ்,**

பாலமோர் ரோடு,

நாகர்கோவில்,

கன்னியாகுமரி ஜில்லா.

* * *

ஆசிரியரின் விலாசம்:—


**ஜெ. பி. ஜெயா,**

ஹோமியோபத்,

ஏசுவடியான் தெரு,

நாகர்கோவில்.

கன்னியாகுமரி ஜில்லா.


---


ஜெமினி அச்சகம், நாகர்கோவில்.

*Dedicated to*

**THE MEMORY OF**

**MY LATE ELDER BROTHER**

**Alfred Nicholas John**

மரித்துப்போன

*எனது மூத்த சகோதரன்*

**ஆல்பிரட் நிக்கலஸ் ஜான்**

ஞாபகார்த்தமாக வெளியிடப்பட்டது.

# முன்னுரை.
## (Introduction)

முதல் முதலாவதாக, இப்புத்தகத்தை வெளியிட சகல வசதிகளையும் அருளிய எல்லாம் வல்ல இறைவனுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆங்கிலப் புத்தகங்களை, அதிலும் குறிப்பாக சாஸ்திரப் புத்தகங்களை தமிழில் மொழிபெயர்ப்பது மிகக் கடினமான ஒரு முயற்சி என்பது வாசகர்கள் அறிந்ததே. ஏனெனில், சாஸ்திர ரீதியான ஆங்கிலப்பதங்களுக்கு தமிழ் அகராதிகளில் கொடுக்கப்பட்டிருக்கும் பதங்கள்கூட, எளிதில் புரிந்துகொள்ளக்கூடியவை அல்ல. என்றிருப்பினும் புத்தகத்தை எளிதில் கிரகிக்கக்கூடிய எல்லா முயற்சிகளும் கையாளப்பட்டிருக்கின்றன. வேண்டிய இடங்களிலெல்லாம் ஆங்கிலப்பதங்களும் சேர்த்தே எழுதப்பட்டிருக்கிறது.

நான் ஒரு தமிழ் வித்வானோ அல்லது தமிழில் விசேஷப்பயிற்சி பெற்றவனோ அல்ல. எனவே, வாசகர்கள் மொழி அழகிற்கு அதிகம் முக்கியத்துவம் கொடாது, கருத்துக்களை மாத்திரம் எடுத்துக்கொள்ளுமாறு மிகப்பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஹோமியோபதியின் சகல பிரிவுகளும் அடங்கிய ஓர் தமிழ் நூல் வெளியிடவேண்டுமென்ற அவா பல வருடங்கள் எனக்கிருந்தும், கன்னியாகுமரி ஜில்லா ஹோமியோபதியர்கள் சங்கத்தின் தலைவனாக செயல்படும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததே, இப்புத்தகத்தை விரைவில் வெளியிடத் தூண்டிற்று. ஏனெனில், சங்கத்தின் கூட்டங்களில் அங்கத்தினர் கேட்ட பல கேள்விகளிலிருந்து ஹோமியோபதியின் முறைகளை அவர்கள் ஓரளவு நன்கு கற்றிருந்தும், சில முக்கியப் பகுதிகளை அவர்களால் கிரகித்துக்கொள்ள முடியவில்லை என்று என்னால் எளிதில் புரிந்துகொள்ள முடிந்தது. மேலும், ஹோமியோபதியில் எவற்றைச் செய்யக்கூடாது என்ற அறிவும் அவர்களுக்குக் கூடுதல் தேவை என்ற நோக்கமும் என்னை

இப்புத்தகத்தை விரைவில் வெளியிடத் தூண்டிற்று. ஆனால் பரந்த கடலைப்போன்ற ஹோமியோ முறையின் சம்பூரண விளக்கங்கள் இப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற வீண் பெருமை கூருமல், ஹோமியோபதியின் முக்கியமான அம்சங்கள் யாவும் இதில் எழுதப்பட்டிருக்கிறது என்பதே என் கருத்து. மேலும் இப்புத்தகம், எந்த தனி நபரையோ, அல்லது ஸ்தாபனத்தையோ தாக்கும் நோக்கத்துடன் எழுதப்பட்டதல்ல. ஓரளவில் தமிழ்நாட்டின் ஹோமியோ ஸ்தாபனங்களின் தலைவர்களை நான் பாராட்டுகிறேன். ஏனெனில், வைத்தியக் கல்லூரிகளில் கிடைக்கும் பயிற்சிக்கு ஒப்பான மாணுக்கர்களை அவர்களால் பயிற்பிக்க முடியவில்லையெனினும், ஹோமியோபதியை நன்கு பரப்பி, அரசாங்கம் ஓர் ஹோமியோக் கல்லூரியை எழுப்ப முன் வந்திருக்கும் திட்டம், இவர்களின் முயற்சியே என்பது பெருமைப்படத்தக்கதே.

இப்புத்தகத்தைப் படிக்கும் வாய்ப்பு கிடைத்தவர்கள் மிகப் பொறுமையுடன் இதைப் படிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். ஒருமுறை படிப்பதின்மூலம் யாவற்றையும் புரிந்துகொள்ள முடியாது பல முறைகள் படித்தால் தான், கருத்துக்களை கிரகித்துக்கொள்ள முடியும். குறிப்பாக, ஆர்கனன் என்ற பகுதியை கிரகித்துக்கொள்வது மிகக்கடினம் டாக்டர் ஹனிமானுல் இப்பகுதியில் குறிக்கப்பட்டிருக்கும் வைட்டல் போர்ஸ் (Vital Force) என்ற தத்துவத்தை தமிழில் வியாக்கியானிப்பது எளிதல்ல. நான் இதை முக்கிய தத்துவம் என்று எழுதியிருக்கிறேன். சிலர் இதை அந்தராத்மா என்றும், சிலர் ஆத்துமா என்றும், சிலர் அந்தரங்க சக்தி என்றும் வியாக்கியானித்திருக்கின்றனர். ஆனல், ஹனிமானுல் குறிக்கப்பட்டிருக்கும் வைட்டல் போர்ஸ் அல்லது முக்கிய தத்துவம் என்பது உயிரல்ல, என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. முக்கியதத்துவம் என்பதை நாம் பொருளெனக் கண்டுகொள்ள முடியாத ஓர் சக்தி. முக்கியதத்துவம் சரியாக இயங்கும்பொழுதுதான், சரீரத்தின் எல்லா அவயவங்களும் ஒற்றுமையாய் இயங்கி உயிரை நிலைநாட்டுகிறது. இதைப்போன்ற பல கடினமான வியாக்

கியானங்களை ஆர்கனனில் பார்க்கலாம் ஆனால் பொறுமையுடன் இவற்றைப் பலமுறை படிக்கும்பொழுது, எளிதில் கிரகித்துக்கொள்ளலாம். ஆர்கனனை சரியாய் கிரகித்து, அதன்படி செயல்படாத எந்த ஹோமியோபதியரும் தன் தொழிலில் வெற்றி காண முடியாது. தத்துவ ஞானத்தையும் நன்றாய் அறியவேண்டியது மிக அவசியம்.

இப்புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கும் மெட்டீரியா மெடிக்கா பகுதி மிகக் குறைவானதே. ஓர் நல்ல மெட்டீரியா மெடிக்காவையும் இதேப்புத்தகத்தில் சேர்க்க வேண்டுமென்பது ஆசிரியரின் நோக்கமல்ல. ஏனெனில் ஓர் விரிவான மெட்டீரியா மெடிக்கா எழுதும்பொழுது, அது பல நூற்றுக்கணக்கான பக்கங்கள் கொண்டதாக மாத்திரமே இருக்கமுடியும். என்றிருப்பினும், மெட்டீரியா மெடிக்கா என்றால் என்ன என்பதை அறிந்து கொள்வதற்காக, சில முக்கிய மருந்துகளும், அவற்றின் முக்கிய குறிகளும் மாத்திரமே சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஹோமியோபதியின் தத்துவங்களை நன்கறிந்த பின், மெட்டீரியா மெடிக்காப் பகுதியைப்பற்றி கூடுதல் அறிய விரும்புவோர் இதர ஆசிரியர்களின் மெட்டீரியா மெடிக்காவைப் பார்க்கவும். என்னால் வெளியிடவிருக்கும், மெட்டீரியா மெடிக்கா மிகப் பெரிதாகையால், அது வெளிவர சிறிது தாமதமாகலாம்.

களஞ்சியப்பகுதி மிகவும் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. சுருங்கச்சொல்லின், குறிகளுக்கொத்த சரியான மருந்தையும், மருந்துகள் கொடுக்கப்படவேண்டிய எல்லா சட்டங்களும் யாவராலும் இப்புத்தகத்தின் மூலம் எளிதில் அறிந்துகொள்ளலாம் என்பதே என் கருத்து.

வாசகர்கள், இப்புத்தகத்தில் விளங்காத பகுதிகளையும், கூடுதல் விளக்கம் தேவை என்ற பகுதிகளையும், எனக்கு அறிவிக்க முடியுமாயின், நான் அவற்றை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு, அடுத்த பதிப்பில் இக்குறைகளை நிவிர்த்தி செய்ய ஏதுவாயிருக்கும். மேலும் இப்புத்தகத்தில் காணப்படும் கருத்துக்களின் ஆங்கில ஆதாரம் தேவைப்படுவோர் எனக்கு எழுதி அனுப்பினால், ஆங்கிலப் புத்தகத்தின் பெயரும், காணப்படும் பக்க

மும் எழுதி அனுப்பப்படும். அன்றியும், ஹோமியோபதியைப்பற்றிய சகல வியாக்கியானங்களும், நான் தேவைப்படுவோருக்கு இலவசமாக எடுத்துக்கூற தயாராயிருக்கிறேன். இந்நோக்கத்துடன்தான் எனது விலாசம் இப்புத்தகத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது. எனவே ஹோமியோபதியைப்பற்றின கூடுதல் விபரங்கள் வேண்டுவோர் நேரில் எழுதவும்.

ஆர்வம் உள்ளவர்கள் இம்மகத்தான சிகிற்சை முறையை எளிதில் கற்று, தம் குடும்பத்தினருக்கும், சமுதாயத்திற்கும் பயன்படத்தக்கவர்களாய் விளங்கவே, இப்புத்தகம் எழுதியதின் மற்றொரு நோக்கமாகும். அன்றியும், மியாசங்களைப்பற்றி யாவரும் அறியவேண்டியது மிக முக்கியமாகும். எனவேதான் இப்புத்தகம் பொது மக்களுக்கும் பயன்படும் ஓர் அரிய நூல் என்று சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது மியாசங்களின் நிலையையும், அவற்றின் கூட்டுறவினால், இறைவனால் சுகமாய் வாழ சிருஷ்டிக்கப்பட்ட மானிட வர்க்கம் எவ்வளவு சீரழிகிறது என்பதையும் பொதுமக்கள் அறிந்து கொண்டால், வருங்கால சந்ததிக்கு மிகவும் பயன்படும் என்பதே என் கருத்து. வேறெந்த சிகிற்சை முறையிலும் நம்பப்படாததும், ஆனால் ஹோமியோபதியர்கள் தங்கள் அனுபவத்தில் கண்டுகொள்ளும் தர்க்கிக்கமுடியாத இவ்வுண்மையான மியாசங்களும், டாக்டர் ஹனிமானால் எவ்வளவு பொறுமையான ஆராய்ச்சியின் பின் கண்டுபிடிக்கப்பட்டதென்பதை இப்புத்தகத்தின்மூலம் தெளிவாய் அறிந்துகொள்வதோடு, இவ்வுண்மைகளைத்தந்த அன்னாருக்கு, நாமும், நமது சந்ததிகளும் என்றும் கடமைப்பட்டிருக்கிறோம்.

இறுதியாக, இப்புத்தகத்தை வெளியிட எனக்கு உதவிபுரிந்த கன்னியாகுமரி ஜில்லா, ஹோமியோபதியர்கள் சங்கத்தின் அங்கத்தினர்களுக்கும், இதர சிநேகிதர்களுக்கும், நாகர்கோவில் ஜெமினி அச்சகத்தின் அதிபர்களுக்கும், தொழிலாளிகளுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்

வணக்கம்.

**ஆசிரியர்.**

# அட்டவணை,
## Index.

பக்கம்.


| | | |
|---|---|---|
| 1. | ஹோமியோபதியின் ஆரம்பமும் டாக்டர் ஹனிமானின் ஜீவியசரித்திரமும் | 1— 6 |
| 2. | ஹோமியோபதியின் அடிஸ்தானம் | 7 |
| 3. | ஹோமியோபதி மருந்துகள் தயாரித்தல் | 8 |
| 4. | வீரியங்களின் அளவு | 9 |
| 5. | ஹோமியோ மருந்துகள் வேலைசெய்வது எங்ஙனம் | 10—11 |
| 6. | ஹனிமானின் தத்துவ ஞானம் | 12 |
| 7. | வியாதிகளை சாஸ்திர ரீதியாக பிரித்தல் | 12 |
| 8. | குறிகளும் பாகுபாடுகளும் (2 பிரிவுகள்) | 13 |
| 9. | கிளினிக்கல் குறிகள் | 13 |
| 10. | மருந்துகளின் குறிகள் (2 பிரிவுகள்) | 14 |
| 11. | நிச்சயிக்கும் குறிகள் (7 பிரிவுகள்) | 15—19 |
| 12. | மனக்குறிகள் | 19 |
| 13. | கன்காமிற்றன்ற் குறிகள் | 20 |
| 14. | பதாலாஜிக்கல் குறிகள் | 20—23 |
| 15. | வியாதிகளின் காரணம் | 23 |
| 16. | மருந்துகளை கையாளவேண்டிய விதம் | 23 |
| 17. | மருந்துகளின் அளவு | 24 |
| 18. | திரும்ப மருந்துகொடுக்கும் சமயம் | 24 |
| 19. | வேறு மருந்து கொடுப்பது | 24 |
| 20. | பதாலாஜிக்கல் குறிகளின் உபயோகம் | 25 |
| 21. | மொத்தக்குறிகள் மாறுத நிலை | 26 |
| 22. | முக்கிய குறிகள் கிடைக்காத வியாதிகள் | 27 |
| 23. | மருந்துகளின் உறவு | 27 |
| 24. | மாற்று மருந்துகள் | 28 |
| 25. | மருந்துகளின் இணக்க உறவு | 28 |
| 26. | பூர்த்தி செய்யும் உறவு | 28 |
| 27. | கெடுதலான உறவு | 29 |

| | | பக்கம் |
|---|---|---|
| 28. | களஞ்சிய புத்தகம் | 29— 31 |
| 29. | வியாதியின் நிலையின் விளக்கம் | 31 |
| 30. | கையாளவேண்டிய வீரியங்களும் முறைகளும் | 32 |
| 31. | சரீரப்பிரகருதி சிகிற்சை | 32 |
| 32. | இசோபதி | 33 |
| 33. | குறிகளைப் பதிவு செய்யும் மார்க்கம் | 33 |
| 34. | நாள்பட்ட வியாதிகளை சிகிற்சிக்கும் விதம் | 35 |
| 35. | சரியான சிகிற்சையில் குணமடையும் தன்மை | 36 |
| 36. | குறிகளும் மருந்து தெரிவு செய்யும் முறையும் | 37 |
| 37. | விசேஷக் குறிகள் | 38 |
| 38. | ஹோமியோபதி உதவமுடியாத இடங்கள் | 39 |
| 39. | நாள்பட்ட வியாதிகளின் விளக்கம் | 40— 43 |
| 40. | சோராவின் இதர குறிகள் | 43— 45 |
| 41. | சைக்கோசிஸ் | 45— 50 |
| 42. | சிபிலிஸ் | 50 — 51 |
| 43. | மியாசங்களின் ஒற்றுமை | 51 |
| 44. | சோராவின் மருந்துகள் | 52 |
| 45. | சைக்கோசிசின் மருந்துகள் | 53 |
| 46. | சிபிலிசின் மருந்துகள் | 53 |
| 47. | ஆகார விதிகளும் வாழ்க்கை ஒழுங்கும் | 53— 56 |
| 48. | வீரியங்களைக் குறிக்கும் எழுத்துக்களின் விளக்கம் | 56 |
| 49. | ஆர்கனன் (294 பிரிவுகள்) | 57—132 |
| 50 | பயோ கெமிஸ்டிரி | 133 |
| 51. | எலக்ட்ரோ ஹோமியோபதி | 133 |
| 52. | க்ரோமோபதி | 134 |
| 53. | ப்ளாரல் மருந்துகள் | 135 |
| 54. | பற்பல முறை சிகிற்சைகள் | 135 |
| 55. | தத்துவ ஞானம் (21 பிரிவுகள்) | 136—150 |
| 56. | மெட்டீரியா மெடிக்கா (103 மருந்துகள்) | 151—260 |
| 57. | களஞ்சியம் | 261 |
| 58. | மனம் (113 பிரிவுகள்) | 261—275 |

| | | | | பக்கம் |
|---|---|---|---|---|
| 59. | தலை | (131 | பிரிவுகள்) | 275—289 |
| 60. | கண்கள் | ( 27 | ,, ) | 289—293 |
| 61. | காதுகள் | ( 34 | ,, ) | 293—297 |
| 62. | மூக்கு | ( 42 | ,, ) | 297—301 |
| 63. | முகம் | ( 26 | ,, ) | 301—303 |
| 64. | வாய் | ( 28 | ,, ) | 304—306 |
| 65. | நாக்கு | ( 19 | ,, ) | 307—309 |
| 66. | சுவை | ( 7 | ,, ) | 309—310 |
| 67. | எகிர் | ( 9 | ,, ) | 310—311 |
| 68. | பற்கள் | ( 33 | ,, ) | 311—314 |
| 69. | தொண்டை | ( 17 | ,, ) | 314—316 |
| 70. | இரைக்குடல் | (200 | ,, ) | 316—333 |
| 71. | வயறு | (190 | ,, ) | 333—356 |
| 72. | சிறுநீர் உறுப்புகள் | ( 33 | ,, ) | 356—362 |
| 73. | ஆண் உறுப்புகள் | ( 38 | ,, ) | 362—369 |
| 74. | பெண் உறுப்புகள் | (128 | ,, ) | 369—385 |
| 75. | இரத்த ஓட்டக்கிரமம் | ( 7 | ,, ) | 385—387 |
| 76. | இயக்க கிரமம் | ( 56 | ,, ) | 387—393 |
| 77. | சுவாசக் கிரமம் | ( 44 | ,, ) | 393—399 |
| 78. | சருமம் | ( 13 | ,, ) | 399—401 |
| 79. | ஜுரம் | ( 9 | ,, ) | 402—404 |
| 80. | நரம்புக்கிரமம் | ( 17 | ,, ) | 404—409 |
| 81. | பொதுவானக்குறிகள் | ( 31 | ,, ) | 409—414 |

# ஹோமியோபதியின் ஆரம்பமும், டாக்டர் ஹனிமானின் ஜீவிய சரித்திரமும்

டாக்டர் ஹனிமான் 1755-ம் வருடம் ஏப்ரல் மாதம் 10-ம் தியதி, ஜெர்மனி நாட்டில் **டிறஸ்டன்** (Dresden) என்னும் இடத்தின் பக்கத்திலுள்ள **மெய்சன்** (Meissen) என்ற ஊரில் பிறந்தார். அவர் ஜீவித்த காலம் மிகவும் அமைதியற்ற ஓர் காலம். நிரந்தரமாய் ஸ்தாபிக்கப்பட்ட மதம், விஞ்ஞானம், தத்துவஞானம் முதலியவை கூட தர்க்கங்களுக்கு விடப்பட்டு, ஜனங்கள் விடுதலையைப்பற்றி ஆராயும் காலமாயிருந்தது. அவர் மதக் கொள்கைகளேயோ, அரசியல்கொள்கைகளேயோ, தத்துவ ஞானத்தையோ கைக்கொள்ளவில்லை. இவற்றிற்கு புறம்பாக வைத்திய சாஸ்திரத்தில் ஈடுபட்டார். ஏனெனில் இந்த சாஸ்திரத்துக்குத்தான் சீர்திருத்தமும், போதனையும் வேண்டுமென்றுஉணர்ந்தார். ஹனிமானின் தந்தையார் அன்னாரின் ஆராயும் தன்மையையும் கூடுதலான மனவளர்ச்சியையும் நுட்பத்தனத்தையும் உணர்ந்த போதிலும், ஹனிமான் விரும்பிய சிறந்த கல்விக்கு அவரை அனுப்ப முடியவில்லை ஆனல் ஹனிமானின் அறிவு வளர்ச்சியை அறிந்த அன்னாரின் ஆசிரியர்கள், அவர் விரும்பிய பாடங்களை தெரிவு செய்வதில் அனுமதித்ததுமின்றி கற்பித்து கொடுப்பதிலும் ஆர்வம் காட்டினர்.

1775-ம் வருடம் **லெய்ப்சிக்** (Leipsic) என்ற இடத்திற்கு அவர் சென்று, ஜெர்மன், ப்ரெஞ்ச் முதலிய இரு பாஷைகளின் போதனையில் வருமானம் சம்பாதித்து, ஆங்கில புத்தகங்களை மொழி பெயர்ப்பதிலும் ஈடுபட்

டார். பல இன்னல்களை அனுபவித்தபின்; 1779-ம் ஆண்டு எம். டி.(M. D.) என்ற வைத்தியபட்டம் பெற்றார். அதன்பின் பல பட்டணங்களில் தன் தொழிலை நடத்திய பொழுதும் லெய்ப்சிக்கிலேயே திரும்பவும் வந்து தங்கினார். ஏனெனில் கல்வி வளர்ச்சி அங்குதான் அதிகமாக இருந்தது. பின்பு **ஜார்ஜென்தல்** (Georgenthal) என்கிற இடத்தில் ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் தலைமை டாக்டராக நியமனம் பெற்றார். அங்கு அவர்செய்த வெற்றிகரமான சிகிற்சைகளின் மூலம் புகழ் உண்டாகியது. பின்பு **ரசாயன** ஆராய்ச்சியில்(Chemistry) கூடுதல் ஈடுபட்டு, அவற்றிலிருந்து அவர் கண்டு பிடித்த உண்மைகளைப்பற்றி பல புத்தகங்கள் எழுதினார். மொழி பெயர்ப்பிலும் நல்ல வருமானம் கிடைத்தது. 1790-ம் ஆண்டு **கல்லன்ஸ் மெட்டீரியா மெடிக்கா** (Cullen's Materia Medica)என்கிற புத்தகத்தை மொழிபெயர்த்தார். இப்புத்தகத்தில் **சிங்கோனு அபிசியானிஸ்** (Cinchona Officianils) என்ற மருந்து, மனிதன் அறிந்தவைகளில் கூடுதல் பரிமளமானதும், கசப்பானதும், என்று எழுதியிருப்பதை பார்த்தார். மேலும் ஜுரத்தையும் குணப்படுத்தக்கூடியது என்று எழுதப்பட்டிருந்ததையும் கண்டார். ஆனால், இதைவிடக்கூடுதல் பரிமளமானதும், கசப்பானதும், ஜுரத்தைக் குணப்படுத்தக்கூடியதுமான இதர சாதனங்களும் இருக்கின்றனவே என்று டாக்டர் ஹனிமான் சந்தேகப்பட்டார். உண்மையாகவே இது சில ஜுரங்களை குணப்படுத்தினாலும், எல்லா ஜுரங்களையும் குணப்படுத்துவதில்லையே; அப்படியானால் இது எந்தெந்த தன்மைகளில் எப்படி எப்படி ஏற்படுகிறது என்பதற்கு ஓர் மார்க்கம் இருக்கவேண்டுமென்றும் அதை கண்டு பிடிக்கவேண்டுமென்றும் உணர்ந்தார். எனவே, இதை தன் சரீரத்திலேயே பரீட்சிப்பது என்று நிச்சயித்தார் அதின்படி, இம்மருந்து கிடைக்கும் மரத்தின் புதிதான பட்டையை கொஞ்சம் எடுத்து, சுத்தமான மதுசாரத்தில் திராவகம் தயாரித்து அதை அருந்தினார். இதனால் அவரில் தோன்றிய குறிகளும் அவர் உணர்ந்த குறிகளும், இதே மருந்தால் அவரால் குணப்படுத்துப் பட்டு வந்த, குளிரும் நடுக்கத்துடனும் விட்டு விட்டு முறை வைத்து வரும் **ஆக்** (Ague) என்ற அல்லது

மலேரியாவைப் போன்ற ஜுரத்தை ஒத்திருந்தது. இங்குதான் இன்று உலகம் புகழும் ஹோமியோபதியின் ஜனன நட்சத்திரம் உதயமானது. அதாவது பூரண சுகம் அனுபவிக்கும் ஒருவனுக்கு ஒரு மருந்தை கொடுக்கும்பொழுது என்னென்ன குறிகளும் உணர்ச்சிகளும் தோன்றுகிறதோ, அதே குறிகளுடனும் உணர்ச்சிகளுடனும் நோயாளியாய் இருக்கும் ஒருவனுக்கு, அதுதான் பூரண சுகத்தை கொடுக்கும் மருந்தென்பதே. இதன்பின் ஆறு வருடம் கழித்து, பல ஆராய்ச்சிகளுக்கு பின் ஹுப்லான்ட்ஸ் சஞ்சிகை (Hufelands Journal) என்னும் ஓர் பிரபல்ய பத்திரிகையில் "மருந்துகளின் குணமாக்கும் தன்மையை நிச்சயம்செய்யும் ஓர் புது மார்க்கம்" என்ற தலையங்கத்தின் கீழ் ஓர் கட்டுரை வரைந்தார். அதில், சக்திவாய்ந்த மருந்துகள் மனிதனின் சரீரத்தில் அசாதாரணமான ஓர் வியாதியை உண்டுபண்ணுகிறது. மருந்தின் சக்திகூடும் தோறும், வியாதியின் தன்மை அசாதாரணப் படுவதோடு, உக்கிரமும் கூடுகிறது. மேலும், நாள்பட்ட ஏதாவது வியாதியால் அவஸ்தைப்படும் ஒருவனுக்கு கூடுதல் சக்தியுள்ள இன்னொரு வியாதி உண்டாகிற பொழுது, இயற்கையாக அவனுடைய நாள்பட்ட வியாதி குணமடைந்துவிடுகிறது. எனவே நாமும் இயற்கையை பின் பற்றி, நாம் குணமாக்க விரும்பும் ஓர் வியாதிக்கு, சக்தி வாய்ந்த மருந்துகளை கொடுத்து, இருக்கும் வியாதியைப்போன்ற இன்னொரு வியாதியை செயற்கையாக உண்டுபண்ணும் பொழுது, இயற்கை வியாதியால் அவதியுறும் நோயாளி குணமடைந்து விடுவான் என்று எழுதி, இம்முறைக்கு சிமிலியா சிமிலிபஸ் (Similia Similibus) என்று பெயரிட்டார். இத்தத்துவத்தை, ஒன்றை, அதே சாயல்கொண்ட இன்னொன்றால் குணப்படுத்த வேண்டுமென்றும் கூறுவதுண்டு (Let likes be cured by likes) இம்முறையின் முழு விபரங்களை டாக்டர் ஹனிமானின் ஜீவிய சரித்திரத்திற்கு பின் பார்க்கலாம். ஏனெனில் டாக்டர் ஹனிமானின் ஜீவிய சரித்தி

ரத்தை ஒவ்வொரு ஹோமியோபதியர்களும் அறிந்திருக்க வேண்டியது மிகமுக்கியம். சிங்கோனு என்னும் மருந்தை தன் சரீரத்தில் பரீட்சைசெய்த பின், டாக்டர் ஹனிமான் நல்ல சுகமுள்ள பலரைத் தேர்ந்தெடுத்து, பல பரிட்சைகளை நடத்தி, பல மருந்துகளின் குணங்களை கண்டு பிடித்தார். 1805-ம் ஆண்டு அன்னுரால் வெளியிடப்பட்ட புத்தகத்தில் 27 மருந்துகள் இருந்தன. 1810-ம் ஆண்டு **ஆர்கனன்** (Organon) என்ற புத்தகத்தை வெளியிட்டார். **ஆர்கனன் என்பதற்கு, சாஸ்திரமுறையான ஆராய்ச்சிக்கு ஏற்படுத்தப்படும் சட்டங்களும், முறைகளும் என்பது பொருள்.** 1811-ம்ஆண்டு வெளியிட்ட புத்தகத்தில் 58 மருந்துகள் இருந்தன. ஆர்கனனில் அன்னுரால் பொறிக்கப்பட்ட தத்துவங்களும் முறைகளும், மற்றவர்களால்மிகவும் கடுமையாய் எதிர்க்கப்பட்டன. ஏனெனில், அன்றும் இன்றும் இதர முறைகளில் கையாளப்படும், இரத்தத்தை வெளிப்படுத்துதல், பல மருந்துகளை ஒன்ருய் சேர்த்து அதிகமான அளவில் நோயாளிகளுக்கு கொடுத்தல் முதலியவற்றை வன்மையாய் கண்டித்து, மிகவும் சொற்ப அளவில் ஒரு மருந்தை மாத்திரம் நோயாளிக்கு கொடுப்பது என்ற தனது முறைக்குமிகவும் முக்யத்துவம்கொடுத்தார் ஆர்கனன் என்ற புத்தகத்தை சில மாறுதல்களோடு ஐந்து தடவைவெளியிட்டார். ஆராய்ச்சியும், அனுபவமும் கூட கூட சிலதத்துவங்களை ஒவ்வொருதடவையும் மாற்றியபோதிலும், எல்லாபதிப்புகளிலும், மூல தத்துவங்களும், முறைகளும் ஒன்ருகவேஇருந்தது. இதன்பின் லெய்ப்சிக் கலாசாலேக்கு வைத்தியத்தை பற்றி கற்பிக்க அனுமதி கோரினர். அனுமதிகிடைத்ததும், பேராசிரியர்களும், மருத்துவர்களும், இதரமாணுக்கர்களும் கொண்ட ஒரு குழுவை தன் கீழ் அமைத்து அவர்களின் ஒத்துழைப்போடு மருந்துகளின் குணுதிசயங்களை பரீட்சித்தார். இங்ஙனம் எட்டு வருட ஆராய்ச்சிக்குப்பின், மருந்துகளின் குணங்களை ஆறு சுருள் கொண்ட புத்தகமாக மெட்டீரியா மெடிக்கா ப்யூரா (Materia medica pura) என்ற பெயரில் வெளியிட்டார். **மெட்டீரியா மெடிக்கா என்பதற்கு, மருந்துகளாக உபயோகிக்கப்படும் சாதனங்களின் உபயோகம்,**

**தன்மை முதலியவற்றைக் கூறும் சாஸ்திரம் என்பது பொருள்.** ப்யூரா என்பதற்கு சுத்தம் என்பது பொருள். டாக்டர் ஹனிமான் பல ஆராய்ச்சிகளின் பின், மிகவும் சுத்தமான அல்லது சம்பூரணமாய் நிரூபிக்கப்பட்ட குறிகளையே எழுதியதால் அப்புத்தகத்திற்கு மெட்டீரியா மெடிக்கா ப்யூரா என்று பெயரிட்டார். இப்புத்தகத்தை வெளியிட்டதின் பேரில் அலோபதி முறையில் கீர்த்திபெற்றிருந்த அனேக டாக்டர்களும், இதர முறை சிகிற்சைகளை கையாண்டுவந்த பலரும், இம்முறையைத் தழுவினர். ஐரோப்பா கண்டம் பூராவும் டாக்டர்ஹனிமானின் கீர்த்திபரவிற்று. ஆஸ்ட்டிரியாநாட்டை சார்ந்தவரும் நெப்போலியனை எதிர்த்த மூன்று லட்சம் வீரர்களுக்கு தலைவருமாயிருந்த **தளபதி ஸ்சூவார்ட்சன்பர்க்** (Schwart-zenberg) என்பவர் டாக்டர் ஹனிமானிடம் சிகிற்சை பெற்றார். அச்சமயம் பல அரச குடும்பத்தினரும், தம் தம் நாட்டில் கீர்த்திவாய்ந்த பலரும், தினசரி, தளபதியின் நிலைமையைப்பற்றி டாக்டர் ஹனிமானிடம் கேட்டறிந்துகொண்டிருந்ததால், அவருடைய கீர்த்தி மிகவும் பிரபல்யமாயிற்று. ஆனால் துரதிருஷ்டவசமாக ஆறு மாத காலத்திற்குள் தளபதி மாண்டு போனார். இத்தோல்வி டாக்டர் ஹனிமானின் விரோதிகளுக்கு ஒருநல்ல வாய்ப்பை அளித்தது. அன்னார் பத்து வருட காலமாக அனுபவித்து வந்த தன் சொந்த முறை சிகிற்சையின் சுதந்திரத்தை இழந்ததோடு, மருந்து கொடுத்தால் அபராதம் விதிக்கப்படும் என்றும் அரசாங்கத்தால் எச்சரிக்கப்பட்டார். எனவே தன் இடத்தையும் சினேகிதர்களையும் இழக்க நேரிட்டதோடு, ஹோமியோபதி முறைக்கு அரசாங்க அங்கீகாரம் பெற்றுவிடலாம் என்ற எண்ணமும் வீணாயிற்று. இந்நிலையில், அவரை பின் பற்றியவர்கள் அன்னாரின் பிற்கால வாழ்க்கையில் கவலைகொண்டிருந்தனர். டாக்டர் ஹனிமான் நாடு நாடாக சுற்றி அலைந்தார். அவ்வமயம் **அன்ஹால்ற்** (Anhalt) நாட்டின் அதிபதி அவருக்கு அடைக்கலமும், பாதுகாப்பும் அளித்து, அவருடைய தலைநகரமாகிய **கோய்தன் (Coethen)** என்கிற இடத்தில் அமர்த்தினார். இங்கு ஹோமியோபதி முறையில் அவர் திரும்பவும் ஈடுபட்டு தன்னை பின்பற்றியவர்களுடன் மீண்டும் தொடர்பு கொண்டார்.

அப்பொழுது அங்கு காலரா என்னும் தொற்று நோய் உண்டாயிற்று. இப்பயங்கர வியாதியை, தன் முறையில் மிகவும் வெற்றிகரமாய் குணமாக்கிய ஹன்னிமனுக்கு பல ஆதரவாளர்கள் தோன்றினர். இங்கு பதினொன்கு வருடம் தங்கிய பின் **நாள்பட்ட வியாதிகள்** (Chronic diseases) என்ற புத்தகத்தையும், ஆர்கனன், மெட்டீரியா மெடிக்கா என்ற புத்தகங்களின் இதர பதிப்புகளையும் வெளியிட்டார். 1835-ம் வருடம் **பாரீஸ்** (Paris) பட்டணத்திற்கு சென்றார். அங்கு தொழில் நடத்த மாத்திரமின்றி, தன் புதுமுறையான ஹோமியோபதியை பரப்பவும் **ப்ரெஞ்ச்** அரசாங்கத்தால் அனுமதி கிடைத்தது. பத்திரிகைகள் அவருக்கு ஆதரவளித்தன. அங்கு மிகவும் கீர்த்திவாய்ந்த மனிதனாக விளங்கினார். பாரிஸில் தங்கியிருந்த எட்டு வருட காலத்தில் தன் தேகத்திலேயே பரீட்சை செய்த 99 மருந்துகளை பத்து சுருள் கொண்ட புத்தகமாக வெளியிட்டார். அவருடைய ஜீவிய காலத்திலேயே ஹோமியோபதி அனேகநாடுகளில்பரவியதைக் கண்டார். அவருடைய சிகிற்சை முறையானது பல தலைமுறைகளுக்கு விடுதலை அளித்ததுமன்றி வரவிருக்கும் தலைமுறைகளுக்கும் விடுதலை அளிப்பதாக விளங்குகிறது. தன்னுடைய வாழ்க்கையின் இறுதி வினாடி வரை ஹன்னிமனுடைய மன நிலை மிகவும் தெளிவாக இருந்தது. இப்புது முறையை உலகத்திற்கு அளித்தவரும், உலகத்தில் தோன்றிய டாக்டர்களில் மிகச்சிறந்தவரும், ரசாயன ஆராய்ச்சிகளில் மிக கீர்த்திவாய்ந்தவருமான டாக்டர் ஹனிமான் 1843-ம் ஆண்டு ஜுலை மாதம் 2-ம் தியதி அதிகாலையில் இவ்வுலகை விட்டு இறைவன் திருவடி எய்தினார். அவர் இறந்து போனாலும், அவருடைய உண்மையான பின்னோர் மனதில் என்றும் உயிருடனிருக்கிறார்.

## டாக்டர் ஹனிமான் காலத்திலேயே ஹோமியோபதி பரவிய நாடுகள்

ஆஸ்டிரியா, ஹங்கேரி, இத்தலி, ப்ரான்ஸ். இங்கிலாந்து, ஸ்பெயின், போர்த்துகல், ரஷ்யா, ஸ்கான்டிநேவியா, ஹாலன்ட், பெல்ஜியம், ஸ்விட்ச்சர்லான்ட், யுனைட்டெட் ஸ்டேட்ஸ்.

## ஹோமியோபதியின் அடிஸ்தானம்.

### மருந்துகளின் விளக்கம்.

சுகம் அனுபவிக்கும் ஒருவர் பரீட்சிப்பதற்காக ஒரு மருந்தை உட்கொள்ளும் பொழுது, பல குறிகளும் உணர்ச்சிகளும் தோன்றுகின்றன. இக் குறிகளும் உணர்ச்சிகளும் அவயவம் அவயவமாக மெட்டீரியா மெடிக்கா என்னும் புத்தகத்தில் பிரித்தெடுத்தெழுதப் படுகிறது இம்முறையை வகுத்த மதிப்பு டாக்டர் ஹனிமான் அவர்களுக்கே உரியது. சிமிலியா சிமிலிபஸ் என்ற விதிப்படி, நோயாளி கூறும் குறிகளையும், உணர்ச்சிகளையும், எந்த மருந்து சுகம் அனுபவிக்கும் ஒருவனுக்கு கொடுத்தால் உண்டாக்குகின்றதோ, அம்மருந்து தான் அவனை குணப்படுத்தும் என்பதே. விஷம் கூடிய அனேக சாதனங்கள் ஹோமியோ முறைப்படி தயாரிக்கப்படும் பொழுது, சக்திவாய்ந்த மருந்துகளாக மாறி விடுகின்றன. சரீரத்தில் எவ்வளவு கூடுதலாக கெடுதல் விளைவிக்கும் சக்தி மருந்துக்கு இருக்கின்றதோ, அவ்வளவு கூடுதலாக குணமளிக்கும் சக்தியும் இருக்கின்றது. சில மருந்துகளுக்கு தாய் அல்லது மூல நிலையில் (Crude and raw State) எவ்வித சக்தியும் இல்லாதிருந்தும், ஹோமியோ முறையில் **விரிக்கப்படும் பொழுது** (attenuation) சக்திவாய்ந்த மருந்துகளாக மாறிவிடுகின்றன. விரிக்கப்படுவது என்பது ஹனிமானால் **டைனமிசேஷன்** (Dynamisation) என்று பெயரிடப்பட்டது. சுருக்கமாக சொல்லும்பொழுது இப்பதங்களுக்கு, **சக்தி அளித்தல்** என்பதே பொருள் இங்ஙனம் சக்தி அளித்தலுக்கு என்ன செய்யப்படுகிறது என்பதை புத்தகத்தின் வேறு பகுதியில் பார்க்கலாம் மருந்துகளுக்கு சக்தி கொடுக்கும்பொழுது அவற்றின் இடை குறைந்துகொண்டே வந்தாலும் சக்தி கூடிக்கொண்டே வருகிறது. அநேக குறிகளை மொத்தமாய் பொதிவதும் பல வியாதிகளுக்கு பயன்படுவதுமான மருந்துகளுக்கு **பாலிகிறஸ்ட்** (Polychrest) என்று பெயர்.

## ஹோமியோபதி மருந்துகள் தயாரித்தல்

ஹோமியோபதி மருந்துகள் மூல அல்லது தாய் நிலமையிலும், சக்தி கொடுக்கப்பட்டும் உபயோகப்படுத் தப்படுகின்றன. சக்தி கொடுப்பது என்பதற்கு வீரியம் கொடுப்பது என்று பொருள். இங்ஙனம் வீரியம் கொடுப்பது கரைப்பதின் மூலமும் அரைப்பதின் மூலமும் செய்யப்படுகிறது. (Solution and Trituration) கரைப் பதற்கு ஈதில் என்ற சாதனம் 88 சதமானம் பரிமாண அளவில் கொண்ட மதுசாரமும், அரைப்பதற்கு சுகர் ஆப் மில்க் என்ற பொடியும் உபயோகப்படுத்தப்படு கிறது. சுகர் ஆப் மில்க் என்பது, கரும்பிலிருந்து தயா ரிக்கப்படும் சுத்தமான சர்க்கரையே. இவ்விரண்டு வகை களில் எவ்வகையில் தயாரிக்கப்பட்டால் சரீரத்தில் துரிதமாக வேலை செய்யுமோ, அவ்வகையைத்தான் மருந்துகள் தயாரிப்பதற்கு குறிப்பாக தெரிந்துகொள் ளப்படுகிறது. மேலும், வீரியம் கொடுக்கப்படுவது, மருந்து அதன் தாய் அல்லது மூல இயற்கையான நிலை யில் எப்படி இருக்கிறதோ, அதைப்பொறுத்துதான் வீரியம் கொடுக்கப்படவேண்டிய வகையும் முடிவு செய் யப்படும். சில மருந்துகள் கரைப்பதற்கு உபயோகப் படுவதில்லை. சில மருந்துகள் அரைப்பதற்கு உபயோ கப்படுவதில்லை. சில மருந்துகள் அரைத்து 2, 3 வீரியம் கொடுக்கப்பட்ட பின், மூல அல்லது தாய் பாகத்தில் கரைக்க முடியாதிருந்தும், வீரியம் கொடுக்கப்பட்டபின் கரைபடும் இவற்றையெல்லாம் பொறுமையான ஆராய்ச்சியுடன் கண்டுபிடித்த கீர்த்தி டாக்டர் ஹனி மானைச் சார்ந்ததாகும். இங்ஙனம் கரைப்பதாலும், அரைப்பதாலும், மருந்துகளின் சக்தி கூடுகிறது என் பதை சாஸ்திர முறைப்படி விஞ்ஞான ரீதியாக நிரூபிக்க முடியாது. இதைக் கொடுத்து புரிந்து கொள்ளும் அனுபவத்தின் மூலமே நிரூபிக்க முடியும் (Law of application). எனவே தான் அன்றும் இன்றும் இதைப் பற்றி தர்க்கமும், நம்பிக்கை குறைவும் இருந்து வரு கிறது.

# வீரியங்களின் அளவு

## Scale of potency

ஹனிமான் அவருடைய பரீட்சைகளின் மூலம், சில மருந்துகள் வீரியம் கொடுக்கப்படுவதால் மிகவும் சக்தி வாய்ந்த மருந்துகளாக மாறிவிடுகிறதென்பதைக் கண்டார். ஹோமியோ முறையில் சக்தி கொடுக்கப்பட்டு மருந்துகள் அடையும் வீரியத்திற்கு **பொட்டன்சி** (Potency) என்று பெயரிட்டார். முதல் வீரியம் என்பதற்கு மருந்தின் மூல அல்லது தாய் நிலமையில் $\frac{1}{10}$ பாகம் அல்லது $\frac{1}{100}$ பாகம் என்பது பொருள். $\frac{1}{10}$ பாகம் என்னும் பொழுது, ஒரு பாகம் மருந்தும், ஒன்பது பாகம் சர்க்கரையோ அல்லது மதுசாரமோ சேர்க்கப்பட்டதென்பதும், $\frac{1}{100}$ பாகம் என்னும்பொழுது, ஒரு பாகம் மருந்தும் 99 பாகம் சர்க்கரையோ அல்லது மதுசாரமோ சேர்க்கப்பட்டதென்பதும் பொருள். தாய் திராவகம் என்பது செடியின் புது பட்டை, வேர், வித்து முதலியவற்றிலிருந்து தயாரிக்கப்படுவது. ஒவ்வொரு வீரியமும் தனி தனியாக தயாரிக்கப்படுகிறது. முதல் வீரியம் தயாரிப்பதற்கு சில மருந்துகளுக்கு நான்கு மணி நேரமும் சில மருந்துகளுக்கு அதற்கும் கூடுதல் நேரமுமாகிறது. அரைத்து வீரியம் கொடுக்கப்படும் எல்லா மருந்துகளும், ஆருவது வீரியத்திற்கு மேல் தண்ணீரிலோ அல்லது மதுசாரத்திலோ கரைந்துவிடும். எனவே, ஆரம்பத்தில் அரைப்பதின் மூலம் தயாரிக்கப்படும் வீரியங்கள், பின்பு கரைப்பதின் மூலம் கூடுதல் வீரியங்கள் தயாரிக்க உதவுகிறது. ஒரு பாகத்தோடு ஒன்பது பாகம் சர்க்கரையோ அல்லது மதுசாரமோ சேர்த்து தயாரிக்கப்படும் வீரியத்திற்கு **டெசிமல் அளவு** என்று பெயர். (Decimal Scale) இவ்விதம் வீரியம் கொடுக்கப்படும் மருந்துகள் X என்று எழுத்து சேர்க்கப்பட்டு, டெசிமல் அளவு என்று பிரித்துக்காண்பிக்கப்படுகிறது. (உ-ம்) **சல்பர் 30 X**. இதற்கு பதில், 99 பாகம் சர்க்கரையோ, மதுசாரமோ சேர்த்து தயாரிக்கப்படும் வீரியத்திற்கு C என்ற எழுத்து சேர்க்கப்பட்டு **சென்டிசிமல் அளவு**(Centisimal Scale) என்று பிரித்துக் காண்பிக்கப்படுகிறது. (உ-ம்) **சல்பர் 30 C.**

ஆனல் பழக்கத்தில் செண்டிசிமல் அளவை C என்கிற எழுத்தை சேர்த்துக் காண்பிக்கிறதில்லே. சல்பர் 30 என்ருலே, சல்பர் 30 C என்றுதான் அர்த்தம். ஆனல் டெசிமல் அளவிற்கு கண்டிப்பாக X என்ற எழுத்து சேர்க்கப்படவேண்டும். இவ்விதமாக இரு அளவுகளில் ஹோமியோபதி மருந்துகள் தயாரிக்கப்பட்டாலும், சில குறிப்பிட்ட வியாதிகளுக்கு, குறிப்பிட்ட வீரியமே பயன் படுகிறது. உதாரணமாக கானபிஸ் சாட்டிவா என்ற மருந்து, 3–வது வீரியத்தில் மாத்திரம் தான் மேக வியாதி யான **கனோரியா** (Gonorrhea) என்ற வெள்ளே நோய்க்கு பயன்படுகிறது. இவ்விதமாக வீரியங்களே, வியாதிகளே பொறுத்து பிரித்து உபயோகப்படுத்த வேண்டியதை ஆங்கில மெட்டீரியா மெடிக்கா சிலவற் றில் பார்க்கலாம். ஆசிரியரால் தமிழில் சீக்கிரத்தில் வெளியிடப்படும் மெட்டீரியா மெடிக்காவிலும் இதைப் பார்க்கலாம். கானபிஸ் சாட்டிவா என்ற மருந்து இதர வீரியங்களில் வேறு வியாதிகளுக்கும் பயன்படுகிறது. முற்காலத்தில் லட்சத்திற்கும் உயர்ந்த வீரியங்கள் தயா ரிக்கப்பட்டபோதிலும், இன்று உலகத்தில் மிக பிரபல்ய ஹோமியோ மருந்து தயாரிப்பாளர்களான, அமெரிக்கா வின், போரிக் & டாபல் கம்பெனியார்கூட லட்சத்திற்கும் உயர்ந்த வீரியங்கள் தயாரிப்பதில்லே. 10 லட்சம் வீரியத் திற்கு ஒரு மருந்தை உயர்த்தவேண்டுமாளுல், ஹனி மான் முறைப்படி ஒரு வருடத்திற்கு கூடுதல் நேரமும் 2000 காலன் மதுசாரமும் வேண்டுமென்று பிரபல்ய முன்னுள் ஹோமியோ டாக்டர் **ஹியூக்ஸ்**(Hughes) தன் புத்தகத்தில் எழுதியிருக்கிருர். செண்டிசிமல் அளவில் மருந்து குறைவாய் இருப்பதால், அதன் சக்தி குறைவு என்று அபிப்பிராயப்படுவது தவருகும்.

## ஹோமியோ மருந்துகள் வேலே செய்வது எங்ஙனம்.

சிமிலியா சிமிலிபஸ் என்ற முறைப்படி மருந்து கொடுக்கப்பட்டதும், அது இரண்டு விதமாக வேலே செய்கிறதென்று ஹனிமான் கண்டுபிடித்தார். சுகமா யிருக்கும் ஒருவனுக்கு பரீட்சிப்பதற்காக மருந்து கொடுக்

கப்படும்பொழுதும் அது இரண்டு விதமாகவே வேலை செய்கிறதென்று கண்டுபிடித்தார். முதல் செய்யும் வேலைக்கு அல்லது செய்கைக்கு **ப்ரைமறி** (Primary) செய்கை என்று பெயர். ப்ரைமறி என்பதற்கு **ஆரம்பம்** என்பது பொருள். இரண்டாவது செய்யும் வேலைக்கு அல்லது செய்கைக்கு **செகன்டறி** (Secondary) செய்கை என்று பெயர். செசன்டறி என்பதற்கு **இரண்டாவது** என்பது பொருள். மேலும், இரண்டாவதான வேலை ஆரம்ப வேலையின் சுத்த எதிரிடையானதாக இருக்கும். மருந்து கொடுக்கும்பொழுது, நோயாளியின் குறிகள் மருந்தின் முதல் செய்கையினுல் சிறிது அதிகப்படுகிற தென்றும், சுத்த எதிரிடையான இரண்டாந்தர செய்கை யினுல் குறிகள் குறைந்து விடுகிறதென்றும் நிரூபித் தார். இவ்விரண்டுவித செய்கையினுல் வியாதி எப்படி குணமடைகிறது என்பதை ஆர்கனனில் பின்னுல் படிக்க லாம். இம்முறைக்கு **தீயறி ஆப் சப்ஸ்டிடூஷன ஆன்ட் றிஆக்ஷன்** (Theory of Substitution and Reaction) என்று பெயர். (Theory) தீயறி என்பது **விளக்கம்** (Substitution)சப்ஸ்டிடூஷன் என்பது **பதிலாய் உண்டா வது** (Reaction) றிஆக்ஷன் என்பது **எதிர்தாக்கம்.** எனவே இம்முறையை தமிழில், **பதிலாய் ஏற்பட்டு பின்பு உண்டாகும் எதிர்தாக்குதல் என்ற முறையின் விளக்கம் என்று கூறலாம்.** மேலும் தவருக ஒருவீரியம் கொடுக்கப்படும் பொழுது வியாதியஸ்தன் மருந்தின் இரண்டாவதான வேலையின் மூலம் சில கிரமத்தாழ்வை அல்லது உபத்திரவங்களை அனுபவிக்கலாம். இது சில சமயங்களில் சில மணி நேரத்திற்கும், சில சமயங்களில் நாள்கணக்காகவும் நீடிக்கும். இது தாஞகவே மாறிப்போ கும் ஓர் நிலைமையாயிருந்தாலும், உபத்ரவம் கூடுதலாக கொடுக்குமாயின், **மாற்று மருந்து கொடுக்கப்பட வேண்டும்.** இது அதிகமாக நாள்பட்டவியாதிகளிலேயே ஏற்படுகிறது. தீவிர வியாதிகளில் (Acute Diseases), மருந் தின் ஆரம்ப வேலையையும், இராண்டாந்தரவேலையையும் எப்பொழுது எப்பொழுது நடக்கிறது என்பதை கண்டு கொள்ள முடிகிறதில்லை.

# ஹோமியோபதியைப்பற்றி ஹனிமானின் தத்துவஞானம்

# Philosophy by Hahnemann

குறிகள் யாவும் சேர்ந்தே வியாதி என்று அழைக்கப் படுகிறது. ஹனிமான் அவருடைய பரிட்சைகளின் மூலம், மருந்துகள் சரீரத்தின் பல அவயவங்களிலும் வேலை செய்யக்கூடியவை என்று கண்டுபிடித்தார். மருந் துகள் வேலை செய்யும் தீவிரம் அல்லது ஆழம் ஒன்றிற் கொன்று வேறுபட்டு மருந்தின் சக்தியை பொறுத்ததாய் இருக்கும். எனவே, கவலையாய் சிகிற்சை செய்யும் ஒரு வைத்தியனின் வேலை, எல்லாக் குறிகளையும் அல்லது ஏகதேசம் எல்லா குறிகளையும் கவரும் ஒரு மருந்தை தெரிவு செய்வதே. இம்முறைக்கு **குறிகளின மொத்தம்** (Totality of symptoms) என்று பெயர். பல குறிகளுக் கேற்றவாறு பல மருந்துகளை தெரிவு செய்து கொடுப் பது ஹோமியோபதியின் முறையல்ல. வியாதியஸ்த னின் குறிகளை துண்டு துண்டாக பிரித்து, ஒவ்வொரு பாகத்திற்கும் ஒரு மருந்தை தெரிவு செய்து சிகிற்சை செய்யக்கூடாது. பூராக்குறிகளையும் அல்லது மொத்தக் குறிகளை கவரும் தனி மருந்தை தெரிவு செய்து கொடுத்தல் மிக முக்கியம்.

## வியாதிகளை சாஸ்திர ரீதியாக பிரித்தல்

## Nosology By Hahnemann

வியாதிகளை ஹனிமான் இருவிதங்களாக பிரித் திருக்கிறார்.

1) **தீவிர நோய்கள்:-** (Acute Diseases) தீவிர நோய்கள், சுகாதாரக் குறைவு, ஆகார மாறுதல், ஆகாரக் குறைவு, ஆகாரக் கூடுதல், ஒத்துக்கொள்ளாத கால நிலைக்கு தன்னை வெளிப்படுத்தல், அணுக்கள், மருந்து கள், விஷங்கள் முதலியவற்றால் உண்டாகின்றன.

2) **நாள்பட்ட நோய்கள்:-** (Chronic Diseases) **சோரா, சைக்கோசிஸ், சிபிலிஸ்** முதலிய மூன்று வித

விஷங்களால் உண்டாகும் வியாதிகள். இவ்விஷங்களுக்கு ஹனிமான் **மியாசம்** (Miasm) என்று பெயரிட்டார். மியாசங்களை அடிப்படையாகக் கொண்ட வியாதிகளை, மியாசங்களுக்கு எதிரான மருந்து கொடுத்தே குணப்படுத்த முடியும். இம் மூன்று மியாசங்களின் தன்மையையும், புத்தகத்தின் வேறு பகுதியில் படிக்கலாம்.

## குறிகளும் பாகுபாடுகளும்
## Symptoms and analysis

வியாதியை குறிகளால் அறிந்து கொள்கிறோம். குறிகள் இருவகைப்படும்.

1) **சப்ஜெக்டிவ்** (Subjective) குறிகள்.

2) **அப்ஜெக்டிவ்** (Objective) குறிகள்.

சப்ஜெக்டிவ் குறிகள் நோயாளியால் கூறப்படுபவை. அப்ஜெக்டிவ் குறிகள் வைத்தியனால் கண்டுபிடிக்கப்படுபவை. வைத்தியனால் கண்டுபிடிக்கப்படும் குறிகள் என்றால், ஜுரத்தின் உக்கிரமம், நாடியின் தன்மை, இரத்தாசய ஓட்டத்தின் நிலை, இரத்தம், மலம், சிறுநீர், முதலியவற்றை பரீட்சிப்பதின் மூலம் கிடைக்கும் குறிகள், கருவிகள் மூலம் கண்டு பிடிக்கப்படும் குறிகள் முதலியவை.

## கிளினிக்கல் குறிகள்
## Clinical Symptoms

இதற்கு, நோயாளி ஆனபிறகு மாத்திரம் மருந்துகளால் நிவிர்த்தி செய்யப்படும் குறிகள் என்பது பொருள். உதாரணமாக **ப்ளூரசி** என்ற வியாதியில் உண்டாகும் வேதனையோ அல்லது நீர்கட்டோ, **ப்ரையோனியா** (Bryonia) என்ற மருந்தை பரிட்சிப்பதற்காக சுகம் அனுபவிக்கும் ஒருவனுக்கு கொடுக்கும் பொழுது ஏற்படுவதில்லை. ஆனால் இந்த குறிகளுள்ள ப்ளூரசி நோயை இம்மருந்து குணப்படுத்தி விடுகிறது. சுருங்கசொல்லின், மருந்துகளின் பரிட்சையில் கிடைக்காவிடினும், நோயாளியாய் இருக்கும்பொழுது மருந்து கொடுத்தால் மாறும் குறிகள் என்பதே.

## மருந்துகளின் குறிகள்.
## Symptomology of Drugs

பொதுவாக பலர் பல பெயர்களின் கீழ் குறிகளை அமைத்தாலும், முக்கியமாக எந்த தலைப்புகளின் கீழ் குறிகள் பிரிக்கப்படுகின்றன என்பதை கீழே காணலாம். பல தலைப்புகளின் கீழ் அமைக்கப்பெற்றாலும், மருந்து தெரிவு செய்யும் விதம் ஒன்றே.

1) **அடிப்படைக் குறிகள்:-** (Basic Symptoms) இக்குறிகளை, **தனியாக விளங்கும் குறிகள்** (Absolute Symptoms) என்றும் கூறுவதுண்டு. இவை பொதுவாக மருந்துகளின் பரிட்சைகளில் தோன்றுபவையும், வியாதியை கண்டு பிடிப்பதற்கும் உதவுகின்றன. மருந்துகளை தெரிவு செய்வதற்கு இக்குறிகள் உதவாவிட்டாலும், மருந்துகளை தெரிவு செய்ய ஆரம்பிக்க உதவுகின்றன. தலைவலி, பலவீனம், ஏப்பம், ஜுரம், வேதனை முதலியவை அடிப்படைக் குறிகளின் உதாரணங்கள். மலம் அடிக்கடி இழகிப் பிரியும்பொழுது வயிற்றுப்போக்கு என்ற வியாதி என்று அறிந்து கொள்கிறோம். ஆனால் வயிற்றுபோக்கு என்ற வியாதிக்கு எந்த மருந்தை கொடுப்பது என்பதை வேறு குறிகளையும் சேர்த்தே கண்டு பிடிக்க முடியும்.

2) **நிச்சயிக்கும் குறிகள்:-**(Determinative Symptoms.) இவை ஒரு நோயாளியில் காணப்படும் பொழுது தனிப்பட்ட குறிகளாகவும், அதே குறிகள் மருந்துகளின் பரிட்சையில் வியாதிகளின் ஆரம்பமும் முன்னேற்றமும் என்ற தலையங்கத்தின் கீழ் காணும் குறிகளாகவுமிருக்கும். (Drug's Pathogenesis) ஆனால் மெட்டீரியா மெடிக்காவில் ஒரு தனிப்பட்ட தலையங்கத்தின் கீழ் இவை குறிக்கப்படுவதில்லை. பல தலையங்கங்களின் கீழ் குறிக்கப்படுகின்றன. இவை **மருந்தின் குணங்களை தனியாக எடுத்துக் காட்டும் குறிகள் என்றும்** (Characterstic Symotoms) அல்லது துறவுகோல் போன்ற குறிகள் என்றும், (Key Note Symptoms) வழி காட்டும் குறிகள் (Guiding Symptoms) என்றும் கூறப்படுவதுண்டு.

(உ-ம்) தலைவலி என்பது அடிப்படைக்குறி. இறுக்கும் தன்மையான தலைவலி என்கிறபொழுது, இறுக்கும் தன்மை இங்கு நிச்சயிக்கும் குறியாகிறது. எனவே, நோயாளி சொல்லும் வேதனையை, எத்தன்மையான வேதனை என்று கேட்டறியவேண்டும்.

## நிச்சயிக்கும் குறிகளின் பிரிவுகள்

1) **ஏற்றமும் இறக்கமும்**—Modalities.
2) **மனக்குறிகள்**—Mental Symptoms.
3) **தகுதியுள்ளவையாக்கும் குறிகள்**—Qualifying Symptoms.
4) **அபூர்வ, அரிதான, அல்லது விசேஷக் குறிகள்.**—Strange, Rare or Particular Symptoms.

**ஏற்றமும் இறக்கமும்:** வியாதியின் குறிகள், ஒரு நாளின் குறித்த நேரத்திலோ அல்லது குறிப்பான காலங்களிலோ, அல்லது குறிப்பான சீதோஷ்ண நிலையிலோ, கூடவோ குறையவோ செய்யுமாயின் அதற்கு ஏற்றமும் இறக்கமும் என்று பெயர். ஏற்றமும் இறக்கமும், நடக்கும்பொழுதும் இருக்கும்பொழுதும், வெவ்வேறு விதமாக படுக்கும்பொழுதும், ஆகாரத்திற்கு முன்னும் பின்னும், மாதவிடாய் காலங்களிலும், அழுத்தம் கொடுத்தல், சூடான அல்லது குளிர்ந்த பானங்கள் முதலியவற்ருலும் இன்னும் வேறு பல நிலைகளிலும் ஏற்படலாம். இவற்றை, கீழ்காணும் குறுகிய அடையாளங்களுடனும் எழுதுவதுண்டு.

< ஏற்றம் அல்லது கூடுதல்.

> இறக்கம் அல்லது குறைவு.

**மனக்குறிகள்:**-- சாந்தம், முற்கோபம், பயம், அமைதியற்றிருத்தல் முதலியவை மனக்குறிகளாகும்.

**அபூர்வ, அரிதான, அல்லது விசேஷக்குறிகள்:** பற்பலஉணர்ச்சிகள், (உ-ம்) பல பாகங்களில் எறும்புகள்

ஊருவது போன்ற உணர்ச்சி, முகத்தில் சிலந்திகூடு இருப்பது போன்ற உணர்ச்சி, கடும் ஜ்வரமிருந்தும் தாகமில்லாமை, கடும்குளிரிலும் துணி போர்த்திக்கொள்ள விருப்பமில்லாதிருத்தல், கூர்மையான சாதனங்கள், இடி, மின்னல் முதலியவற்றிற்கு பயப்படல், இரவில் வீட்டினுள் வரும்பொழுது கள்ளன் பதுங்கியிருப்பான் என்ற சம்சயத்தால் விளக்கை கொழுத்தி வீட்டை பரிசோதனை செய்தல் முதலியவை அபூர்வ அரிதான அல்லது விசேஷக் குறிகள்.

**தகுதியுள்ளவையாக்கும் குறிகள்:**

தலைவலி—இறுக்கும் தன்மையுள்ள தலைவலி.
தெறிக்கும் தன்மையுள்ள தலைவலி.

நெஞ்சுவலி—ஊசிகொண்டு குத்தும் தன்மையுள்ளது.

இங்கு தலைவலியும், நெஞ்சு வலியும் அடிப்படை குறிகள் எனினும், இறுக்கும், தெறிக்கும், ஊசிகொண்டு குத்தும் முதலிய தன்மைகளால் தகுதியுள்ள குறிகளாக மாறி, நிச்சயிக்கும் குறிகள் என்று தலையங்கத்தின் கீழ் வந்து சரியான மருந்தை தெரிவு செய்ய பயன்படுகிறது. மருந்தின் தன்மையை பொறுத்து, ஒரு மருந்தின் நிச்சயிக்கும் குறிகள் இன்னொரு மருந்தின் அடிப்படைக் குறிகளாகவும் இருக்கும். இது சரீரத்தின் அவயவங்களில் குறிகளை உண்டுபண்ணும் மருந்தின் சக்தியை பொறுத்திருக்கிறது. மருந்து அவயவங்களில் தீவிர மாறுதல்களை உண்டுபண்ணுமாயின் இவை அடிப்படைக் குறிகளாக இருக்கும். (உ–ம்) **ப்ளம்பம்** என்னும் மருந்துக்கு சோவை, மூத்திரக்காய் வியாதியுறல் முதலிய குறிகளை உண்டுபண்ணும் சக்தியுண்டு. இவைகள் அடிப்படைக்குறிகள் எனினும் **ப்ரையோனியா** என்னும் மருந்தின் குறிகளில், இவை நிச்சயிக்கும் குறிகளாக மாறிவிடுகின்றன. ஏனெனில் இக்குறிகள் ப்ரையோனியாவின் ஏற்றம் அல்லது இறக்கம் என்ற குறிகளின் கீழ் மாத்திரமே காணப்படும். மூத்திரக்காய் வியாதியுற்று, தேகம் நீர் அடிக்கும் வியாதிக்கு நெப்ரிட்டிஸ் (Nephritis) என்று பெயர். இந்நோய் உள்ள ஒருவனின் சரீரத்தை அமுக்கி பார்க்கும் பொழுது, சரீரம் நீர் அடித்

திருப்பதால், அமுக்கிய இடத்தில் குழி விழும். ப்ரையோனியாவின் குறிகளிலும், முகம் நீரடித்தமாதிரி தோன்றும் என்ற குறி உண்டு. ஆனால் அமுக்கிபார்த்தால் குழி விழுவதில்லை. எனவே இது உண்மையான நீர் அல்ல. வியாதியின் உக்கிரமத்தில் மாத்திரம் காணப்படும் ஓர் குறியன்றி, அடிப்படைக் குறியல்ல. எனினும் ப்ரையோனியாவின் கீழ் நிச்சயிக்கும் குறியாக, வியாதியின் உக்கிரமத்தில் மாத்திரம் தோன்றும் ஒரு குறி. இவ்விதமாக சில மருந்துகளின் அடிப்படைக்குறிகள் வேறு சில மருந்துகளின், ஏற்ற அல்லது இறக்க குறிகளாகவோ, அல்லது உணர்ச்சி குறிகளாகவோ மாத்திரம் தோன்றி நிச்சயிக்கும் குறிகளாகிவிடும். ஏற்றத்தையும் இறக்கத்தையும் ஆங்கிலத்தில் (aggravation and amelioration) என்று கூறுகிறோம். இவ்விதக்குறிகளை மருந்தின் கீழ்காணும் மூன்றுவித தலையங்கங்களில், ஏதாவது ஒன்றின் கீழ் காணலாம்.

1) **தசைகள் அல்லது அவயவங்கள் தாக்கப்படல்.** Location of tissue proclivity. (elective affinity)

2) **உணர்ச்சி அல்லது தாக்குதலின் விதம்.** (Sensation or Kind of action)

3) **ஏற்றம் அல்லது இறக்கம்.** (Influences which aggravate or ameliorate)

**1-ம் பிரிவின் விளக்கம்:-** ஒவ்வொரு மருந்தும் அதன்சக்தியின்படி குறிப்பிட்ட அவயவத்தையோ, அவயவங்களையோ அல்லது தசைகளையோ இதரமருந்துகளை விடக் கூடுதலாக தாக்குகிறது. எவ்விதமாக மருந்தை உட் செலுத்தினாலும், சரீரத்தில் வேலை செய்யும் இடங்கள் மாறுவதில்லை. இங்ஙனம் குறிப்பிட்ட பாகங்களை தெரிந்து கொள்ளலுக்கு **எலக்டிவ் அபினிட்டி** என்று பெயர். இதற்கு தாக்குவதற்கு விரும்பல் என்பது ப்பொருள். (உ-ம்) பெல்லடோனா என்னும் மருந்து மூளையையும், அகோனைட் என்னும் மருந்து இரத்தாசயத்தையும், எர்காட் என்னும் மருந்து கர்ப்பாசயத்தையும் ஒவ்வொன்றின் தாக்குதலுக்கும் பிரத்தியேகமாக

தெரிந்து கொள்கிறது. ஆனால் மருந்துகள் அதன் தன்மைக்கேற்றவாறு பிரத்தியேக இடங்களை தாக்குதலுக்கு தெரிந்து கொண்டாலும் மனிதன் மொத்தமாக மன நிலையிலும், சரீர நிலையிலும் பாதிக்கப்படுகிறான். ஏனெனில் சரீரத்தின் அவயவங்கள் யாவும் தனித்தனியாய் இயங்கும் கருவிகளல்ல. மிகவும் அதிசயக்கத்தக்க விதமாய் நரம்புகளால் இணைக்கப்பட்டிருக்கின்றன. வியாதிகளும், சரீரத்தில் இடம்பெற முடியுமானால் நரம்புகளின் மூலமே பல பாகங்களுக்கும் கொண்டு செல்லப்படுகிறது.

**2-ம் பிரிவின் விளக்கம்:-** மருந்துகளின் முதல் வேலை அவற்றின் தாக்குதலுக்கு குறிப்பிட்ட பாகங்களை தெரிந்து கொள்ளல். இரண்டாவதாக தாக்குதலின் விதம். அதாவது, ஏற்படுத்தும் உணர்ச்சி, ஏற்றம் இறக்கம் முதலியவை. (உ-ம்) **ஆர்சனிக்** என்னும் மருந்து **காந்தலை** உண்டுபண்ணுகிறது. **காம்பர், வொராட்ரம்** என்னும் மருந்துகள் **குளிர்ச்சியை** உண்டுபண்ணுகின்றன. **ப்ரையோனியா** என்னும் மருந்து ஊசி கொண்டு **குத்துதல்** போன்ற வேதனையை உண்டுபண்ணுகிறது, **ஏபிஸ், தெரிடியான்** என்னும் மருந்துகள், விஷப் பூச்சிகளால் கொட்டப்பட்டு ஏற்படும் வேதனையைப் போல் (Stinging Pains) உண்டுபண்ணுகின்றன. இவைகள் யாவும் மருந்துகளின் தனிப்பட்ட நிச்சயிக்கும் குறிகள். மேலும், இவைகளிலிருந்து இவைகள் எந்தெந்த அவயவங்களில் ஏற்படுகின்றன என்பதையும் அறிந்து கொள்ளலாம். பயம், நிலையற்றிருத்தல், சோர்பு, தாகம் இல்லாமை முதலியவையும் தனிப்பட்ட நிச்சயிக்கும் குறிகள். (உ-ம்) **அகோனைட்** என்னும் மருந்தில், **பயமும், நிலையற்றிருத்தலும்** (Anxiety and restlessness) காணப்படும். **ஏபிஸ்** என்னும் மருந்தில் **தாகமற்ற** நிலை காணப்படும். **ஜெல்சமியம்** என்னும் மருந்தில் **சோர்பு** காணப்படும்.

**3-ம் பிரிவின் விளக்கம்:-** ஹோமியோ முறையில் ஏற்றமும் இறக்கமும் என்ற தலையங்கத்தின் கீழ் வரும் குறிகள் முக்கியமானவை. இவை ஏற்படும் நேரம், கால

நிலே, சிதோஷ்ண நிலே, அசைதல், அமைதியாயிருத்தல் வியர்வை எடுப்பதற்கு முன்னும் பின்னும், ஆகாரம் அருந்துவதற்கு முன்னும் பின்னும், மாதவிடாய் முதலிய நிலேகளில் ஏற்படுகிறது. (உ-ம்) **லேக்கோபோடியம்** என்னும் மருந்தின் குறிகள் **மாலேயில்** ஏற்றமடையும். **சல்பர்** என்னும் மருந்தின் குறிகள் **உஷ்ணத்தால்** ஏற்றமடையும். **நட்ரம் சல்ப்** என்னும் மருந்தின் குறிகள் **மழை அல்லது ஈரமான கால நிலேயில்** அதிகப்படும். **ப்ரையோனியா** என்னும் மருந்தின் குறிகள் **அசைவதால்** ஏற்றமடையும். இவ்விதமாக பல நிலேகளில் குறிகள் இறக்கமடைவதுமுண்டு. ஏற்றமும் இறக்கமும் இருவகைப்படும். ஒன்று, **நோயாளியை பூராவாக பாதிப்பது**. மற்ருென்று, **குறிப்பிட்ட குறிகளே மாத்திரம் பாதிப்பது.** நோயாளியை பூராவாக பாதிக்கும் குறிதான் முக்கியமானது. இரண்டாவது வகை, மருந்தை தெரிவு செய்வதற்கு வழிகாட்டியாய் இருக்கும். ஒருவனுடைய தேக நிலே உஷ்ணத்தை விரும்புவதாயிருக்கலாம். ஆனுல் தலேவலி மாத்திரம் உஷ்ணத்தால் அதிகரித்துவிடும். **லேக்கோபோடியம்** என்ற மருந்தின் குறிகள் திறந்த வெளிக்காற்றில் **இறங்கும்**. ஆனுல் அவன் விரும்புவது உஷ்ணமான ஆகாரம். நோயாளியின் குறிகளே பதிவு செய்யும் பொழுது இவைகள் யாவையையும் தெளிவாக கேட்டறிந்து கொண்டால் தான் சரியான மருந்தை தெரிவு செய்ய முடியும்.

## மனக்குறிகள். (Mental Symptoms)

இக்குறிகள் மிகவும் முக்கியமானவை. தெரிவு செய்யும் மருந்து இக்குறிகளே முக்கியமாய் கவருவதாக இருக்கவேண்டும். இதரக் குறிகளே பூராவாய் கவராவிட்டாலும், மனக்குறிகளே கவரும் மருந்திற்கே முதலிடம் கொடுக்கவேண்டும். மேலும், நோயாளியாகும்பொழுது பல மனக்குறிகள் தோன்றி, இயற்கை மன நிலே மாற்றப்படுவதால் மருந்தை தெரிவு செய்ய இவை மிக முக்கியமானவை. மிகவும் சாதுவான குணமுடையவர், வியாதியுற்ருல் கோபமுடையவராகவும், கோபமுடையவர், சாதுவானவராகவும் மாறலாம். இவை யாவும் மிக முக்கிய குறி

கள். மனக்குறிகளை அனுவசிய கேள்விக்கு மேல் கேள்வி போட்டு அறிந்து கொள்ளக்கூடாது. ஏனெனில் உண்மையான நிலைக்கு பதில் மாறுன நிலையை நோயாளி சில சமயங்களில் கூறி விடுவான். எனவே, நோயாளியை தாஞகவே தன் நிலையை சொல்ல முயற்சிக்கவேண்டும். விருப்பம், வெறுப்பு முதலிய குறிகளும் முக்கியமானவை. இவற்றில் விரும்பும் அல்லது வெறுக்கும் சுவை, சீதோஷ்ணம், காலநிலை, சூடான அல்லது குளிர்ந்த ஆகாரம் அல்லது பானம் முதலியவற்றை கேட்டறிந்து கொள்ளவேண்டும். ஆனுல் விருப்பமும் வெறுப்பும் தீவிரமாக இருந்தால்தான் அவைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமேயன்றி, கண்டிப்பாக விரும்பப்படாத அல்லது வெறுக்கப்படாத குறிகளை எடுக்கக்கூடாது.

## கன்காமிற்றன்ற் குறிகள்
## Concomitant Symptoms

ஒரு குறியுடன் சேர்ந்தோ அல்லது தொடர்ந்தோ ஏற்படும் குறிக்கு கன்காமிற்றன்ற் குறி என்று பெயர். (உ-ம்) தலைவலியோடு பார்வை மங்கல், ஜுரத்தோடு ஜன்னி முதலியவை. இக்குறிகளையும் கேட்டறியவேண்டும். ஆனுல் இக்குறிகள் கண்டிப்பாக இருக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லை. குறிகள் தனியாக தோன்றுகிறதா அல்லது ஒரு குறி தோன்றினுல் தான் அடுத்த குறியும் தோன்றுகிறதா என்றறிவது மருந்தை தெரிவு செய்ய உதவும்.

## பதாலாஜிக்கல் குறிகள்
## Pathological Symptoms

பதாலாஜி என்பதற்கு, வியாதிகளின் காரணமும், தன்மையும், மருந்துகளும் என்ற சாஸ்திரம் என்பது பொருள். சோவை, இரத்த அழுத்தம், இரத்தபெருக்கு, கபத்தின் தன்மை முதலியவை பதாலாஜிக்கல் குறிகளாகும். பதாலாஜிக்கல் குறிகள் ஹோமியோ முறைக்கு தேவையில்லை என்று ஹனிமான் எழுதியிருப்பதாக பலர் அபிப்பிராயப்படுகின்றனர். இது ஓரளவு உண்மையெனினும், பதாலாஜிக்கல் குறிகளை மாத்திரம் வைத்து

மருந்து தெரிவு செய்யக் கூடாது என்பது தான் அவர் எழுதியிருப்பதின் அர்த்தமே ஒழிய, இக்குறிகளை பூரண மாக நிராகரித்துவிடவேண்டுமென்று வியாக்கியானிப்பது சரியல்ல. அவருடைய தத்துவங்களையும், முறைகளையும் உண்மையெனக்காணும் பின்னோர் அவற்றை விர்த்தி செய்தல் வேண்டும். அலோபதி முறையை பூரணமாக புறக்கணிப்பது அறிவான செயலன்று. வியாதிகளை கண்டு பிடிப்பதற்கும், சிகிற்சிப்பிதற்கும் அலோபதியர் கள் உபயோகிக்கும் கருவிகள், இயந்திரங்கள் மிக உபயோகமானவை. டாக்டர் ஹனிமான் கண்ட உலகம் இன்று நாம் காணும் உலகமல்ல. ஹோமியோபதி முறையில் மாத்திரமே வியாதிகளை குணப்படுத்தமுடி யும், அலோபதி முறையில் இரண சிகிற்சை மாத்திரம் தான் செய்யமுடியும் என்று நினைப்பது மூட நம்பிக்கை யாகும். உடனடி விடுதலை கொடுக்கவேண்டிய சந்தர்ப் பங்கள் சில வியாதிகளில் ஏற்படும். விடுதலை வேறு, குணமளிப்பது வேறு என்பதை நன்ருய் புரிந்து கொள்ள வேண்டும். அலோபதி முறையில் குணமடை யாத பல வியாதிகள் ஹோமியோ முறையில் குணமாகு வது உண்மையே. ஆனால் எல்லா சந்தர்ப்பங்களிலும் ஹோமியோ மருந்துகள் உடனடி விடுதலை கொடுக்க முடிகிறதில்லை. ஆனால் அலோபதி முறையில் உடனடி விடுதலை கிடைக்கும். ஆனால் உடனடி விடுதலை கிடைப் பதற்காக, கையாளப்படுபவை. பின்னால் நோயாளிக்கு உபத்திரவம் செய்கிறவையாக இருக்கக்கூடாது. டாக்டர் ஹனிமானே ஆர்கனனில் சில அபாய கட்டங்களில் ஹோமியோ முறை அல்லாதவைகளைக் கையாட கூறி யிருக்கிருர். அலோபதியர்களுடன் வாதாடி நமது சிகிற்சை முறையின் உண்மையான தத்துவங்களை எடுத்துக்கூறி அவர்களை திருப்தி செய்வதற்கு தக்க நமது ஹோமியோபதி அறிவை விர்த்திசெய்யவேண்டும். ஹோமியோ முறையைத் தழுவிய பல பட்டம் பெற்ற அலோபதியர்கள் உலகெங்கும் இருக்கின்றனர். நம் தமிழ் நாட்டில் உள்ள பல அலோபதியர்களுக்குகூட ஹோமியோ முறையின் மகத்துவம் தெரியும். அலோ பதியில் முடியாதவைகளை நம்மிடம் அனுப்பி சிகிற்சை பெற அவர்கள் தயாராயிருக்கின்றனர். ஆனால் எந்த

ஹோமியோபதியரிடம் இவர்களை அனுப்புவது என்பது தான் அவர்களின் கவலை. ஏனெனில் ஹோமியோபதி வைத்தியர்களில் பலரும் ஹோமியோபதி வைத்தியன் என்ற விளம்பரப் பலகையின் குடையின் கீழ், செய்வது அத்தனையும் இதர முறைகள். எனவே அவர்களை நாம் குறை கூறுவதில் பயனில்லை. இதனை ஒழிக்க அரசாங்கம் நடபடிகள் எடுப்பதும் சரியே. ஹோமியோபதி முறை சரியாய் புரிந்து கொள்ளாமல், வேண்டாதவைகளைச் செய்து, வியாதியஸ்தனின் அபிமானத்தை பெறமுடியா மலிருப்பதுதான் ஹோமியோபதி தமிழ் நாட்டில் இந் நிலையில் இருப்பதின் காரணம். **ஹோமியோ முறை தீங்கற்றது என்று அபிப்பிராயப்படுவது உண்மை யான ஹோமியோபதி வைத்தியனின் தத்துவமல்ல.** நம் மருந்துகளுக்கு உயிரை அழிப்பதற்கு சக்தியில்லை யெனில், வியாதிகளை குணப்படுத்துவதற்கும் சக்தி கிடையாது என்று டாக்டர் கென்ற் தனது மெட்டீரியா மெடிக்காவில் குறிப்பிட்டிருக்கிறார். உயர்ந்த வீரியங் களை ஒத்துக்கொள்ளாத இடங்களில் உபயோகிப்பது, நோயாளியை தன் ஆயுள் காலம் பூராவாக பாதித்து விடும். உயர்ந்த வீரியங்களின் செய்கையை எழுதில் மாற்று மருந்து கொடுத்து அழிக்க முடியாது. எனவே கல்லூரிகளில் சென்று ஹோமியோபதியை படிக்க முடியாமல் இதர வகைகளில் படித்து தொழில் நடத்தும் ஹோமியோபதியர்கள், ஹோமியோபதியில் எதை எதை செய்யக்கூடாது என்பதையும் நன்றாக அறிந்து கொள்ளவேண்டும். அப்படியானால் தான் உதவி செய்யா விட்டாலும் உபத்திரவம் செய்யாமலாவது தொழில் நடத்த முடியும். ஆர்கனனைத் திரும்ப திரும்ப படிக்க வேண்டும். மருந்துகளின் சக்தியையும் தாக்கும் தன்மை யையும் நன்றாய் புரிந்து கொள்ளவேண்டும். பல மருந் துகள், குறைந்த வீரியங்களில்கூட பல நாட்களுக்கு ஒரு தடவையே கொடுக்க கூடியவை. இதை அறிந்து கொள்ளாமல் அடிக்கடி அம்மருந்துகளை கொடுப்பது கொலை பாதகத்திற்கு சமமாகும். ஏனெனில் நம்மை நம்பிய நோயாளி விரைவில் கொல்லப்படுகிறான். எக்காரணத்தைக்கொண்டும் கர்ப்பத்தை கலைக்க மருந்து கொடுக்கக்கூடாது. போதைக்காக ஹோமியோ திராவ

கங்களை குடிக்க கொடுக்க கூடாது. தெய்வ பயமும், மனச்சாட்சியும் உள்ளவனே உண்மையான வைத்தியனுக செயல்பட முடியும்.

## வியாதியின் காரணம். (Etiology)

இதை அறிந்து கொள்ள முடியுமானுல் மருந்தை தெரிவு செய்வதற்கு மிகவும் பயன்படும். (உ-ம்) குளிருக்கும், ஈரமான நிலைக்கும் தன்னை வெளிப்படுத்துவதால் உண்டாகும் குறிகளை, **ரஸ்டாக்ஸ், நட்ரம் சல்ப், கால்காரியா** முதலிய மருந்துகள் கவரும். அடிபடுதலால் உண்டாகும் குறிகளை பொதுவாக **ஆர்ணிகா** என்னும் மருந்து கவரும். இதர முறை மருந்துகளால் உண்டாகும் வியாதிகளுக்கு, **நக்ஸ்வாமிகா, ஹெபர், ப்ரையோனியா** முதலிய மாற்று மருந்துகள் கொடுக்கப்படவேண்டும்.

## ஹோமியோ மருந்துகளை கையாளவேண்டிய விதம்.

ஹனிமான் அவர்களால் பொறிக்கப்பட்டிருக்கும் ஒரு முக்கிய விதி, **ஒரே ஒரு மருந்தை** (Single Remedy) **மொத்தக் குறிகளுக்கேற்றவாறு தெரிந்து கொடுக்க வேண்டுமென்பதே.** அதாவது நாம் கொடுக்கும் மருந்து நோயாளியின் எல்லாக் குறிகளையும், அல்லது ஏகதேசம் எல்லாக் குறிகளையும் கவருவதாய் இருக்க வேண்டுமேயன்றி, மூன்று நான்கு மருந்துகள் சேர்ந்து கவருவதாய் தெரிந்தெடுத்து, அவற்றை யாவையும் ஒன்று சேர்த்து கொடுக்கக்கூடாது. ஏனெனில், இம்மாதிரியான கூட்டு முறை ஒளஷதங்களின் குணங்கள் பரிட்சிக்கப்பட்டு எழுதப்படவில்லை. மருந்துகளை அடிக்கடி மாற்றி மாற்றி கொடுப்பது கூட சரியான முறையல்ல. ஏனெனில் இது கூட ஓரளவு கூட்டு முறை சிகிற்சையாகவே மாறுகிறது. இம்முறை சில சமயங்களில் ஆபத்தை விளைவிக்கும். இவ்வித குறுக்கு வழிகளை உண்மையாய் ஹனிமானை பின்பற்றுபவர்கள் கையாளுவதில்லை.

## மருந்துகளின் அளவு.

மிகவும் சிறிய அளவு மருந்து கொடுப்பது ஹோமியோ முறையில் போதுமானது. பொடியாய் இருந்தால் $\frac{1}{2}$ அரிசி இடையும், திராவகமாய் இருந்தால் இரண்டு சொட்டும், குளிகையாய் இருந்தால் இரு குளிகைகளும் ஒரு வேளைக்கு போதுமானது. சிறு குழந்தைகளுக்கு இன்னும் குறைவாக கொடுக்கலாம்.

## திரும்ப மருந்து கொடுக்கும் சமயம்

தீவிர வியாதிகளில் 5 அல்லது 10 நிமிடத்திற்கொரு தடவையோ, வியாதி மிகவும் உக்கிரமாய் இருந்தாலோ அல்லது அபாயமான கட்டத்தை அடைந்து விட்டாலோ இன்னும் குறைவான சமயத்தில்கூட மருந்தை திரும்ப திரும்ப கொடுக்கலாம். நாள்பட்ட வியாதிகளில் கூடுதல் வீரியங்கொண்ட மருந்துகளே கையாளப்படுவதால் அடிக்கடி மருந்து கொடுக்கக் கூடாது. ஒவ்வொரு வேளை மருந்தும் அதன் பூரா ஓட்டத்தை முடித்த பின்பே, மறுபொழுது மருந்து கொடுக்கவேண்டும். மருந்தின் ஓட்டம் முடிவதை, நோயாளி, குணமடைந்து கொண்டு வந்த வியாதியில் இப்பொழுது இரண்டு மூன்று தினங்களாக முன்னேற்றமில்லை என்று கூறுவதிலிருந்து அறிந்து கொள்ளலாம். ஆனால், இது வேறு ஏதும் காரணங்களினால் தடைபட்டிருக்கிறதா என்பதையும் அறிந்து, அங்ஙனம் இருக்குமாயின் அக்காரணங்களை அகற்றவேண்டும். (ஆர்கனனைப் பார்க்கவும்)

## வேறு மருந்து கொடுப்பது

தீவிர வியாதிகளில், ஒன்று அல்லது இரண்டு நாட்களில் குறிகள் முன்னேற்றமடையாவிடில், கொடுக்கப்பட்ட மருந்து சரியல்ல என்று நிச்சயித்து, குறிகளை சரியாய் கவனித்து மொத்தக் குறிகளுக்கொத்த சரியான மருந்தை தெரிவு செய்து கொடுக்கவேண்டும். ஆனால் இதை ஒரு தீவிர சட்டமாக ஒப்புக்கொண்டு எல்லா தீவிர வியாதிகளிலும் இங்ஙனம் மருந்தை மாற்றிவிடக்

கூடாது. வியாதியின் ஓட்டம் எத்தனை நாள் என்பதை அறியக்கூடிய வியாதியாயிருந்தால் குறிகளுக்கொத்த சரியான மருந்தையே ஓட்டம் முடியும் வரை கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும். பல நாட்கள் இருந்து குண மாகும் தீவிர வியாதிகளுக்கு 5 நிமிடம், 10 நிமிடத்திற் கொரு தடவை மருந்து கொடுக்க தேவை இல்லை. சில மணி நேரங்களுக்கொரு தடவை கொடுத்தால் போது மானது. ஆனால், திடீரென வியாதி உச்சநிலையை அடையுமாயின், அப்போதைய குறிகளுக்கொத்த சரி யான மருந்தை அடிக்கடி கொடுத்து, உக்கிரமத்தை மாற்றிவிடவேண்டும். இவற்றிற்கெல்லாம் குறிப்பிட்ட சட்டதிட்டங்கள் கிடையாது. ஏனெனில், ஹோமியோ முறையில் வைத்தியன் சில சந்தர்ப்பங்களில் தன் தனிப்பட்ட சாதுர்யத்தை உபயோகித்துக்கொள்ள வேண்டும். குறிகளின் தீவிரம் குறைய குறைய மருந்து கொடுக்கும் இடைவேளையை விரிவாக்கிக் கொள்ள வேண்டும். சில சந்தர்ப்பங்களில் சரியான மருந்து கொடுத்தும், மருந்து வேலை செய்யாமலிருக்கலாம். இந்நிலை ஏற்பட்டால், தீவிர வியாதிகளில் **சல்பர்** என்ற மருந்தையும், நாள்பட்ட வியாதிகளில் **சோரினம்** என்ற மருந்தையும் கொடுத்தால், ஆரம்பத்தில்கொடுத்த மருந்து வேலை செய்ய ஆரம்பித்து விடும். இந்நிலைக்கு வேறு சில மருந்துகளும் உதவும். இதை மெட்டீரியா மெடிக்காவில் பார்க்கலாம். மியாசங்களை அடிப்படையா கக் கொண்ட வியாதிகளில், மியாசங்களுக்கு எதிரான மருந்துகள் கொடுக்கப்படாவிடில் வியாதியில் முன் னேற்றமிருக்காது. இதை, மியாசங்களின் கீழ் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது.

## பதாலாஜிக்கல் குறிகளின் உபயோகம்.

எந்தந்த அவயவங்கள் வியாதியுற்றிருப்பதால் குறி கள் தோன்றியிருக்கின்றன என்பதை அறிந்து கொள்ள வேண்டும். உதாரணமாக **மஞ்சள்காமாலை** ஓர் குறியே யன்றி, தனிப்பட்ட வியாதியல்ல. இங்குதான் பதாலா ஜிக்கல் அறிவு மிகவும் பயன்படுகிறது. ஏனெனில், மஞ்சள்காமாலை பல அவயவங்கள் வியாதியுறலால் உண்

டாகிறது. மண்ணீரல், இரத்தத்தின் சிவந்த அணுக்கள், பித்தப்பை முதலியவற்றில் ஏதாவது ஒன்று வியாதியுறலால் மஞ்சள் காமாலே என்ற குறி ஏற்படலாம். இவையன்றி வேறு பாகங்கள் வியாதியுறலாலும் மஞ்சள் காமாலே ஏற்படும். சரீரத்தின் எந்த அவயவம் வியாதியுற்று இந்நிலே ஏற்பட்டிருக்கிறது என்பதை அறிந்து கொள்ளும் வைத்தியன், அப்பாகத்தில் வேலே செய்யும் மருந்துகளில் ஒன்றை குறிகளுக்கொத்தாற்போல் எளிதில் தெரிந்து கொள்வான். ஆனல் இதற்கு, சரீரத்தின் உறுப்புகள், அவற்றின் வேலேகள், அவற்றின் வேலேகளில் ஏற்படும் மாறுதல்கள், அவை கெட்டுப்போதல் முதலியவற்றைக் கண்டுபிடிக்கும் அறிவு வேண்டும். இது வைத்தியக் கல்லூரியில் சென்று சரீர சம்பந்தமான எல்லா சாஸ்திரங்களேயும் கற்பவர்களுக்கே முடியும். எனவேதான் பட்டம்பெற்ற அலோபதியர்கள், ஹோமியோ முறையை சரியான ரீதியில் பின் பற்றும்பொழுது விரைவில் வெற்றி அடைகின்றனர். இவ்விதமாக **தலே கிறுகிறுப்பும்** (Vertigo) பல காரணங்களினுல் உண்டாகிறது. காதில் உண்டாகும் வியாதிகள், இரைப்பை, குடல், இரத்தத்தின் அணுக்கள் முதலியவை வியாதியுறல் தலே கிறுகிறுப்பு உண்டாவதற்கு சில காரணங்கள். இவ்விதம், குறிகள் உண்டாவதற்கு ஏதாவது அவயவம் வியாதியுற்றிருக்கிறதா என்பதை அறிந்து, நாம் கொடுக்கும் மருந்துக்கும் அந்த அவயவத்தை தாக்கி, இக்குறியை உண்டுபண்ண சக்தியுள்ளதாய் இருக்க வேண்டும். ஆனல் பதாலாஜி அறிவு, அவயவங்கள் கெட்டுப் போனபின் அதிக பயன்படுவதில்லே. ஏனெனில், எந்தவித சிகிற்சையிலும், கெட்டுப்போன அவயவங்கள் குணமடைவது கடினம்.

## மொத்தக் குறிகள் மாருத நிலே.

சில சந்தர்ப்பங்களில், குறிகளுக்கொத்த சரியான மருந்து தெரிவு செய்து கொடுக்கப்பட்டபோதிலும், ஒரு பகுதி குறிகள் மாறி, ஒரு பகுதி குறிகள் மாருமல் இருக்கலாம். பாக்கியிருக்கும் குறிகளே கொடுத்த மருந்தால் குணமாக்க முடியாது என்று நிச்சயமாக அறிந்து

கொள்ளும்பொழுது, பாக்கியிருக்கும் குறிகளை மொத்தமாய் கவரும் வேறு மருந்தை தெரிவு செய்து கொடுக்கலாம். நாள்பட்ட வியாதிகளிலும் இம்முறையைக் கையாளலாம். ஆனால். இவ்விதியை அனுசரணையாக வைத்து எல்லாக் குறிகளையும் துண்டு துண்டாக கவரும் பல மருந்துகளை தெரிவு செய்து, ஒன்றின்பின் ஒன்ருக எல்லா மருந்துகளையும் கொடுத்து. எல்லாக்குறிகளையும் குணமாக்கிவிடலாம் என்று நம்பி, இம்முறையை எப்பொழுதும் கையாளுவது, தோல்விக்கு மேல் தோல்வியையே தரும். எல்லாக் குறிகளையும் அல்லது ஏகதேசம் எல்லாக் குறிகளையும் கவரும் ஒரு மருந்தையே தெரிவு செய்ய வேண்டும்.

## முக்கிய குறிகள் கிடைக்காத வியாதிகள்.

சரியான மருந்தை கண்டுபிடிப்பதற்கு வேண்டிய முக்கிய குறிகள் கிடைக்காவிடில், நோயாளி சொல்லுகிற குறியை அடிப்படைக்குறியாக வைத்து, அதைக் கவரும் மருந்தை கொடுக்கலாம். இவ்விதம் கொடுக்கப்படும் மருந்து சரியாய் நிரூபிக்கப்படாததும், ஆனல் நோயாளி சொல்லுகிற ஒன்றிரண்டு குறிகளை மாத்திரம் கவருவதுமாயிருக்கும். இம்மருந்துக்கு கிளினிக்கல் மருந்து (Clinical Remedies) என்று பெயர். (உ-ம்) **தலை கிறுகிறுப்பு** என்னும் குறிக்கு, **கிறனேற்றம்** என்னும் மருந்தையும், **க்க்குவானுக்கு, நப்தலின்** என்னும் மருந்தையும் வியாதியின் ஒன்றிரண்டு குறிகளை மாத்திரம் வைத்து கொடுக்கலாம். இம்மருந்துகளை தாய் திராவகத்திலோ அல்லது குறைந்த வீரியத்திலோ உபயோகிக்கவும்.

## மருந்துகளின் உறவு. (Drug Relationships)

ஹோமியோ மருந்துகள் பொதுவாக தாவர வர்க்கம் பிராணிவர்க்கம், உலோகவர்க்கம் முதலியவற்றிலிருந்து தயாரிக்கப்படுகின்றன. ஆனல் இரு மருந்துகள் ஒரே வர்க்கத்தை சார்ந்தவை என்னும் காரணத்தால், இரண்

டின் குறிகளும் ஒன்ருகவே இருக்கும் என்று எண்ணக் கூடாது. ஒவ்வொரு மருந்தின் தனிக்குணத்தையும் அறிந்தே உபயோகிக்கவேண்டும்.

## மாற்று மருந்துகள். (Antidotes)

மாற்று மருந்து என்பதற்கு, ஒரு மருந்தின் செய்கையை அல்லது தாக்குதலே மாற்றும் அல்லது முறிக்கும் மருந்து என்பது பொருள். தவருக கொடுக்கப்படும் மருந்துகளுக்கும், மருந்தின் செய்கையை நோயாளி தாங்கமுடியாத நிலே ஏற்படும் பொழுதும், மாற்று மருந்துகள் தேவைப்படுகின்றன. ஒவ்வொன்றின் மாற்று மருந்தையும் மெட்டீரியா மெடிக்காவில் பார்க்கலாம். சில மருந்துகளில், அதே மருந்தின் கூடிய வீரியம், மாற்று மருந்தாக பயன்படும். (உ-ம்) ரஸ்டாக்ஸ் என்னும் மருந்தில், 200-வது வீரியம், 30-வது வீரியத்திற்கு மாற்று மருந்தாக செயல்படும்.

## மருந்துகளின் இணக்க உறவு
## Concordant or Compatible Relationship

ஹனிமான் தனது பரிட்சைகளின் மூலம், சில மருந்துகளே ஒரு குறிப்பிட்ட வரிசைக்கிரமமாக கொடுக்கும் பொழுது, அவை ஒரே வர்க்கத்தை சேராதவையாயினும் மிகவும் நன்ருக வேலே செய்வதாக கண்டார். (உ-ம்) நாள் பட்ட வியாதிகளில், **சல்பர், கால்காரியா, லேக்கோபோடியம்** என்னும் மருந்துகள் சொல்லியிருக்கும் வரிசைக் கிரமத்தில் கொடுக்கப்படும் பொழுது, மிகவும் பயன்படும். தீவிர வியாதிகளில், பெல்லடோன—மெர்குறி, பல்சடில்லா-செபியா, காளிபாஸ்-இக்னேஷியா. கூடுதல் இணக்க உறவுகள் மெட்டீரியா மெடிக்காவில் பார்க்கலாம்.

## பூர்த்தி செய்யும் உறவு
## Complementary Relationship

இது ஓர் வகையில் இணக்க உறவே. ஆனல் இங்கு ஒரு மருந்தின் பின் மற்ருென்று நன்ருக வேலேசெய்வது

மாத்திரமின்றி, முதல் மருந்து தொடங்கிய வேலையை யும் முடித்து விடுகிறது. அவயவங்கள் கெட்டுப்போய் (Organic Diseases) நீடித்த காலமாய் சிகிற்சையில் இருப்பவர்களுக்கு இவ்வுறவு பயன்படுகிறது. (உ-ம்) ஏபிஸ் என்னும் மருந்தின் பின் நட்ரம்மூர், அகோனைட் என்னும் மருந்தின் பின் சல்பர், பெல்லடோனு என்னும் மருந்தின் பின் கால்காரியா.

## கெடுதலான உறவு (Inimical Relationship)

இது இணக்க உறவு, பூர்த்தி செய்யும் உறவு முதலியவற்றிற்கு சுத்த எதிரிடையானது. சில மருந்து கள் சில மருந்துகளை தொடர்ந்து கொடுக்கப்படும் பொழுது, பலவித சிக்கல்களை உண்டு பண்ணி விடும். எனவே, ஒரு மருந்தின் பின் வேறொரு மருந்து கொடுக் கும்பொழுது இந்த உறவை கவனித்துக்கொள்ளவேண் டும். எக்காரணங்கொண்டும் கெடுதலான உறவுள்ள மருந்தை ஒன்றின் பின் கொடுக்கக்கூடாது. (உ-ம்) ரஸ்டாக்ஸ் என்னும் மருந்தை ஏபிஸ் என்னும் மருந் தின் பின்னுலும், பாஸ்பரஸ் என்னும் மருந்தை காஸ் டிகம் என்னும் மருந்தின் பின்னுலும், லாச்சசிஸ் என் னும் மருந்தை செபியா என்னும் மருந்தின் பின்னு லும் கொடுக்கக்கூடாது. மெட்டீரியா மெடிக்காவில் ஒவ்வொரு மருந்தின் இணக்க உறவுகளும் கொடுக்கப் பட்டிருக்கிறது.

## களஞ்சிய புத்தகம் Repertory.

வியாதிகளையும், அவற்றின் பற்பல குறிகளுக்கு ஏற்ருற்போல் பல மருந்துகள் குறிக்கப்பட்டிருக்கும் புத்தகத்திற்கு **களஞ்சிய புத்தகம்** (Repertory) என்று பெயர். சில வியாதிகளுக்கு களஞ்சிய புத்தகத்தை ஆராயத் தேவை இல்லை. அனுபவத்தின் மூலம் குறிப் பிட்ட ஒரு தொகுதி அல்லது கூட்டம் குறிகளை வைத்து மருந்தை தெரிவு செய்து விடலாம். அதிகப்படியாக தொழில் நடக்கும் ஒரு வைத்தியனின் தொழிலில், ஒவ் வொரு நோயாளிக்கும் களஞ்சிய புத்தகத்தை பார்ப்பது முடியாத காரியம். வியாதியின் பெயருக்கு முக்யத்துவம்

கொடுக்காமல், ஒரு கூட்டம் குறிகளை வைத்து மருந்தை தெரிவு செய்துவிடலாம் உதாரணமாக, நிமோனியா என்னும் வியாதியில் குறிகள் கூட்டமாகவே காணப்படும். அதாவது. சில முக்கிய குறிகள் இருந்தால் கூடுதலாக இன்னென்ன குறிகளும் இருக்கும் என்பதே. முக்கியமாக **பாஸ்பரஸ், ப்ரையோனியா, வெராட்ரம் விர்** என்னும் மருந்துகள் நிமோனியாவுக்கு உதவும் மருந்துகள். அனுபவத்தின் மூலம், சிக்கல்கள் இல்லாத இவ் வியாதியில், ப்ரையோனியாவின் ஒன்றிரண்டு குறிகள் இருந்தால், வேறு சில ப்ரையோனியாவின் குறிகளும் சேர்ந்து ஒரு தனி கூட்டமாக அமைந்து விடுவதை வைத்தியர் அறிந்து கொள்கிறுன். ஆனால் எல்லா நிமோனியா நோயாளிக்கும் ப்ரையோனியாவையே கொடுப்பதில்லை. குறிகளின் கூட்டத்திற்கு தக்கபடி மருந்தை மாற்றுகிறுன். இவ்வித சிகிற்சைக்கு கீழ்காணும் விதிகள் அனுசரிக்கப் படவேண்டும்.

1) வியாதியின் காரணங்கள் மருந்தை எளிதில் தெரிவு செய்ய உதவுமாகையால், ஏதாவது காரணம் இருக்கிறதா என்பதை அறிந்து கொள்ள வேண்டும். (உ-ம்) ஆகார மாறுதல்கள், சீதோஷ்ண மாறுதல்கள் முதலியவை.

2) வியாதியஸ்தனை நாம் பரிசோதிப்பதின் மூலம் ஏதாவது மருந்து தென்படுகிறதா ?

3) நாம் நினைக்கும் மருந்து நோயாளியின் முக்கிய உணர்ச்சிகளுக்கும், ஏற்றம் இறக்கம் முதலிய குறிகளுக்கும் ஒத்துக் கொள்கிறதா?

4) அதிகப்படியான மருந்துகளை உட்கொண்டதால் ஏற்பட்டதா?

இக்கேள்விகளுக்கு கிடைக்கும் விடைகள், பல மருந்துகளுக்கு ஒத்ததாய் இருந்தால் கூட கீழ்காணும் கேள்விகளுக்கு கிடைக்கும் விடைகளின் மூலம் சில மருந்துகளை தள்ளி விடலாம்.

1) தாக்கப்பட்டிருக்கும் அல்லது வியாதியுற்றிருக்கும் அவயவத்தில், தெரிந்து கொள்ளும் மருந்து வேலை செய்யும் தன்மை உண்டா?

2) பார்வைக்கு மாத்திரம் ஒத்துக்கொள்ளும் மருந்தாக தெரிகிறதா அல்லது உண்மையிலேயே ஒத்துக்கொள்கிறதா? நோயாளியில் குறிகள் தோன்றிய மாதிரி இம்மருந்துக்கும் குறிகளை உண்டுபண்ண சக்தியிருக்கிறதா?

3) அவயவத்தின் வேலையில் ஏற்பட்டிருக்கும் மாறுதல், அவயவத்தின் தசைகளில் ஏற்பட்டிருக்கும் மாறுதல் முதலியவற்றை உண்டுபண்ண தெரிவு செய்யும் மருந்துக்கு சக்தியுண்டா?

4) வியாதியின் தற்போதைய நிலைக்கு இம்மருந்து பொருந்துமா?

## வியாதியின் நிலையின் விளக்கம்

தீவிர வியாதிகளுக்கு மூன்று நிலைகள் உண்டு. ஆரம்ப நிலை, மத்திய நிலை, இறுதி நிலை. தெரிவு செய்யும் மருந்து வியாதியின் நிலைக்கு ஒத்ததாய் இருக்கவேண்டும் (உ–ம்) அகோனைட் என்னும் மருந்து வியாதிகளின் ஆரம்ப காலத்தில் மாத்திரமே பயன்படும். ப்ரையோனியா என்னும் மருந்து வியாதி தீவிரமாக ஏற்பட்ட பின் உள்ள மத்திய நிலையிலும் பயன்படும் வியாதியின் அபாய நிலையான இறுதி நிலையில், லாச்சசிஸ், ஆர்சனிக்கம் முதலிய மருந்துகள் பயன்படும்.

இங்கு விரிவாக இவைகள் எழுதப்பட்டிருப்பினும், மெட்டீரியா மெடிக்கா நன்ருய் தெரிந்த அனுபவமுள்ள ஒரு ஹோமியோபதி வைத்தியருக்கு இக்கேள்விகளின் பதிலை மனதில் தெரிந்து, சரியான மருந்தை கண்டு பிடிப்பது சில வினடிகளில் முடியக்கூடியதே.

## கையாளவேண்டிய வீரியங்களும், முறைகளும்.

சரியான மருந்தை தெரிவு செய்யப்பட வேண்டியது போல், வியாதி குணமடைவதற்கு சரியான வீரியமும், சரியான முறையில் மருந்து திரும்ப கொடுக்கப்படவும் வேண்டும். மருந்தின் அளவைக் குறைவாக கொடுத்தல், வியாதி முன்னேற்றமடைந்தவுடன் மருந்து கொடுக்கும் இடைவேளையை கூட்டிக்கொள்ளுதல், வியாதி முன்னேற்றமடைந்ததும் வீரியத்தைக் கூட்டல் முதலியவை சில முக்கிய விதிகள். தீவிர வியாதிகளில் குறைந்த வீரியம் போதுமானது. ஆனால் மிகக் குறைந்த வீரியத்தை கையாளக்கூடாது. ஏனெனில் குறிகளில் தீவிர ஏற்றம் ஏற்படலாம். சரீரத்தின் முக்கிய அவயவங்களில் தீவிர தாக்குதல் இல்லாத மருந்துகளை கூடுதல் வீரியத்தில் கையாளலாம். 30–வது வீரியம் பொதுவாக ஒரு நல்ல வீரியம். ஆனால், சில குறிப்பிட்ட வியாதிகளுக்கு, குறிப்பிட்ட வீரியங்களே கையாளப்படவேண்டும். இதை மெட்டீரியா மெடிக்காவில் பார்க்கலாம். இச்சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட வீரியத்தில் மாத்திரமே மருந்து கொடுக்கப்படவேண்டும். நாள்பட்ட வியாதிகளில்கூட 30-வது வீரியத்தில் ஆரம்பித்து வியாதி முன்னேற முன்னேற கூடுதல் வீரியங்களை கையாளலாம். இதரவிதிகளை நாள்பட்ட வியாதிகளின் சிகிற்சை முறையில் காணலாம்.

## சரீரப்பிரகருதி சிகிற்சை
## Constitutional Treatment

இது ஹோமியோ முறையில் மாத்திரமே சாத்தியமாகும். இம்முறை நாள்பட்ட வியாதிகளில் மிகப்பயன் தரும். ஆனால் இப்பயனை சில நாட்களிலோ அல்லது வாரங்களிலோ அடைய முடியாது. நீடித்த கால சிகிற்சையின் பின்னே முழு பலனையும் அடைய முடியும். ஒரு வகையில் இவைகள் தடுப்பு மருந்துகளாக பயன்படும். சிக்கலான வியாதிகளை **சரீரப்பிரகருதி** (Constitutional) மருந்துகளாலேயே குணப்படுத்த முடியும். சில

மருந்துகள் மிகவும் மேன்மையான சரீரப்பிரகருதி மருந்துகள். இவைகளின் செய்கை பல நாட்கள் நீடித்திருப்பதோடு, அவயவங்களையும் மிகவும் சக்தியோடு தாக்கும். சிக்கலான வியாதிகளில், களஞ்சிய புத்தகத்தின் உதவியோடு, எல்லாக் குறிகளையும் அதாவது ரசாயன பரீட்சைகளில் கிடைக்கும் குறிகளையும் சேர்த்து அவற்றிற்கொத்த மருந்தை ஆழ்ந்த சிரத்தையுடன் தெரிவு செய்தல் மூலமே இம்மருந்துகளை கண்டு பிடிக்க முடியும். வாத சரீரம், சோவை சரீரம், இழுப்பு நோயுள்ள சரீரம், பித்த சரீரம், ஆகாரக் குறைவால் சரீர வ்ளர்ச்சி குறைந்த சரீரம், அடிக்கடி ஜலதோஷம் பிடிக்கும் சரீரம், அஜீரணக் கோளாறுள்ள சரீரம் என்று பலவகைப்படும். ஒவ்வொரு வகைக்கும் மருந்துகள் உதவும் விதத்தை மெட்டீரியா மெடிக்காவில் பார்க்கலாம்.

## இசோபதி (Isopathy)

ஒரு வியாதியின் சீழ் அல்லது அழுக்குகளிலிருந்து தயாரிக்கப்படும் மருந்துகளுக்கு **நோசோட்ஸ்** (Nosodes) என்று பெயர். (உ-ம்) **வெரியோலினம்** என்னும் மருந்து வைசூரி நோயின் கொப்பளங்களிலுள்ள நீரிலிருந்து தயாரிக்கப்படுகிறது. **டுபர்குலினம்** என்னும் மருந்து க்ஷயரோகச் சிலந்தியின் சீழிலிருந்து தயாரிக்கப்படுகிறது. ஹோமியோ முறையில் இவ்வித பல மருந்துகள் இருக்கின்றன. ஒரு வியாதியின் பொருளிலிருந்து தயாரிக்கப்படும் மருந்தை அதே வியாதிக்கு கொடுக்கும் சிகிற்சை முறைக்குத்தான் இசோபதி என்று பெயர். என்றிருப்பினும், ஹோமியோ முறையில் மொத்தக்குறிகள் ஒத்திருந்தால் தான் இம்மருந்துகளை கொடுக்கவேண்டும். பல (நோசோட்ஸ்) மருந்துகள் மிக உயர்ந்த வீரியத்தில் மாத்திரம் தான் கொடுக்கப்படவேண்டும்.

## குறிகளை பதிவு செய்யும் மார்க்கம்.

1) நோயாளி ஆம் அல்லது இல்லை என்று பதில் தரக்கூடிய கேள்விகளை அனுவசியமாய் கேட்கக்கூடாது.

2) பிறரால் இன்ன வியாதியென்று கண்டுபிடிக்கப் பட்டிருப்பதையே சரியென நாமும் ஒப்புக் கொண்டு, அதற்குள்ள சிகிற்சையை உடனடி ஆரம்பித்துவிடக் கூடாது.

3) ஏற்றம், இறக்கம், விருப்பம், வெறுப்பு முதலிய வற்றை அறிந்து கொள்ளவேண்டும்.

4) மனநிலை, குணம் முதலிய குறிகளை கண்டிப்பாய் அறிந்து கொள்ளவேண்டும். குறிப்பாக வியாதிக்கு முன் இருந்த மன நிலையும், தற்போதைய மன நிலையும் மிகத் தேவை. ஏனெனில் நாம் தெரிவு செய்யும் மருந்திற்கு இம் மனநிலையை அதாவது வியாதியினால் மாறி யிருக்கும் மனநிலையை உண்டுபண்ண சக்தி வேண்டும்.

5) மறையும் குறிகளுக்கு பதிலாக வேறு குறிகள் உண்டாகிறதா? பதிலாக உண்டானக் குறிகள் மறைந் ததும் முதல் குறிகள் திரும்பவும் தோன்றுகிறதா என் பதை கேட்டறிந்து கொள்ள வேண்டும். இங்ஙனம் குறிகள் மாறி மாறி வருவதற்கு, **மாறி மாறி வரும் குறி கள்** (Alternation of Symptoms) என்று பெயர். இதற்குள்ள மருந்துகளை மெட்டீரியா மெடிக்காவில் பார்க்கலாம்.

6) அவயவங்கள் வியாதியுற்று, அவற்றால் வெளிப் படையாக காணக்கூடிய குறிகள், அல்லது நோயாளிக்கு ஏற்படும் பயம் முதலியவற்றிற்கு அதிக முக்யத்துவம் கொடுக்கக்கூடாது (உ-ம்) மூத்திரக்காய் வியாதியுறலால் சரீரத்தில் **நீர் அடித்தல்**, இருதய வியாதிகளில் **பயப் படுதல்**. இங்கு பயப்படுதல் மன நிலைக் குறியல்ல. ஏனெனில் வியாதியின் அவஸ்தையால் ஏற்படும் பயமே யன்றி வியாதிக்குரிய குறியல்ல. எனவே இங்கு இக்குறி, மருந்தை தெரிவு செய்ய பயன்படாது.

7) மொத்தக் குறிகள், ஆகார வித்தியாசம், வெளிப் பிரயோக சிகிற்சை, அதிகப்படியான இதர மருந்துகள் அருந்தல் முதலியவற்றால் தடைபட்டிருக்கிறதா என் பதை அறிந்து கொள்ள வேண்டும். தடை இருக்கு

மானல், சிறிது நாட்கள் யாதொரு ஹோமியோபதி மருந்தும் கொடுக்காமல். குறிகளை சரியாய் சேகரிக்க முடிந்த பின் சிகிற்சையை ஆரம்பிக்க வேண்டும்.

குறிகளின் முக்கியத்துவத்தைப் பற்றி ஆர்கனனில் எழுதப்பட்டிருப்பவைகளை திரும்ப திரும்ப படிக்கவும். எவ்விதமாக, ஒவ்வொரு அவயம் அவயவமாக குறிகள் சேகரிக்கப்பட வேண்டுமென்பதையும் ஆர்கனனில் எழுதப்பட்டிருக்கிறது.

## நாள்பட்ட வியாதிகளை சிகிற்சிக்கும் விதம். (Treatment of Chronic Diseases)

1) தற்போதிருக்கும் குறிகள் முன்னல் அருந்திய இதர முறைகளின் மருந்துகளினலோ அல்லது யாதும் விஷவஸ்துக்கள் உட்கொண்டதினலோ ஏற்பட்டவையா என்பதை கவனித்து அதற்குள்ள மாற்று மருந்துகளை கொடுக்க வேண்டும். பொதுவாக, இதர சிகிற்சையின் பின், ஹோமியோ சிகிற்சைக்கு வருபவர் பலவித மருந்துகளை மூல பாகத்தில் அல்லது தாய் பாகத்தில் அருந்தியிருப்பர். எனவே நமது சிகிற்சையை ஆரம்பிக்கு முன் இதற்கு மாற்று மருந்து கொடுக்க வேண்டும். **நக்ஸ் வாமிகா, சல்பர்** முதலிய மருந்துகள் இதற்கு பயன்படும். மெட்டீரியா மெடிக்காவைப் பார்க்கவும். ஒருவன் செய்யும் தொழில், அல்லது செய்துவந்த தொழிலிலிருந்தும் ஏதாவது விஷம் உட்கொண்டிருக்கின்ருன என்று அறிந்து கொள்ளலாம். சமைக்கும் பாத்திரங்களிலும் விஷமிருக்கலாம். விஷத்தைப்பற்றிய சம்சயம் ஏற்படும் போது அதற்குரிய மாற்று மருந்து கொடுத்து, பின்பு குறிகளை நன்ருக ஆராய்ந்து தொடர்ந்து சிகிற்சிக்க வேண்டும்.

2) மேக சம்பந்தமான கிரந்தி அல்லது வெள்ளை நோய் காணத்தக்கதாகவோ அல்லது மறைந்தோ இருக்கிறதா என்பதை அறியவேண்டும். இவைகளை கண்டு பிடிப்பது சிகிற்சைக்கு மிகவும் பயன் தரும்.

3) சுகாதார மாறுதல்கள், ஆகார மாறுதல்கள் முதலியவற்றை அகற்றி, நல்ல ஆகாரம் அருந்தவும், நல்ல சுகாதாரமுள்ள இடத்தில் வசிக்கவும், ஜீவித ஒழுங்குகளை சரியாய் கடைப்பிடிக்கவும் நோயாளியை வற்புறுத்த வேண்டும்.

4) குறிகள் தெளிவாக கிடைக்காத சந்தர்ப்பங்களில் **நக்ஸ் வாமிக்கா, சல்பர், ஓபியம்** முதலிய மருந்துகளில் ஒன்றை கொடுப்பதின் மூலம் மறைந்திருக்கும் குறிகள் வெளிப்பட்டு சரியான மருந்தை தெரிவு செய்ய முடியும்.

5) நாள்பட்ட வியாதிகளை சிகிற்சிக்கும் பொழுது புது குறிகள் தோன்றுவதுடன், பழைய குறிகளும் அதிகப்படலாம். குறிகள் மேலிருந்து கீழாகவும், உள் இருந்து வெளியாகவும், குறிகள் தோன்றிய வரிசையின் எதிர்வசமாகவும் மறைய வேண்டும். அதாவது கடைசியில் தோன்றிய குறிகள் முதலாவது மறைய வேண்டும். இதுதான் சரியான முறையில் வியாதி குணமடைகிறது என்பதற்கு அறிகுறிகள். வெளிப்படையானக் குறிகள் மாறி, முக்கிய அவயவங்கள் கூடுதல் வியாதியுற்ருல், சிகிற்சை வெற்றி பெறவில்லை என்பது பொருள். (உ-ம்) சிபிலிஸ் என்னும் கிரந்தி நோயில் சருமத்திலுள்ள சொறி போன்ற குறிகள் மாத்திரம் குணப்பட்டால் போதாது. இரத்தப் பரிசோதனையில் கான் (Kahn) என்கிற விஷம் இல்லாதிருந்தால்தான் வியாதி பூரண சுகம் அடைந்திருக்கிறதே ஒழிய, சருமக் குறிகள் மாத்திரம் மாறுவது பூரணசுகம் அல்ல. நோய் எப்பொழுதாவது திரும்பி வெளிவரவோ அல்லது அந்தரங்கமாக பல கெடுதல்களையோ விளைவிக்கும். இன்னும் கூடுதல் விபரங்களை ஆர்கனனிலும் ஹனிமானின் நாள்பட்ட வியாதிகளும் அவற்றின் சிகிற்சையும் என்பதிலும் பார்க்கலாம்.

## சரியான சிகிற்சையில் குணமடையும் தன்மை

## Progress of Case under Correct Treatment

தீவிர வியாதிகளில் வியாதியின் ஓட்ட காலத்தை அனுசரித்து குறிகளின் உக்கிரம் குறையத் தொடங்

கும். ஒரு தனிப்பட்ட குறி அல்லது சில குறிகள் குறுகிய கால ஏற்றத்தை அடையலாம். இது நோயாளியின் கூடுதல் உணர்ச்சியினுலோ (Over Sensitiveness) அல்லது மிகக் குறைந்த வீரியம் உபயோகிக்கப்படுவதனுலோ இருக்கலாம். எல்லா குறிகளும் பொதுவாக குறையும். புதுக்குறிகள் தோன்றலாம். மொத்தத்தில் வியாதியில் முன்னேற்றம் இருந்தால் இப்புதியகுறிகளைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. அவைகள் தானுகவே மறைந்து விடும். மனே நிலையும், வியாதியின் குறிகளும் பொதுவாக முன்னேற்றம் அடைந்தால், வியாதி குணமாகிறது என்பதற்கு முக்கிய அடையாளங்களாகும்.

மனக்குறிகள் சீர்குலைந்தாலோ அல்லது தீவிர வியாதியில் குறித்த காலத்துக்குள் முன்னேற்றமில்லா. விட்டாலோ, அல்லது நாள்பட்ட வியாதியில் பல நாட்களுக்குள் முன்னேற்றமில்லா விட்டாலோ நோயாளியின் குறிகளை திரும்பவும் நன்ருக ஆராய்ந்து மொத்த குறிகளைப் பொதியும் இன்னெரு மருந்தை தெரிந்து கொள்ள வேண்டும்.

## குறிகளும், மருந்து தெரிவு செய்யும்முறையும்

**உதாரணம்.**

**வியாதி**—நிமோனியா

**அடிப்படைக் குறிகள்:**

தலைவலி
ஜுரம்
கபம் கட்டியாகுதல்
மூச்சு திணறல்
இரத்தத்தில் வெள்ளை அணுக்கள் கூடுதல். இருமல்.
எச்சிலில் இரத்தம்.

**நிச்சயிக்கும் குறிகள்**

கோபமும், நிலையற்று அல்லது அமைதியற்று இருத்தலும்

ஏற்றம் < இரவு
,, < வலது பக்கம் படுத்தல்

இறக்கம் > குளிர்ந்த காற்று
இரத்தாசயம்— இறுக்கும் உணர்ச்சி
சருமம் — உலர்ந்திருத்தல் (dry)
இருமல். ஏற்றம் < சூடான அறையிலும், மல்லாந்து படுக்கும் பொழுதும்.
பசி — கூடுதல்
தலைவலி — இறுக்குவது போன்ற தன்மையுடையது (Constrictive)
மூச்சுக்குழாய் — வலி

அகோனைட், ப்ரையோனியா, பாஸ்பரஸ், அயோடின் முதலிய மருந்துகள் இக்குறிகளை கவருகின்றன. இதில் எந்த மருந்தை குறிகளுக்கு ஒத்தாற் போல் தெரிந்தெடுப்பது என்பதை பார்ப்போம்.

குளிர்ந்த காற்று விருப்பம் என்றால் போர்வையால் போர்த்திக்கொள்ள விருப்பமில்லை என்று தெரிய வருகிறது. சூடான அறை, இரவு, வலது பக்கம் படுத்தல் முதலியவற்றில் வியாதி ஏற்றமடைகிறது. தலைவலி, இருமல் முதலிய அடிப்படைக் குறிகள், இறுக்கம் என்ற நிச்சயத்தாலும், சூடான அறையில் கூடுதல், மல்லாந்து படுக்கும் பொழுது கூடுதல் என்ற நிச்சயத்தாலும், நிச்சயிக்கும் குறிகளாகவும் மாறுகின்றன. நிச்சயிக்கும் குறிகளை தகுதியாக்கும் (Qualifying) குறிகள் என்றும் சொல்லலாம். தலைவலியை, இறுக்கமான என்ற கூடுதல் குறி, தகுதிக்குறியாக, இறுக்கமான தலைவலியாக்குகிறது. எனவே நாம் தேர்ந்தெடுக்கும் மருந்திற்கும் இறுக்கமான தலைவலிக்குறி இருக்கவேண்டும். இவ்வித தகுதிக் குறிகளைக் கொண்டு அடிப்படைக்குறிகளை திரும்பவும் நிச்சயிக்கும் குறிகளின் கீழ் எழுதவேண்டும்.

## விசேஷக் குறிகள்

இரத்தாசயத்தை இறுக்கும் உணர்ச்சியும், ஆகாரத்திற்கு விருப்பமும் அபூர்வக் குறிகள். ஏனெனில் நிமோனியா நோயுள்ள ஒருவன் ஆகாரத்தை விரும்புவது அபூர்வம். எனவே இங்கு அது விசேஷக் குறி ஆகிறது.

தெரிந்து கொண்ட நான்கு மருந்துகளில் அயோடின் என்ற மருந்து மாத்திரமே மனக்குறியையும் விசேஷக் குறிகளேயும் சேர்த்துக் கவருகிறது. ஆகவே இங்கு **அயோடின்** தான் சரியான மருந்து.

இவ்விதமாக தீவிர வியாதிகளில் கூட சிக்கல்கள் ஏற்படும் பொழுது குறிகளே விவரமாய் எழுதியே மருந்தைக் கண்டுபிடிக்க வேண்டும். ஒவ்வொரு அவயவம் அவயவமாக, பாகம் பாகமாக குறிகளேக் கண்டுபிடிக்க வேண்டும். வைத்தியனுல் கண்டுபிடிக்க வேண்டிய ஒரு குறியை கூட விட்டுவிடக்கூடாது. நோயாளி அல்லது சுற்றத்தார் கூறும் குறிகள், வீண் தோற்றமான (imaginary) குறிகளாக இருந்தால் அவைகளேப் பதிவு செய்யக் கூடாது. சம்சயம் ஏற்படும் பொழுது நன்ருய் கேட்டு குறிகளேத் தெளிவு செய்ய வேண்டும். நாடியின் தன்மை, உணர்ச்சிகள், மனநிலே, நாக்கின் தன்மை, இரத்தாசயத்தின் நிலே, வெளியாகும் சாதனங்களின் தன்மை, விருப்பம், வெறுப்பு, மலச்சிக்கல், மலங்கழிதல், வேதனே, அது தோன்றுமிடம், வேதனேயின் தன்மை ஏற்றம், இறக்கம், அபூர்வக் குறிகள், ஆகாரத்திற்கு முன்னும் பின்னும், பானங்கள் அருந்துவதற்கு முன்னும் பின்னும் ஏற்படும் நிலே, மாதவிடாய் காலத்திலும், அதற்கு முன்னும் பின்னும் ஏற்படும் நிலே, உறக்கம், சொப்பனங்கள், வியர்வை முதலிய குறிகள் சரியான மருந்தை தெரிவு செய்ய மிகவும் தேவை. ஆர்கனனில் இப்பகுதியைக் கவலேயாய் படிக்கவும்.

## ஹோமியோபதி உதவமுடியாத இடங்கள்

ஹோமியோபதியால் எல்லா வியாதிகளேயும், சிக்கல்களேயும் குணப்படுத்தி விடலாம் என்ற மூட நம்பிக்கையில் ஹோமியோபதி உதவக்கூடாத இடங்களிலும், நாமே சிகிற்சை செய்வது சூதாட்டத்திற்கு ஒப்பாகும். இங்கு வைத்தியன் கொலேபாதகனுக மாறுகிருன். இரண சிகிற்சை செய்யவேண்டிய இடத்தில் இரண சிகிற்சை தான் செய்யவேண்டும். பிரசவத்திற்கு ஆயுதப் பரிகாரம் தேவை என்ற நிலே ஏற்பட்டால் அதைத்தான் செய்ய வேண்டும். அலோபதி முறையில் உடனடி விடுதலே

கொடுக்கக்கூடிய இடங்களில் அலைதத்தான் கையாள வேண்டும். இப்படிப்பட்ட சில இடங்களில் ஹோமியோ மருந்துகள் பயன்படுவதில்லை. உதாரணமாக பித்தக்கல் (Gallstone) இடம் பெயரும் பொழுது உண்டாகும் வேதனை, நோயாளியால் தாங்கக்கூடியதல்ல. பெல்ல டோனு, பெர்பரிஸ் என்ற ஹோமியோ மருந்துகள் இக் குறிக்கு மிகச்சிறந்தவையாயினும், எல்லா சமயங்களிலும் வேதனையை மாற்ற முடிகிறதில்லை. இந்நிலையில் அலோபதி முறையைக் கையாண்டு, நோயாளியை மயக்கி, வேதனையை உணர முடியாமலாக்குவது தான் சிறந்த முறை. சில சந்தர்ப்பங்களில் உடனடி இரண சிகிற்சையும் தேவைப்படலாம். எனவே ஹோமியோ பதியின் எல்லையை நன்கு அறிந்து கொண்டு செயல் படவேண்டும். சிக்கல் தீர்ந்த பின், பித்தக்கல் திரும்ப உண்டாகாமல் தடுத்து. குணப்படுத்துவதற்கு நல்ல ஹோமியோ மருந்துகள் உண்டு.

## நாள்பட்ட வியாதிகளின் தன்மையைப்பற்றி ஹனிமானின் விளக்கம்.

நாள்பட்ட வியாதிகள் ஹோமியோ முறையில்தான் மிகவும் வெற்றிகரமாக குணமாக்கப்படுகிறது. குண மடைந்துவரும் நாள்பட்ட வியாதிகூட, ஆகாரமாறுதல், அசாதாரண சீதோஷ்ண நிலைக்கு தன்னை வெளிப்படுத் தல், தேகத்திற்கும் மனதிற்கும் கூடுதல் வேலை கொடுத் தல், அடிபடுதல், துக்கம், பயம் முதலியவற்ருல் திரும் பவும் அதிகப்பட்டு விடலாம். ஆனுல் அதிகமாக இவ் விதம் திரும்பவும் தோன்றும் வியாதியின் உக்கிரம் சோரு என்ற மியாசத்திஞலேயே உண்டாகிறது. இந்நிலை ஏற்படும் பொழுது திரும்பவும் திரும்பவும் ஆரம்பத்தில் கொடுத்த மருந்தையே கொடுப்பது பயனைத் தராது. சோரு என்கிற மியாசம் இந்நோயா ளிக்கு இருக்கிறதென்பதை அறிந்து, குறிகளுக் கொத்த சோருவுக்கு எதிரான மருந்தை தெரிவு செய்து கொடுக்க வேண்டும். ஹனிமான் பல வருட ஆராய்ச்சி யின் மூலமும் அனுபவத்தின் மூலமுமே சோரு என்ற மியாசத்தைக் கண்டுபிடிக்க முடிந்தது. சோருவைக்கண்டு

பிடித்து நாள்பட்ட வியாதிகளை வெற்றிகரமாக குண மாக்க முடிந்ததும், இது இறைவனால் அளிக்கப்பட்ட வரம் என்று கூறினார்.

**மேக வியாதிகளுடன்** (Venereal Diseases) கலக்கப்படாத நாள் பட்ட வியாதிகள்கூட, எல்லா ஒழுங்குகளையும் சரியாய் அனுசரித்து வந்தாலும், திரும்பவும் உக்கிரமத்தை அடைவதே அவரை அதன் அடிப் படைக் காரணத்தை கண்டு பிடிக்க ஏவிற்று. வெளிப் படையாக காணக்கூடிய ஒரு முக்கிய குறி சோராவிற்கு சொறி சிரங்காகும். இது வெளிப்படையாக சருமத்தில் காணப்படாமலும் இருக்கலாம். இதுகுழந்தைபருவத்தில் உண்டாகி பல வருடம் வெளிப்படையாகக் காணப்படா மலும் இருக்கும். சரும வியாதிகள், அடிக்கடி மூக்கிலி ருந்து இரத்தம் வடிதல், மூலவியாதிகள், எச்சிலில் இரத்தம் கலந்திருத்தல், மாதவிடாய் இல்லாதிருத்தல் அல்லது அடிக்கடி கூடுதலாய் இருத்தல், இரவில் வேர்வை எடுத்தல், பல வருடங்களாக மலம்இழகிகழிதல் அல்லது மலச்சிக்கல், பார்வை மங்குதல், செவிடு, முகரும் சக்தி இல்லாமை, கூடுதல் சம்போக ஆசை அல்லது விருப்பம் இல்லாதிருத்தல், பைத்தியம்,அடிக்கடி மயங்கி விழுதல், தலை கிறுகிறுப்பு, இருதய வியாதிகள் யாவும் சோராவின் அடிப்படைக் காரணத்தினால் உண் டாகுபவையே. மேலும் டாக்டர் ஹனிமான் தனது அனுபவத்தின் மூலம் நாள்பட்ட வியாதிகள் பலரிடத் தில் பல குறிகளுடன் காணப்பட்ட போதிலும், சைக் கோசிஸ், சிபிலிஸ் என்னும் மியாசங்கள் சோராவுடன் கலக்கப்படாத வரை, தனி சோராவை விரட்டும் மருந்து களின் மூலம் குணப்படுவதைக் கண்டார். சோரா சைக் கோசிஸ், சிபிலிஸ் என்ற மூன்று மியாசங்களிலும், சோரா தான் மிகவும் பழமையானதும் அழிவை விளைவிக்க கூடியதுமாகும். இதைப் பல தலைகள் கொண்ட ஒரு பயங்கரப் பிராணிக்கு டாக்டர் ஹனிமான் ஒப்பிடுகிறார். அன்றியும் சருமத்தில் சோரா வெளிப்படையாக சிரங்கு சொறி முதலிய குறிகளுடன் காணப்படும் பொழுது, வெளிப்பிரயோக மருந்துகளினால் அதை உள் அமுத்து வதை மிகவும் வன்மையாகக் கண்டித்தார், ஏனெனில்

அது வெளிப்படையாகநோயாளியை தாக்குவதற்கு இடம் கொடுக்கும் வரை அவன் மனநிலை பாதிக்கப்படாமல் இருக்கிறதென்றும், வேறு எந்தவிதமான உள் உபத்திர பவங்களும் அதிகமாய் செய்வதில்லையென்றும் கண்டார். ஆனால் இது வெளிப்படையாக சருமத்தில் காணப்படும் பொழுது, மற்றவர்களுக்கும் இது பரவும் பயங்கரம் கொண்டது என்று எச்சரித்தார். சோராவின் சருமக் குறிகள் மிகவும் நமைச்சல் உடையதும் சொறிந்தபின் காந்தும் தன்மையுடயதும், இரவில் பொதுவாக அதிகப் படுவதுமாய் இருக்கும். நாள்பட்ட வியாதிகளில் $\frac{7}{8}$ பாகம் சோரா என்ற மியாசத்தாலும், மீதி ஒரு பாகம், சைக்கோசிஸ், சிபிலிஸ் என்ன மியாசங்களினாலும் உண்டாகிறது. மேலும், **மெர்குறி** என்னும் மருந்தால் எளிதில் குணப்படுத்தக்கூடிய சிபிலிசும், **தூஜா** என்னும் மருந்தையும், **நைட்ரிக் ஆசிட்** என்னும் மருந்தையும் பல நாட்களுக்கொருதடவை மாற்றி மாற்றி கொடுத்தால் குணமடையும் சைக்கோசிசும், சோராவுடன் கலந்துவிட்டால் குணப்படுத்துவதற்கு மிகவும் கடினம். அதாவது மியாசங்கள் ஒன்றோடொன்று கலந்து விடும் பொழுது குணமடைவது மிகவும் கடினம். நீண்டநாள் சரியான ஹோமியோ சிகிற்சையின் மூலமும், சரியான ஜீவித ஒழுங்குகள் மூலமும், இதர முறை மருந்துகள் அதிகம் அருந்தாத நோயாளிக்கு, மியாசங்கள் கலக்கப் பட்டிருந்தால் குணப்படுத்தி விடலாம். ஆனால் நோயாளி பொறுமையுடனும், வைத்தியன் சொல்லும் ஒழுங்குகளையும் அனுசரித்து நடக்க வேண்டும். சில சமயங்களில் சோரா நாள்பட்ட மியாசமாக மாறாமல் (Acute Psora) தீவிரமாக செயல்பட்டு மறைந்து விடுவதுமுண்டு. சோரா கிடைத்ததும் சில தினங்களுக்கு தீவிரமாக உள் சரீரத்தில் மாத்திரம் வேலை செய்யும். அப்பொழுது சரீரத்தில் வெளிக்குறிகள் காணப்படமாட்டாது. இங்ஙனம் உள் சரீரத்தில் தீவிரமாக வேலைசெய்தபின் சருமத்தில் தோன்றி மறைந்துவிடும். இங்ஙனம் மறைந்துவிடும்பொழுது நோயாளிக்கு சுகத்தைக் கொடுக்கும். (உ-ம்) வைசூரி, மண்ணென் (Small Pox, Measles) முதலியவை. ஆனால் நாள்பட்ட மியாசமாக சோரா மாறும்பொழுது நாளுக்குநாள் வளர்ந்துமனிதனை

அழித்துவிடும். ஆனால் ஹோமியோ முறையில் சோரு வைக் குணப்படுத்திவிடலாம். சுருங்கச்சொல்லின் சோரு சருமத்தின் மூலம் கிடைத்தாலும், மனிதனைப் பூராவாக மிகவும் அதிகமாய் பாதிக்கும்.

## சோருவின் இதர குறிகள்.

குழந்தைகளுக்கு முக்கியமாய் கிருமியின் தொந்தரவு, மூலத்தில் கடியெடுத்தல், வயறு பெரியதாயிருத்தல், கூடுதல் பசியும் பின்பு பசியின்மையும் மாறி மாறி வருதல், முகம் வெளுத்தும், மாமிச தசைகள் தளுதளுத்துமிருத்தல், கண்கள் அடிக்கடி வியாதியுறல், கழுத்திலுள்ள கோளங்கள் விங்குதல், உறக்கத்தில் தலை வியர்த்தல் முதலியவை.

வாலிப பருவத்தில் மிகவும் கூடுதலாக மூக்கிலிருந்து இரத்தம் வடிதல், குளிர்ந்த கைகளும், உள்ளங்கை வியர்த்தலும், காந்தலும், கால்கள் துர்நாற்றமுள்ள வியர்வை எடுத்தலும், பாதங்கள் காந்தலும், சிறு காரணங்களினால் கூட கைகளும் கால்களும் உணர்ச்சியற்று போதல், உலர்ந்த (Dry) அல்லது கூடுதல் நீர் வடியும் தன்மையுடைய ஜலதோஷம் அடிக்கடி பிடித்தல், மூக்கில் புண் உண்டாகுதல், மூக்கின் ஒன்றோ அல்லது இரண்டு துவாரங்களும் அடைத்தல், தொண்டை வியாதிகள், குரல் அடைத்தல், அடிக்கடி மூச்சு திணறல், சிறிய காரணங்களினால் கூட இலகுவில் சுளுக்கு அல்லது உளுக்கு அல்லது பிரளுதல் (Sprains) ஏற்படுதல், ஒரு பக்க தலைவலி அல்லது பல்வலி, பல பாகங்களில் சூடாய்தோன்றலும், முகம் இரத்தம் குவியலுடன் (Flushed Face) காணப்படுதலும், மயிர் கழிதல், உறக்கத்தினால் திருப்தியின்மையும், காலையில் எழுந்ததும் சோம்பலாய் இருத்தலும், சிறிது தேக அசைவினால் கூட வியர்வை எடுத்தல், கூடுதல் கபம், வாயில் துர் நாற்றமும், காலையிலும் மாதவிடாய் காலத்திலும் கூடுதலும், வாயில் புளிப்பான சுவை, காலையில் வாந்தி எடுக்க தோன்றல், வயிற்றில் ஒன்றும் இல்லாதது போன்ற உணர்ச்சி, குழந்தைகளுக்கு சூடான ஆகாரத்திற்கும் மாமிசத்திற்கும்

வெறுப்பு, பால் சாப்பிட விருப்பமில்லாதிருத்தல், அடிக்கடி வயிற்றுவலி, இறுகிய மலம், மலச்சிக்கல், மலம் சளியால் பொதியப்பட்டிருத்தல் அல்லது எப்பொழுதும் இளகிய மலம், மூலத்தில் இரத்தம் குவிதலும் மலத்துடன் இரத்தம் கழிதலும், மலத்துடனே அல்லது தனியாகவோ சளி கழிதல், மூலத்தில் கடி, இருண்ட சிறு நீர், கால்களின் நரம்புகள் தடித்திருத்தல் பாதரட்சை அணிந்தால் கால்களில் வலி. நடக்கும்பொழுது மொழிகளில் சப்தம் உண்டாகுதல், அமைதியாய் இருக்கும்பொழுது வேதனைகள் தோன்றலும் அசைந்தால் மறைதலும் குறிகள் அதிகமாக இரவில் தோன்றலும் குளிர்காலத்தில் கூடுதலும், கூடுதலான பயம், அடிக்கடி பருக்கள் உண்டாகுதலும், நகச்சுத்து உண்டாகுதலும், சருமம் பற்பல இடங்களில் செள் (Scales) பிடித்து சொறி எடுப்பதும், சொறிந்தபின் காந்தலும், பற்பல சரும வியாதிகள், தலை கிறுகிறுப்பு, நடக்கும்பொழுதோ, கண்களை மூடும்பொழுதோ, திடீரென்று தலையைத் திருப்பும்பொழுதோ, மேலே அல்லது கீழே பார்க்கும்பொழுதோ, துறந்த வெளியில் நடக்கும்பொழுதோ தலை கிறுகிறுப்பு உண்டாகுதல், தலை கிறுகிறுப்புடன் குமட்டலும், ஏப்பமும், தளர்ச்சையும் ஏற்படுதல், தலையில் இரத்தம் குவிதல், சூடாய் இருத்தல், குளிர்ந்த அழுத்தம் முதலியவை, காலையில் எழுந்ததும் அல்லது மத்தியானம் அல்லது விரைவாய் நடக்கும்பொழுது அல்லது பேசும்பொழுது தலைவலி, குறித்த இடைவேளைக்குப்பின் (3, 7, 14, 28 நாட்களோ அல்லது இதர வேளைகளோ) ஒரு பக்க தலைவலி, மனவேலை, குளிர் முதலியவற்றிற்கு பின் ஒரு பக்க தலைவலி, பௌர்ணமி அமாவாசைக்கு ஒரு பக்க தலைவலி, தினமும் குறிப்பிட்ட நேரத்திற்கு தலைவலி, இன்னும் பற்பல தலைவலிகள், தலையில் செள் உண்டாகுதலும், (Dandruff) பற்பல சருமவியாதிகளும், கழுத்தின் கோளங்கள் வீங்குதல், கண்களை சுற்றி நீல வட்டங்கள், பற்பல கண் வியாதிகள், காதும் மூக்கும் வியாதியுறல், ஏப்பமெடுத்தல், குமட்டல், பசியின்மை, கூடுதல் பசி, வயிற்றுவலி, ஆகாரத்திற்கு பின் வயிற்றுப் பொருமலும் வாந்தியும், சோர்பு, மண்ணீரலில் வலி, மூத்திரம் பிரியாமலோ அல்லது கூடுதலாய் பிரிதல், உறக்கத்தில்

மூத்திரம் தானாய் பிரிதல், மூத்திரம் பலவிதமாய் இருத்தல், சொப்பனம் கண்டோ காணமலோ உறக்கத்தில் இந்திரியம் கழிதல், ஆண் தன்மை இழந்து போதல், விதக்கொட்டை வீங்கல், மாதவிடாய் கோளாறுகள், வெள்ளை படுதல், மாதம் முடிவதற்கு முன்பே குழந்தை பெறல், கர்ப்ப காலத்தில் அதிக சோர்பு, வாந்தி, மயக்கம் எடுத்தல் முதலியன. பற்பல விதமான இருமல்கள். நெஞ்சில் வலி, இளைப்பு நோய், (Asthma) முதுகில் வலி, எலும்பு வியாதிகள், பற்பல சரும வியாதிகள், மனநிலை மாறுதல் முதலிய யாவும் பொதுவாக சோருவின் முக்கிய குறிகள். மேற்கூறிய குறிகளுடன் ஒருவன் நல்ல சுகமுள்ளவனாக பல வருடங்கள் காணப்படலாம். ஆனால் ஏதாவது ஒரு வியாதி தோன்றும் பொழுதுதான் சோரு தன் தலையை தூக்கி எவ்வளவுக்கெவ்வளவு சுகம் அனுபவித்தானோ அதற்கு சுத்த எதிரிடையாக அவனை மாற்றிவிடும். முன்பு கூறிய படி நாள்பட்ட வியாதிகளில் $\frac{7}{8}$ பாகம் சோருவால் உண்டாக்கப்படுவதாலேயே டாக்டர் ஹனிமான் அதைப் பல தலைகள் கொண்ட ஒரு பயங்கர பிராணிக்கு ஒப்பிட்டார்.

## சைக்கோசிஸ். (Sycosis)

இம்மியாசம் சரீரத்தின் பல இடங்களிலும் அறுப்பா அல்லது பால் உண்ணி, கழலை முதலிய அசாதாரணமான வளர்ச்சிகளாய் காணப்படும். இது சில சமயங்களில் மேக நோயான வெள்ளை நோயுடன் (Gonorrhea) சேர்ந்து காணப்படும். இது ஆண் குறியிலும், பெண் குறியிலும் அதை அடுத்த பாகங்களிலும் பூக்கோஸ் (Cauli Flower) என்ற காய்கறியைப் போல் சருமத்தில் கானப்படும். இது வெளிப்பிரயோக மருந்துகளினால் மாறினாலும் திரும்பவும் திரும்பவும் வரும். மேக நோயுடன் காணப்படும் பொழுது இம்மியாசத்தை அதன் ஆரம்ப காலத்தில், அதாவது சோருவுடன் கலக்கப்படும் முன் தூஜா என்ற மருந்தை உயர்ந்த வீரியத்தில் ஒரு பொழுது கொடுத்து, பல வாரங்களுக்கு பின் **நைட்ரிக் ஆசிட்** என்ற மருந்தை உயர்ந்த வீரியத்தில் ஒரு பொழுது கொடுப்பதால் அழித்துவிடலாம். ஆனால்

சோருவுடன் கலந்துவிட்டால் என்ன செய்ய வேண்டு மென்பதை வேறு இடத்தில் படிக்கலாம். வெளிக்குறி களுக்கு தூஜா என்னும் மருந்தின் தாய் திராவகத்தை தண்ணீரில் சேர்த்து வெளிப்பிரயோகமாக உபயோ கிக்கலாம்.

## சைக்கோசிஸ் மியாசத்தின் குறிகள்

எல்லாவற்றையும் இரகசியமாக வைத்துக்கொள்ள விரும்பல், அதிக ஆசை, பிறரும் எல்லாவற்றையும் இரகசியமாக வைத்துக்கொள்கிருர்கள் என்று சம்சயித் தல், பிறர் தன்னிடத்தில் நேர்மையாக நடந்துகொள்ள வில்லை என்று எண்ணல், சுகவீனங்களுக்கு ஒரு வைத் தியனையும் நம்பாமல் பல வைத்தியர்களிடம் மாறி மாறி சிகிற்சை பெறல், குறிகளைக் கூறிய பின், சரியாக சொல்லவில்லை என்று நினைத்து திரும்பவும் திரும்பவும் குறிகளை திருத்தல், யாதும் ஒரு காரியத்தைப்பற்றி எழுதும் பொழுது திருப்பி திருப்பி பல தடவை அதை வாசித்த பின்பே திருப்தியடைதல், பிள்ளைகளைப் பற்றி கவலையுடன் சிந்தித்துக் கொண்டே இருத்தல், அக்கிர மங்களையும் செய்யக்கூடாதவைகளையும்செய்தல், நன்மை தீமையை தெரிந்து கொள்ளமுடியாமல் தீயவழிகளில் ஈடுபடல், பொய் கூறுதல், சுயநலம், கொலை செய்தல், கொள்ளையடித்தல், பெயர்களையும், தியதிகளையும் மறத் தல், மனநிலை கூடுதலாக பாதிக்கப்படல், முற்கோபம், மழையும் காற்றும் ஆரம்பிக்கும் காலத்தில் முற்கோப மும், மூத்திரமும் கூடுதலாய் பிரிதல், மழை காற்று காலங்களில் அமைதியாய் இருக்கமுடியாமல் சுற்றி திரிதல், மெதுவாகப் பேசவும் எழுதவும் செய்தல், விதக் கொட்டை வீங்கல், ஓதம், வாதம், அடிக்கடி ஜலதோஷம் பிடித்தல் முதலியவை.

**குறிப்பு:** கனேரியா என்னும் வெள்ளை மேக நோய்க்கு தூஜா என்னும் மருந்தை ஒரு பொழுதும் 30, 40 தினங்களுக்குப்பின் நைட்ரிக் ஆசிட் என்னும் மருந்தை ஒரு பொழுதும் கொடுத்த 30, 40 தினங்களுக் குள் வியாதி பூராவாக குணமடையா விட்டால், திரும் பவும் இம்மருந்துகளை அதே முறையில் அதாவது பல

நாட்கள் இடைவேளையில் ஒவ்வொரு பொழுது கொடுக்கப்படவேண்டும். ஆனால் இங்ஙனம் இரண்டாந்தரம் கொடுக்கும்பொழுது மருந்துகளின் வீரியத்தைமாற்றிக் கொள்ளவேண்டும். வாசகர்களுக்கு இக்குறிப்பு குழப்பத்தை உண்டுபண்ணலாம். ஏனெனில் இம்மருந்துகளை கொடுப்பதற்கு டாக்டர் ஹனிமான் குறிகள் கொடுக்கவில்லை. அல்லது இன்னனென்ன தன்மையுள்ள நோயாளிகளுக்கு என்று குறிப்பிடவில்லை. எனவே, மொத்தக்குறிகளுக்கு ஒத்தாற்போல் என்றும் இன்னென்ன குறிகள் என்றும் குறிப்பிடப்படாததால் டாக்டர் ஹனிமான் தன்னால் கண்டு பிடிக்கப்பட்ட ஹோமியோ முறைக்கு எதிராக இதை கையாளச் சொல்லுகிறார் என்று தோன்றலாம். மேலும், தற்கால அலோபதி முறையில் இவ்வியாதி ஒன்றிரண்டு ஊசிகளில் மாறும்பொழுது இத்தனை மாதங்கள் ஹோமியோ சிகிற்சையில் ஆகுமெனில் இதை செய்வது நியாயமா என்றும் தோன்றலாம். அலோபதி முறை ஊசியால் இவ்வியாதி குணமாக்கப்படுகிறதா அல்லது உள் அமுக்கப்படுகிறதா என்பதை ஒரு புறம் வைத்துவிட்டு ஹனிமான் கூறியிருப்பதை சரியாய் ஆராய்வதே முக்கியம். ஹனிமான் வெள்ளை நோய்க்கு இம்மருந்துகளை கொடுப்பதுபற்றி தனது நாள்பட்ட வியாதிகள் என்ற புத்தகத்திலும் ஆர்கனனிலும் எழுதியிருக்கிறார். ஹோமியோ முறையின் தத்துவங்களை நன்றாய் அறிந்தவர்களுக்கே அதன் விளக்கத்தை கண்டு கொள்ள முடியும். அவர் குறிப்பிடுவது தீவிர வெள்ளை நோயை அல்ல. ஹோமியோ முறை சிகிற்சையில்கூட குறிகளுக்கொத்த சரியான மருந்து கொடுக்கப்படாவிடில் அதன் தீவிரம் குறைந்து அதிகாலையில் மாத்திரம் ஒரு சொட்டு வெளிப்படுவதாக மாறிவிடும். நோயாளிக்கு தீவிர குறிகளிலிருந்து விடுதலை கிடைத்ததும் இதைநோயாககருத மாட்டான். இந்நிலை அதிகமாக இதர முறை சிகிற்சைகளில் ஏற்படும். இந்நிலை ஏற்பட்டு சிறிது நாட்களுக்குள் இது நாள்பட்ட வெள்ளை நோயாக மாறிவிடும். ஆனால் நோயாளிக்கு யாதொரு தீவிர கஷ்டத்தையும் உடனடி கொடுக்காது. அதே சமயத்தில் சோருவுடனும் கலந்திருக்காது. சோருவுடன் கலப்பதற்கு சிறிது நாட்கள்

ஆகும். இங்ஙனம் சோருவுடன் கலக்கப்படாமலிருக்கும் பொழுதும், நாள்பட்டதாக மாறி காலேயில் ஒருசொட்டு வெளிப்படும் நிலையில் மாத்திரமே இச்சிகிற்சை பயன் படும். (Last drop gonorrhea) சோருவுடன் கலந்து விட்டதா என்பதை எளிதில் கண்டுகொள்ள முடியாது. அதைக் கண்டு பிடிப்பதற்கு தனிப்பட்ட குறிகளோ பரீட்சைகளோ ஹனிமானுல் குறிப்பிடப்படவில்லை. ஆனல் இவ்வியாதிக்கு தனியாக கொடுக்கப்படும் மருந் தில் வியாதி முன்னேற்றமடையாவிடிலும், நோயாளி யின் சிக்கல்களேயும் கொண்டே, சோருவுடன் கலந்து விட்டது என்று அறிந்து கொள்ளலாம். அந்நிலை ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டுமென்பதை வேறு இடத்தில படிக்கலாம். தூஜா என்னும் மருந்து கொடுக் கப்பட்டதும் பழுப்பு அல்லது சீழ் வருதல் அதிகப்பட லாம். வியாதி அமுக்கப்பட்டிருந்தால் இந்நிலை கண் டிப்பாய் ஏற்படும். இதற்கென்று வேறு மருந்து கொடுக் கக்கூடாது. சிறிது நாட்களில் அது தானுகவே மாறி விடும். வியாதி கிடைத்தவுடன் நம்மிடம் வரும் நோயாளி களே 10, 15 தினங்களில் குணப்படுத்திவிடலாம். இதற் கென்று எவ்வளவோ மருந்துகள் நம் மெட்டீரியா மெடிக்காவில் இருக்கின்றன. குறைந்த வீரியத்திலேயே அது குணமாக்கப்படும். இதர முறை சிகிற்சைகளினுல் இவ்வியாதி உள் அமுக்கப்படுவது காலா காலத்தில் பயங்கர கெடுதல்களே விளேவிக்கும். இரத்த அமுக்க (Blood pressure) வியாதிக்குக்கூட இவ்வியாதி தான் ஒரு காரணம். எனவே, ஹோமியோபதியர்கள் தங்கள் தொழிலின் வருமானத்தை மாத்திரம் கருதி இதர முறைகளே கையாண்டு விரைவில் வியாதியை உள் அமுக்கி நோயாளியின் அபிமானத்தைப்பெறக்கூடாது. 10, 15 நாட்களுக்குப்பின் தான் சுகம் ஆகும் என்று கூறுவதாலும், ஊசிகளினுல் இரண்டு மூன்று தினங் களுக்குள் நோய் சுகமாய் விடும் என்று ஏகதேசம் யாவ ருக்கும் தெரியுமாதலாலும், ஹோமியோ சிகிற்சை செய்து வருமானத்தையும், நோயாளியின் அபிமானத் தையும் இழந்துவிடுவோமென்று கருதி நம்முறைக்கு எதி ரானவைகளே செய்யக்கூடாது. நோயாளியிடம் வியாதி உள் அமுக்கப்படுவதால், பின் ஏற்படும் பயங்கரங்களே

எடுத்துக்கூறி, ஹோமியோ முறையில் வேரோடு அவ் வியாதி பிடுங்கி எடுக்கப்படும் என்ற மேன்மையை மனதி லாக்கவேண்டும். வியாதியின் ஆரம்பத்தில் நோயாளி பலவித தீவிர இன்னல்களை அனுபவிப்பான் ஆதலால் விடுதலையையே அவன் விரும்புவான். பழுப்பு வருவது 7, 8 நாட்களுக்கு பின்பே மாறினாலும் அவனுடைய அவஸ்தைகளை குறிகளுக்கொத்த சரியான ஹோமியோ மருந்தின் மூலம் ஊசியினால் கிடைக்கும் விடுதலையைப் போல், நாமும் மாற்றிவிடலாம். நாம் செய்யும் மகத்து வமான சிகிற்சைகளின் மூலம் நம்மால் குணமாக்கப் படும் நோயாளிகள் அதன் பின் வேறு வியாதிக்கும்கூட இதரமுறை சிகிற்சைகளை விரும்பமாட்டார்கள். நாம் உசிதம் என்று கூறினால் மாத்திரமே இதர முறை சிகிற்சைகளுக்கு செல்வர். அவர்களால் நம்மிடம் அனுப் பப்படும் இதர நோயாளிகளிடமும் வியாதிகள் சிறிது தாமதமானாலும், பூரணமாக குணமடையும் என்றுசொல் லியே அனுப்புவர். தானாய் வரும் நோயாளிகளைக்கூட நாம் உண்மையைக்கூறி, காலத்தைப்பற்றிக் கவலை இல்லை, வியாதி குணமடைந்தால் போதும் என்ற நிலைக்கு கொண்டு வந்து விடலாம். இவை யாவும் நாம் தொழில் நடத்தும் திறமையைப் பொறுத்ததே. இவற் றையெல்லாம் மீறி நாள்பட்ட வியாதிகளை உடனடி குணமாக்க வேண்டும் என்று கோரி வரும் நோயாளிகளை நாம் சிகிற்சிக்கக்கூடாது. ஏனெனில் குறிகள் பதிவு செய்யப்பட்டு மியாசங்களின் நிலையை அறிந்த பின்பே குணமாகக்கூடிய காலத்தைப்பற்றி சிந்திக்க முடியும். நோய் தீரும் காலவரையை எக்காரணம் கொண்டும் நிர் ணயிக்க முடியாது. எனவே நோயாளிகளுக்கு வீண் ஆசைகளை போதித்து, அது குறித்த காலத்திற்குள் செய்ய முடியாமல் இருப்பது தொழிலை பாதித்து விடும். நாள்பட்ட வியாதிகள் குணப்படுவது முன் அருந்திய இதர முறை மருந்துகளின் விஷம், நாம் கூறும் விதிகளை அனுசரிப்பது, மியாசங்களின் நிலை, அவயவங்களின் நிலை முதலியவற்றைப் பொறுத்ததாகும். எக்காரணம் கொண்டும் நாள்பட்ட வியாதிகளை இன்ன காலத்திற் குள் குணமாக்கி விடுவேன் என்று வாக்குறுதி கொடுக்க கூடாது. அங்ஙனம் செய்ய முடியாமல் போகும்பொழுது,

வியாதி ஒரு காலமும் சுகமாகாது என்ற பயம் ஏற்பட்டு நோயாளியின் மனநிலை தீவிரமாய் பாதிக்கப்படலாம் தன்னிடம் காலவரை கேட்டு சிகிற்சிக்க வரும் நோயாளிகளை தான் ஏற்றுக்கொள்வதில்லையென்று பிரபல்ய ஹோமியோ டாக்டர் கென்ற் குறிப்பிட்டுள்ளார்.

## சிபிலிஸ் அல்லது கிரந்தி (Syphillis)

இம்மியாசம் மேக வியாதியான கிரந்தி (Syphillis) நோயால் உண்டாகிறது. இது சோராவுடனோ அல்லது சைக்கோசிசுடனோ கலந்துவிடும்பொழுது குணப்படுத்து வது மிகவும் கடினம். கிரந்தி வியாதியை சிகிற்சிக்கும் பொழுது, {கீழ் குறிப்பிட்டிருக்கும் நிலமைகளை நன்கு அறிந்து கொள்ளவேண்டும்.

1) கிரந்தி நோயின் வெளிக்குறிகளான அரையாப்பு, (Bubo) சருமத்தில் புண்கள் முதலியவை காணப்படு கிறதா என்று கவனிக்கவும்.

2) இதர மியாசங்களுடன் சேர்ந்து, சிக்கலான நிலை ஏற்பட்டு, வெளிக்குறிகள் மறைந்து விட்டதா என்பதை கவனிக்கவும்.

3) இதர மியாசங்களுடன் கலந்து சிக்கலான நிலை ஏற்பட்டிருப்பதுடன், வெளிக்குறிகள் வெளிப்பிரயோக மருந்துகளினால் அழிக்கப்பட்டிருக்கிறதா என்பதையும் அறியவேண்டும்.

மேற்கூறிய நிலைகளை அறிந்து கொண்டால் தான், சரியான சிகிற்சை செய்ய முடியும். வெளிக்குறிகள் இல்லையென்பதால் வியாதிகுணமடைந்து விட்டது என்று கூறமுடியாது. இரத்தத்தில் **கான்** (Kahn) இல்லாதிருந்தால் தான், இவ்வியாதி பூரணமாய் குண மடைந்திருக்கிறது என்பதை நிச்சயிக்க முடியும்.

மேக வியாதிகள் இருவகைப்படும். ஒன்று சிறு நீர் துவாரத்தின் வழியாய் சீழ் அல்லது பழுப்பு மாத்திரம் வெளியாகும் வெள்ளை நோய். (Gonorrhea) இது நாள் பட்ட வியாதியாக மாறும் பொழுது வெளிப்படையாக அதிக அவஸ்தைகளை கொடுக்காது. ஆனால்

வியாதி கிடைத்த ஆரம்பத்தில் தீவிரமாய் இருக்கும் பொழுது மிகவும் அவஸ்தை கொடுக்கும். சைக்கோசிஸ் மியாசத்திற்கு இவ்வியாதிதான் முக்கிய காரணம்.

மற்றொன்று கிரந்தி நோய் (Syphillis). அரையாப்பு, சருமத்தில் காணும் **சாங்கர்** (Chancre) என்னும் கிரந்தி இந்நோயின் வெளிக்குறிகள். சாங்கர் என்னும் கிரந்தி புண்கள் சரீரம் பூராவும் சில சமயங்களில் காணப்படும். இப்புண்கள் மிகவும் கட்டியான அடிபாகத்துடனும், செம்பு நிறத்துடனும் காணப்படும். இதர மியாசங்களுடன் கலந்திருக்காவிடில் இதை எளிதில் **மெர்குறி** என்னும் மருந்தால் குணப்படுத்தி விடலாம்.

## சிபிலிசின் குறிகள்.

பருக்கள், அரையாப்பு, துர்நாற்றமுள்ள வியர்வை, கட்டியான தளதளத்த நாக்கு, வியர்வை எடுத்தால் வியாதி கூடுதல் உக்கிரம் அடைதல், எலும்பு வலி இரவில் அதுவும் படுக்கையில் கூடுதல், தலைவலி, கண்கள் பாதிக்கப்படல் முதலியவை.

## மியாசங்களின் ஒற்றுமை.

மூன்று மியாசங்களிலும் சோரா மாத்திரம்தான் **தனியாக இயங்க முடியும்.** சைக்கோசிசும், சிபிலிசும், சோரா இல்லாமல் இருக்க முடியாது. எனவே சைக்கோசிசோ, சிபிலிசோ, ஒருவனுக்கு இருக்கும்பொழுது, சோராவும் இருக்கிறதென்பதை அறிந்துகொள்ளலாம். ஆனால் சோராவுடன் கலந்திருக்கவேண்டுமென்று சட்டமல்ல. சோரா இருக்கும் ஒருவனுக்கே இதர மியாசங்கள் கிடைத்தாலும், கிடைத்தவுடன் சோராவுடன் கலந்துவிடுவதில்லை. கலப்பதற்கு சிறிதுகாலமாகும். சோரா இல்லாமல் இதர மியாசங்கள் ஏன் இருக்க முடியாதென்றால், சோரா மனதை தாக்குகிறது. இதன் விளைவால் மனிதன் கெட்ட எண்ணம் கொள்கிறான். விபசாரத்தின் தீமைகளை அவன் உணரமுடிகிறதில்லை. எனவே கெட்ட வாழ்க்கையில் ஈடுபட்டு இம்மியாசங்களை பெற்றுக்கொள்கிறான். மியாசங்கள் ஒன்றோடொன்று கலந்து

விட்டால் மிகவும் சிக்கல்கள் ஏற்படும். மியாசங்கள் கலந்துள்ள நோயாளியை குணப்படுத்துவது மிகவும் கடினம். இம்மூன்று மியாசங்களையும் ஒருவன் அவனுடைய காலத்தில் பெறுவதை விட, பெற்றோர்களிடத்திலிருந்து பெறும்பொழுது ஏற்படும் சிக்கல்கள் மிக பயங்கரமானவை. மூன்று மியாசங்களும் ஒருவனில் சேர்ந்து காணும்பொழுது, முதலாவது, சோருவை, குறிகளுக்கொத்த, சோருவுக்கு எதிரான மருந்தை கொண்டு தாக்கவேணடும். அடுத்தாற்போல், தீவிரமாய் இருக்கும் அடுத்த மியாசத்திற்கும், இறுதியில் மூன்றாவது மியாசத்திற்கும் சிகிற்சிக்கவேண்டும். இதையெல்லாம் செய்வதற்கு நீடித்த காலமாகும்.

## சோருவை குணப்படுத்தும் முக்கிய மருந்துகள்.

அப்ரோட்டனம், அம்ப்ரா, அர்ஜென்டம்மெட், ஆறம்மூர், அசெடிக் ஆசிட், அம்மோனியா கார்ப், அர்ஜென்டம் நைட், அகரிகஸ், அனகார்டியம். ஆர்சனிக் ஆல்பம், அலு, ஆன்டிமனிகுருடம், ஆர்சனிக் அயோடைட், அலுமினு, ஏபிஸ், ஆறம்மெட், போரக்ஸ், ப்யூபோ, பெரிட்டா கார்ப், பெல்லடோனு, பென்சாயிக் ஆசிட், பெர்பரிஸ், கால்காரியா கார்ப், கால்காரியா ஆர்சனிக், கால்காரியா பாஸ், கார்போ அனிமாலிஸ், கார்போ வெஜிட்டாபிலிஸ், காப்சிகம், சிஸ்டஸ் கானடன்சிஸ், கிளிமாடிஸ், கோக்கஸ்கேக்டி, கோனியம், கிருட்டலஸ், கிருட்டன் டிக், குப்ரம் மெட், டிஜிட்டாலிஸ், டல்கமரா, பெர்ரம் மெட், பெர்ரம் பாஸ், ப்ளூரிக் ஆசிட், கிரேபைட்டிஸ், ஹெபர் சல்பர், அயோடின், காளி பிச், காளி கார்ப், காளி அயோட், காளி பாஸ், காளி சல்ப், லாக்கானியம், லாச்சசிஸ், லெடம், லைக்கோபோடியம், மெக்னேஷியா கார்ப், மெக்னேஷியா மூர், மங்கானம், மெசரினம், மூரியாடிக ஆசிட், நட்ரம் ஆர்சனிக், நட்ரம் கார்ப், நட்ரம் மூர், நட்ரம் சல்ப், நைட்ரிக் ஆசிட், பெட்ரோலியம், பாஸ்பரஸ், பாஸ்பாரிக் ஆசிட், ப்ளாடினு, ப்ளம்பம், சோரினம், பைரஜினியம், சரஸ்பரில்லா, ஸ்டாபிஸ்கரியா, சல்பர், சல்பூரிக் ஆசிட், டாரண்டுலா, தெரிடியான், டுபர்குலினம், ஸிங்கம்.

## சைக்கோசிசை குணப்படுத்தும் முக்கிய மருந்துகள்.

அர்ஜென்டம்மெட், அர்ஜென்டம் நைட், ஆர்சனிக் ஆல்பம், பென்சாயிக் ஆசிட், பெர்பரிஸ், கால்காரியா ஆர்சனிக், காஸ்டிகம், கிளிமாடிஸ், கோல்சிகம், டல்கமரா, ப்ளூரிக் ஆசிட், அயோடின், காளி பிச், காளி கார்ப், காளி அயோட், லைக்கோபோடியம், மெக்னீஷியா கார்ப், மெக்னேஷியா மூர், மெக்னேஷியா பாஸ், மெசரினம், மூரியாடிக் ஆசிட், நட்ரம் ஆர்சனிக், நட்ரம் கார்ப், நட்ரம் மூர், நட்ரம் சல்ப், நைட்ரிக் ஆசிட், பாஸ்பாரிக் ஆசிட், பாஸ்பரஸ், சோரினம், பைரஜினம், சரஸ்பரில்லா, செபியா, சிலிசியா, ஸ்டாபிஸ்கரியா, தூஜா, டுபர்குலினம்.

## சிபிலிசை குணப்படுத்தும் முக்கிய மருந்துகள்.

ஆர்சனிக் ஆல்பம், ஆர்சனிக் அயோட், ஆறம் மெட், ஆறம்மூர், கால்காரியா ஆர்சனிக், ப்ளூரிக் ஆசிட், ஹெபர் சல்ப், காளி பிச், காளி கார்ப், காளி அயோட், லாச்சசிஸ், லைக்கோபோடியம், மெர்குறி, நைட்ரிக் ஆசிட், பிட்டலக்கா, சரஸ்பரில்லா, ஸ்டாபிஸ்கரியா, சிபிலினம், டுபர்குலினம்.

**குறிப்பு:** சில மருந்துகள் ஒரு மியாசத்திற்கும், சில மருந்துகள் இரண்டு மியாசத்திற்கும், சில மருந்துகள் எல்லா மியாசங்களுக்கும் உபயோகப்படுவதை கவனிக்க.

## சிகிற்சைக்குரிய ஆகார விதிகளும் இதர வாழ்க்கை ஒழுங்குகளும்.

1) மருந்தின் வேலையை முறிக்கும் எல்லாவற்றையும் தவிர்க்கவேண்டும்.

2) அடைத்த அறைகளில் கூடுதல் வேலை செய்பவரை, துறந்த வெளிக்காற்றில் கூடுதல் உலாவச் செய்யவேண்டும்.

3) சீட்டு விளையாட்டை அனுமதிக்கக்கூடாது.

4) கூடுதல் யாத்திரை செய்யக்கூடாது.

5) சிற்றின்பத்தை குறைக்கவேண்டும்.

6) காமத்தை தூண்டும் புத்தகங்களை படிக்கக் கூடாது.

7) மனதிற்கு கூடுதல் வேலை கொடுக்கக்கூடாது.

8) இதர மருந்துகள் எதையும் அருந்தக்கூடாது.

9) வாசனைத்திரவியங்களையும், பற்பொடிகளையும் உபயோகிக்கக்கூடாது.

10) காப்பி, டீ, மதுபானம், மிகவும் காரமான மசாலை, புகையிலை, பொடி முதலியவற்றை தவிர்க்க வேண்டும்.

11) கூடுதல் தேக வேலை, பலத்த அடி படுதல், அசாதாரணமான சீதோஷ்ணங்களுக்கு தன்னை வெளிப் படுத்தல், துக்கம், மருந்துகள் கலக்கப்பட்ட தண்ணீரில் குளிப்பது முதலியவை ஏற்படாமல் காத்துக்கொள்ள வேண்டும்.

12) கூடுதல் வீரியம் கொண்ட மருந்து கொடுக்கப் படும்பொழுது, இடையே ஏற்படும் குறிகளுக்கு வேறு மருந்து கொடுக்கக்கூடாது. இவை தானுகவே மாறி விடும். மருந்தின் ஓட்டம் முடியும் வரை காத்திருக்க வேண்டும்.

13) அளவுக்கு கூடுதலாக மருந்து கொடுப்பது அபாயத்தை விளைவிக்கும். ஏனெனில் மருந்தினுல் உண்டாக்கப்படும் செயற்கை வியாதி, இயற்கை வியாதி யை விரட்டுவதற்கு பதில், மருந்தின் கூடுதல் அளவி ஞல் இயற்கை வியாதியோடு சேர்ந்து அபாயத்தை விளை விக்கும். இந்நிலை ஏற்பட்டால் மருந்தை கூடுதல் வீரி யத்தில் மிகக் குறைவான அளவில் கொடுக்க வேண்டும். அல்லது முறிக்கும் மருந்துகளை கையாள லாம். முறிக்கும் மருந்தின் வேலை முடிந்ததும், ஆரம் பத்தில் கொடுக்கப்பட்ட மருந்து சரியானதாயிருந்தால் திரும்பவும் உயர்ந்த வீரியத்தில் அளவைக் குறைத்து கொடுக்கவும்.

14) தவருன மருந்து கொடுக்கப்பட்டு வியாதியஸ்தன் அவஸ்தை படுவானுயின், உடன் மாற்று மருந்து கொடுக்கவேண்டும். மாற்று மருந்து இல்லாத மருந்துகளுக்கு, தற்போதைய குறிகளுக்கொத்த வேறு மருந்தை தெரிவு செய்து கொடுக்கவேண்டும்.

**குறிப்பு:** இவ்விதிகள் யாவும் பொதுவாக நாள்பட்ட வியாதிகளுக்குரியதே. எல்லா விதிகளையும் உடனடி அமுலுக்கு கொண்டுவர வியாதியாஸ்தரை வற்புறுத்தக் கூடாது. சில சாதனங்களையும் பழக்கங்களையும் சில நோயாளிகள் பல வருடங்கள் அனுபவித்து வந்தவர்களாக இருக்கலாம். இவற்றை உடனடி நிறுத்தச் சொல்வது யாவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. அப்படிப்பட்டவர்களை கிரமம் கிரமமாக விதிகளை அனுசரிக்க சொல்லவேண்டும். நாள்பட்ட வியாதிகளில் சோருவுக்கு எதிரான கூடுதல் வீரிய மருந்துகள் உபயோகப்படுத்தப்படுகின்றன. நாள்பட்ட வியாதிகளில் சோருவின் பங்கை நாம் இயற்கனவே படித்திருக்கிரேம். மருந்துகளை அவசரப்பட்டு தெரிவு செய்யக் கூடாது. மருந்து கொடுத்தபின் பல நாட்கள் காத்திருக்கவேண்டும். அடுத்த பொழுது மருந்தை வேறு வீரியத்தில் கொடுக்கவேண்டும். நாள்பட்ட வியாதிகளை ஒரே மருந்தால் எப்பொழுதும் குணப்படுத்த முடியாது. சிக்கலான நோய்களுக்கு பல மருந்துகள் கொடுக்கப்படவேண்டும். குறிகள் மாற மாற. மருந்தின் வேலை முடிந்ததும் அப்போதிருக்கும் குறிகளுக்கொத்த அடுத்த மருந்தை தெரிவு செய்து கொடுக்கவேண்டும். கூடுதல் வீரியங்களுக்கு கூடுதல் இடைவேளை (பல வாரங்கள்) கொடுத்தே மறுதடவை மருந்து கொடுக்கவேண்டும். ஆரம்பத்திலேயே மிக உயர்ந்த வீரியங்களை கையாளக் கூடாது. 200-வது வீரியத்தில் ஆரம்பித்து 1M, 10M, 50M, CM என்று போவது நல்லது. சில நோயாளிகளின் பலவீனமான சரீர நிலைக்கு சாந்தி மருந்துகள் மாத்திரமே கொடுக்கவேண்டும். குறிகள் ஒத்திருந்தால் கூட, சோருவுக்கு எதிரான மருந்தை உயர்ந்த வீரியத்தில் கொடுப்பது அவர்களை கொன்று விடும். எனவே நோயாளியின் சரீர நிலையை அறிந்தே உயர்ந்த வீரியங்கள் கொடுக்கவேண்டும்.

மியாசங்களுக்கு எதிரான மருந்துகளை மாதவிடாய் காலத்தில் கையாளக்கூடாது இம்மருந்துகளை கொடுப்பதற்கு கர்ப்ப காலம் ஏற்ற காலம். மியாசங்கள் ஒன்றோடொன்று கலக்கப்பட்டு, அவைகள் வளர்ச்சியடைந்து. பல சிக்கல்களுடன் வரும் நோயாளிகளை மிகப் பொறுமையுடன் தக்க மருந்துகள் கொண்டு சிகிற்சித்தால் வெற்றி காணலாம். ஆனால் நோயாளி, நாம் கூறுபவற்றை அனுசரித்து நம்முடன் ஒத்துழைக்கவேண்டும். டாக்டர் ஹனிமான் டீ, காப்பி, மதுபானம் முதலியவற்றை கண்டித்திருப்பது, அவைகள் சோருவை வளர்த்து விடும் என்பதினாலேயே. உயர்ந்த வீரியங்கள் கொடுக்கும் பொழுது, நோயாளியின் திருப்திக்காக இடைவேளைகளில் அல்லது இடைக்காலங்களில், மருந்து சேர்க்கப்படாத வெறும் குளிகைகளை கொடுத்து வரவும்.

## உயர்ந்த வீரியங்களை குறிக்கும் எழுத்துக்களின் விளக்கம்.

1M = 1000

M என்ற எழுத்து மில்லி (Mille) என்ற வார்த்தையைக் குறிக்கிறது. மில்லி என்பதற்கு ஆயிரம் என்பது பொருள். எனவே 1000 வீரியம் 1M என்று எழுதப்படுகிறது. 10000 வீரியம் 10M (10 × 1000) என்றும் 50000 வீரியம் 50M (50 × 1000) என்றும் எழுதப்படுகிறது. ஒரு லட்சம் வீரியம் 100000, CM என்று எழுதப்படுகிறது.

C என்ற எழுத்து சென்றிசிமல் (Centesimal) என்ற வார்த்தையைக் குறிக்கிறது. சென்டிசிமல் என்பது 100-க்கு சமம். M என்ற எழுத்து மில்லி, 1000-க்கு சமம். எனவே CM என்பது 100 × 1000 = 100000.

CM வீரியத்திற்கும் கூடிய DM, MM வீரியங்கள் இப்பொழுது தயாரிக்கப்படுவதில்லை. நம்நாட்டில் 1000 வீரியம் வரையே செய்யப்படுகிறது. அதற்கும் கூடியவை அயல்நாட்டு தயாரிப்புகள்.

## ஆர்கனன் (Organon)

1) வியாதியஸ்தனை குணப்படுத்துவதுதான் வைத்தியனின் முதல் வேலை

2) வியாதியை சடுதியான, சாதுவான, நிரந்தர வகையிலும், குறுகிய, அபாயமற்ற, உண்மையான, புத்திசாலித்தனமான வழியிலும் குணப்படுத்தவேண்டும்.

3, குணப்படுத்தக்கூடிய வியாதியை தெரிந்து, மருந்துகளின் குணங்களின் சரியான அறிவின் மூலம் மருந்தை தெரிவு செய்து, கொடுக்கவேண்டிய சரியான அளவில் கொடுத்து, சரியான நேரத்தில் திரும்பவும் கொடுத்து சிகிற்சை செய்யவேண்டும். அப்பொழுது சுகம் கண்டிப்பாக கிடைக்கும். மேலும், குணமடைவதை தடை செய்யும் இடையூறுகளையும் கண்டு பிடித்து, அவற்றை மாற்றி, சிகிற்சை செய்து குணப்படுத்துபவனே உண்மையான வைத்தியன்.

4) சுகத்தை குலைக்கும் காரணங்களையும், வியாதியை உண்டுபண்ணி அதை வளர்க்கும் காரணங்களையும் அறிந்து, சுகம் அனுபவிப்பவர்களை அவற்றிலிருந்து பாதுகாப்பவனே சுகத்தின் இரட்சகர்த்தாவாகிறான்.

5) தீவிர வியாதிகளில், வியாதியின் ஆரம்பத்தின் வரலாற்றையும், நாள்பட்ட வியாதிகளில் வியாதியின் சரித்திரத்தின் எல்லா வரலாறுகளையும் நன்கறிந்து கொள்ளவேண்டும். ஏனெனில் நாள்பட்ட வியாதிகள் குறிப்பாக மியாசங்களை அடிப்படையாகக் கொண்டவை. இவ்வித வரலாறுகளை கண்டுகொள்ள தேகநிலை, நோயாளியின் தன்மை, வேலை, வாழ்க்கையின் நிலை, பழக்க வழக்கங்கள், சேர்க்கை உறவுகள், வயது, சிற்றின்ப வரலாறு முதலியவற்றை நன்கறிந்துகொள்ளவேண்டும்.

6) தேகநிலை மாற்றம் மட்டுமின்றி, மன நிலை மாறுதலையும், தோன்றும் உணர்ச்சிகளையும், நோயாளியின் சுற்றத்தாரால் நோயாளியைப்பற்றி கூறப்படுபவையையும், வைத்தியனால் கண்டுகொள்ளப்படுபவையையும் சேர்த்தே வியாதியாக கருதவேண்டும்.

7) காரணம் எதுவும் இல்லாத வியாதிகளுக்கு குறிகளை மாத்திரம் வைத்தே மருந்து தெரிவு செய்யமுடியும். இங்கு, நோயினால் வியாதியஸ்தனில் ஏற்பட்டிருக்கும் அசாதாரண நிலைக்கும், மியாசம் ஏதும் இருக்கிறதா என்பதற்கும் கவனம் கொடுக்கவேண்டும். இந்நிலையில் உள் வியாதியால் வெளிப்படையாக பிரதிபிம்பிக்கப்படும் (Reflect) குறிகளைக் கொண்டு தான், மொத்த குறிகளுக் கொத்த மருந்தை தெரிவு செய்ய முடியும்.

**குறிப்பு:** மயக்கம், ஹிஸ்டீரியா முதலியவற்றை உண்டு பண்ணும் சில மலர்களின் வாசம், வெளியிலிருந்து பல சாதனங்கள் கண்ணில் போய் படிதல், புண்களை இறுகக் கட்டுதலால் தசைகள் அழுகுதல் முதலிய காரணங்களை நிவிர்த்தி செய்யவேண்டும். அறுபட்டு இரத்தப்பெருக்கெடுக்கும் நரம்புகளை தைக்கவேண்டும். பொதுவாக காரணத்தை கண்டு பிடித்து நிவிர்த்திக்க வேண்டுமென்பதே.

8) மொத்தக் குறிகள் யாவும் அகற்றப்பட்ட பின்பு, சுகமான தேகநிலையன்றி, தேகம் வேறு நிலையில் இருக்கிறதென்றோ அல்லது உள்வியாதிகளை குணமாக்கப்படவில்லையென்றோ எந்த அனுபவத்தின் மூலமும் கூறமுடியாது.

9) பொருளெனக்கண்டு கொள்ளுகிற நமது சரீரத்திற்கு, பொருளெனக்கண்டு கொள்ள முடியாத முக்கிய தத்துவம் தான் (Vital Principle) உயிரைக்கொடுத்து, எல்லா அவயவங்களையும் அதிசயிக்கத்தக்க விதத்தில் ஒழுங்கான நிலையில் வைத்து, அவைகளின் வேலையிலும், உணர்ச்சியிலும் ஒற்றுமையைக் காப்பாற்றி, சரியாய் இயங்கச் செய்து, சுகமான நிலைமை உண்டாக்கி, மிகவும் மேலான நோக்கமுடைய மனித ஜீவியத்தை சுகமான நிலையில் கொண்டு நடத்துகிறது.

10) பொருளான சரீரமானது முக்கிய தத்துவத்தால் இயங்க வைத்த உயிரை இழந்துவிடும்பொழுது செய்கை, உணர்ச்சி முதலியவற்றையும் இழந்து விடுகிறது. பொருளென கண்டுகொள்ள முடியாத முக்கிய

தத்துவம்தான் சரீரத்திற்கு சுகமான நிலேயிலும், சுக வீனமான நிலேயிலும், எல்லாவித உணர்ச்சிகளேயும் கொடுத்து அதன் வேலேயை செய்ய உதவுகிறது.

11) சுகத்திற்கு எதிராய் சுகவீனத்தை உண்டு பண்ணக்கூடிய பயங்கர சக்தியுள்ள காரணங்களின் நிமித்தம் முதலாவதாக இம்முக்கிய பொருளெக்கண்டு கொள்ள முடியாத முக்கியதத்துவம் தான் நிலேகுலேக்கப் படுகிறது. இங்ஙனம் நிலேகுலேக்கப்பட்ட முக்கியதத்துவம் அவயவங்களுக்கு அசாதாரண உணர்ச்சிகளே ஏற்படுத்தி, ஒழுங்கற்ற செய்கைக்கு காரணமாகிறது. இது தான் வியாதி. ஏனெனில் பொருளெனக்கண்டு கொள்ளாத முக்கிய தத்துவத்தை, அவயவங்களில் அது செயலாற்றும் பொழுது நாம் அறிந்து கொள்வது போல, அதன் சுகவீனமான நிலேயையும், நோயாளியின் அறிவுக்கும், வைத்தியனின் அறிவுக்கும், பிறரின் அறிவுக்கும், அவயவங்களே தாக்கி அசாதாரண உணர்ச்சிகளே ஏற்படுத்தும் அதன் செய்கையின் மூலமே நாம் வியாதியாக அறிந்து கொள்கிரேம்.

12) இவ்விதமாக, முக்கிய தத்துவம் வியாதி அடையும் பொழுதுதான், வியாதிகள் வெளிப்படையாகின்றது. இதை, உணர்ச்சி, சரீரத்தின் உள் ஏற்படும் மாறுதல்கள் முதலியவற்ருல் அறிந்து கொள்கிரேம். இறுதியில் வியாதி குணமடைந்தவுடன், அவயவங்களின் ஒத்துழைப்புக்கு இடையூருயிருந்த யாவும் மாறி, முக்கிய தத்துவமானது, அதன் சரியான நிலேயை அடைந்து, எல்லா அவயவங்களும் அவற்றின் சரியான நிலேக்கு வந்து விடுகிறது.

**குறிப்பு:** முக்கிய தத்துவம் எப்படி வியாதிகளே உண்டுபண்ணுகிறது என்பது மனிதனின் அறிவுக்கு எட்டாத விஷயம். எல்லாம் வல்ல இறைவன் மனிதனுக்கு உணர்ச்சியை கொடுத்து, வியாதியின் குறிகளே கண்டுபிடித்து குணப்படுத்த தருணம் அளித்திருப்பது போதுமானது.

13) எனவே, வியாதியை (இரண சிகிற்சைக்கு புறம்பானவைகளை) உயிருள்ள சரீரத்திற்கும் அதை இயங்கச் செய்யும் முக்கிய தத்துவத்திற்கும் வித்தியாசப்பட்டதென்றும், அந்தரங்கமாக மறைக்கப்பட்ட பொருளென்றும் அலோபதியர்களால் கருதப்படுவது ஒரு பெரிய கலையாக கருதப்பட்டாலும், அது உண்மையன்று. இங்ஙனம் கூறுவது இயற்கை அறிவிற்கின்றி, செயற்கை அறிவிருக்குமாயின் அதற்கே பொருந்தும். எனவேதான், பலகாலமாக இவ்வித பொய்யான நம்பிக்கையின் மூலம் வைத்திய தொழில் அதன் நியாயமான நிலையிலிருந்து மாறி, ஓர் அக்கிரமமான கலையாக கையாளப்பட்டு விட்டது.

14) அந்தரங்க வியாதியாயிருந்தாலும் சரி, அல்லது குணப்படுத்தக்கூடிய வேறு யாது வியாதிகளாயிருந்தாலும் சரி, அவைகள் வைத்தியனுடைய பரிசீலனைக்கு குறிகள் மூலம் தம்மை வெளிப்படுத்தியிருந்தால் மாத்திரமே, அவைகள் குணப்பட்டுவிட்டது என்று நாம் ஒத்துக்கொள்ள முடியும். மனிதனை காப்பாற்றும் இறைவனுக்கே, குறிகளை வெளிப்படுத்தும் அவருடைய நற்செய்கைக்கே எல்லா மகிமையும் உரியது.

15) பொருளல்லாத முக்கிய தத்துவமானது வியாதியுறும்பொழுது சரீரத்தில் அந்தரங்கமாகவும், வெளிப்படையாகவும் காணும் குறிகள் யாவும் ஒன்று சேர்ந்தே வியாதியாகிறது. முக்கிய தத்துவமும், அதனுல் இயங்கப்படும் சரீரமும் ஒன்று சேர்ந்தே ஒரு தனி முழுமையை அடைந்து சம்பூர்ணமாகிறது. என்றிருப்பினும் நாம் நம்முடைய அறிவிற்காக அவை இரண்டையும் இரண்டு தனி தனி கருத்துக்களாக பிரித்திருக்கிறோம்.

16) சுகமான சரீரத்தில் புறமிருந்து வந்தடையும் கெடுதல் விளைவிக்கும் சக்திகளினுல் முக்கிய தத்துவம் தாக்கப்பட்டு, அதனுல் இயங்கப்படும் அவயவங்களின் வேலை சீர்குலைந்துவிடுகிறது. முக்கிய தத்துவம் மிகவும் சக்திவாய்ந்த அசரீரியாகையால், அதைப்போல் சக்தி வாய்ந்த இன்னொரு சக்தியால்தான் அது தாக்கப்பட முடியும். எனவே, குறிகளால் விளக்கப்படும் வியாதியை, முக்கிய தத்துவத்தைப்போன்ற சக்திகூடிய மருந்

துகளின் மூலமே மொத்தக் குறிகளுக்கொத்தாற்போல் கொடுத்து, சுகமாக்கி அவயவங்களின் ஐக்கியமான நிலைக்கு திரும்பவும் கொண்டுவர முடியும்.

17) இவ்விதமாக ஒரு வியாதியின் எல்லா குறிகளும் விரட்டப்பட்டு, உள்ளும் புறமும் குணமடைவதை அறிந்த வைத்தியன், தானும் தன்னுடைய தொழிலின் சரியான அர்த்தத்தை புரிந்து. குறிகள் யாவையும் விரட்டி வியாதியை உள்ளும் புறமாக குணப்படுத்த வேண்டுமேயன்றி, இதர முறை (ஹோமியோபதியல்லாத) சிகிற்சைகளைப் பற்றின பிடிவாதமான தர்க்கங்களில் ஈடுபடக்கூடாது.

18) வியாதிகளின் மொத்தக் குறிகளின் மூலம் மாத்திரமே என்ன மருந்து தேவை என்பதை கண்டு கொள்ள முடியுமென்ற, ஆட்சேபிக்கமுடியாத உண்மையின் மூலம், நாமும், தனிப்பட்ட ஒவ்வொரு வியாதியஸ்தனுக்கும், மொத்தக் குறிகளையே சரியான மருந்தை கண்டுபிடிக்கும் கருவியாக உபயோகிக்கவேண்டும்.

19) சரீரத்தில், வியாதியினால் ஏற்படும் பொதுவான சீர்கெட்ட நிலை, உணர்ச்சிகள், அவயவங்களின் வேலைகளில் ஏற்படும் மாறுதல்கள் யாவையும் அகற்றி சீரான நிலைக்கு கொண்டுவரக்கூடிய சக்திவாய்ந்த மருந்துகளினாலேயே வியாதியை குணப்படுத்த முடியும்.

20) மனோ சக்தியின் மூலம், வியாதியைக் குணப்படுத்தும் மருந்துகளின் சக்தியை அறிந்து கொள்ள முடியாது. அனுபவத்தின் மூலமும், கையாளப்படும் பொழுது ஏற்படும் நல்ல முடிவுகளின் மூலமும் மாத்திரமே, நாம் அந்த சக்தியை அறிந்துகொள்ள முடியும்.

21) அசாதாரண குறிகளை உண்டு பண்ணும் மருந்துகளின் சக்தியின் மூலமே வியாதியை குணப்படுத்த முடியுமேயன்றி, வேறு எவ்விதமும் மருந்துகளின் சக்தியை கண்டு கொள்ள முடியாததால், சுகமுள்ளவனுக்கு மருந்துகள் என்ன குறிகளை உண்டுபண்ணுகிறதோ, அக்குறிகள் தோன்றும் வியாதியஸ்தனுக்கு, அக்குறிகளை சுகமானவனில் உண்டுபண்ண சக்தியுள்ள மருந்தையே கொடுக்கவேண்டும்.

22) சுகமான ஒருவனுக்கு கொடுக்கப்படும் மருந்து என்ன குறிகளை உண்டுபண்ணுகிறதோ, அக்குறிகள் தோன்றும் வியாதியஸ்தனுக்கு அம்மருந்தே குணம் கொடுக்கிறது. அதாவது, கொடுக்கப்படும் மருந்தால் ஒரு செயற்கை வியாதிதோன்றி இயற்கை வியாதியை விரட்டி விடுகிறது. மாற்றிக் கூறினல், குணப்படுத்த வேண்டிய குறிகளுக்கொத்தாற்போலோ அல்லது எதிரிடையான குறிகளையோ உண்டுபண்ணும் ஒரு மருந்தை நாம் தெரிவு செய்யவேண்டும். இதில் எது இலகுவான, அபாயமற்ற, நிரந்தரமான மார்க்கம் என்பதை அனுபவத்தின் மூலம் அறிந்து செயல்படவேண்டும்.

23) எதிரிடையான குறிகளை உண்டுபண்ணும் இதர முறைகளில் கையாளப்படும் மருந்துகள் கொடுக்கப்படும்பொழுது, வியாதி சிறிதுகாலம் குறைந்தாலும், திரும்பவும் கூடுதல் உக்கிரமத்தோடு வந்து விடுகிறது என்பதை மிகவும் உண்மையான அனுபவத்தின் மூலமும், கவலையான ஆராய்ச்சியின் மூலமும் நாம் கண்டு கொள்கிறோம்.

24) எனவே, குறிகளுக்கொத்த செயற்கை வியாதியை உண்டுபண்ணும், ஹோமியோபதி முறையைத் தவிர, வியாதிகளை குணப்படுத்த வேறு எந்தவித உண்மையான மார்க்கமும் கிடையாது.

25) ஆகையால், குறிகளுக்கொத்த சரியானமருந்தை கவலையுடன் தெரிவு செய்து, நியாயமான அளவில் கொடுக்கும்பொழுது, உண்டாகும் சரியான, நிரந்தர, அடியோடு மாறும் குணத்திற்கு விதிவிலக்கு இருக்க முடியாது.

26) இம்முறை, ஹோமியோபதியின் இயற்கை முறையை அடிஸ்தானமாகக் கொண்டது. அதாவது, சக்திவாய்ந்த வியாதியானது, அதே குறிகளை உண்டு பண்ணும், கூடுதல் சக்தி வாய்ந்த மருந்தினல் அழிக்கப்படுமென்பதே.

27) எனவே, மருந்துகளின் குணப்படுத்தும் சக்தியானது, வியாதிகளுக்கொத்த குறிகளை கூடுதல் சக்தியில் உண்டுபண்ணும் தன்மையைப் பொறுத்ததாய் இருக்கிறது.

28) இதுவே சரியான எல்லா ஆராய்ச்சியிலும் பரீட்சையிலும் காணப்படுவதால், இந்த இயற்கையான வைத்திய சாஸ்திரம்தான் உண்மையாக அமையப்பெற்றுள்ளது. ஆனால் இது எப்படி நடக்கிறதென்பதை விஞ்ஞான ரீதியாக விளக்கும் பொழுது, அது திருப்தியற்றதாக இருக்கலாம்.

29) இதைக் கீழ்காணும் உண்மைகளில் இருந்து கண்டு கொள்ளலாம்.

30) வியாதி உண்டு பண்ணும் இயற்கையான சக்தியைவிட, நமது இஷ்டப்படி அளவை மாற்றக்கூடிய மருந்துகள், சுகத்தை சீர்குலைக்க மிகவும் சக்தி வாய்ந்தவையாய் இருக்கின்றன. ஆகையால் தான் இயற்கையான வியாதிகள் சரியான மருந்துகளின் மூலம் அழிக்கப்படுகின்றன.

31) வியாதியை உண்டுபண்ணும் கருவிகள் என்று கூறப்படும் தேக சக்தியும் மன சக்தியும் நிபந்தனையற்ற அளவுக்கு சுகத்தை சீர்குலைக்க கூடியவை அல்ல. வியாதியின் தாக்குதலுக்கு இசைந்ததாக சரீரம் அமையப்படும் பொழுதுதான் தேக நிலையும், மன நிலையும் செய்கையிலும் உணர்ச்சியிலும் மாறுபட்டு, நாம் அவற்றின் சக்தியின் கீழ் அமைகிறோம். எனவே இச்சக்திகள் எல்லாபேருக்கும் வியாதியை உண்டு பண்ணுவதில்லை. அல்லது ஒரே நபருக்கு எப்பொழுதும் வியாதியை உண்டுபண்ணும் காரணங்கள் இவை அல்ல.

32) ஆனால் நாம் மருந்துகள் என்று கூறும், செயற்கை வியாதிகளை உண்டுபண்ண சக்தி கொண்டவையின் தன்மை வேறு. ஒவ்வொரு உண்மையான மருந்தும், சரியான சக்தியில் உயிருள்ள ஒருவனுக்கு கொடுக்கப்படும்பொழுது, எக்காலத்திலும், எச்சந்தர்ப்பத்திலும் நிச்சயமாக அதன் சக்திகேற்ற குறிகளை உண்டுபண்ணத்தான் செய்யும். ஆனால் இயற்கை வியாதிகளில் இது உண்மையன்று.

33) தொற்று நோய் விஷங்களாலும், இதரக்காரணங்களாலும் சுகம் சீர்குலேவதைவிட, மருந்துகளின் சக்தியால் கூடுதலாக சீர் குலேயும் என்று, உண்மையான ஆராய்ச்சியின் மூலமும், பரிட்சையின் மூலமும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. (உ-ம்) தடுப்பு மருந்துகள்.

34) மருந்துகளால் உண்டாக்கப்படும் செயற்கை வியாதிகள், கூடுதல் சக்தியும், உக்கிரமமும் கொண்டவையாய் மாத்திரம் இருந்தால் போதாது. எந்த வியாதியை குணப்படுத்த வேண்டுமோ, அதே வியாதியின் குறிகளே உண்டுபண்ண சக்தி கொண்டதாய் இருக்க வேண்டும். ஏனெனில், ஒரு வியாதியை இயற்கையால் கூட, வேருெரு வேற்றுமையான கூடுதல் உக்கிரமமுள்ள இன்னெரு வியாதியை உண்டுபண்ணி குணப்படுத்த முடியாது. இவ்விதம்தான் வியாதிக்கொத்த குறிகளே உண்டுபண்ணக்கூடாத மருந்துகளே கொடுக்கும் வைத்தியனும் தோல்வி அடைகிருன்.

35) வேற்றுமையான இரு வியாதிகள் ஒருவனில் காணப்படும் பொழுது, அலோபதி மருந்துகள் வியாதிகளுக்கொத்த குறிகளே உண்டுபண்ண முடியாததால், அவைகளே குணப்படுத்த முடியாமற் போகின்றன. இங்கு, இயற்கையால் கூட, ஒரு வியாதியை, சக்தி கூடிய வேற்றுமையான வேருெரு வியாதியால் குணப்படுத்த முடியாதென்று கண்டுகொள்ளுகிருேம். அதே போல்தான் ஹோமியோபதி மருந்துகள் அல்லாதவை, எவ்வளவு சக்திவாய்ந்தவையாயினும், வியாதிகளே குணப்படுத்த முடியாதவை என்று கண்டுகொள்ளலாம்.

36) வெவ்வேறு சக்திகொண்ட இரு வேற்றுமையான வியாதிகள் ஒருவன் சரீரத்தில் சந்திக்கும்பொழுது, பழமையான வியாதி மிகவும் சக்தி கூடியதாயிருந்தால், புது வியாதிக்கு, சரீரத்தில் ஸ்தாபிக்க இடம் கொடுக்கப்படாமல் விரட்டப்படுகிறது. இதேபோல்தான், சக்தி கூடிய நாள்பட்ட வியாதியால் தாக்கப்பட்டிருக்கும் ஒருவனே, சக்தி குறைந்த இதர வியாதிகள் தாக்குவதில்லே. சக்திகூடிய வேறு வியாதிகள் இருந்த இடங்களில், தொற்று நோய்கள் பரவவில்லேயென்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிருர்கள்.

37) இதைப்போல்தான் சக்திகூடிய நாள்பட்ட வியாதிகளும் வியாதிக்கொத்த குறிகளை உண்டுபண்ணக் கூடாத அலோபதி மருந்துகளால் எவ்வளவு நாள் கொடுக்கப்பட்டாலும் குணமடைவதில்லை. இதை தொழி லின் அனுபவத்தில் கண்டு கொள்ளலாம்.

38) புதிதாய் தோன்றும் வேற்றுமையான வியாதி, பழைய வியாதியைவிட சக்தி கூடியதாய் இருந்தால், புது வியாதி அதன் ஓட்டத்தை முடிக்கும் வரை அல்லது குணமடையும் வரை, பழைய வியாதியின் செய்கை தடைபட்டு, பின்பு திரும்பவும் காணப்படும். (உ-ம்) தீவிர சரும வியாதிகள் தோன்றும் பொழுது முன்பி ருந்த காக்காய் வலி மறைதலும், சரும வியாதி மறைந் ததும் காக்காய்வலி திரும்ப வருதலும். சிரங்கு வந்தால் கரப்பான் மறைதலும், சிரங்கு சுகமானதும் கரப்பான் திரும்ப வருதலும். க்ஷயரோகம், புத்திசுவாதீனமில்லா மல் ஆகும்பொழுது மறைதலும், புத்திசுவாதீனமில் லாமை குணமடைந்ததும் திரும்ப வருதலும். இங்ஙனம், வேற்றுமையான வியாதிகள் அவற்றின் சக்தியை பொறுத்தவாறு பழைய வியாதிகளை தடை செய்யுமே யன்றி குணப்படுத்தாது.

39) நாள்பட்ட வியாதிகள், அலோபதி மருந்துகள் உண்டாக்கும் வேற்றுமையான குறிகளால் குணமடை வதில்லை. பேதி மருந்து கொடுப்பதால் சருமக் குறிகள் குறைந்தாலும், திரும்பவும் வந்து விடுவது போல, அலோபதி மருந்துகளின் கூடுதலான தாக்குதலினால் உண்டாகும் வேற்றுமையான குறிகள், வியாதியை செயலற்றதாக்கினாலும், இதுதற்காலிக சாந்தியே அன்றி, வியாதி குணமடையாமல் திரும்பவும் வந்து விடுகிறது. பல சமயங்களில், இவ்வித வேற்றுமையான குறிகளை உண்டுபண்ணும் சிகிற்சைகளின் மூலம், குணமாக்க எத்தனித்த வியாதியுடன், இன்னொரு, மருந்துகளால் உண்டாக்கப்பட்ட வியாதியும் சேர்ந்துவிடுகிறது. இவை யாவும் நோயாளியை இன்னும் பலவீனம் ஆக்குவதே. ஏனெனில் இம்முறையால் சோரு அழிக்கப்படுவதில்லை.

40) சில சமயங்களில் புதிதாக உண்டாகும் வியாதி, வேற்றுமையான பழைய வியாதியுடன் சேர்ந்து சிக்கல்

களை உண்டுபண்ணிவிடும். இவ்விதம், தனது செய்கையை முடித்துவிட்டு பழையவேற்றுமையான வியாதியுடன் சேரும் பொழுது, இரண்டு வியாதிகளும் தன்னல் தாக்கக்கூடிய அவயவங்களில் போய் ஸ்தாபித்துவிட்டு, இதர அவயவங்களை வேறு வேற்றுமையான வியாதிகளின் தாக்குதலுக்கு விட்டு விடும். ஒரே தன்மை இல்லாத இரு பரவும் தீவிர நோய்கள் ஒருவனைத்தாக்கும்பொழுது (உ-ம்) வைசூரியும், மண்ணெனும் (Small pox and measles), சாதாரணமாக ஒன்றை ஒன்று அடங்க வைத்துவிடும். அசாதாரணமான சில நிலைகளில், இரு வியாதிகளும் ஒரே சமயத்தில் தாக்கிக்கொண்டிருந்து சிக்கல்களை உண்டுபண்ணுவதுமுண்டு. நாள்பட்ட வியாதிகளில், புது சக்திவாய்ந்த வியாதி, பழைய வியாதியுடன் சேரும்பொழுது உண்டாகும் சிக்கல்களில், மேக நோய் சோருவாக, அல்லது சோரு மேக நோயாக திரும்புவது குறிப்பிடத்தக்கது. இவை யாவும், வேற்றுமையான வியாதிகள் ஒன்றை ஒன்று அழிப்பதற்கு சக்தி உள்ளவை அல்ல என்பதற்கு சான்றுகள்.

41) இயற்கை காரணங்களைவிட, ஹோமியோபதி அல்லாத மருந்துகளை அதிகநாள் உபயோகிப்பதனல் உண்டாகும் புது வியாதிகளும் சேர்ந்து, பல வியாதிகள் ஒரே சமயத்தில் சரீரத்தில் காணப்படுவதுதான் கூடுதலாக ஏற்படுகிறது. சரியல்லாத மருந்துகளை நீடித்த காலம் உபயோகிப்பதன் மூலம், குணமாக்கவேண்டுமென்று நினைத்த இயற்கை வியாதியோடு, மருந்துகளின் தன்மைக்கொத்த புதுக்குறிகள் உண்டாகி விடுகின்றன. இப்புதுக்குறிகள், இயங்கி வந்த நாள்பட்ட வியாதியின் குறிகளுக்கொத்திராததால், கிரமம் கிரமமாக நாள்பட்ட வியாதியுடன் மருந்தினல் உண்டாக்கப்பட்ட வியாதியும்சேர்ந்து, சிக்கல்களை உண்டுபண்ணி, நோயாளியை மிகக்கேடுள்ள நிலைக்கும், குணமடைவதற்கு மிக கஷ்டமான நிலைக்கும் கொண்டுவந்து விடுகிறது. எனவே தான், மேக வியாதியான கிரந்தி நோயானது (Syphilis) சைக்கோசிசுடனும், சோருவுடனும் சேர்ந்து மியாசங்கள் ஒன்ருேடொன்று கலக்கப்படும் பொழுது, இதை குணமாக்க இதர முறைகளில்

கொடுக்கப்படும், சுத்தமாயும், சரியாயும் தயாரிக்கப்படாத **மெர்குறி** என்னும் மருந்து, திரும்ப திரும்ப கொடுக்கப்படும் பொழுது கிரமம் கிரமமாக இம்மருந்தால் உண்டாக்கப்படும் கிரந்தி நோயை ஒத்த மெர்குறி வியாதி உண்டாகி, மியாசங்களோடு சேர்ந்து மிகவும் பயங்கரமான சிக்கல்களை உண்டுபண்ணி குணப்படுத்த முடியாது என்றநிலை ஏற்படாவிட்டாலும், குணப்படுத்துவது மிக மிக கடினம் என்றநிலை ஏற்படும். இங்ஙனம் மெர்குறியால் உண்டாக்கப்படும் கிரந்தி நோயை ஒத்த **மெர்குறி வியாதிக்கு, மறைக்கப்பட்ட கிரந்தி அல்லது பொய்யான கிரந்தி என்று பெயர்** (Masked or Pseudo Syphillis).

42) இயற்கை இரண்டு மூன்று வேற்றுமையான வியாதிகளுக்கு ஒரே சமயத்தில் சரீரத்தில் இடம் கொடுக்கும். இவ்வேற்றுமையான வியாதிகள் ஒன்றையொன்று அழித்துவிட முடிகிறதில்லை. இவ்வியாதிகள் அவைகளின் தன்மைக்கேற்ற அவயவங்களை தெரிந்து அமர்ந்துகொண்டு, அவைகளின் வேற்றுமையால், முக்கிய தத்துவத்திற்கு கேடு விளைவிக்காமல் இருக்கும்.

43) ஆனல் ஒரே தன்மையுள்ள இரு வியாதிகள் சரீரத்தில் சந்திக்கும்பொழுது, சக்திகூடிய வியாதி மற்றதை அழித்து விடுகிறது.

44) மிகவும் ஒற்றுமையுள்ள ஒரே மாதிரியான இரு வியாதிகள் ஒன்றையொன்று விரட்டவோ அல்லது ஒன்றையொன்று அமுக்கி, ஒன்றின் ஓட்டம் முடிந்தபின் மற்றது தலை தூக்கவோ, அல்லது ஒன்றின் பக்கத்தில் மற்றது அமர்ந்து சிக்கல்களை உண்டுபண்ணவோ முடியாது.

**குறிப்பு:** 43-ல் கூறியிருப்பதை 44-ல் ஹனிமான் மறுப்பதாக தோன்றலாம். 43-ல் சக்திவாய்ந்த வியாதியென்றும், 44-ல் மிக ஒற்றுமையான ஒரே மாதிரியான இரு வியாதிகள் என்றும் குறிப்பிட்டிருப்பதை கவனிக்க.

45) ஒற்றுமையுள்ள இரு வியாதிகள் எவ்விதத்தை சார்ந்தவையாயினும், அதன் குறிகள் ஒன்று போன்ற

.

வையாயின், ஒன்றை ஒன்று அழித்துவிடும். சக்தி கூடியது சக்தி குறைந்ததை அழிக்கும். ஆனல் வேற்றுமையான இரு வியாதிகள் ஒன்றை ஒன்று அழிக்க முடிகிறதில்லை. இரண்டும் தனித்தனியாக சரீரத்தில் இயங்க முடியும். ஏனெனில் இரண்டும் தனது செயலுக்கு வெவ்வேறு அவயவங்களேயும் பாகங்களேயும் தெரிந்துகொள்ளும். ஆனல் ஒரே தன்மையுள்ள இரு வியாதிகள் சந்திக்கும்பொழுது, சக்திவாய்ந்த வியாதியும், மற்ற வியாதி தாக்கியுள்ள பாகங்களேயே தாக்குவதால், சக்திகுறைந்த வியாதி தனக்கு தாக்க வேறு பாகங்கள் இல்லாததால் அழிக்கப்பட்டுவிடுகிறது.

46) வைசூரி நோய் சக்தி கூடியதாகையாலும் கூடுதல் குறிகள் உள்ளதாகையாலும், அதற்கொத்த குறிகளுள்ள இதர வியாதிகளே அழித்துவிடுகிறது. கண்ணின் தசைகள் வியாதியுற்று, பார்வையைக் கூட இழக்க வைக்கும் **ஆப்தல்மியா** (Ophthalmia) என்னும் கண் நோய் சாதாரணமாக வைசூரியில் ஏற்படுவதுண்டு. ஆனல் நாள்பட்ட இந்நோய் கூட சில சமயங்களில் அம்மை குத்துவதால் சுகப்படுவதுண்டு.

47) எனவே குறிகளுக்கொத்த செயற்கை வியாதியை உண்டுபண்ண சக்தியுள்ள மருந்துகளேயே தெரிந்து கொண்டு, குறித்த காலத்திலும் நிரந்தரமாகவும் வியாதிகளேக் குணப்படுத்த முடியுமென்பதற்கு கூடுதல் ஆதாரங்கள் தேவை இல்லே.

48) மேற்கூறியவற்றிலிருந்து, வேற்றுமையான குறிகளே உண்டுபண்ணி வியாதிகளே குணமாக்க முடியாது என்று கண்டு கொண்டோம். அதே சமயத்தில் வியாதியைவிட கொஞ்சம் சக்தி கூடிய அதேக் குறிகளே உண்டுபண்ணும் மருந்துகளின் மூலம் குணப்படுத்திவிடலாம் என்பதையும் பார்த்தோம்.

49) வியாதிகளின் மூலமே இயற்கையாக இன்னும் எத்தனேயோ குணங்கள் சரீரத்தில் ஏற்படுவதை, கவனம் செலுத்தியிருந்தால் ஆராய்ச்சியாளர்கள் கூடுதல் சந்தர்ப்பங்களில் கண்டிருக்கலாம்.

50) இயற்கைக்குகூட, சிரங்கு, மண்ணென், வைசூரி (Itch, measles and small pox) முதலிய மியாசங்களினுல் உண்டாகும் வியாதிகளேவிட வேறு எந்தவித கருவிகளும் வியாதிகளே குணப்படுத்தக் கிடையாது. ஆனுல் இவ்வியாதிகளில், வைசூரியம், மண்ணெனும் அவற்ருல் குணப்படுத்தப்படும் வியாதிகளேவிட கூடுதல் பயங்கரமானவை. அதேபோல் தான் சோருவையும் விரட்டுவதற்கு ஒரு கருவி தேவை. ஆனுல் வியாதிகளின் மூலமே மியாசங்களே விரட்டப்பார்ப்பது, நிச்சயமற்றதும், அபாயமானதுமாகும். மேலும் மிக சொற்ப வியாதிகளே, சோரு, மண்ணென், வைசூரி முதலியவற்ருல் இயற்கையாக ஹோமியோ முறையை ஒத்து சுகப்படுத்தப்படுகின்றன. எனவே இயற்கைக்கு இக்கருவிகளால் கூடுதல் வியாதிகளே குணப்படுத்த முடிவதில்லே. ஏனெனில் இக்கருவிகளே (வியாதிகள்) மருந்துகளேப் போல் சக்தி கூட்டியும், குறைத்தும், அளவை மாற்றியும் கையாள முடியாது. ஆகையால் இக்கருவிகள் ஒற்றுமையான குறிகளுடன் சரீரத்தில் சந்திக்கும்பொழுது பல சந்தர்ப்பங்களில் நன்மை ஏற்படுகிறது என்பது இயற்கையின் தத்துவங்களுக்கு ஒரு சாட்சியாகி, வியாதிகளேயும், அதே குறிகளே உண்டுபண்ணும் மருந்துகள் மூலம் குணப்படுத்தவேண்டுமென்ற உண்மையை வெளிப்படுத்தியிருக்கிறது.

51) எனவே ஹோமியோ முறையே உண்மையானது என்பதை நிரூபிக்க வேறு சாட்சியங்கள் தேவை இல்லே. சிருஷ்டிப்பின் எல்லா இடங்களிலும் கிடைக்கக் கூடிய ஹோமியோ மருந்துகள் மிகப் பிரயோஜனமானவை. இம்மருந்துகளால் சாதுவான, துரிதமான முறையில் வியாதிகளே குணப்படுத்திவிடலாம்.

52) இவ்விதம் தெளிவாக்கப்பட்ட உண்மைகளின் பின் உண்மையான எந்த வைத்தியனும் அலோபதி சிகிற்சை முறையில் நிலேத்து நிற்கமாட்டான். வேற்றுமையான குறிகளே உண்டுபண்ணும் மருந்துகளே கையாளுவதின் மூலம் நாள்பட்ட வியாதிகள் குணமடைவதற்கு பதில் அதிகப்பட்டு விடுகிறது. நாள்பட்ட அலோபதி சிகிற்சை சாதுவானதாயிருந்தால், இயற்கை

வியாதி மாருமல், நோயாளி பலவீனமாகிவிடுகிருன். ஏனெனில் இயற்கை வியாதி, வேற்றுமையான இன்ஞெரு வியாதியை சாதுவான முறையில் உண்டாக்க இடம் கொடுப்பதில்லே. சக்திவாய்ந்த அலோபதி மருந்துகளே கையாளும்பொழுது வியாதி குணப்பட்டதாக ஆரம்பத்தில் காணப்பட்டாலும், அதன் பூரண சக்தியுடன் திரும்பவும் வந்துவிடும். மூன்ருவதாக, சக்திவாய்ந்த அலோபதி மருந்துகள் அதிக நாள் உபயோகிக்கப்படும் பொழுது உண்டாகும் புது வேற்றுமையான சிக்கலான வியாதி, சிகிற்சையை மிகவும் கஷ்டமான நிலேக்கு கொண்டு செல்வதோடு புது வியாதியும் சரீரத்தில் ஸ்தாபிக்கப்பட்டுவிடும்.

53) ஹோமியோ முறையில்தான் சீக்கிரம், உண்மையான நிரந்தர குணத்தை காணமுடியும். ஏனெனில் இம்முறை தவறமுடியாத இயற்கையின் விதிகளே அடிப்படையாகக் கொண்டது.

54) மேலும் ஹோமியோ முறை சரியாக உபயோகிக்கப்படும்பொழுது நோயாளிக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படுவதில்லே.

55) அலோபதி மருந்துகள் அவசியமற்ற பாகங்களிலும் வேலே செய்து கெடுதலே விளேவிக்கும்.

56) இதர முறைகளும் பயனற்றவையே. ஏனெனில் இயற்கை வியாதிகளேப்பற்றி அவர்கள் ஆராய்வதில்லே.

57) எதிரிடையான குறிகளே உண்டுபண்ணி சிகிற்சை செய்பவர்கள், நோயாளியால் மிகவும் அதிகமாய் இருக்கிறதென்று கூறும் குறிகளுக்கு மாத்திரமே முக்யத்துவம் கொடுப்பர். எனவே இக்குறிகளுக்கு எதிரான குறிகளே உண்டுபண்ணும் மருந்தை கொடுப்பர் (Contra Contraris). கொடுத்ததுடன், வியாதியின் உடனடி சாந்தியையும் எதிர்பார்ப்பர். எனவேதான் உக்கிரமமான வேதனேகளில் சக்தி கூடிய பரிமாணத்தில் **அபினேக்** கொடுப்பர். ஏனெனில் அபின், உணர்ச்சியை, உணர்ச்சியற்றதாக்கி விடும். அதே போல்தான் வயிற்ருேட்டத்திற்கும் இம்மருந்தை அதிகமாக கையாளுவர்.

உறக்கமின்மைக்கும் இதையே கையாளுவர். மலச்சிக்கலுக்கு பேதி மருந்தை கொடுப்பர். இவ்விதம் வேற்றுமையான நிலையை உண்டுபண்ணும் பலதையும் கையாளுவர்.

58) இவ்வித சிகிற்சையில், நாள்பட்ட வியாதிகள் சிறிது பேதமடைந்ததாக ஆரம்பத்தில் காணப்பட்டாலும், எப்பொழுதும் கூடுதல் உக்கிரமத்தோடு திரும்ப வந்துவிடும் அன்றியும், நோயாளியின் நிலையும் அபாயமாகிவிடும்.

59) பகலில் உறங்க விருப்பம் உள்ள ஒருவனுக்கு, காப்பி கொடுக்கப்படும் பொழுது, ஆரம்பத்தில் அவன் உற்சாகமாக விழித்திருப்பான். ஆனால் காப்பியின் வேலை முடிந்தவுடன், முன்பு இருந்த பிரியத்துடன் மிகவும் கூடுதலான பிரியத்துடன் அவன் உறங்க ஆசைப்படுவான். இவ்விதமாக மருந்துகளின் **ஆரம்ப செய்கையின்** (Primary Effect) மூலம் குறிகள் சாந்தி அடைவதை ஒரு நல்ல முறை சிகிற்சையாக கருதுவது சரியல்ல. ஏனெனில் மருந்துகளின் **இரண்டாந்தா செய்கையினுல்** (Secondary Effect) வியாதி அதிகப் படுவது மாத்திரமின்றி, சில சமயங்களில் புது வியாதிகளையும் உண்டு பண்ணிவிடும்.

**குறிப்பு:** டாக்டர் ஹனிமான் மருந்துகளின் ஆரம்ப செய்கைக்கு பலதிருஷ்டாந்தங்கள் ஆர்கனனில் கூறியிருந்தும், ஆசிரியர் குறைவான திருஷ்டாந்தங்களுடன் நிறுத்தியிருப்பது புத்தகத்தின் பக்கங்களை கூட்டாமல் இருப்பதற்கே. வேற்றுமையான குறிகளை உண்டுபண்ணும் மருந்துகளின் ஆரம்ப செய்கை மூலம் வியாதி சாந்தியடைந்தாலும், மருந்துகளின் இரண்டாந்தர செய்கை மூலம் அபாயம் உண்டாகிறதென்பதே இப் பகுதியின் முக்கிய விளக்கம். (Primary and Secondary Action).

60) நாள்பட்ட வியாதிகளை இங்ஙனம் சிகிற்சிக்கும் பொழுது, வியாதி திரும்ப திரும்ப வருந்தோறும், வைத்தியன் மருந்தின் சக்தியையும் கூட்டுகிருன். இம் முறையால் உண்டாகும் அபாயங்களினுல் மரணம்

விளைவதும் உண்டு. நாள்பட்ட வியாதிகளை இங்ஙனம் குணப்படுத்தவே முடியாது.

61) வேற்றுமையான குறிகளை உண்டுபண்ணும் சிகிற்சையில் அடையும் தோல்விகளுக்கு, வைத்தியர்கள் கூடுதல் கவனமும், முக்கியத்துவமும் கொடுத்திருந்தால், ஒற்றுமையான குறிகளை உண்டுபண்ணும் ஹோமியோ முறையில் காணும் வெற்றிகளை அவர்கள் தழுவியிருப்பர். ஆனால் நோயாளியின் பாதுகாப்பை என்றும் வசப் படுத்தியிருக்கும் ஹோமியோ முறையின் உண்மைக்கு அவர்கள் ஒரு பொழுதும் வந்தடைந்ததில்லை.

62) ஹோமியோ முறைக்கும் இதர முறைகளுக்கும் உள்ள வித்தியாசங்களை கீழ்காணும் திருஷ்டாந்தங் களின் மூலம் பார்க்கலாம்.

63) எல்லா மருந்துகளும் முக்கிய தத்துவத்திலும், சரீரத்திலும் சிறிது காலத்திற்கோ அல்லது நீடிய காலத்திற்கோ, அறிந்து கொள்ளத்தக்க விதத்தில் ஒரு வித்தியாசத்தை உண்டுபண்ணுகின்றன. இந்த செய் கைக்கு ஆரம்ப செய்கை (Primitive Effect) என்று பெயர். இது மருந்தின் செய்கையினாலும், முக்கியதத்து வத்தின் செய்கையினாலும் ஏற்படும் கூட்டு செய்கையே ஆயினும், கூடுதலாக, மருந்து சரீரத்தில் செய்யும் தாக்குதலினாலேயே உண்டாகிறது. ஆனால் நமது சரீரத் தின் சக்திகள் எப்பொழுதும் மருந்தின் சக்திகளை எதிர்க்கவே விரும்புகிறது. இங்ஙனம் சரீரத்தின் சக்தி கள், மருந்தின் சக்திகளை எதிர்ப்பதனால், தன் சக்தியை விடாது காக்க விரும்பும் சரீரத்தின் சக்தியில் ஏற்படும் விளைவுகள் **இரண்டாந்தர செய்கை** என்று அழைக்கப் படுகிறது (Secondary Effect or Reaction).

64) செயற்கை மருந்துகள் சுகமான சரீரத்தில் வேலை செய்யும் பொழுது சரீரத்தின் சக்தியானது (முக்கிய தத்துவம்) கட்டுண்டது போல அல்லது பலாத் காரம் பண்ணப்பட்டது போல அடங்கியிருக்கும். இறுதி யில் இச்சக்தி தலை தூக்கிவிடும். தலை தூக்கும்பொழுது இருக்கும் நிலை, மருந்தினால் உண்டாக்கப்பட்ட ஆரம்ப

செய்கைக்கு சுத்த எதிரிடையானதாயிருந்தால், இச்சக்தியும் அதைப்போல் ஒன்றை உண்டுபண்ண முயற்சிக்கும். இது சரீரத்தின் சக்தியின் வல்லமையைப் பொறுத்ததாயும், மருந்தின் வேலை எவ்வளவு ஆழமாய் இருக்கிறதோ அதைப்பொறுத்ததாயும் இருக்கும். ஆனால் இவ்வித எதிரிடையான நிலை இல்லாவிடில், சரீரத்தின் சக்தியானது மருந்தினால் உண்டான மாறுதல்களை மாற்றி, தனது இயற்கையான நிலையை ஸ்தாபித்து, தன்கையை ஓங்க வைக்க முயற்சிக்கும்.

65) சுடு தண்ணீரில் அமிழ்த்தப்பட்ட கரம், அமிழ்த்தப்படாத கரத்தைவிட உஷ்ணம் அடைந்துவிடுகிறது. (ஆரம்ப அல்லது முதலாவதான செய்கை) ஆனால் நீரிலிருந்து எடுக்கப்பட்டு உலரவைத்ததும், குளிராகி, இறுதியில் மறுகரத்தைவிட கூடுதல் குளிர்ச்சியை அடைந்துவிடுகிறது. (இரண்டாந்தர அல்லது இரண்டாவதான செய்கை). இங்ஙனம், ஆரம்ப செய்கைக்கும் இரண்டாந்தர செய்கைக்கும் டாக்டர் ஹனிமானால் பலதிருஷ்டாந்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்படியாக சரீரத்தின் முக்கிய தத்துவம் என்னும் சக்தியானது அதன் இரண்டாந்தர செய்கையின் மூலம், சுகமான சரீரத்தில் சக்தியான மருந்துகளின் மூலம் உண்டாக்கப்படும் ஆரம்ப செய்கைகளை அதன் எதிர் குணத்தால் எதிர்க்கிறது.

66) ஆனால் சுகமான சரீரத்தில், அதன் வல்லமையை மாற்றும், பலவீனமான ஹோமியோபதி மருந்துகள் கொடுக்கப்பட்டபின், ஆரோக்கியமானது கண்டு கொள்ளதக்க ஏதும் இரண்டாந்தர செய்கையை செய்வதில்லை. சிறிய அளவு மருந்துகள் கூட உண்டுபண்ணும் ஆரம்ப செய்கை, பார்க்க அல்லது உணரத்தக்கவை. ஆனால் முக்கிய தத்துவம் என்னும் சக்தியானது, சரீரம் சுகம் அடைவதற்கு தக்க அளவில் மாத்திரம் தன் எதிர் தாக்குதலை செய்வதால், அதன் இரண்டாந்தர செய்கையை நாம் காணவோ, உணரவோ முடிகிறதில்லை.

67) இங்ஙனம் இயற்கையாலும், அனுபவத்தின் மூலமும் நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் உண்மைகள்,

ஹோமியோ முறை எவ்வளவு உயர்ந்ததென்றும், பயன் தரக்கூடியதென்றும், இதர முறைகள் அறிவுக்கு எவ்வளவு புறம்பானவை என்றும் எடுத்துக் காட்டுகின்றன.

**குறிப்பு:** பிராண வாயுவை இரத்தத்தால் எடுத்துக்கொள்ள முடியாத நிலைக்காக்கும், இடி, மின்னல், தண்ணீரில் மூழ்குதல் முதலியவற்றால் சட்டென ஏற்படும் ஆபத்தான நிலைகளில், மின்சாரம், கடுமையான காப்பி, எழுப்பவைக்கும் வாசனை வஸ்துக்கள், கிரமமாக சூடு கொடுத்தல், முதலியவற்றை உடனடி கையாண்டு, முக்கிய தத்துவம் என்னும் சக்தியை தூண்டி, அவயவங்களை அவற்றின் இயற்கையான செய்கைக்கு கொண்டு வந்துவிடலாம். கடுமையான விஷங்கள் உள் செலுத்தப்பட்டபொழுதும், ஆபத்தை சமாளிக்க, உடனடி அவற்றின் எதிரானவைகளை கொடுத்து, விஷத்தின் உக்கிரத்தை தவிர்க்கலாம். சில சந்தர்ப்பங்களில் தெரிந்து கொள்ளப்படும் ஹோமியோ முறை மருந்து முக்கியம் அல்லாத சில குறிகளை எதிர்ப்பதாக இருக்கலாம். தெரிந்து கொள்ளப்பட்ட மருந்தால் வியாதியின் முக்கிய குறிகள், கவரப்படுமாயின், மேற்கூறிய விரோதமான முக்கியமல்லாத குறிகளைப்பற்றி கவலைப்படவேண்டியதில்லை. ஒத்துக்கொண்ட முக்கிய குறிகள் மாறும் பொழுது, இக்குறிகளும் தானாகவே மாறிவிடும்.

68) சரியான ஹோமியோ சிகிற்சை முறையில் மிகவும் சிறிய அளவு மருந்துகள்கூட, வியாதியின் குறிகளுக்கொத்த குறிகளை செயற்கையாக உண்டுபண்ணி வியாதியை குணப்படுத்திய பின்பு, மருந்தினால் உண்டாக்கப்பட்ட செயற்கை குறிகளின் செய்கை ஆரம்ப செய்கையை முடித்த பின்பும் கூட, சரீரத்தில் இருப்பது உண்மையே. ஆனால் மருந்துகள் மிகவும் சொற்ப அளவில் கொடுக்கப்படுவதால் உயிரான சக்திக்கு இதை எதிர்ப்பதற்கு விசேஷ எதிர் தாக்குதல் செய்யவேண்டியதில்லை. வியாதியின் குறிகள் யாவும் மாறிவிட்டதால், உயிரானசக்தி இதை விரைவில் அழித்துவிடும்.

69) ஆனால் வேற்றுமையான குறிகளை உண்டுபண்ணும் இதர முறை சிகிற்சைகளில், இதற்கு எதிரான

சம்பவம் நடக்கிறது வியாதியுற்றிருக்கும் பாகங்களில் ஹோமியோபதி மருந்துகள் வேலை செய்வது போல, இதர மருந்துகளும் வேலை செய்வது உண்மையே. ஆனால் இதர மருந்துகள், இயற்கையான குறிகளை, மருந்துகளின் ஆரம்ப செய்கையின் மூலம் பொதிந்து அவயவங்கள் இயற்கை குறிகளை உணரமுடியாமல் உணர்ச்சியற்றதாக்கி விடுகிறதே ஒழிய, உண்மையாக குணப்படுத்துவதில்லை. (உ-ம்) அலோபதி முறையில் வேதனையை மாற்ற **ஓபியம்** (அபின்) என்னும் மருந்து கொடுக்கப்படுகிறது. உடனே வேதனையுற்றிருக்கும் அவயவமானது உணர்ச்சியற்று, வேதனையை உணர முடியாமல் ஆக்கிவிடுகிறது. ஹோமியோபதி முறையைப்போல், குறிகளுக்கொத்த செயற்கையான வியாதியை இம்மருந்தால் உண்டாக்க முடியாததாலும், தத்துவம் என்னும் சக்தியை இம்மருந்தால் தாக்கமுடியாததாலும், வியாதி குணமடைவதில்லை. எனவே மருந்தின் சக்தி முடிவடைந்ததும், வேதனை, கூடுதல் உக்கிரமத்தோடு திரும்ப வந்துவிடுகிறது. எனவே திரும்பவும் மருந்து கொடுக்கப்படுவதாலும், அதிலும், திரும்ப கொடுக்கும்பொழுது கூடிய அளவில் கொடுக்கப்படுவதாலும், இம்மருந்தால் உண்டாக்கப்படும் நிலை, வியாதியை அதிகப்படுத்திவிடுகிறது.

70) மேற்கூறிய பகுதிகளிலிருந்து கீழ்காணும் உண்மைகளைக் கண்டு கொள்ளலாம்.

1) மன நிலையும் சேர்த்து மொத்தக்குறிகளுக்கொத்த மருந்தை கொடுத்து வியாதியை குணப்படுத்தவேண்டுமேயன்றி, சரீரத்தின் உள் காணப்படும் காரணங்களையும், இதர காரணங்களையும் வியாதியை குணப்படுத்த முக்கியமானவை என்று எண்ணி, அவைகளுக்கு எதிரான குறிகளை உண்டுபண்ணும் மருந்துகளை கொடுத்து வியாதியை குணப்படுத்த எத்தனிப்பது வீண் கனவே ஆகும்.

2) மருந்தினால் உண்டாக்கப்படும் குறிகளுக்கொத்த செயற்கை வியாதியின் மூலம் மாத்திரமே இயற்கை வியாதியை குணப்படுத்த முடியுமே அன்றி, இதர முறைகளால் முடியாது. இம்முறையைக் கையாள, சுகமான

வர்களுக்கு மருந்துகளை கொடுத்து நிரூபிக்கப்பட்டிருக்கும் பரிட்சையின் விளைவுகளே மிக சுத்தமானதாகும்.

3) இயற்கை வியாதியின் எதிரான குறிகளை சுகமாய் இருக்கும் ஒருவனுக்கு உண்டாக்கும் மருந்துகள், அந்த இயற்கை வியாதியை குணப்படுத்தாது. எனவே, அலோபதி முறையானது ஒரு உண்மையான சுகத்தை ஒரு காலத்திலும் உண்டுபண்ணுது. இயற்கை கூட விரோதமான வியாதியை உண்டுபண்ணி ஒருவியாதியை குணப்படுத்தாது.

4) எதிரான குறிகளை உண்டுபண்ணும் மருந்துகளை கொடுப்பதால், வியாதி கூடுதல் உக்கிரத்துடன் திரும்ப வருகிறது என்ற உண்மையின் பெயரில், முக்கியமான நாள்பட்ட வியாதிகளை இம்முறையால் சிகிற்சை செய்வது மிகவும் விரோதமானதாகும்.

5) ஹோமியோ முறையில் மாத்திரமே, உண்மையான நிரந்தரமான வெற்றியைக் காணலாம்.

71) ஹோமியோ முறை சிகிற்சைக்கு, என்னென்ன விவரம் தேவை, எந்தெந்த மருந்துகள் இயற்கை வியாதிகளை குணமாக்கக் கூடியவை, இம்மருந்துகளை எப்படி கொடுக்கவேண்டும் என்ற அறிவு மிக முக்கியமானது.

72) வியாதிகள் இருவகைப்படும் 1) தீவிர வியாதி. 2) மியாசங்களினுல் உண்டாகும் நாள்பட்ட வியாதி.

73) தீவிர வியாதிகள், அசாதாரண நிலைக்கு தன்னை வெளிப்படுத்தல், அதிக சூடு, அதிக குளிர், மனநிலை மாறுதல் முதலியவற்ருல் திடீர் என தோன்றி, மனிதனை தாக்கி, எளிதில் குணமடையக்கூடியதும், இரண்டாவதாக, தீவிர சோரு (Acute Psora) என்ற மியாசத்தால், தொற்று நோயாய் பலரை தாக்குவதுமாகும். இவ்வியாதிகளில் சிலவை அதிகமாக வாழ்க்கையில் ஒரு தரம் மாத்திரம் ஒருவனை தாக்கும். (உ-ம்) வைசூரி, கக்குவான்

74) நாள்பட்ட வியாதிகளில் பல, அதிக நாள் சக் வாய்ந்த அலோபதி மருந்துகள் கொடுப்பதினுல் ஏ

படுபவை ஆகும். உயிர்பிரிந்தபின் சரீரத்தை வெட்டி ஏற்படுத்தும் பரிட்சையில் கண்டறியும் அவயவங்களின் மாறுதலினுல், அவன் இறந்து விட்டான் என்று அலோபதியர்கள் கூறினுலும், இம்மாறுதல்கள் அம்மருந்துகளினுல் உண்டானவைகளே.

75) இங்ஙனம் நீண்டகால அலோபதி மருந்துகளின் மூலம் உண்டாகும் நாள்பட்ட வியாதிகள், சிகிற்சைக்கு மிக கடினமானவை.

76) ஆண்டவன் ஹோமியோபதி முறை மூலம் இயற்கை வியாதிகளை மாத்திரமே குணப்படுத்த உதவி புரிந்திருக்கிருர். ஆனுல் உண்மையற்ற சாஸ்திரங்களின் மருந்துகளினுல் ஏற்படும் வியாதிகள், அதுவும் குறிப்பாக மியாசங்களுடன் சேர்ந்து விடும்பொழுது எவ்வித சிகிற்சையாலும் குணப்படுத்துவது மிக கடினம்.

77) மியாசங்களையன்றி. இதர காரணங்களினுல் உண்டாகும் எந்த வியாதியும் நாள்பட்ட வியாதியல்ல.

78) உண்மையான, இயற்கையான நாள்பட்ட வியாதி யாதெனில், மியாசத்தினுல் உண்டாக்கப்படுவதும், எவ்வளவு தூரம் சரீரத்தை பாதுகாத்தாலும், நாளுக்கு நாள் வியாதி வளர்ச்சியடைந்து மனிதனை அழிப்பதுமாகும்.

79) இதுவரை சிபிலிஸ் மாத்திரமே குணப்படுத்தப்படாமல் இருந்ததால், வாழ்க்கையின் இறுதிவரை இருக்கும் ஒரு நாள்பட்ட வியாதியாக கருதப்பட்டு வ ந் த து. வெளிக்குறிகள் குணப்படுத்தப்பட்டதும், சைக்கோசிஸ் குணமடைந்து விட்டது என்று கருதி வந்தனர். சைக்கோசிஸ் இயற்கையாக குணமடையக் கூடியதல்ல. வெளிக்குறிகள் மாறினுலும் இது உள்ளிருந்து கெடுதல் விளைவிக்கும்.

80) ஆனுல் இவை இரண்டையும்விட, சோரு பயங்கரமானது. மற்ற இரு மியாசங்களும் வெளிக்குறிகள் மூலம் தன்னை வெளிப்படுத்தும். ஆனுல் சோருவானது சரீரத்தின் உள் தீவிர கெடுதலை விளைவித்த பின் மாத்திரமே சரும வியாதியாக வெளிப்படும்.

**குறிப்பு:** சோருவைக் கண்டு பிடிக்க (டாக்டர் ஹனிமானுக்கு) 12 வருடமாயிற்று.

81) தலைமுறை தலைமுறைகளாக, இந்த மியாசம் மனிதனை தாக்கி, சொல்லக்கூடாத அளவில் வியாதிகளை உண்டுபண்ணி, மனிதனின் மேலான வாழ்க்கையை துன்பம் நிறைந்ததாக மாற்றி விட்டது. சோருவின் இருப்பை, நோயாளியின் சரீரத்தில் கண்டு கொண்ட பிறகும், ஹோமியோ முறையில், மொத்தக் குறிகளுக் கொத்த மருந்தை தெரிவு செய்தே சிகிற்சை செய்ய வேண்டும்.

82) இவ்விதமாக நாள்பட்ட வியாதிகளின் முக்கிய காரணங்களை நாம் அறிந்து கொண்டதின் நிமித்தம், குணப்படுத்தக்கூடிய நாள்பட்ட வியாதிகளின் தன்மை களை கூடுதலாக அறிய முடிகின்ற போதிலும், சோரு விஞல் உண்டாக்கப்படும் நாள்பட்ட வியாதிகளை சிகிற சிப்பதில் கவலையற்றவனுக இருந்துவிடக்கூடாது. உண ரும், காணும் எல்லா குறிகளையும் ஒவ்வொரு நபரிடத் திலும் தனியாக, கவலையாக சேகரித்து சிகிற்சை செய் வதே வெற்றியைத் தரும். தீவிர வியாதியா, நாள்பட்ட வியாதியா என்று பிரிப்பதுதான் மிக முக்கியம். ஏனெ னில் தீவிர வியாதிகளில் கண்டு கொள்ள வேண்டியவை மிக சொற்பமே. அவற்றின் குறிகள் தீவிரமாயும், துரித மாயும் வருவதாகவும், சீக்கிரம் மறைந்து போவனவாயும் இருக்கும். ஆனுல் நாள்பட்ட வியாதிகளில் குறிகளை சேகரிப்பது மிகக் கடினம்.

83) சிகிற்சை செய்ய வேண்டிய முறையை கீழே காணலாம்.

84) நோயாளியும் அவனுடைய சுற்றத்தாரும் குறி களை கூறுகின்றனர். வைத்தியன், அவர்கள் அவசிய மாக கூறும் இடங்களில் மாத்திரம் அவர்களை திருத்தி, கூடிய மட்டும் அவர்கள் கூறுவதை முறிக்காமல் மிகவும் கவனமாக யாவற்றையும் எழுதுகிருன்.

85) ஒவ்வொரு புதுக்குறியையும் தனி தனி வரியில் எழுதவேண்டும்.

86) நோயாளியும் மற்றவர்களும் கூறி முடிந்த பின்பு, ஒவ்வொரு குறியின் கூடுதல் விபரங்களுக்காக, வைத்தியன் கேள்வி கேட்டு குறிகளை சேகரிக்கவேண்டும். வலியின் தன்மை, உணர்ச்சிகள், வலியும் உணர்ச்சியும் சரீரத்தின் எந்தெந்த பாகங்களில் தோன்றுகிறது, ஒருதரம் தோன்றி, திரும்பவும் தோன்றுவதற்குள்ள இடைவேளை என்ன, ஒரு நாளின் எந்த நேரத்தில் குறிகள் கூடுகின்றன அல்லது குறைகின்றன, (< & >) என்ன செய்தால் கூடுகின்றன அல்லது குறைகின்றன, மருந்தினால் உண்டான குறிகளா, வியாதியடைந்தபின் நோயாளியின் மனநிலையில் ஏற்பட்டிருக்கும் மாறுதல்கள் என்ன, அவனுடைய விருப்பம், வெறுப்பு, எந்தெந்த கால நிலையும், சீதோஷ்ண நிலையும் ஒத்துக்கொள்கின்றன அல்லது ஒத்துக்கொள்ளாமல் இருக்கின்றன, மியாசங்கள் யாதும் உண்டா, பெற்றோர் உறவினர் இறந்த காரணம், விஷங்கள் ஏதும் உட்கொள்ள காரணம் உண்டா, வாழ்க்கைநிலை அல்லது ஒழுங்கு, செய்யும் தொழிலும் செய்து வந்த தொழிலும், ஒவ்வொரு அவயவத்திலும் ஏற்படும் குறிகள், உணர்ச்சிகள், பசி, தாகம் முதலியவற்றின் நிலை, ஆகாரத்திற்கு முன்னும் பின்னும், மாதவிடாய் காலத்திலும், முன்னும், பின்னும், சிற்றின்பத்தினால் ஏற்படும் குறிகள், முதலிய எல்லாக் குறிகளையும் சேகரிக்க வேண்டும்.

87) ஆம் அல்லது இல்லை என்ற பதில் கூறத்தக்க எந்த கேள்வியையும், வைத்தியன் நோயாளியிடம் கேட்கக்கூடாது.

88) நோயாளியும் அவன் சுற்றத்தாரும்கூறிமுடிந்த பின்பு, வைத்தியனுடைய பார்வைக்கு, நோயாளியால், எல்லா அவயவங்களின் குறிகளும், மனக்குறிகளும், வேண்டிய இதரக் குறிகளும், சரியாய் கூறப்படவில்லை என்று தோன்றினால், வேண்டிய கேள்விகள் கேட்டு, கூடுதல் விபரங்கள் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

89) இங்ஙனம் கூறப்பட்டபின்பும், வைத்தியனுக்கு குறிகள் திருப்திகரமாய் கூறப்படவில்லை என்று தோன்றினால், கூடுதல் கேள்விகள் கேட்கலாம்.

90) இவ்விதம் நோயாளியால் கூறப்படவேண்டிய வை யாவும் கூறி முடிக்கப்பட்டபின், வைத்தியன் தன் பரிசோதனையில் நோயாளியிடம் கண்டுகொள்ளும் குறி களையும் எழுதிக்கொள்ளவேண்டும் (உ-ம்) கோபம், சாந்தம், ஆத்திரம், அமைதி, துக்கம் முதலியவை வைத் தியனாலே கண்டுகொள்ளக்கூடியவை. குரலின் தன்மை, முகத்தின் நிறம், கண்களின் நிறம், நாக்கும் அதின் தன் மையும், மூச்சுவிடும் தன்மை, வாயிலிருந்து வரும் வாடை, காதின் தன்மை, கண்களின் நிலை, நாடியின் நிலை, இரத்தாசயத்தின் நிலை, அவன் அமர்ந்திருக்கும் நிலை, இராசாயன பரிட்சையில் கிடைக்கும் குறிகள் யாவும் வைத்தியனால் தெரிந்து கொள்ளக்கூடியவை.

91) மருந்துகளை உபயோகிக்கும்பொழுதோ, உப யோகித்த சிறிது நாட்களுக்குள் தோன்றும் குறிகளோ, உணர்ச்சியோ, உண்மையான வியாதியை குறிப்பிடு பவனல்ல. மருந்துகள் அருந்துவதற்கு முன் இருந்த குறிகளும், மருந்துகள் அருந்துவதை கைவிடப்பட்ட பல நாட்களுக்கு பின் தோன்றும் குறிகளுமே, வியாதி யின் உண்மையான குறிகள். மருந்துகள் அருந்திக் கொண்டே இருந்த ஒரு நாள்பட்ட வியாதியுள்ள நோ யாளி நம்முறை சிகிற்சைக்கு வரும்பொழுது, சிறிது காலம் மருந்து கொடுக்காமலிருப்பதோ, அல்லது மருந் தல்லாத சாதனங்களை கொடுத்து வருவதோ நல்லது. இதற்கு முன் குறிகளை சரியான முறையில் பதிவு செய்ய வும் கூடாது. அருந்திய மருந்துகளின் ஓட்டம் முடிந்த பிறகு இருக்கும் குறிகளே உண்மையான குறிகள்.

92) ஆனால் தீவிர வியாதிகளில் இம்முறையைக் கையாண்டுவிடக் கூடாது. மருந்துகள் அருந்தும் முன் பிருந்த நிலையை வைத்தியன் அறிந்துகொள்ள முடியா தாகையால், நோயின் குறிகளுக்கும் மருந்தின் குறிகளுக் கும் ஒத்த ஹோமியோ மருந்தை தெரிவு செய்து கொடுக் கவேண்டும். இல்லையெனில் நோயாளி உயிரிழக்க நே ரிடும். ஏனெனில் வேற்றுமையான குறிகளை உண்டு பண்ணும் மருந்துகளினால் உண்டாக்கப்பட்ட வியாதி யானது, இயற்கை வியாதியைவிட ஆபத்தானது.

93) சட்டெனத் தோன்றிய தீவிர வியாதியோ அல்லது நீடித்த நாள்கொண்ட ஒரு வியாதியோ, அதிசயிக்கத்தக்க காரணத்தால் உண்டானவையாயிருந்து, நோயாளியோ, அவன் நெருங்கியவரோ, இரகசியமாய் கேட்டும், காரணத்தைச் சொல்லாமலிருந்தால், வைத்தியன் அவனுடைய கூர்மையான புத்தியை உபயோகித்து, காரணத்தை தெரிந்துகொள்ள வேண்டும். விஷம் அருந்தல், தற்கொலேக்கு பிரயாசப்படல், தனக்குள் தானே சிற்றின்பம் அனுபவித்தல், சாதாரண அல்லது அசாதாரண விருப்பங்களே அடைய கெட்ட வழிகளே கடைப்பிடித்தல், கூடுதலான ஆகாரம் அருந்தல், கூடுதல் மதுபானம் அருந்தல், ஒத்துக்கொள்ளாத ஆகாரங்களே அருந்தல், மேக வியாதிகள், சோரு, காதலில் தோல்வி, பொருமை, இல்லற வாழ்க்கையில் தோல்வி, கோபம், துக்கம், ஜனனேந்திரிய உறுப்புகளின் செயலற்ற நிலே முதலியவை அதிசயிக்கத்தக்க அல்லது ஆச்சரியமான காரணங்கள்.

93) நோயாளியின் தொழில், பழக்க வழக்கங்கள், வீட்டில் நடத்தும் ஜீவியம் முதலியவற்றை அறிந்து, இவற்றின் மாறுதல்களினுல் உண்டான வியாதியா என்பதை புரிந்துகொள்ள வேண்டும். நாள்பட்ட வியாதிகளில் இதை அறிந்து, காரணத்தை அகற்றவேண்டியது முக்கியம். பெண்களின் கர்ப்ப நிலே, கர்ப்ப சிதைவு, மலட்டுத்தனம், மாதவிடாயின் தன்மை, வெள்ளே போதல் முதலியவற்றையும் அறிந்துகொள்ள வேண்டும்.

95) குறிகளின் முக்யத்துவங்களே நோயாளிகள் உணரமாட்டார்கள். நாள்பட்ட வியாதிகளில், பல வருடங்கள் அவர்கள் அனுபவித்து வரும் சிலகுறிகளே, வைத்தியனிடம் கூற உபயோகமற்றதெனக்கருதி, அவற்றைக் கூருமல் விட்டு விடுவர். எனவே, சிகிற்சையில் வெற்றி காணவேண்டுமாயின், வைத்தியன் எல்லாவிதக் குறிகளின் முக்யத்துவத்தையும் நோயாளிக்கு உணர்த்தி, அனுபவித்துவந்த, அனுபவித்து வரும் சகல குறிகளேயும் சேகரித்துக்கொள்ள வேண்டும்.

96) நரம்பு தளர்ச்சியுள்ள நோயாளிகள் கற்பனேக் குறிகளே கூறுவர். எனவே வைத்தியன், நோயாளி

தனது உணர்ச்சி கூடுதலால் வேண்டாவற்றையும் முக்கியமானக் குறிகளாக எடுத்துக்கூறுகிருஞ என்பதை கவனித்துக்கொள்ள வேண்டும். உணர்ச்சி கூடிய தன்மையும் ஓர் குறியே.

97) சிலர் முக்கியமானக் குறிகளேயும் முக்கியமற்றதெனக்கருதி, சரியாக கூருமல் விட்டு விடுவர்.

98) ஆகையால் வியாதிகளின் உண்மையான தன்மையைக் கண்டுகொள்ள. வைத்தியன் நோயாளியின் மனநிலே, பொறுமை, பொறுமையற்றிருத்தல் முதலியவற்றில் நல்ல அனுபவமுள்ளவஞயிருத்தல் அவசியம்.

99) தீவிர வியாதிகளில் குறிகளே அறிந்து கொள்வது எளிது. ஏனெனில் வியாதி ஆரம்பித்து குறுகிய சமயமே அல்லது நாட்களே கடந்திருக்குமாதலால், நோயாளியோ அவனுடைய பந்துக்களோ குறிகளே மறக்க முடியாது.

100) தோன்றிய நோய் தொற்று நோய் என்பதால், அதற்குள்ள மருந்தில் ஒன்றை உடனடி கொடுத்து விடக்கூடாது. ஒவ்வொரு நோயாளியின் குறிகளேயும், ஒரே வியாதியால் பீடிக்கப்பட்டிருந்தால் கூட, தனி தனியாக சேகரித்து, ஒவ்வொருவனிலும் காணப்படும் மொத்தக் குறிகளுக்கொத்த தனி மருந்தை கண்டுபிடிக்க வேண்டும். ஒரே நோய் என்பதால், யாவருக்கும் ஒரே மருந்து பயன்படாது, வியாதியின் பெயர் முக்கியமல்ல.

தொற்று நோய் = பலரை ஒரே சமயத்தில் தாக்கும் நோய் (Epidemic Disease)

101) தொற்று நோய் சிகிற்சையில், பலரை சிகிற்சை செய்த பின்பே வைத்தியன் மொத்தக்குறிகளே அறிந்துகொள்ளும் அனுபவம் அடையமுடியும். ஏனெனில் இவைகள் பல பிணிகளின் கூட்டு வியாதிகளாகும்.

102) பலரைத்தாக்கும் தொற்று நோயின் தன்மை பலரிடத்திலும் ஒன்ருயிருந்தாலும் சரீர தன்மைக்கேற்றவாறு, ஒவ்வொருவரிடமும் காணும், மொத்தக்குறிகளின் பிரகாரமே சிகிற்சை செய்யவேண்டும். சிலரிடத்

தில் காணும் முக்கிய குறிகள் வேறு சிலரிடத்தில் காணப் படமாட்டாது. எனவே ஒவ்வொரு நோயாளியின் குறி களையும், தனியாகக் கண்டுபிடித்தே சிகிற்சிக்கவேண்டும்.

103) இதைப்போலவே சோருவால் உண்டாக்கப் படும் நாள்பட்ட வியாதிகளிலும், இரு நோயாளிகளின் வியாதி ஒன்ருக இருந்தாலும், குறிகளை தனித்தனியாக வே சேகரிக்கவேண்டும். இங்ஙனம் தனித்தனியாக குறி களை கண்டுபிடித்து ஒவ்வொருவனுடைய மொத்தக் குறிகளுக்கும் ஒத்த சோருவின் எதிரான மருந்தை கொ டுப்பதே சரியான சிகிற்சையாகும்.

104) வியாதியின் குறிகள் சரியாக எழுதப்பட்டதும், சிகிற்சையின் கஷ்டமான பாகம் தீர்ந்துவிடுகிறது. அடுத்த கடமை குறிகளுக்கொத்த ஹோமியோபதி மருந் தை கண்டுபிடிப்பதுதான். மருந்து கொடுக்கப்பட்ட சில நாட்களுக்குப்பின் வைத்தியனின் அடுத்த வேலை, மாய்ந்துபோன குறிகளை கண்டுபிடிப்பதும், புதிதாய் குறி கள் தோன்றியிருந்தால் அவற்றை எழுதுவதுமே.

105) வைத்தியனல் கண்டுபிடிக்கப்படும் மருந்து, சுகமுள்ள ஒருவனுக்கு, சிகிற்சிக்கவேண்டிய வியாதி யின் குறிகளை உண்டுபண்ணக்கூடியதாய் இருக்க வேண்டும்.

106) தெரிந்துகொள்ளும் மருந்தின் குறிகள் செயற்கையாக, சுகமுள்ள ஒருவனில், இயற்கை வியாதி யின் குறிகளுக்கொத்ததாய், உண்டுபண்ணக்கூடியதாய் இருக்கவேண்டும்.

107) பல மருந்துகளை ஒன்றன்பின் ஒன்ருய் கொ டுப்பதினல், இயற்கைவியாதியும், மருந்தினல் உண்டாக் கப்படும் செயற்கை குறிகளும் ஒன்றுசேர்ந்து குழப்ப மான நிலையை உண்டுபண்ணுமேயன்றி, உண்மையான குறிகளை கண்டுபிடிக்க முடியாமல் ஆக்கிவிடும்.

108) மருந்துகள் சுகமுள்ளவனின் சரீரத்தில் என்ன குறிகளை உண்டுபண்ணுகிறதென்பதை கண்டு பிடிக்க, மருந்துகளை தனியாகவும், நடுத்தரமான அளவு களிலும் கொடுப்பதுதான் சரியான வழி.

109) மானிடவர்க்கத்தின் வியாதிகளை குணப்படுத்த, மிகஉயர்ந்த, நிச்சயமான ஹோமியோபதி முறையை முதலாவதாக பொறுமையோடு ஆராய்ந்து கண்டுபிடித்தவன் நானே. இம்முறையின் மகத்துவங்களை அறிந்தும் இதை பின்பற்ருமல், உபயோகமற்ற அலோபதி முறையை, ரண சிகிற்சையல்லாத வ்யாதிகளுக்கும் கையாளுபவர்களுக்கு என்னை பின்பற்றும் எனது பின்னேரே உகந்த பாடம் கற்பித்துக்கொடுப்பர்.

110) அஜாக்கிரதையினுலோ, அக்கிரமத்தினுலோ, குற்றம் செய்யும் நோக்கத்தோடோ, ஒருவனுக்கு மருந்துகள் கொடுக்கப்படும்பொழுது, மற்றவர்களால் கண்டுபிடிக்கப்பட்டு, எழுதிவைக்கப்பட்டிருந்த குறிகள், நானும் எனது மாணுக்கரும், மருந்தின் குறிகளை அறிந்துகொள்வதற்காக பரிட்சைகள் நடத்தும்போது அறிந்துகொண்ட குறிகளும் ஒன்ருகவே இருந்தது. ஆனுல் இங்ஙனம் குறிகளை, அதாவது விஷமருந்துகளால் உண்டாக்கப்படும் குறிகள் கூட மெட்டீரியா மெடிக்காவாகும் என்பதை குறிகளை எழுதிய மற்றவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

111) இவ்விதம் மருந்துகளின் குணப்படுத்தும் சக்தியை அறிந்துகொள்வதற்காக மற்றவர்களால் பல காலத்திற்கு முன்பே எழுதப்படாதவையாயினும், அக்குறிகள் சுகமுள்ளவர்களுக்கு அதே மருந்தால் பரீட்சையில் உண்டாக்கப்பட்ட குறிகளுக்கு ஒத்திருந்தது. இதிலிருந்து மருந்துகள் அவற்றின் சக்தியின்படி இயற்கையாக ஒரு நிரந்தர அல்லது நிலையான மார்க்கத்தையே சுகமுள்ளவர்களில் குறிகளையுண்டுபண்ண கடைபிடிக்கிறதென்பதையறிந்து கொள்ளலாம்.

112) மேலும் நமது முன்னேர் இவ்வித அபாய வஸ்துக்கள் கூடுதல் அளவில் அருந்தப்படும் பொழுது, ஆரம்பத்தில் காணப்பட்ட அனேக குறிகளுக்கு எதிரான பல குறிகள் இறுதியில் காணப்பட்டன என்று எழுதி வைத்துள்ளனர். இக்குறிகள் மருந்தின் ஆரம்ப தாக்குதலுக்கு, முக்கியத்துவம் என்னும்சக்தியால் உண்டாக்கப்பட்ட எதிர் தாக்குதலின் குறிகளேயாகும். (இரண்டாந்தர செய்கை). ஆனுல் மட்டான அளவில் மருந்துகள்

கொடுக்கப்படும் பொழுது இவைகள் காணப்படுவதில்லை. ஏனெனில் ஹோமியோ முறையால் முக்கியதத்துவமானது வியாதியை சுகப்படுத்துவதற்கு வேண்டிய சக்திக்கு கூடுதலாக தனது எதிர் தாக்குதலை நடத்துவதில்லை.

113) ஆனால் பிரமையுண்டாக்கும் மருந்துகள் (Narcotics) இச்சட்டத்திற்கு புறம்பானவை. அவைகள் அவற்றின் ஆரம்ப தாக்குதலினால் சரீர உணர்ச்சியையும், மனநிலை உணர்ச்சியையும் ஓரளவிற்கு மாற்றி வைத்தாலும், மத்திப அளவில் சுகமானவர்களில் அவை பரீட்சிக்கப்படும் பொழுது, அவற்றின் இரண்டாந்தர செய்கையிலும், மேற்கூறிய உணர்ச்சியற்றுப் போதலையே தூண்டுகிறது.

114) ஆனால் பிரமையுண்டாக்கும் மருந்துகளைத் தவிர இதர மருந்துகள் யாவும், சிறிய அளவில், சுகம் உள்ளவர்களுக்கு கொடுக்கப்பட்ட போது அவற்றின் ஆரம்பதாக்குதல் அல்லது முதல் செய்கையை மாத்திரம் வெளிப்படையாக காண்பிக்கின்றன. அதாவது சுகத்தை மாற்றி குறைந்த சமயத்திற்கோ அல்லது கூடுதல் சமயத்திற்கோ நீண்டிருக்கும் குறிகள் என்பதாகும்.

115) சில மருந்துகளின் ஆரம்ப செய்கையின் மூலம் உண்டாகும் பல குறிகள், பின்னால் தொடர்ந்து வரும் குறிகளுக்கு எதிரிடையானதும், அல்லது சில வகையிலாவது, புதிதாய் கூடுதலானதுமாய் இருப்பதை காணலாம். இது மருந்தின் தாக்குதலால் உண்டாக்கப்படும் தொடர்ந்த விளைவாகவோ (Consecutive effects) அல்லது முக்கிய தத்துவத்தின் எதிர்தாக்குதலால் உண்டாகும் விளைவாகவோ இருக்கலாம். இது ஆரம்ப செய்கையின் நிலைமையில் ஏற்படும் உக்கிரமான மாறுதலையே குறிக்கிறது. இதற்கு மாறி மாறி வரும் செய்கை என்று பெயர். (Alternative effect).

116) சில நோயாளிகளில் சில குறிகள் சில மருந்துகளால் மற்ற மருந்துகளைவிட அடிக்கடி உண்டாக்கப்படுகின்றன. சில குறிகள் அரிதாயும், சொற்ப நபர்

களிடத்தில் மாத்திரமே காணப்படுகிறது. இன்னும் சில குறிகள் மிக சொற்ப நபர்களிடத்தில் மாத்திரமே காணப் படுகிறது.

117) கடைசியில் கூறப்பட்ட நபர்கள் ஒரு தனிப் பட்ட சரீரத்தையுடையவர்களும், மற்றவர்களில் எந்த வித மாறுதலையும் உண்டு பண்ணுத சாதனங்கள், இவர் கள் நல்ல சுகம் அனுபவிப்பவராயிருந்தும், கூடுதலோ அல்லது குறைந்த அளவிலோ இவர்களை சுகவீனர் களாக்கும் சரீரமுடையவர்களும் ஆகும். ஆனுல் இவ்வித செய்கை ஒரு குறிப்பிட்ட நபர்களிடத்தில் காணப்பட வில்லையென்பது பார்வைக்கு காணும் ஓர் தோன்றல் மாத்திரமே. இப்பகுதியின் (117) ஆரம்பத்தில் கூறப் பட்ட தேக நிலைக்கு விசேஷமான அல்லது தனிப்பட்ட சரீரமென்று பெயர். சுருக்கமாகச் சொன்னுல் சுகவீன மாக மாறுதல், மருந்தின் செய்கையின் எவ்வித சக்தி யைக்கொண்டது அல்லது நோயாளியின் எத்தகைய தன்மையைப் பொறுத்தது என்பதை நாம் எங்ஙனம் ஒப்புக் கொண்டாலும், மேற்கூறிய தனிப்பட்ட சரீரங்கள் உடையவர்களில் காணப்படும் மாறுதல்கள் பூராவாக அவர்களுடைய சரீரநிலையை பொறுத்தது என்றுகூற முடியாது. இவ்வகையோரை மிக சொற்ப அளவிலேயே நாம் காணலாம். இவ்வித சரீரம் உள்ள நபர்களில் மாத்திரம், குறிகளையுண்டாக்கும் சாதனங்கள் பிறரிடத் திலும் அதே குறிகள் காணப்படும் பொழுது ஹோமி யோ முறையின்படி அவற்றை சுகப்படுத்தும் என்ற எண்ணத்தை உண்டு பண்ணுகிறது.

**குறிப்பு:** ரோஜா மலரின் வாசனை சிலரை மயங்கச் செய்யும். மாமிச தசைகளையும், நண்டுகளையும், சில வகை மீன்களை அருந்திய பின்பும், சில வகை மரங்கள் அல்லது செடிகள் முதலியவற்றின் இலைகளை தொட்ட பின்பும் சிலர் பயங்கர வியாதிகளினுல் பீடிக்கப்படுவர்.

118) ஒவ்வொரு மருந்தும் சரீரத்தில் உண்டாக்கும் சில தனிப்பட்ட குறிகள் வேறு எந்த மருந்தாலும் உண் டாக்க முடியாது. ஒவ்வொரு வகைச் செடியும், மற்ற செடிகளிலிருந்து அதன் தோற்றத்திலும், சுவையிலும்,

மணத்திலும் வேறுபாடுள்ளவையாயிருக்கிறது. இதைப் போல்தான் எல்லாவித உலோகங்களும், உப்புகளும் ஒன்றுக்கொன்று வேற்றுமையுள்ளவையாயிருக்கின்றன. சுகம் அனுபவிக்கும் மனிதனின் சரீரத்தில் ஒரு மருந்தால் உண்டாக்கப்படும் நிச்சயமான தனிப்பட்ட குறிகள் இதர சாதனங்களால் உண்டு பண்ண முடிகிறதில்லை.

119) இவ்விதமாகவே மருந்துகளும், குறிகளையுண்டு பண்ணும் அவற்றின் தன்மைகளும் அதன்மூலம் வியாதிகளை குணப்படுத்தும் தன்மையிலும் ஒன்றுக்கொன்று மாறுபாடுள்ளவையாய் இருக்கின்றன. சரீரத்தில் ஒரு சாதனத்தால் உண்டாக்கப்படும் நிச்சயமான தனிப்பட்ட குறி வேறொரு சாதனத்தால் உண்டாக்கப்பட முடிகிறதில்லை.

120) எனவே மருந்துகளை நாம் தனித்தனியாக பிரித்துக்கொள்ள வேண்டும். உயிரும் மரணமும், சுகமும், சுகவீனமும், மருந்துகளைப் பொறுத்ததே. ஆகையால் சுகமுள்ளவர்களில் கவலையாய் பரிட்சை செய்தே மருந்துகளின் குறிகளை அறிய முடியும். இவ்விதம், நாம் மனதையும், சரீரத்தையும் நிரந்தரமாக சுகப்படுத்தும் பெரிய வரமாகிய மருந்துகளை தப்பிதமின்றி உபயோகிக்க முடியும்.

121) மருந்துகளின் குறிகளை உணர்ந்து கொள்ள மிகவும் பலம் பொருந்திய சரீரம் உள்ளவர்களுக்குகூட நடுத்தரமான அளவு மருந்துபோதுமானது. சாதுவான, சக்தி குறைந்த மருந்துகளை கூடிய அளவில் கொடுத்து பரிட்சை செய்யவேண்டும். மிகவும் சக்தி குறைந்த மருந்துகளை, சுகம் அனுபவிப்பவர்களாகவும், ஆனால் மிருதுவானவர்களாகவும், எளிதில் கோபம் அடைபவர்களாவும், உணர்ச்சிகூடிய சரீரம் உள்ளவர்களாகவும் தெரிந்து பரிட்சிக்க வேண்டும்.

122) வரப்போகும் மனித சந்ததியின் க்ஷேமம் இக்கலையைப் பொறுத்திருப்பதால், நாம் தெரிந்துகொள்ளும் மருந்துகள் சரியாயும், சுத்தமாயும், கலப்பற்றதாயும், அவற்றின் முழு சக்தியோடு பரிட்சிக்கப்பட்டதாயும் இருக்க வேண்டும்.

123) ஒவ்வொரு மருந்தையும் அதன் சுத்தமான, இயற்கையான நிலையில் எடுத்துக் கொள்ளவேண்டும். சுதேச உற்பத்தியான (Indigenous) தாவரங்களிலிருந்து எடுக்கப்படும் சாறுகள், சிறிதளவு மதுசாரத்துடன் கலக்கப்பட்டு கெட்டுப்போகாமல் பாதுகாக்கப்படவேண்டும். வெளி நாடுகளில் இருந்து வரும் தாவரங்களை, பொடியாக்கி அல்லது மதுசார திராவகமாக தயாரித்து எடுப்பதற்கு முன், சிறிதளவு தண்ணீருடன் கலக்கப்படவேண்டும். உப்புகளும், கோந்துகளும், அவைகள் உபயோகப்படுத்தப்படும் தருணம் வரை தண்ணீரில் கலக்கப்படக்கூடாது. ஒரு செடியை அதன் உலர்ந்த நிலையில் மாத்திரமே அடையக்கூடுமாயின், அது இயற்கையாக சக்தியற்றதாயிருந்தால், அதை சிறியதாய் வெட்டி சுடுதண்ணீர் மூலம் அதன் சக்தியை வடித்தெடுத்துக் கொள்ளலாம். இவ்விதம் தயாரிக்கப்படும் சாறை, தயாரித்த உடனேயே சூடாய் இருக்கும் பொழுதே அருந்த வேண்டும். ஏனெனில் மதுசாரம் சேர்க்கப்படாமல், தாவரங்களிலிருந்து தயாரிக்கப்படும் சாறுகள், துரிதமாக புளித்து, கெட்டுப்போய் மருந்து சக்திகளை இழந்துவிடும்.

124) மருந்துகள் தனியாகவும் சுத்தமாகவும் கொடுக்கப்படவேண்டும். அவற்ருல் உண்டாக்கப்படும் உண்மையான குறிகளை நாம் அறிந்துகொள்ளவேண்டுமாயின் வேறு எந்தவிதமான சாதனங்களையும் சேர்க்காமலோ, அதே நாளில் வேறு ஏதேனும் மருந்து உபயோகிக்காமலோ, அடுத்து வரும் நாட்களில் மிக குறைந்த அளவில் ஏதும் மருந்துகள் உபயோகிக்கப்படுவதுமாய் மாத்திரம் இருக்க வேண்டும்.

125) பரிட்சை சமயம் பூராவும் மத்திபமான ஆகாரமே அருந்தவேண்டும். மசாலை, காய்கறிகள், தாவர சூப்புகள் முதலிய யாவும் தவிர்த்துக்கொள்ளவேண்டும். ஏனெனில் சமைக்கப்பட்ட பிறகுகூட இவற்றிற்கு மருந்து சக்தியுண்டு. உணர்ச்சி யூட்டும் பானங்களை அருந்தக்கூடாது.

**குறிப்பு:** பரீட்சிக்கப்படுபவர்கள் டீ, காப்பி, மது பானம் முதலியவை! அருந்ாதவர்களாயும் அல்லது

சில காலம், இவற்றை தவிர்த்தவர்களாயும் இருக்க வேண்டும்.

126) பரீட்சிக்கப்படுபவர்கள் பரீட்சை முடியும் வரை சோர்வை உண்டு பண்ணும் மனவேலைகளிலும், தேக வேலைகளிலும் ஈடுபடக்கூடாது. உணர்ச்சிகளையும், குறிகளையும் கவலையாய் அறிந்துகொள்வதற்காக எந்த வித அவசரவேலைகளாலும் அவர்களுடைய கவனத்தை மாற்றக்கூடாது.

127) ஆண்களைப் போல் பெண்களிலும் மருந்துகளை பரீட்சை செய்து ஜனனேந்திரிய உறுப்புகளில் எங்ஙனம் இருவகுப்பினரிலும் வேலைசெய்கிறதென்பதை அறிந்து கொள்ளவேண்டும்.

128) மருந்து சாதனங்கள் அவற்றின் தாய் அல்லது மூலபாகத்தில் பரீட்சிக்கப்படும் பொழுது அவற்றின் முழுசக்தியையும் வெளிப்படுத்துவதில்லை. ஆனால் அவைகள் வீரியம் கொடுக்கப்பட்டு பரீட்சிக்கப்பட்டால் அவற்றின் முழுசக்தியையும் வெளிப்படுத்துகின்றன. இங்ஙனம் சக்தி குறைந்தவை என்று கருதப்படும் மருந்துகள் கூட வீரியம் கொடுக்கப்பட்டால் மிக சக்தி வாய்ந்தனவாக மாறுகின்றன. முப்பது வீரியம் வரை உயர்த்தப்பட்ட ஒரு மருந்தை அதனால் நனைக்கப்பட்ட நாலைந்து சர்க்கரை குளிகைகளை தண்ணீரில் கரைத்து வெறும் வயிற்றில் காலையில் கொடுத்து பலநாள் தொடுத்து பரீட்சை செய்யவேண்டும்.

129) ஒரே அளவில் கொடுக்கப்படும் ஒரு மருந்து பலரையும் ஒரே சமமான சக்தியாய் தாக்குவதில்லையாகையால், கொடுக்கப்படும் மருந்தின் அளவு குறைவென்று தோன்றினால், நாள்தோறும் மருந்தின் அளவை சிறிது கூட்டி, சரீரத்தில் அதன் முழு சக்தியோடு வேலை செய்யவைத்து பரீட்சை செய்யவேண்டும். சில சமயங்களில் ஒரு குறிப்பிட்ட மருந்து மிருதுவான ஒருவனில்கூட எந்தவித செய்கையையும் உண்டுபண்ணுவதில்லை. ஆனால் அதே சமயத்தில் அதைவிட சக்தி குறைந்த மருந்துகள் அனுமதிக்கத்தக்க அளவில் அவனில் வேலை செய்யும். இதே மாதிரி மிகவும் பலத்த

சரீரமுள்ளவர்களும், சில சமயங்களில் சக்திகூடிய மருந்துகளால் யாதொரு மாறுதலையும் காணுமல், சக்தி குறைந்த மருந்துகளால் முழுமையாக தாக்கப்படுவர். ஆனல் இவற்றையெல்லாம் பரீட்சைக்கு முன்பே அறிந்து கொள்ள முடியாததால் குறைந்த அளவு மருந்தில் பரீட்சையை ஆரம்பித்து அவசியத்திற்குதக்க பின்பு அளவை தினசரி கூட்டிக்கொள்ள வேண்டும்.

130) முதல் பொழுது மருந்திலேயே உண்டாக்கப் படும் தாக்குதல் போதிய சக்திகூடியதாயிருந்தால், பரீட்சிக்கப்படுபவன் ஆரம்ப தாக்குதலின் குறிகளையும், தொடர்ந்து உண்டாகும், மாறி மாறி வரும் குறிகளையும், தோன்றிய உடனே சரியாய் எழுதிக்கொள்ள முடியும். இவர்கள் பரீட்சைக்கு மிகவும் பிரயோஜனமுள்ளவர்கள். உணர்ச்சிகூடிய சரீரமுள்ள ஒருவனுக்கு அவன் அடையும் மாறுதல்களை கவனமாய் சேகரிக்க முடியுமாயின் ஒரு பொழுது மருந்து போதுமானது. ஒரு மருந்தின் செய்கை எவ்வளவு நாள் நீடித்திருக்குமென்பதை பல பரீட்சைகளின் மூலம் மாத்திரமே அறிய முடியும்.

131) மருந்துகளின் குறைந்த அளவு தன்மையை யாவது அறிந்துகொள்வதற்காக பலநாட்கள் தொடர்ந்து மருந்தை கூட்டி கூட்டிக்கொடுக்க வேண்டியது வருமாயின் பொதுவாக இம்மருந்து என்ன மாறுதல்களை உண்டு பண்ணும் என்பதை அறிந்து கொள்ளலாம். ஆனல் குறிகள் தோன்றும் வரிசை கிரமத்தை நாம் அறிந்து கொள்ள முடிகிறதில்லை. திரும்பவும் கொடுக்கப் படும் மருந்து, முன்புதோன்றிய குறிகளில் ஒருபகுதியை அழிக்கவோ அல்லது அதற்குப் பதில் விரோதமான குறிகளையோ உண்டுபண்ணி விடும். இவ்வித குறிகளை இரு அர்த்தம் உள்ளவை என பிரத்தியேக அடையாளங்களுடன் பதிவு செய்து, சுத்தமான பல பரீட்சைகளின் பின் முக்கிய தத்துவத்தின் எதிர்தாக்குதலால் உண்டானவையா அல்லது மருந்தின் மாறி மாறி வரும் செய்கையினுல் உண்டானவையா என்று கண்டு பிடிக்க வேண்டும்.

132) ஆனல் சக்தி குறைந்த ஒருமருந்தின் குறிகளை மாத்திரம் அறிந்தால் போதுமாயினும், குறிகள் தோன்

றும் வரிசையைப்பற்றி கவலையில்லை என்றாலும், அல்லது மருந்தின் தாக்குதல் நீடித்திருக்கும் நாட்கள், அவசிய மில்லையென்றாலும், தினசரி மருந்தின் அளவை கூட்டி பலநாள் தொடுத்துக்கொடுத்து பரீட்சை செய்யலாம். இம்முறையின் மூலம் மிகவும் சக்தி குறைந்த மருந்து களைக்கூட வளர்ச்சி கூடிய சரீரம் உள்ளவர்களில் பரிட்சை செய்து குறிகளை அறிந்து கொள்ளலாம்.

133) பரீட்சிக்கப்படுபவன் மருந்தின் செய்கையின் மூலம், ஏதும் அசௌகரியத்தை உணர்வானானால், பல விதமாக தொடர்ந்து இருந்தும், படுத்தும், ஏதும் மாறு தல்கள் உண்டாகிறதா என்பதை கவனித்து குறிகளை நிச்சயம் செய்துகொள்ளவேண்டும். இவ்விதம் செய்வ தின் மூலம், தாக்கப்பட்ட பாகங்கள் நடக்கும் பொழுதோ, வெளிக்காற்றில் உலாவும் பொழுதோ, உட்கார்ந்திருக் கும் பொழுதோ, படுத்திருக்கும் பொழுதோ, அல்லது எழுந்து நிற்கும் பொழுதோ, கூடுகிறதா, குறைகிறதா அல்லது மாய்ந்து போகிறதா என்றும், ஆரம்பத்தில் அவன் அமர்ந்திருந்த நிலைக்கு திரும்பவும் வரும்பொ ழுது குறிகள் திரும்பவும் வருகிறதா இல்லையா என்றும் அறிந்து கொள்ளலாம். ஆகாரம் அருந்தும் பொழுதோ, தண்ணீர் குடிக்கும் பொழுதோ, பேசும் பொழுதோ இருமல் எடுக்கும் பொழுதோ தும்மும் பொழுதோ அல்லது வேறு எந்த நிலையிலாவதோ, தேக அசைவி னாலோ குறிகள் மாறுபடுகின்றனவா என்றும் கண்டு கொள்ளவேண்டும். பகலிலும் இரவிலும் எந்தெந்த குறித்த நேரங்களில், குறிகள் கூடுதலாய் தோன்று கின்றன என்ற எல்லா விபரங்களையும் இங்ஙனம் கவலையாய் சேகரிப்பதின் மூலம், குறிகளில் எவை தனிப் பட்டவை, எவை முக்கியமானவை என்பதையெல்லாம் சரியாய் அறிந்து கொள்ளலாம்.

134) ஒரு நபரில் செய்யும் ஒரு பரீட்சையின் மூலம் மருந்துகள் சரீரத்திலும் அதனை இயங்கச் செய்யும் முக்கிய தத்துவத்திலும் ஏற்படுத்தும் மாறுதல்களை புரிந்து கொள்ள முடியாது. ஒவ்வொரு தடவை செய் யப்படும் பரீட்சையிலும், ஒரே நபர் சில மாறுதல்களை யும், வேறு சிலர், வேறு மாறுதல்களையும் அனுபவிப்பர்.

குறிகளும் ஆரம்பத்தில் செய்த பரீட்சையில் திரும்பத் தோன்றிய அதே நேரத்தில் பின்னுல் செய்யப்படும் பரீட்சைகளில் தோன்றுவதில்லே.

135) பற்பல சரீரங்களேயுடைய சிலரிடத்தில் (ஆண்களும், பெண்களும்) பல பரீட்சைகள் செய்த பின்பே ஒரு மருந்து உண்டு பண்ணும் மாறுதல்களே உண்மையாய் அறிந்து கொள்ள முடியும். பரீட்சைகளின் மூலம் தெரிந்து கொள்ளப்பட்ட குறிகளில் யாதொரு மாறுதல் இல்லாமலோ, அல்லது சொற்ப மாறுதல் மாத்திரமே திரும்பவும், திரும்பவும் செய்யப்படும் பரீட்சைகளில் தோன்றி முன்பு தெரிந்து கொள்ளப்படட குறிகள் யாவும் மாத்திரம் திரும்பவும் காணப்படுமாயின் அதுவே மருந்து சரியாய் பரீட்சிக்கப்பட்டு விட்டதென்பதை குறிக்கும்.

136) சுகமுள்ளவர்களில் பரீட்சிக்கப்படும் மருந்து ஒரு தனி நபரில் தனது எல்லா குறிகளேயும் உண்டு பண்ண முடிகிறதில்லே. பற்பல மனநிலேயும் சரீரங்களேயுமுடைய பலரில் பரீட்சிக்கப்படும் பொழுதே அதன் பூரா குறிகளேயும் அறிந்து கொள்ளலாம். ஆனுல் இயற்கையானது இம்மருந்துகளுக்கு ஒவ்வொருவரிடத்திலும் குறிகளே உண்டுபண்ணத்தக்க சக்தியை அளித்திருக்கிறது. அபூர்வமாகவே, சுகமுள்ளவர்களில் உண்டு பண்ணப்படும் குறிகள்கூட அதே குறிகளுடன் நோயாளியாயிருக்கும் ஒருவனுக்கு கொடுக்கப்படும்பொழுது அக்குறிகளே உண்டுபண்ண தவறுவதில்லே. ஹோமியோ முறையில் தெரிவு செய்யப்பட்ட மருந்தானது எவ்வளவு சிறிய அளவில் கொடுக்கப்பட்டபொழுதும் இயற்கை வியாதிக்கொத்த ஒரு செயற்கை நிலேயை உண்டுபண்ணி வியாதியை பூரணமாக குணமாக்கி விடுகிறது.

137) குறிப்பிட்ட அளவிற்கு மேல் போகாமல் எவ்வளவுக்கெவ்வளவு மருந்தை மத்திய அளவில் கொடுக்கிருேமோ அதன் ஆரம்ப செய்கையும் அதற்கொத்ததாயிருக்கும். இதை அறிய வேண்டியது மிக முக்கியம். எதிர்தாக்குதலே அறிந்து கொள்ள முடிகிறதில்லே. பரீட்சைக்காக தெரிந்து கொள்ளப்படுபவன் உண்மை பேசுபவனுயும், மன, சரீர நிலேகளில் உணர்ச்சி கூடியவ

னையும், தன்னை மிகவும் கவலையாய் பாதுகாத்து கொள்பவனையும் இருத்தல் அவசியம். ஆனால் மருந்தைக் கூட்டி கொடுப்போமாயின் எதிர்தாக்குதல் கூடுதல் தடவை இருப்பது மாத்திரமின்றி, ஆரம்பதாக்குதலும், தீவிரமாயும், குழப்பமுடையதாயும், கூடுதலாயுணரக் கூடியதுமாயிருந்து சரியானபடி குறிகளை அறிந்து கொள்ள முடியாமலாக்கி விடும். மேலும் இம்முறை ஆபத்தை விளைவிக்குமாதலால் பிறரை மனிதன் என மதிப்பவன் இம்முறை பரீட்சையை கையாளமாட்டான்.

138) சுத்தமான பரீட்சைக்காக 124 முதல் 127 வரை கூறப்பட்ட எல்லா நிபந்தனைகளும் சரியாக கையாளப்பட்ட பின் மருந்து வேலை செய்யும்பொழுது உண்டாகும் குறிகளும் மாறுபாடுகளும் சுகத்தின் மாறுதல்களும் கொடுக்கப்பட்ட சாதனத்தை மாத்திரம் பொறுத்தவையாதலால், தோன்றும் குறிகள் பரீட்சிக்கப் படுபவனால் தானாகவே தோன்றி நீடித்த காலத்திற்கு முன்பே அனுபவிக்கப்பட்டவையாயினும் இச்சாதனத்தை சார்ந்ததென்றே குறிக்கப்படவேண்டும். பரீட்சை சமயத்தில் இவைகள் திரும்பவும் தோன்றுவது அவனுடைய சுத்தமான சரீரத்தின் தன்மையின் நிமித்தம் அவனுக்கு இக்குறிகள் தோன்றும் தன்மையுண்டு என்பதை நிரூபிக்கிறது. இச்சந்தர்ப்பத்தில் இது மருந்தின் செய்கையையேயன்றி ஒரு மருந்து சரீரத்தில் தன்தாக்குதலை செய்துகொண்டிருக்கும் பொழுது இக்குறிகள் தானாகவே தோன்றியவை என்று கூறமுடியாது.

139) வைத்தியன் தன் சரீரத்திலல்லாமல் வேறு ஒருவரிடத்தில் இப்பரீட்சையை நடத்தும்பொழுது அந்நபர் அனுபவிக்கும் உணர்ச்சிகளையும், அசௌகரியங்களையும், குறிகளையும், மாறுதல்களையும், தீவிர கிரகண சக்தியோடு எழுதிக்கொள்ள வேண்டும். மருந்துகொடுக்கப்பட்ட எவ்வளவு சமயத்திற்குப்பின் ஒவ்வொரு குறியும் தோன்றியதென்றும், அக்குறிகள் நீடித்த நேரம் தங்கியிருந்தால் அந்நேரம் எவ்வளவு என்பதையும் சொல்லக்கூடியவனாயிருத்தல் அவசியம். பரீட்சை முடிந்ததும் பரீட்சிக்கப்பட்டவன் முன்னிலையிலேயே வைத்தியன் அவன் அளித்த விவரங்களை வாசிக்கவேண்டும்.

பரீட்சை பலநாட்கள் நீடிப்பதாயிருந்தால் ஒவ்வொரு நாளும், விபரங்களை அவனுக்கு படித்து காட்டவேண்டும். இங்ஙனம் செய்வதால் அவன் ஞாபகமூட்டப்பட்டு குறிகளின் கூடுதல் விபரங்கள் பற்றி கேட்கப்படும் கேள்விகளுக்கு சரியாய் பதில் கூற முடிவதுமின்றி கூடுதல் விபரங்களையும், திருத்தங்களையும் கூறமுடியும்.

140) அந்நபர் எழுதத் தெரியாதவராயின், அவனுடைய உணர்ச்சிகளை அறிந்துகொள்ள வைத்தியன் தினமும் அவனை விசாரணை செய்துகொள்ளவேண்டும். ஆனால் கூடியமட்டும் அவன் சொல்வதற்கே முக்யத்துவம் கொடுக்கவேண்டும். உத்தேசங்களுக்கும், எண்ணங்களுக்கும் இடம் கொடுக்காமல், வைத்தியன் வியாதியின் குறிகளை சேகரிக்க என்னென்னவிதிகளை கையாளவேண்டுமோ, (84 *to* 99) அதேபோல் இச்சந்தர்ப்பத்திலும் மிக குறைவாக அவசியமான கேள்விகளையேகேட்கவேண்டும்.

141) கலப்பற்ற மருந்துகளின் குணங்களை கண்டு பிடிக்க வைத்தியன் சுகமுள்ளவனுயிருப்பின், தன் தேகத்திலேயே பரீட்சையை நடத்துவது நல்லது. தன்னிலேயே பரீட்சிப்பதுதான் மிக உண்மையான மார்க்கம்.

**குறிப்பு:** வைத்தியர்களே உணர்ச்சிகளையும், குறிகளையும், சரியாய் எடுத்துக்கூற முடியுமாதலால் தங்கள் தேகத்திலேயே பரீட்சையை நடத்துவது நல்லது.

142) பூர்வ அல்லது ஆதியான நாள்பட்ட வியாதியின் குறிகளுக்கொத்த குறிகளை ஒரு கலப்பற்ற மருந்து உண்டு பண்ணும் பொழுது, அவைகளை எப்படி வித்தியாசப்படுத்தி தெரிவு செய்வது என்பதை நுணுக்கமான உயர்ந்த அறிவினுல் தான் முடியுமாகையால், அப்பரீட்சைகளை விவேகமான பரீட்சையாளர்களுக்கு விட்டுவிடவேண்டும்.

143) இவ்விதம் பல கலப்பற்ற மருந்துகளை சுகமான சரீரத்தில் கவலையாக பரீட்சை செய்து அவைகளால் உண்டு பண்ணப்படும் குறிகளை எழுதி எடுத்தே மெட்டீரியா மெடிக்கா தயாரிக்க முடியும். இங்ஙனம் தயாரிக்கும் குறிகளில் இருந்து, இயற்கை வியாதிகளின்

குறிகளுக்கு ஒத்ததும், அவற்றைக் குணப்படுத்துவது மான ஹோமியோபதி மருந்தை தெரிவு செய்ய முடியும். அதாவது இயற்கை வியாதியை ஒத்த செயற்கை வியாதியை உண்டு பண்ணும் மருந்துகள் என்பதே.

144) இங்ஙனம் தயாரிக்கப்படும் மெட்டீரியா மெடிக்கா, உத்தேசக் குறிகள், கற்பனை குறிகள், முதலிய குறிகள் கலக்கப்படாமலும், சுத்த இயற்கையான குறிகளையும், கவலையான பரீட்சையின் விளைவின் குறிகளுமாக இருக்கும்.

145) மனிதனை தாக்கும் பலவித நோய்களைப்போல், செயற்கையாக அதே குறிகளை சுகமான சரீரத்தில் உண்டுபண்ணும் பற்பல மருந்துகளின் உண்மையான தாக்குதலை ஹோமியோ சிகிற்சைக்கு நாம் அறிந்திருக்க வேண்டும், ஆனால் ஏகதேசம் எல்லா வியாதிகளையும் குணப்படுத்த வல்லமையுள்ள ஹோமியோ மருந்துகள் பரீட்சிக்கப்பட்டு விட்டதால் உண்மையான அக்குறிகளுக்கு (இயற்கைக்கு) நாம் நன்றியுள்ளவர்களாய் இருக்கிறோம். இம்மருந்துகள்தான் நிரந்தரமாகவும், உண்மையாகவும் வியாதிகளை குணப்படுத்தும். அலோபதி மருந்துகளால் நாள்பட்ட வியாதிகள் குணப்படுத்த படுவதிற்கு பதில் அதிகரிக்கப்படுகிறதைவிட, எத்தனையோ அதிகப்படியான வியாதிகள் ஹோமியோ முறையில் அபாயமின்றியும் நிச்சயமாகவும் குணப்படுத்தப் படுகின்றன

**குறிப்பு:** இப்பரீட்சைகளை முதல் முதலாவதாக செய்தவன் நானே எனினும், வரவிருக்கும் எத்தனையோ மற்றவர்களின் உண்மையான பரீட்சைகளின் மூலம் எல்லா வியாதிகளையும் சுகப்படுத்தும் வல்லமை அடையும் பொழுது இம்முறை கணித சாஸ்திரத்திற்கு ஒத்தாற் போல் நிச்சயமாகி விடும்.

146) பரீட்சையின் மூலம் அவற்றின் சுத்தமான செய்கைகளை நிரூபிக்கப்பட்ட மருந்துகளையே, இயற்கை வியாதிகளை குணப்படுத்த ஹோமியோ முறையில் கையாளவேண்டும்.

147) எல்லா மருந்துகளிலும் எந்த மருந்து வியாதியின் மொத்தக் குறிகளுக்கு, அதாவது விசேஷித்த குறிகளுக்கும், தனித்த குறிகளுக்கும் (Characterstic and Particular Symptoms) பொருந்தியிருக்கிறதோ அதைத்தான் கையாள வேண்டும். அது தான் கைகண்ட மருந்தாகும்.

148) இங்ஙனம் குறிகளுக்கொத்த ஒரு மருந்து சரியான அளவில் கொடுக்கப்படும் பொழுது இயற்கை வியாதி சரீரத்தின் எந்தெந்த பாகங்களில், என்னென்ன குறிகளை உண்டுபண்ணியிருக்கிறதோ, அதே போன்ற குறிகளை அப்பாகங்களில் இம்மருந்தும் அதன் தன்மையால் செயற்கையாக உண்டுபண்ணுகிறது. ஆனல் செயற்கை வியாதி சக்தி கூடுதல் உள்ளதாகையால் இயற்கை வியாதிக்கு பதிலாக அது அமைந்து கொள்ளுகிறது. இந்நிலை ஏற்பட்ட சமயத்திலிருந்து உயிரென்னும் சக்தியானது இயற்கை வியாதியினல் அவஸ்தைப் படுவதில்லை. இப்பொழுது இருப்பது மருந்தினல் உண்டாக்கப்பட்ட வியாதி மாத்திரமே ஆனல் கொடுக்கப் பட்ட மருந்தின் அளவு மிகக் குறைவானதால் மருந்தினல் உண்டாக்கப்பட்ட வியாதி தானகவே சீக்கிரம் மறைந்து விடுகிறது. இங்ஙனம் சரீரம் உண்மையான நிரந்தர சுகத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

149) தீவிர வியாதிகள் எவ்வளவு வேதனையை கொடுப்பதாயினும் அல்லது எவ்வளவு கெடுதல் செய்கிறவையாயினும், அடுத்து வந்ததாயின் சில மணிநேரத்திலும், சிறிது நாட்கள் ஆனதாயின் ஒன்றிரண்டு நாட்களிலும் குணமடைந்து விடுகிறது. மருந்தினல் உண்டாக்கப்பட்ட வியாதியின் எந்தக்குறியும் சரீரத்தில் காணப்படுவதில்லை. சுகம் விரைவாகவும், உணரக்கூடாத மாறுதலினலும் திரும்ப பெறப்படுகிறது. நீடித்த நாள் வியாதிகளுக்கும், சிக்கலான வியாதிகளுக்கும், நீடித்த சிகிற்சை தேவை. அதிலும் அலோபதி மருந்துகளால் செயற்கை வியாதியும் உண்டு பண்ணப்பட்ட இடங்களில் அதிக நாள் சிகிற்சை தேவை. அதிகமாக அவை சுகப்படுவது கடினம். ஏனெனில் சரீர பலம் அம்மருந்துகளால் குன்றிப்போயிருக்கும்.

150) ஒரு நோயாளி திடீரென சில புதுக் குறிகள் தோன்றியிருக்கிறதென்று சரியான மருந்து கொடுக்கப் பட்டபின் கூறுவானாயின், அதற்காக வேறு மருந்து கொடுக்க தேவைஇல்லை. இவ்வித முக்கியமற்ற மாறுதல் கள் ஆகாரத்தையும், வாழ்க்கை நிலையையும் மாற்றி அமைப்பதால் சரியாகிவிடும்.

151) ஆனால் இக்குறிகள் மிகவும் தீவிரமாய் இருப்பின் நோயாளியை கவலையாய் சிகிற்சிக்கும் வைத் தியன், முன்னேற்றமடையாத அல்லது தீவிரமாய் தோன்றாத வேறு பல குறிகளையும் நோயாளியில் கண்டு கொள்வான். இங்ஙனம் கவலையாய் நோயாளியை சிகிற் சிப்பதின் மூலம், வியாதியின் உண்மையான சரியான தோற்றத்தை அறிந்து கொள்ளலாம்.

152) தீவிர வியாதி எவ்வளவு கூடுதலாய் அல்லது அகோரமாய் இருக்கிறதோ அதற்குத் தக்க அதன் குறி களும் அதிகமானவையாகவும், எளிதில் கண்டு கொள் ளத்தக்கதாகவும் இருக்கும். எனவே, தேகத்தில் பரீட் சிக்கப்பட்ட பல மருந்துகள் இருக்குமாயின், சரியான மருந்துகளை குறிகளுக்கொத்தாற்போல் தெரிவு செய் வது சுலபமாயிருக்கும்.

153) சரியான ஹோமியோபதி மருந்தை கண்டு பிடிப்பதற்கு, ஆச்சரியமான, அபூர்வமான, அசாதாரண மான, விசேஷமான குறிகளுக்கு முக்கியத்துவம்கொடுக்க வேண்டும். (Striking, Singular, Extra Ordinary and Peculiar). ஆனால் பொதுவான பசியின்மை, தலை வலி, பலவீனம், உறக்கமின்மை, ஆறுதல் அற்றிருத் தல் முதலியவற்றிற்கு விசேஷித்த கவனம் கொடுக்க வேண்டியதில்லை. ஏனெனில் இவைகள் பொதுவாக எல்லா மருந்துகளின் குறிகளிலும் காணப்படும்.

154) இதரக் குறிகளுக்கு விரோதமானதாயிருந்தா லும், நோயாளியின் ஆச்சரியமான, அசாதாரணமான, அபூர்வமான விசேஷமான குறிகளை கவரும் மருந்து தான் மிக பொருத்தமான மருந்தாகும். அதிக நாள் படாத வியாதியாயின், இம்மருந்தின் முதல் வேளை மருந்தினாலேயே மிக கஷ்டமின்றி வியாதி குணமடைய ஆரம்பித்துவிடும்.

155) மிக கஷ்டமின்றி என்று நான் ஏன் கூறுகின்றேன் என்ருல், சரீரத்தில் ஹோமியோபதி மருந்து வேலே செய்யும் பொழுது விரட்ட வேண்டிய வியாதியின் இடத்தில், இம்மருந்திஞல் உண்டாக்கப்படும் அதே குறிகள் வியாதியின் குறிகளுக்கு பதிலாக அமர்ந்து விடுகின்றன. மருந்திஞல் உண்டாக்கப்படும் இதர குறிகள் அதிகமானவையாயும், வியாதியின் குறிகளுக்கு பொருந்துவதாய் இல்லாமல் இருந்தாலும்கூட, அவைகள் காணப்படாமல் நோயாளி விரைவாய் குணமடைகிருன். ஏனெனில் ஹோமியோ முறையில் கொடுக்கப்படும் மருந்துகளின் அளவு மிகவும் சக்தி கூடினதாய் இல்லாமல் இருப்பதால், இம்மருந்துகளுக்கு வியாதியின்றி இருக்கும் சரீரத்தின் பாகங்களில் வேற்றுமையான செய்கைகளே உண்டுபண்ண சக்தி கிடையாது. ஆஞல் இயற்கை வியாதியிஞல் பாதிக்கப்பட்டிருக்கும் பாகங்களில் சக்தி கூடிய அதே குறிகளே உண்டுபண்ணி அவற்றை அழித்து விடுகிறது.

156) மிகவும் உணர்ச்சி கூடிய, முற்கோபமுடைய நோயாளிகளில், சரியாய் தெரிவு செய்யப்பட்ட ஹோமியோ மருந்துகூட, கூடுதல் குறிகளேயும், இலகுவான அசௌகரியங்களேயும் உண்டுபண்ணும். ஆஞல் அவை முக்கிய தத்துவத்தின் சக்தியால் எளிதில் மாற்றப்படுவதாயும், சீக்கிரம் கடந்து போவதாயும் இருப்பதால், அவை முக்கியமற்றதும், மிகவும் பலனற்றவஞய் இருந்தாலொழிய, நோயாளியால் கண்டு கொள்ள அல்லது உணர்ந்துகொள்ள முடியாததுமாய் இருக்கின்றன. இதர மருந்துகளே அருந்தாமலும், ஜீவித ஒழுங்குகளே அனுசரித்தும், ஆவல்களுக்கு இடம் கொடுக்காமலும் இருந்தால் சுகமடைதல் துரிதமாய் முன்னேறும்.

157) தீவிர வியாதிகள், கொடுக்கப்படும் சிறிதளவு ஹோமியோபதி மருந்துகளால் எந்தவித ஹோமியோ முறையல்லாத குறிகளே உண்டுபண்ணுமல் குணப்படுத்தப்படுகிறது எனினும், மருந்தின் அளவுக்கு தக்க, கொடுக்கப்பட்ட, ஒன்றிரண்டு மணி நேரங்களுக்குபின் மருந்தின் ஆரம்ப செய்கையிஞல் வியாதியின் குறிகள் அனுகூலமற்றதாய் தோன்றுவதால், வியாதி அதிகப்

பட்டு விட்டது என்று நோயாளிக்கு தோன்றலாம். ஆனால் உண்மையில் இது மருந்தினல் உண்டாக்கப் பட்ட ஒரு வியாதியே.

158) இங்ஙனம் ஏற்படும் அதிகப்படுதலானது, சக்தி கூடிய மருந்தின் செயற்கை வியாதியினல் உண்டாக்கப்படுவதும், மேலும், ஒரு நல்ல அடையாளமுமாகும். ஏனெனில் தீவிர வியாதி சீக்கிரம் குணமடைந்து விடும் என்று நிச்சயமாக நம்பலாம். ஒரு சக்தி வாய்ந்த இயற்கை வியாதியானது அதைப்போன்ற ஆனல் சக்தி குறைவான இன்னொரு வியாதியை அழித்து விடும் என்று கண்டு பிடிக்கப்பட்டிருப்பதை இதற்கு ஒப்பிடலாம். (43—48)

159) ஹோமியோபதி மருந்தின் அளவு எவ்வளவுக்கெவ்வளவு குறைவாய் இருக்கிறதோ, அதைப் போல் வியாதியின் அதிகப்படும் தன்மையும் குறைவாயும், குறைந்த சமயம் இருப்பதாயும் இருக்கும்.

160) மருந்து மிகவும் குறைந்த அளவில் கொடுக்கப்பட்டால் அன்றி, அடுத்து தோன்றிய தீவிர வியாதிகளில், மருந்து கொடுக்கப்பட்ட ஒரு மணி சமயத்திற்குள் நிச்சயமாக அதிகப்படல் ஏற்படும். ஏனெனில் அடுத்து வந்த தீவிர இயற்கை வியாதிகளில், வித்தியாசம் உண்டு பண்ணதகாத விதத்திற்கு, ஒத்துக்கொள்ளும் ஹோமியோபதி மருந்தின் அளவைக் குறைப்பது மிக மிக கடினம்.

161) அதிகப்படல், முதல் மணி சமயத்திற்குள் ஏற்படும் என்று நான் கூறுவது, அடுத்து தோன்றிய தீவிர வியாதிகளுக்கு மாத்திரமே. ஆனல் சிறிது நாட்களோ அல்லது நீடித்த நாட்களோ இருந்த ஒரு வியாதிக்கு, மருந்தின் செய்கை தொடுத்து பலநாட்கள் இருப்பதால். முதல் ஆறு, எட்டு அல்லது பத்து தினங்களுக்குள் வியாதி வேளா வேளைகளில் அதிகப்படவும், இதர வேளைகளில் குறையவும் செய்யவும். இந்நாட்கள் கழிந்த பிறகு உண்டாகும் குறைதல் சில நாட்களுக்கு இன்னும் நீடித்திருக்கும். நீடித்த நாட்கள் வேலை செய்யும் மருந்துகளின் செய்கைகூட தீவிர வியாதிகளில்

துரிதமாய் மறைந்து போனாலும், சோருவினால் உண்டாக்கப்படும் நாள்பட்ட வியாதிகளில் கூடுதல் நாட்கள் நீடித்திருக்கும். எனவே சோருவுக்கு விரோதமாய் கொடுக்கப்படும் மருந்துகள், முதல் மணி நேரங்களில் இவ்வித அதிகப்படுத்துதலை உண்டுபண்ணாமல், முதல் எட்டு அல்லது பத்து தினங்களுக்குள் உண்டு பண்ணுகின்றன.

162) சுத்தமான சரியான செய்கைகளை கண்டு பிடிக்கப்பட்டிருக்கும் மருந்துகள் மிதமானவை. ஆகையால், சில சமயங்களில், தெரிந்து கொள்ளப்படும் மருந்து, குறிகளின் ஒரு பகுதியையே கவருவதாய் இருக்கும். எனவே வேறு சரியான மருந்து இல்லாததின் நிமித்தம் இம்மருந்தையே உபயோகப்படுத்தவேண்டியதாய் இருக்கிறது.

163) இந்நிலையில் சரியான சுகத்தை எவ்வித அசௌகரியங்களுமின்றி எதிர்பார்க்க முடியாது. புதுக் குறிகள் தோன்றலாம். இது சரியற்ற ஹோமியோபதி மருந்தினால் உண்டு பண்ணப்படுபவையாகும். ஆனால் மருந்தினால் உண்டாக்கப்படும் குறிகளுக்கு ஒத்த இயற்கை வியாதியின் குறிகளை இது அழிக்க தவறுவதில்லை.

164) சரியாய் தெரிவு செய்யப்பட்ட ஹோமியோபதி மருந்து மிக குறைவான குறிகளையே கவருவதாய் இருப்பினும், அக்குறிகள் அசாதாரணமானவையும், வியாதியின் விசேஷக்குறிகளுமாயிருப்பின், யாதொரு அசௌகரியமுமின்றி சுகம் ஏற்படும்.

165) ஆனால் முக்கிய குறிகளை கவராமல், குமட்டல் தலைவலி முதலிய முக்கியமற்ற குறிகளை கவரும் ஹோமியோ மருந்தை கொடுப்பதின் மூலம், சுகம் அடைவதை வைத்தியன் உடனடி எதிர்பார்க்க முடியாது.

166) சரியானதும் சுத்தமானதுமான குறிகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் மருந்துகள், இப்பொழுது அதிகமாய் கூட்டப்பட்டிருப்பதால், மேற்கூறிய (162—ல்) நிலை அதிகமாய் ஏற்படுவதில்லை. ஆனால் அந்நிலை ஏற்படும்

பொழுது, அதனால் உண்டாகும் அசௌகரியங்களை குறிகளுக்கொத்த இன்னொரு மருந்தை கொடுத்து மாற்றிவிடலாம்.

**குறிப்பு:** 162-ல் ஹனிமான் எழுதியிருப்பது, நிரூபிக்கப்பட்ட மருந்துகளின் எண்ணம் குறைவாக அல்லது மிதமாக இருக்கும்பொழுது, ஒரு பகுதி குறிகளை மாத்திரமே கவரும் மருந்தை தெரிவு செய்துகொடுக்க முடியும் என்பதாகும். அங்ஙனம் கொடுக்கப்படும்பொழுது ஏற்படும் அசௌகரியங்களுக்கு 166-ல் பரிகாரமும் கொடுத்திருக்கிறார். ஆனால், அவர் 166-ன் (ஆரம்பத்தில்) கூறியிருக்கிறபடி இப்பொழுது நிரூபிக்கப்பட்டிருக்கும் மருந்துகள் மனித சமுதாயத்தின் வியாதிகளுக்கு போதுமானது. இவற்றை யெல்லாம் மீறி, சரியான மருந்துகள் இல்லாத நிலையில் என்ன செய்ய வேண்டும் மென்பதே 162-ன் விளக்கமும், 166-ன் ஒருபகுதியின் விளக்கமுமாகும்.

167) தீவிர வியாதிகளில் சரியற்ற ஹோமியோபதி மருந்து கொடுப்பதினால் உண்டாகும் புதுகுறிகள் மிகவும் தீவிரமானதும், முக்கியமானதுமாயிருப்பின், முதலாவது கொடுக்கப்பட்ட மருந்தின் செய்கை தீரும் வரை காத்திருக்காமல், நோயாளியின் தற்போதைய குறிகளுக்கொத்த, அதாவது ஆரம்பத்திலிருந்த குறிகளும், மருந்தினால் உண்டாக்கப்பட்ட குறிகளையும்சேர்த்து இருக்கும் நிலைக்கேற்ற, மொத்தக்குறிகளை கவரும் வேறு மருந்தை தெரிவு செய்து கொடுக்கவேண்டும்.

168) இங்ஙனம் கொடுக்கப்பட்ட மருந்திலும், வியாதி சரியாக முன்னேற்றமடையவில்லையெனில், திரும்பவும் குறிகள்யாவையும் சரியாய் சேகரித்து அதற்கொத்த மருந்தை தெரிவு செய்ய வேண்டும். இவ்விதம், சரியான சுகம் கிடைக்கும் வரை தொடர்ந்து சிகிற்சை செய்ய வேண்டும்.

169) முதற்தடவையாக ஒரு வியாதியின் குறிகளை பரிசோதிக்கும் பொழுதும், முதற்தடவையாக மருந்து கண்டுபிடிக்கப்படும் பொழுதும், ஒரே மருந்தினால் அவ்வளவு குறிகளும் கவரப்படாமல், ஒரு பகுதிக்கு ஒருமருந்தும், வேறு பகுதிக்கு இன்னொருமருந்தும் ஒத்துக்கொள்

ளும் நிலை ஏற்படலாம். இந்நிலை ஏற்படும் பொழுது இரு மருந்துகளிலும் சரியானமருந்தை உபயோகப்படுத்தியபின், அடுத்த மருந்தை, திரும்பவும் நோயாளியை பரிசோதித்து, குறிகளை அறியாமல் கொடுப்பது உசிதமல்ல. ஏனெனில் இருமருந்துகளிலும் கூடுதல்பொருந்துவதும், தேவையானதும் என்று கருதப்பட்டு கொடுத்தமருந்தின் செய்கையினுல் உண்டாகும் நிலை, ஆரம்பத்தில் தெரிவு செய்யப்பட்ட மறு பகுதி குறிகளைகவரும் இரண்டாவது மருந்திற்கு ஒத்துக் கொள்ளாததாக இருக்கலாம். எனவே முதற்மருந்தின் செய்கையின் பிறகு இருக்கும் நிலையை பரிசோதித்து, அதற்கொத்த சரியான மருந்தை தெரிவு செய்தே கொடுக்கவேண்டும்.

170) இங்ஙனம், எல்லா சமயங்களிலும், ஒரு பகுதி குறிகள் மாறி, மறு பகுதி குறிகள் மாருமல் இருந்தால் அதற்கொத்த சரியான மருந்தை தெரிவு செய்தே கொடுக்க வேண்டுமேயன்றி, ஆரம்பத்திலேயே தெரிவு செய்யப்பட்ட இருமருந்துகளையும் ஒன்றின்பின் ஒன்ருய் கொடுத்துவிடக்கூடாது. ஆனுல் முதற் மருந்தின் செய்கை தீர்ந்தபின் இருக்கும்நிலை, இரண்டாவது மருந்தின் குறிகளுக்கு ஒத்துக்கொள்ளுமாயின் அதைத் தான் கொடுக்க வேண்டும்.

171) மேக வியாதிகளுடன் கலக்கப்படாத, சோரு, விஞல் உண்டாக்கப்பட்ட நாள்பட்ட வியாதிகளில், ஒன்றின் பின் ஒன்ருய் பல மருந்துகளை கொடுக்க தேவைப்படும். ஒவ்வொரு மருந்தின் செய்கை முடிந்ததும், அப்போதைக்கிருக்கும் மொத்த குறிகளுக்கொத்த சரியான மருந்தை தெரிவு செய்தே கொடுக்கவேண்டும். ஒவ்வொரு மருந்தும் ஒரு தடவையோ அல்லது பல தடவையோ கொடுக்க தேவைப்படலாம்.

172) வியாதியின் குறிகள் சொற்பமாயின், சரியான மருந்தை தெரிவு செய்து அவற்றை குணப்படுத்துவது கடினம்.

173) நாள்பட்ட வியாதிகளில் இங்ஙனம் தோன்றும் சம்பூரணமல்லாத ஒன்றிரண்டு அதி தீவிர குறிகள்,

மற்ற குறிகளை மறைத்து விடுவதால், இந்நிலையை குணப்படுத்துவது கடினம்.

சம்பூரணமல்லாத = Partial

174 இவ்வித பிரதான குறிகளான, நாள்பட்ட வயிற்ரோட்டம், தலைவலி, இருதயவலி முதலியவை அந்தரங்க வியாதிகளாகவோ அல்லது வெளிப்படையான அடிபடுதலினாலோ உண்டானவையாய் இருக்கும். சம்பூரணமல்லாத வியாதியைப்போன்ற இன்னொரு வியாதி தனிப் பாகங்களை தாக்கும் வியாதியாகும். (Local Disease)

175) முதலாவது கூறப்பட்டிருக்கும் சம்பூரணமல்லாத வியாதிகளில் சரியான குறிகளை கண்டு பிடிக்க முடியாதது, வைத்தியனின் கவலையற்ற நிலையினாலேயே அடிக்கடி ஏற்படுகிறது. கவலையோடு குறிகளை சேகரிக்க முயற்சிப்பானானால் வியாதியின் முழுநிலையையும் அறிந்து கொள்ள முடியும்.

176) என்றிருப்பினும், எவ்வளவோ கவலையோடு ஆராய்ந்தாலும், ஆரம்ப பரிசோதனையில் ஒன்றிரண்டு சக்தி வாய்ந்த குறிகளை மாத்திரமே வெளிப்படுத்தும். இதர குறிகள் சக்தியற்று சரியாய் வெளிப்படாமல் இருக்கும்.

177) இந்நிலை மிக அரிதாகவே காணப்படும். ஆனால் ஏற்படும் பொழுது தோன்றும் குறிகளுக்கொத்த சரியான மருந்தை தெரிவு செய்து சிகிற்சை செய்தால் வெற்றியை காணலாம்.

178) இங்ஙனம் கவலையாய் தெரிவு செய்யப்படும் மருந்து சில சமயங்களில் வியாதியின் ஆபத்தான அல்லது அவஸ்தையான நிலைக்கொத்த ஒரு செயற்கை வியாதியை இயற்கை வியாதியின் தீவிர, முக்கிய, நிச்சயிக்கும் குறிகளுக்கொத்த தீவிரத்தில் உண்டு பண்ணி விடும்.

179) ஆனால் வியாதியின் குறைந்த குறிகளுக்கே இம்மருந்து ஒத்திருப்பதால், அநேக தடவைகளில் மருந்து ஒத்துக்கொள்ளாததாக தோன்றும். ஏனெனில்

இம்மருந்தை தெரிவு செய்ய போதுமான இதர குறிகள் இல்லாத நிலையே.

180) குறிகளின் ஒரு பகுதியை மாத்திரம் கவரும் மருந்தின் செய்கை மூலம், புது குறிகள் தோன்றும். கூடுதல் ஹோமியோபதி மருந்துகள் இல்லாத நிலையில், சரியான மருந்தை தெரிவு செய்ய முடியாததினாலேயே இந்நிலை ஏற்படுகிறது. ஆனால் இக்குறிகள் வியாதியைப் பொருந்தினதாகவும், ஆனால் இதுவரை நோயாளியால் உணர்ந்துகொள்ள முடியாததுமாய் இருக்கும். இக்குறிகள் கூடுதல் சக்தியுடன் நோயாளி உணர்ந்துகொள்ள தக்கதாக இப்பொழுது தோன்றுமேயேன்றி வேறொன்றுமில்லை.

181) இங்ஙனம் தோன்றும் புதுக்குறிகள் மருந்தினால் உண்டாக்கப்பட்டவை என்று நாம் வாதிக்கலாம். இது உண்மையெனினும், சிகிற்சை பெறும் வியாதிக்கும் மருந்தினால் உண்டாக்கப்படும் குறிகளுக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. ஏனெனில் தற்போது காணும் மொத்தக்குறிகள் தான், வியாதியின் உண்மையான தெளிவான குறிகள்.

**குறிப்பு:** சில குறிகள் வியாதியை சம்பந்தபட்டவையாயினும், வாழ்க்கை ஒழுங்கில் ஏற்படும் முக்கிய தவறுதல்கள், பொங்கி எழும் ஆசைகள், மாதவிடாய் புதிதாய் தோன்றல் அல்லது இறுதியாய் நின்று போகல் முதலிய மும்முரமான சரீர மாறுதல்களின் பிறகே த[illegible] மாய் காணப்படும்.

182) இங்ஙனம் மிகக்குறைவான குறிகளின் நிமித்தம், தவிர்க்கமுடியாமல் அதிகமாய் சரியற்ற மருந்தை தெரிவு செய்வதின் மூலம், மொத்தக்குறிகள் சரியாய் வெளிப்பட்டு, ஒத்துக்கொள்ளும் சரியானஹோமியோபதி மருந்தை அடுத்து தெரிவு செய்ய உதவுகிறது.

183) புதிதாய் உண்டாக்கப்பட்ட குறிகள், உடனடி கவனிக்கப்படவேண்டிய உக்கிர நிலை இல்லாதவையெனில், முதல் மருந்து அனுகூலமான மாறுத[illegible] உண்டுபண்ணுவிடில், தற்போதிருக்கும் குறிகளை[illegible]

யாய் எழுதி, அக்குறிகளை பூரணமாய் ஒத்துக்கொள்ளும் வேறு மருந்தை தெரிவு செய்யவேண்டும். இந்நிலையில் குறிகள் கூடுதலாயும், பூரணமாயும் இருக்குமாதலால், சரியான மருந்தை தெரிவு செய்வது சுலபமாய் இருக்கும்

**குறிப்பு:** மேற்கூறிய நிலை தீவிர நோய்களிலும் சில சமயம் ஏற்படுவதுண்டு குறிகளை மிகக்குறைவாக நோயாளி கூறுவது, அவனுடைய உணர்ச்சி குறைவினால் குறிகளை உணர்ந்துகொள்ள முடியாமலும், கண்டு கொள்ள முடியாமலும் இருப்பதினால்தான். இந்நிலையில் ஓபியம் என்ற மருந்தை உயர்ந்த வீரியத்தில் கொடுப்பதின் மூலம், நரம்பு மண்டலத்தின் திமிர் மாற்றப்பட்டு குறிகளை சரியாய் நோயாளியால் உணர்ந்து கூற முடியும்.

184) இந்நிலையில் (குறைந்த குறிகள் மாத்திரம் தோன்றும் பொழுது) ஒவ்வொரு பொழுது மருந்தும் அதன் செய்கையை முடித்த பின், அப்போதிருக்கும் நிலையை பரிசோதித்து, அதற்கொத்த மருந்தை கொடுத்து, திரும்பவும் இங்ஙனம் பரிசோதித்து, இருக்கும் நிலைக்கொத்த அடுத்த மருந்தை கொடுத்து, சிகிற்சையை வெற்றி கிடைக்கும்வரை கொண்டு செல்லவேண்டும்.

185) சம்பூரணமல்லாத வியாதிகளில் குறிப்பிட்ட பாகத்தை தாக்கும் வியாதிகள் முக்கியமானவை. குறிப்பிட்ட பாகங்களின் வியாதி என்பது அதிகமாக சரீரத்தின் வெளிப்பாகங்களில் ஏற்படும் மாறுதல்களும் அவஸ்தையுமாகும். இந்நிலையில் அலோபதியர்கள், சரீரத்தின் வெளிப்பாகங்கள் தான் தாக்கப்படுகிறதென்றும், இதர பாகங்கள் அதில் பங்கு கொள்கிறதில்லையென்றும் தப்பாக கூறுகின்றனர்.

186) வெளிப்படையான அடி, காயம் முதலியவற்றால் ஜுரம் உண்டாகிறது. வெளிப்படையான காரணங்கள் இரண சிகிற்சைக்குகந்தவை. நழுவின முட்டுகளை சரிசெய்தல், காயங்களை தைத்தல், சரீரத்தினுள் சென்று விட்ட வஸ்துக்களை எடுத்தல், முறிந்த எலும்புகளை பொருத்திக் கட்டுதல், நீர் தேக்கங்களை வெளிப்படுத்தல்

முதலியவை இரண சிகிற்சையை சார்ந்தது. ஆனால், காயங்கள் அல்லது அடிபடுதலின் மூலம் ஏற்படும் தீவிர ஜுரத்திற்கும், நெருப்பால் தாக்கப்படல் சூடான சாதனங்களால் சருமம் பொசுக்கப்படல் முதலியவற்றிற்கும், வெளிப்படையான நோவையும், ஜுரத்தையும் ஹோமியோ மருந்துகள் மூலம் குணப்படுத்தலாம். சுருங்க சொல்லின், இரண சிகிற்சைக்குப் பின் ஏற்படும் குறிகளுக்கு ஹோமியோ சிகிற்சை பயன்படும் என்பதே.

187) ஆனால் வெளிக்குறிகள் அடிபடுதலினாலோ வேறு வெளிப்புற தாக்குதலினாலோ உண்டாகாமல் இருக்கும்பொழுது, இவற்றின் காரணம் உள் வியாதியாகும். இவற்றை தனிப்பட்ட பாகங்களில் உண்டாகும் வியாதிகள் எனக்கருதி, வெளிப்பிரயோகங்களினால் சிகிற்சை செய்வது அறிவான மார்க்கமல்ல.

188) இவைகள் ஏன் தனிப்பட்ட பாகங்களின் வியாதிகள் என்று கருதப்படுகிறது என்றால் சரீரத்திற்கும் இவற்றிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்ற எண்ணத்தினாலேயே.

189) சிறு சிந்தனையின் மூலம், முக்கியமான வெளி தாக்குதலின்றியும், வெளிப்படையாக வியாதிகள் தோன்றி அதிகப்படுவது உள் காரணத்தின் மூலமே என்று அறிந்துகொள்ளலாம். சரீரம் பூராவும் வியாதியுற்று அவயவங்களின் ஒத்துழைப்பினாலேயே இந்நிலை ஏற்படுகிறது. உணர்ச்சி கூடியதான பாகங்கள் இதில் பங்கு கொள்ளாவிடில் இந்நிலை ஏற்படமுடியாது. சரீரத்தின் அவயவங்கள் மிக நெருங்கிய தொடர்புள்ளதாய் இருப்பதால் அவற்றின் மூலமே இந்நிலை ஏற்படும். முக்கியம் என்று தோன்றாத வெளிக்குறிகள் கூட, உள் சரீரம் பாதிக்கப்படுவதினாலேயே உண்டாகிறது.

190) எனவே வெளிக்காரணங்கள் மூலம் ஏற்படாத எல்லா வெளிக்குறிகளும் அல்லது வியாதிகளும், உள் மருந்து கொடுத்தே சிகிற்சிக்கப்படவேண்டும். அவைகளை அடியோடு குணமாக்க, வேறு எந்தவித அபாயமற்ற மார்க்கமும் கிடையாது.

191) இங்ஙனம் கொடுக்கப்படும் உள் மருந்து சரியானதாய் இருந்தால், நோயாளியின் பொதுவான நிலையில் முக்கியமான மாறுதல்களை உண்டுபண்ணி, குறிப்பாக வெளிப்புறம் தாக்கப்பட்டிருக்கும் பாகங்களிலும் மாறுதல்களை உண்டுபண்ணுகிறது என்பதை அனுபவத்தின் மூலம் காணலாம். இம்மாறுதல்கள் சுகம் தரும் தன்மை உள்ளவையாய் இருக்கும். சரீரம் பூராவையும் குணப்படுத்துவதுடன் யாதொரு வெளிப்பிரயோகமுமின்றி வெளிக்குறிகளையும் குணப்படுத்திவிடும்.

192) இதை வெற்றிகரமாய் செய்ய வெளிக் குறிகளின் தன்மையோடு நோயாளியின் நிலையில் கண்டுபிடிக்கக்கூடிய எல்லா குறிகளையும் சேர்த்து அதற்கொத்த சரியான மருந்தை கொடுக்கவேண்டும்.

193) அடுத்துவந்த வியாதியாயின் சரியாய் கொடுக்கப்படும் உள் மருந்து ஒரு பொழுதில் சரீர வியாதியையும் வெளிக் குறிகளையும் குணமாக்கிவிடும். இச்செய்கையின் மூலம் வெளிக்குறி சரீரம் பூராவும் பாதிக்கப்பட்ட வியாதியைச் சார்ந்தது என்றும் அதை வியாதியின் ஒரு முக்கிய குறியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதே.

194) அடுத்து வந்த தீவிர வெளிக் குறிகளுக்கோ அல்லது நாள்பட்ட வெளிக் குறிகளுக்கோ, உள் கொடுக்கும் மருந்தைக்கூட, வெளி பூச்சாகவும் அல்லது இதர மருந்துகளை வெளிப்பூச்சாகவும் உபயோகிக்ககூடாது. தீவிரமாய், அடி, இதர வெளிக்காரணங்கள் முதலியவற்ருல் உண்டாகாத வெளிக்குறிகள், உள் வியாதிகளால் உண்டாக்கப்படுவதால், அகமும் புறமும் நோயாளிக்கு இருக்கும் குறிகளை உண்டுபண்ணக்கூடிய மருந்துகள் இவற்றை வெகு சீக்கிரத்தில் குணமாக்கிவிடும். எல்லா விதிகளையும் நோயாளி சரியாய் கடைபிடித்தும், இக்குறிகள் மாருமலிருந்தால், தீவிரவெளிக்குறிகள், மறைந்திருந்த சோரு இப்பொழுது வளருவது அல்லது தலைதூக்குவதின் மூலம் உண்டாகிறது என்பதை அறிந்து கொள்ளலாம்.

195) இந்நிலையில், தீவிரம் ஓரளவு மாற்றப்பட்ட பின்பு, நாள்பட்ட வியாதிகள் என்னும் புத்தகத்தில்

கூறியிருக்கிறபடி, மேக வியாதிகளுடன் சம்பந்தப்படாத நாள்பட்ட வெளிக்குறிகளுக்கொத்த. சோருவுக்கு எதிரான மருந்தை கொடுக்கவேண்டும்.

196) இவ்வியாதிகள் குறிகளுக்கொத்த மருந்தை உள் கொடுப்பதுபோல், அதே மருந்தை வெளியிலும் பூசினுல் சீக்கிரம் குணமடைந்துவிடும் என்று தோன்றலாம்.

197) இம்முறையை சோருவினுல் உண்டாக்கப்பட்ட வெளிக்குறிகளுக்கு மாத்திரமின்றி, சைக்கோசிஸ், சிபிலிஸ் முதலிய மியாசங்களினுல்உண்டாக்கப்படும் வெளிக்குறிகளுக்கும் கையாளக்கூடாது. ஏனெனில், இம்முறையில், உள் வியாதியைவிட, வெளிக்குறிகள் விரைவில் மாற்றப்படுவதால், உள்வியாதி சரியாய் குணமடைந்து விட்டதா என்று நிச்சயிப்பது கடினமாகி விடும்.

198) மியாசங்களினுல் உண்டாக்கப்படும் நாள்பட்ட வியாதிகளில் வெளிப்பூச்சு மருந்துகளின் மூலம் வெளிக்குறிகள் குணப்படுத்தபடுவதினுல், வியாதியின் ஒரு முக்கிய குறி அழிக்கப்பட்டு சரியான மருந்தை கண்டு பிடிப்பதை கடினமாக்கும்.

199) வியாதிக்கொத்த சரியான ஹோமியோ மருந்து கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பு, வெளிக்குறிகள் வெளிப் பிரயோகங்களினுல் மாற்றப்படுமாயின், பாக்கியுள்ள குறிகளை வைத்து சரியான மருந்தை தெரிவு செய்வது கடினம். ஏனெனில் வெளிக்குறிகள் சரியான மருந்தை தெரிவு செய்வதற்கு முக்கிய குறிகளாக உதவியிருக்கும்.

200) வெளிக்குறிகள் அழிக்கப்படாமல் இருக்குமாயின், சரியான ஹோமியோ மருந்தை தெரிவுசெய்து, தொடர்ந்து சிகிற்சிப்பதின் மூலம், இவ்வெளிக்குறிகள் குணமடையும் பொழுது வியாதி வேரோடு அழிக்கப்பட்டு விட்டது என்ற மகத்தான உண்மையை அறிந்துகொள்ளலாம்.

201) இவற்றிலிருந்து நாம் அறிந்து கொள்வது யாதெனில், முக்கிய தத்துவம் என்னும் சக்தியானது,

நாள்பட்ட வியாதியால் தாக்கப்பட்டவுடன், சரீரத்தின் முக்கிய அவயவங்கள் தாக்கப்பட்டு அழிந்து போகா வண்ணம், ஒன்றிலிருந்து ஒன்றிற்கு மாற்றி சருமத்தில் வெளிப்படுத்துகிறது. ஆனல் இவ்வெளிப்படுத்துதல் உள் வியாதியின் குறிகளே. மியாசங்கள் அழிக்கப்படும் வரை இவ்வெளிக்குறிகள் அதிகப்பட்டு சரீரம் உள்ளும் புறமும் முழுமையாகப் பாதிக்கப்படும்.

202) அலோபதி முறையில் வெளிப்பூச்சு மருந்துகளின் மூலம் குறிகள் மாற்றப்படும்பொழுது, வியாதி பூராவாக குணமடைந்து விட்டது என்று கருதப்படுகிறது. ஆனல் இயற்கை, இத்தாக்குதலை உள்வியாதியினுடன் கூட்டி, அவஸ்தையை அதிகமாக்கி, மறைந்திருந்த குறிகளின் நிலையைக்கூட எழுப்பிவிடுகிறது. எனவே, மருந்துகளின் மூலம் வெளிக்குறிகள் உள் சென்று விட்டன என்று கூறுவது சரியன்று.

203) மியாசங்களினல் காணும் வெளிக்குறிகளை வெளிப்பிரயோகங்களின் மூலம் குணமாக்கப்பார்ப்பது உபயோகமற்றதும் கெடுதலை விளைவிப்பதுமாகும். இம்முறைதான் இன்றிருக்கும் அனேக நாள்பட்ட வியாதிகளுக்குக் காரணம்.

204) நாள்பட்ட அலோபதி சிகிற்சை மூலமும், வாழ்க்கை ஒழுங்கு தவறுவதாலும் ஏற்படும் எல்லா நாள்ப்பட்ட வியாதிகளையும் தவிர, இதர நாள்பட்ட வியாதிகள் உள் மியாசங்களினலேயே, முக்கியமாக சோருவினலேயே உண்டு பண்ணப்படுகிறது. இம்மியாசங்கள்சருமத்தில் தோன்றுமுன், எல்லா உள் அவயவங்களையும் தாக்கி, சோரு சரும வியாதியாகவும், சிபிலிஸ் அரையாப்பு அல்லது சாங்கர்என்னும்(Bubo &Chancre) குறிகளாகவோ, சைக்கோசிஸ் மலத்துவாரத்தின் பக்கம் பால் உண்ணி போன்ற ஒரு வளர்ச்சியாகவோ (Condyloma) தோன்றும். இவ்வெளிக்குறிகள் வெளி மருந்துகளால் அகற்றப்படும்பொழுது, இயற்கை, சீக்கிரமோ அல்லது நாள் சென்ருே, மனிதவர்க்கத்தை தாக்கும் பல நாள்பட்ட வியாதிகளை உண்டுபண்ணும்.

இந்நிலை, வைத்தியர்களால் மியாசங்களை விரட்ட உள் மருந்துகள் கையாளப்பட்டிருப்பின் ஏற்பட்டிருக்கிறது.

205) ஹோமியோபதி வைத்தியன் இவ்வெளிக்குறிகளை வெளிப்பூச்சு மருந்துகளினால் சிகிற்சிப்பதில்லை. ஆனால் அலோபதி முறையின் சிகிற்சையின் பிறகு, நாம் காணும் குறிகள், நாள்பட்ட வியாதிகள் அவற்றின் இரண்டாந்தர நிலையை அடைந்து விடுவதாலுள்ள குறிகளால், நான், நாள்பட்ட வியாதிகளின் சிகிற்சை என்ற புத்தகத்தில் எழுதியிருக்கிறபடி, மியாசங்களை ஒழுங்காக சரியான ஹோமியோபதி மருந்து கொடுத்து விரட்டவேண்டும். இம்முறை என்னால் பல வருட அனுபவங்களின்மூலம் கண்டுபிடிக்கப்பட்டது.

206) நாள்பட்ட வியாதிகளை சிகிற்சிப்பதற்குமுன், நோயாளிக்கு மேகவியாதிகள் கிடைத்திருக்கிறதா என்பதை அறிந்துகொள்ளல் அவசியம். தற்காலத்தில் சிபிலிஸ், சைக்கோசிஸ் என்ற இரு மியாசங்களின் குறிகளும் தனியாக அதிகமாய் யாரிடத்திலும் காணப்படுவதில்லை. ஆனால் அப்படி காணப்பட்டால், அவற்றிற்கெதிராக மாத்திரமே சிகிற்சை செய்ய வேண்டும். உள் சோரூவை சிகிற்சை செய்யும்பொழுதும், இதர இருமியாசங்களையும் உண்டுபண்ணும் வியாதிகள் கிடைத்திருக்கிறதா என்று கேட்டறியவேண்டும். ஏனென்னில் சோரூவின் குறிகள் தனிபட்டதாய் இல்லாவிடில், இதர மியாசங்களுடன் கலக்கப்பட்டிருக்கிறது என்பதை எப்பொழுதும் அறிந்துகொள்ளலாம். ஏனெனில் நாள்பட்ட வியாதிகளுக்கு முக்கிய அடிப்படைக் காரணமே சோருதான். பயம், ஜலதோஷம், கல்க்கம், மந்திரவாதம் முதலியவற்றால் எனக்கு, நாள்பட்ட வியாதி கிடைத்து விட்டது என்று கூறும் நோயாளியை நம்பக்கூடாது. ஏனெனில் இவற்றால் உண்டாகும் வியாதிகள், நாள்பட்ட வியாதிகளாகி, பல காலம் ஒருவனை தாக்க முடியாது. மியாசங்களே இதன் முக்கிய காரணம்.

207) அடுத்தாற்போல் எவ்வித அலோபதி சிகிற்சை நாள்பட்ட வியாதிக்கு கொடுக்கப்பட்டிருந்தது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். மேலும் சக்தி வாய்ந்த

எந்தெந்த மருந்துகள் உபயோகிக்கப்பட்டன; உலோகம் கலக்கப்பட்ட என்னென்ன தண்ணீர் உபயோகிக்கப் பட்டன என்பவையையும்கேட்டறிந்து, வியாதிஇவற்ருல் தன் ஆரம்ப நிலேயிலிருந்து எவ்வளவு மாற்றப்பட்டிருக் கிறது என்பதை கண்டு பிடித்து, இவற்றின் உபயோ கத்தை உடனடி மாற்றவேண்டும்.

208) அடுத்தாற்போல், நோயாளியின் வயது, தொழில், ஆகார வகைகள், பழக்க வழக்கங்கள், வாழ்க்கை ஒழுங்கு, இல்லற வாழ்க்கைநிலே முதலியவற் றையும் அறிந்து, இவற்ருல் வியாதி அதிகமாகிறதா என்பதையும், சிகிற்சைக்கு இவை எவ்வளவு ஆதரவாக அல்லது ஆதரவற்றதாக இருக்கிறதென்பதையும் அறிந்துகொள்ளவேண்டும். மனநிலே எங்ஙனம் இருக் கிறதென்பதையும் அறிந்து, அது வியாதி சுகமடைவ தற்கு இடையூருயிருப்பின் அதை திருத்தவேண்டும்.

209) இவ்விதம் வியாதியின் எல்லா குறிகளேயும் தெளிவாய் அறிந்து, முக்கிய குறிகள் எல்லாவற்றையும் சேர்த்து, மொத்தக்குறிகளே சரியாய் கவரும் சோருவுக்கு எதிரானதாகவோ அல்லது இதர மருந்தாகவோ தெரிவு செய்யவேண்டும்.

210) சம்பூரணமில்லாத வியாதிகள் (Partial) சோருவிஞல் உண்டாவதாகும். இவற்றை குணப்படுத்து வது மிக கடினமாய் தோன்றும். ஏனெனில் சம்பூரண மில்லாத வியாதிகளில், தற்பொழுது வெட்ட வெளிச்ச மாய் தோன்றும் குறியைத்தவிர, இதரக் குறிகள் மறைந்து போய்விடும். இவை மற்ற வியாதிகளிலிருந்து பிரிக்கப்பட்ட ஒரு தனி வகுப்பை சார்ந்த வியாதிகளல்ல. எல்லா சரீர வியாதிகளிலும் மனநிலேயும், குணமும் மாறு பாடுள்ளதாகவே இருக்கும். இதை ஒரு முக்கிய குறியாக எடுத்து, வியாதியின் மொத்தக் குறிகளுக்கொத்த மருந்தை கொடுத்தே ஹோமியோ முறையில் வெற்றிகர மாய் சிகிற்சிக்க முடியும்.

**குறிப்பு:** வியாதியஸ்தராய் இருக்கும்பொழுது பலர் மிருதுவானவராயும், சாந்த குணமுள்ளவராயும்

காணப்பட்டாலும், வியாதி குணமடைந்ததும் (ஹோமியோ முறையில்) அவர்கள் மனநிலை மாற்றப்பட்டு, பயங்கர குணமுடையவர்களாக தங்களுடைய ஆதி நிலைக்கு (வியாதி குணமடைவதற்கு முன் இருந்த இயற்கை நிலைக்கு) மாறிவிடுகின்றனர். வியாதியடைந்தால் திரும்பவும் சாந்தமடைந்துவிடுவர். சுருங்க சொல்லின் வியாதியஸ்தராய் இருக்கும்பொழுது பலரின் மனநிலையும், சுகமாய் இருக்கும்பொழுது உள்ள நிலைக்கும் குணத்திற்கும் எதிரானதாய் இருக்கும்.

210) இங்ஙனம், வியாதியஸ்தரின் மனநிலைக்கு, மருந்து தெரிவதில் மிக முக்யத்துவம் கொடுக்கவேண்டும். தெரிந்தெடுக்கும் மருந்து மனக்குறிகளை கண்டிப்பாய் கவரவேண்டும்.

212) மருந்துகளின் சிருஷ்டிகர்த்தா இக்குணங்களை மருந்துகளுக்கு அளித்திருக்கிறார். மன நிலையிலும், குணத்திலும், சரீரத்திலும் வேலை செய்யும் மருந்து, சுகம் அனுபவிப்பவனுக்கு கொடுக்கப்படும்பொழுது மாறுதல் உண்டுபண்ண தவறுவதில்லை.

213) எனவே இயற்கையான ஹோமியோ முறையில் தீவிர வியாதிகளிலும்கூட மனநிலையிலும் குணத்திலும் ஏற்பட்டிருக்கும் மாறுதல்களுக்கொத்த, அதாவது சுகம் அனுபவிப்பவர்களுக்கு இம்மாறுதல்களை உண்டு பண்ணும் மருந்தையே, இதரக் குறிகளையும் கவருவதாய் தெரிவு செய்து கொடுக்கவேண்டும்.

214) புத்திசுவாதீனமில்லாத (பைத்தியம்) நோயாளிகளைக்கூட, வேறு வழிகளில் குணப்படுத்த முடியாது. அவரில் தற்போது காணப்படும் குறிகளை உண்டு பண்ணும் மருந்தையே (அதாவது சுகம் அனுபவிப்பவர்களில் இதே சரீர மாறுதலையும், மன மாறுதலையும்) கொடுக்கவேண்டும்.

215) சரீர வியாதிகளினுலேயே மன நிலையும், குணமும் தாக்கப்பட்டு, அவைகள் முக்கிய குறிகளாக விளங்குகின்றன. இந்நிலையில் இதரக்குறிகள் குறைந்து, மனக்குறிகளும், குணத்தின் குறிகளும், சம்பூரணமல்லா

தும், குறிப்பிட்ட பாகத்தில் காணும் வியாதி என்ற நிலையிலும் தோன்றலாம்.

216) அபாயம் விளைவிக்கும் சரீர வியாதிகளான சுவாச கோசங்களில் சீழ் பிடித்தல், இன்னும் இது போன்ற தீவிர வியாதிகளில் சரீரக் குறிகள் குறைந்து மனநிலை கூடுதலாய் பாதிக்கப்பட்டு, புத்தி சுவாதீன மற்றநிலை அடைவதுமுண்டு. இந்நிலை ஏற்படும்பொழுது சரீரக்குறிகளினுல் உண்டாகும் அபாயம் மாற்றப்படு கிறது. மேலும் இந்நிலையில் சரீரக்குறிகள் மிக குறைந்து விடுவதால், கவலையாயும், நுட்பமாயும், ஆராய் பவனுலேயே இவற்றை கண்டுகொள்ள முடியும். இவ் விதமாக இவை சம்பூரணமல்லாத அல்லது குறிப்பிட்ட பாகத்தை தாக்கும் வியாதியைப்போல் மாறி சரீரக்குறி கள் மனக்குறிகளாக மாற்றப்பட்டு, மிக முக்கிய குறிக ளாய் தோன்றும். இம்மாறுதலை அதாவது சரீரக்குறி களை மனக்குறிகளாக வியாதி மாற்றுவதை, அங்கதிபாத சாஸ்திர (Anatomy) நிபுணனுல் கூட செய்ய முடியாது.

217) இவ்வியாதிகளில் சரீரக் குறிகளையும், மனக் குறிகளையும் சேர்த்து கவலையாய் அறிந்துகொள்ள வேண்டியது மிக முக்கியம். இங்ஙனம் மாத்திரமே இதை உடனடி நிவிர்த்தி செய்யக்கூடிய மருந்தை கண்டுபிடிக்க முடியும். அதாவது மனக்குறிகளையும், சரீரக்குறிகளையும் சேர்த்து கவரும் மருந்து என்பதே.

218) மொத்தக் குறிகளை அறிவதற்கு, மனக்குறிகள் மாறுவதற்கு முன் வியாதியின் இதரக்குறிகள் என்ன என்பதை முதலாவதாக தெரிந்து கொள்ளவேண்டும். இதை நோயாளியுடன் நெருங்கிய தொடர்புள்ளவர்களி டமிருந்து அறிந்து கொள்ளலாம்.

219) தற்பொழுது அவற்றின் சாயல் மாத்திரம் காணும் சரீர வியாதியின் முந்திய குறிகளிலிருந்து, (இடைக்கிடையே மனக்குறிகள் குறையும் போது இச் சரீர குறிகள் தீவிரமாய் தோன்றும்) அவை மறைக்கப் பட்டிருந்தாலும், பூராவாய் மாற்றப்படவில்லையென்று திருப்தியாய் அறிந்து கொள்ளலாம்.

220) இக்குறிகளுடன் நோயாளியின் நெருங்கிய தொடர்புள்ளவர்கள் கூறும் மனக்குறிகளையும், குணத்தின் குறிகளையும், வைத்தியனால் கண்டுபிடிக்கப்படும் மனக்குறிகளையும், குணக்குறிகளையும் சேர்த்து, நாம் வியாதியின் மொத்த நிலையை அறிந்து கொள்கிறோம். மனக்குறிகளும், குணக்குறிகளும் நீண்ட நாட்கள் ஆனவையாயின், சோருவை விரட்டும் சரியான ஹோமியோ மருந்தை தெரிவு செய்யவேண்டும்.

221) ஆனால், நல்ல மன நிலையிலிருக்கும் ஒருவர் திடீரென பயம், துக்கம், மதுபானம் அருந்தல் முதலியவற்றால் புத்தி சுவாதீனமில்லாதவராகி, தீவிர வியாதியின் தோற்றம் காணுமாயின், இது உள் சோருவின் விளைவேயாகும். ஆனால் இதை உடனடி சோருவுக்கு எதிரான மருந்துகளை கொடுத்து குணமாக்க முயற்சிக்க கூடாது. முதலாவதாக அகோனைட், பெல்லடோனா, ஸ்டாராமோனியம், ஹயோசியாமஸ், மெர்குறி முதலிய மருந்துகளை உயர்ந்த வீரியத்தில் கொடுத்து, தீவிரத்தை குறைக்கும்பொழுது, சோரு அது ஆதியிலிருந்த மறைவான இடத்திற்கு சென்று உள் அல்லது மறைவான சோருவாகிவிடும். இந்நிலையில் வியாதியஸ்தன் குணமடைந்து விட்டதாக தோன்றலாம்.

222) ஆனால் இங்ஙனம் மனநிலை பாதிக்கப்படும் ஒரு நோயாளியின் தீவிரத்தை சோருவுக்கு எதிரான மருந்துகள் கொடுக்கப்படாமல் குணமடைந்து விட்டதாக கருதக்கூடாது. தற்பொழுது மறைந்திருப்பதும், எச்சமயமும் திடீரென வெளிப்படக்கூடியதுமான உள் சோருவை, சோருவுக்கு எதிரான நீடித்த நாள் சிகிற்சைக்கு கொண்டுவர தாமதிக்கக்கூடாது. தீவிர நிலை மாற்றப்பட்ட பின், நோயாளி நாம் கூறும் விதிகளுக்கு கட்டுப்படுவானாயின், திரும்பவும் அந்நிலை ஏற்படும் என்ற பயம் வேண்டியதில்லை.

223) ஆனால் சோருவுக்கு எதிரான சிகிற்சை கைவிடப்படும் பொழுது, மனநிலை கூடுதல் தீவிரத்துடன் திரும்ப பாதிக்கப்படுவதற்கு, முன்பிருந்த காரணத்தைவிட, சிறிய காரணங்கள் கூட போதும். இந்நிலை ஏற்பட்டால் சோரு தீவிரமாய் வளர்ந்து, குறித்த காலங்

களிலோ அல்லது நிரந்தரமாகவோ புத்தி சுவாதீன மற்றவனுக்குவதுடன், மிக கஷ்டத்துடனேயே சோரு வுக்கு எதிரான சிகிற்சையால் குணப்படுத்தக்கூடிய நிலை ஏற்படும்.

224) புத்திசுவாதீனமற்றநிலை முழுமையாக ஏற் படாமல் இருக்கும் சமயம், இது சரீரக் கோளாறுகளி னால் உண்டானதா அல்லது துற்படிப்பு, கெட்ட பழக்க வழக்கங்கள், சீரழிந்த குணம், மூடபக்தி, மடமை முதலிய வற்றால் உண்டானதா என்று சந்தேகம் எழலாம். இந் நிலையில் சிநேகிதபான்மையோடு அவனுக்கு ஆறுதலும், வாதங்களும் ஊன்றி கூறப்படுமாயின், சரீர வியாதி சம்பந்தமில்லாத புத்தி சுவாதீனமற்றதாயின் குண மடைந்து விடும். ஆனால் சரீர வியாதியுடன் சம்பந்தபட் டதாயின், வியாதி கூடுதல் உக்கிரம் அடைந்து ஆறுதல் கூறமுடியாதநிலை ஏற்படும்.

225) சரீர சம்பந்தமின்றி நீடித்த நாள் துக்கம், கோ பம், மனம் புண்படுதல், தீவிர பயம் முதலியவற்றாலும் புத்தி சுவாதீனம் இல்லாமல் ஆவதுண்டு. இவைகள் நாளடைவில் சரீரத்தை மிகவும் கூடுதலாய் பாதிக்கும்.

226) 225-ல் கூறிய மன அதிர்ச்சியின் காரணங் களினால் ஏற்படும் புத்திசுவாதீனமற்ற நிலையை, அடுத்து தோன்றியதாயின், சரீரம் பாதிக்கப்படாமலிருப்பதால், நற்போதனை, ஆறுதல் முதலியவற்றின் மூலம் அவனை திருத்தி, சரியான ஆகாரத்தின் மூலமும், ஜீவிய ஒழுங் கின் மூலமும் குணப்படுத்தி விடலாம்.

227) ஆனால் இவை யாவும் சோருவின் விளைவே யாகையால், சோரு முழுமையோடு வெளிப்படுவதற்கு முன், சோருவுக்கு எதிரான சரியான மருந்துகளை உடனடி கொடுத்து, குணமாக்கி, வியாதி திரும்பவும் வராமல் காத்துக்கொள்ளலாம்.

228) புத்தி சுவாதீனமற்ற வியாதிகள், ஹோமியோ முறையின் சரியான சோருவுக்கு எதிரான மருந்துகள் மூலம் மாத்திரமே குணப்படுத்த முடியும். ஆனால் சிகிற்சைக்கு, நோயாளியின் மனநிலையும், வாழ்க்கை ஒழுங்குகளும் தவறாமல் பாதுகாக்கப்படவேண்டும்.

இதற்கு வைத்தியனும் நோயாளியின் சுற்றத்தாரும் உதவவேண்டும் கூடுதல் கோபம் உள்ள நோயாளிகளை, சமாதானமாய், பயப்படாமல் எதிர்க்க வேண்டும். எப்பொழுதும் சங்கடத்துடன் புலம்பிக்கொண்டிருக்கும் நோயாளியை, நமது முகத்தோற்றத்திஞலோ, செய்கையிஞலோ இரக்கப்படுவதாய் காண்பிக்கக்கூடாது. அருவருக்கத்தக்கதும், வெறுப்பானதுமான செயல்களுக்கும் கவனம் செலுத்தக்கூடாது. நஷ்டங்களையும், காயங்களையும், நோயாளி உண்டு பண்ணுவான் என்று எதிர்பார்த்தால், அவை ஏற்படாமல் நாம் பாதுகாத்துக் கொள்ளவேண்டுமேயன்றி, அவனை நிந்திக்ககூடாது. எந்தவித சரீர உபத்திரபவங்களும் செய்யக்கூடாது. மேலும், ஹோமியோ மருந்துகள் சுவையற்றவையாலும், மிக சிறிய அளவிலேயே கொடுக்கப்படவேண்டியிருப்பதாலும்,நோயாளி அறிந்து கொள்ளாமலேயே, அவன் அருந்தும் பானங்களில் மருந்தை கொடுப்பது எளிது.

**குறிப்பு:** இவற்றிற்கு மாருக நாம் கொடுமையாய் நோயாளியை நடத்துவோமாயின், மனிதனுக்கு கீழ் நிலையை அடைந்து விடுவோம். ஹோமியோ முறை தெரியாதவர்களே இக்கொடுமைகளில் ஈடுபடுவர்.

229) பலாத்காரம், கண்டித்தல், வைராக்யம் முதலியவற்றை கையாளுதல் மஞேவியாதி அல்லது புத்தி சுவாதீனமற்ற வியாதிகளின் சிகிற்சையில் கேட்டை விளைவிக்கும். பரிகசித்தல், ஏமாற்றுதல் முதலியவற்றை இவ்வித நோயாளி எளிதில் புரிந்து கொள்வாஞதலால், இவை அவன் கோபத்தை மூட்டும். வைத்தியனும் நோயாளியின் சுற்றத்தாரும் அவன் புத்திசாலித்தனமாக நடந்துகொள்வதாகவே பாவனை காட்டவேண்டும். அவனை உபத்திரவிக்கும் அல்லது கோபமூட்டும் எல்லா சாதனங்களையும் அவன் பார்வையிலிருந்து அகற்ற வேண்டும். அவனுடைய வியாதி குணமடையும் வரை அவனுடைய மனநிலையை புத்தகங்கள், சம்பாஷணை முதலியவற்ருல் சீர் செய்ய முடியாது.

230) அவனுடைய குறிகளுக்கொத்த, சோருவை விரட்டும் சரியான மருந்து கொடுக்கப்படும் பொழுது,

மிகவும் சிறிய அளவு மருந்து கூட அதிசீக்கிரம் வியாதியை சாந்திப்படுத்தும். இது கூடுதல் அளவில் உபயோகிக்கப்படும் அலோபதி மருந்துகளால் செய்ய முடிவதில்லை. என்னுடைய அனுபவத்தில் சரீர வியாதிகளிலோ அல்லது இதர காரணங்களினாலோ நீடித்த நாட்களாக நிலைத்திருக்கும் புத்திசுவாதீனமற்ற வியாதியஸ்தர்களை ஹோமியோ முறையில்தான், இதர முறைகளை விட வெற்றிகரமாக சிகிற்சிக்க முடியுமென்று அறிய முடிந்தது.

231) நமது குறிப்பான கவனத்திற்குள்ளாகும் வேறொருவித வியாதிகள் யாதெனில், விட்டு விட்டு வரும் வியாதிகள். இவை விட்டு விட்டு வரும் பல ஜுரங்களைப் போன்றவையும், ஜுரமின்றி விட்டு விட்டு வரும் வியாதிகளை போன்றவையும் ஆகும். மேலும் நிச்சயமற்ற இடை வேளைகளில், ஒரு வியாதி மறைந்ததும், வேறொரு வியாதி வரும். மாறி மாறிவரும் தன்மையுள்ள வியாதி இன்னொரு தரமாகும்.

232) இங்ஙனம் மாறி மாறி வரும் வியாதிகள் பல வகைகள் எனினும், யாவும் நாள் பட்ட வியாதிகள் எனப்படுபவையே. ஆனால் அவை சோருவாலும், சில சமயங்களில், ஆனால் மிக அரிதான சமயங்களில் மாத்திரம் சிபிலிசுடன் கலந்து காணப்படும் பொழுது, சோருவுக்கு எதிரான மருந்துகளையும், சிபிலிசுக்கு எதிரான மருந்துகளையும் மாற்றி மாற்றி கொடுப்பதினாலும் குணமடைந்து விடுகிறது.

233) குறித்த காலவரைக்கு தோன்றுவதும், குறித்த காலவரைக்கு மாறிக்கொள்வதும், பின்பு திரும்பவும் குறித்த காலவரைக்கு தோன்றி மறையும் வியாதிகளே விட்டு விட்டு வரும் வியாதிகளாகும். இங்ஙனம் விட்டு விட்டு முறைவைத்து வரும் வியாதிகள் பலவித முறை ஜுரம் மாத்திரமின்றி, ஜுரமின்றி, முறைக்கு வரும் இதர வியாதிகளும் உண்டு.

234) இங்ஙனம் ஜுரமின்றி ஒருவனில் முறைவைத்து தோன்றி மறையும் வியாதிகள் (சிலரை அல்லது பலரை தாக்கும், பரவும் தொத்து நோயாக பொதுவாக இவை இருப்பதில்லை) நாள்பட்ட வியாதிகளின் ரகத்தை

சார்ந்தவையே. அவற்றில் கூடுதலானவை தனியாக சோருவினுல் உண்டாக்கப்பட்டவையாகவும், சில சமயங் களில் சிபிலிசுடன் கலக்கப்பட்டு உண்டாக்கப்பட்டதாக வும் இருக்கும். இவை யாவும் வெற்றிகரமாக முன்பு கூறியபடி சிகிற்சிக்கக் கூடியதே. என்றிருப்பினும் சில சமயங்களில் இவற்றைப் பூரணமாய் அழிக்க வீரியம் கொடுக்கப்பட்ட சைஞ என்ற மருந்தை ஒரு பொழுது கொடுக்க தேவைப்படும்.

235) முறைவைத்து தோன்றி மறையும் ஜுரங் களுக்கு, அவை தாக்கும்போது ஒன்றுக்கொன்று எதி ரான இரு நிலைகள் உண்டு. வியாதியின் உக்கிரமத்தில் குளிரும் உஷ்ணமும், அல்லது உஷ்ணமும் குளிரும் என்ற நிலைகளே. ஆனுல் அடிக்கடி இவை மூன்று நிலைகளில் காணப்படும். குளிர், உஷ்ணம், வியர்வை. நாம் தெரிந்துகொள்ளும் ஹோமியோபதி மருந்தும் (சோருவுக்கு எதிரானவை அல்ல) இவ்வெதிரான இரண்டு மூன்று நிலைகளை சுகமானவரில் உண்டுபண் ணக்கூடியதும், இந்நிலைகளில் நோயாளியில் காணப் படும் இதரக் குறிகளை உண்டுபண்ணக்கூடியதுமாய் இருக்கவேண்டும். என்றிருப்பினும், சரியான ஹோமி யோ மருந்தை தெரிவு செய்வதற்கு நோயாளி ஜுர மின்றி இருக்கும்பொழுது காணப்படும் நிலை கவலையாய் ஆராயப்படவேண்டும்.

236) வியாதியின் உக்கிரமம் குறைந்த உடனேயோ அல்லது வியாதி சிறிது பேதமடைந்தவுடனேயோ, சரி யான மருந்தை கொடுப்பதுதான் இவ்வியாதிகளை சிகிற் சிப்பதற்கு சரியான வழி. இங்ஙனம் மருந்து கொடுப் பதால், யாதொரு குழப்பத்தையும் அல்லது ஏற்றத்தை யும் வியாதியில் உண்டுபண்ணுமல் சுகப்படுத்த போது மான சமயம் மருந்துக்கு கிடைக்கும். ஆனுல் வியாதி உக்கிரமம் அடைவதற்குமுன் மருந்து கொடுக்கப்படு மாஞல், ஒத்துக்கொள்ளும் சரியான ஹோமியோபதி மருந்தாய் இருந்தால் கூட, அதன் செய்கை இயற்கை வியாதியோடு சேர்ந்து ஏற்படும் நிலை, நோயாளியை மிக பலவீனமாக்கவோ அல்லது உயிரிழக்கவோ செய் யும். ஆனுல் உக்கிரம் தணிந்தபின் கொடுக்கப்படுகிற

மருந்து, அடுத்த உக்கிரமத்திற்கு கூடுதல் இடை வேளை இருப்பின், சரீரத்தில் வேலை செய்து வியாதியை சாதுவாக சொஸ்தம் செய்ய முடியும்.

237) ஆனால் ஜ்வரமற்ற நிலை சில தீவிர ஜ்வரங்களில் குறுகிய காலத்திற்கே இருக்குமாதலாலும், மேலும் கடந்துபோன உக்கிரமத்தால் வேறு உபத்திரபவங்கள் காணுமாதலாலும், சரியான ஹோமியோபதி மருந்தை, வியர்வை எடுத்தல் முதலிய குறிகள் மூலம் உக்கிரம் குறையத் தொடங்கிவிட்டது என்றறிந்து உடன் கொடுக்கவேண்டும்.

238) பலமுறை உக்கிரமமாய் தோன்றும் நிலையை ஒரு பொழுது மருந்து குணப்படுத்துமாயின், திரும்பவும் நோயாளி தாக்கப்படும்பொழுது, அப்பொழுதிருக்கும் நிலை முன்பு கொடுத்த மருந்துக்கு ஒத்திருந்தால் மாத்திரமே அம்மருந்தை திரும்ப கொடுக்கவேண்டும். ஆனால் வியாதி குணமடைந்து சிறிது காலம் சுகம் அனுபவித்த பின், ஜ்வரம் திரும்பவும் வருமாயின், அது, ஆரம்பத்தில் எந்தக் காரணத்தினால் வியாதி தோன்றியதோ, அக்காரணத்தை சார்ந்ததாகவே இருக்கும். இக்காரணம் தவிர்க்கப்பட்டாலன்றி நோயாளி பூரண சுகமடைவது சாத்தியமல்ல. சதுப்பு நிலங்களுள்ள பாகங்களில் வசிப்பவருக்கு உண்டாகும் முறை ஜ்வரத்தை சிகிற்சிக்க, நோயாளியை மலைவாசத்திற்கு மாற்றுதல் அவசியம்.

239) ஏகதேசம் எல்லா மருந்துகளும், ஒவ்வொன்றின் தனிப்பட்ட செய்கையின் மூலம், ஒன்றுக்கொன்று பிரத்தியேகமான ஜ்வரத்தை, முறை வைத்து வரும் ஜ்வரத்திற்கு ஒப்பானதாகக்கூட உண்டுபண்ணுவதால், இயற்கை முறை ஜ்வரங்களை சிகிற்சிப்பதற்கு ஹோமியோபதியில் ஏராளமான மருந்துகள் இருக்கின்றன. இதுவரை பரீட்சிக்கப்பட்ட மருந்துகளில் சிலவை மிக சக்தி வாய்ந்தவை.

240) பலரை ஒரே சமயத்தில் தாக்கும் ஒருமுறை ஜ்வரத்திற்கு ஒரு குறிப்பிட்ட ஹோமியோபதி மருந்து ஏற்றதாயிருக்கும் பொழுது, ஒன்றிரண்டு பேர் அதே மருந்தால் குணப்படாமலிருக்கலாம். இந்நிலை சதுப்பு

நிலத்தில் வசித்தல் முதலிய காரணத்தால் உண்டாகாமல் இருப்பின், சோருதான் அதற்கு அடிப்படைக் காரணம் என்றறிந்து, சோருவுக்கு எதிரான மருந்துகள் கொடுக்கப்படவேண்டும்.

241) ஒரு பிரதேசத்தில் எப்பொழுதும் முறையாக காணப்படாத பரவும் முறை ஜ்வரங்களுக்கு, நாள்பட்ட வியாதிகளில் காணப்படுவதுபோல், பிரத்தியேக தீவிர உக்கிரமத்தை உண்டுபண்ணும் தன்மையுண்டு. ஒவ்வொரு தனிப்பட்ட பரவும் நோய்க்கும், அதால் தாக்கப்படும், எல்லாரிடத்திலும் காணப்படும் பொதுவான தனி குணமுண்டு. பொதுவாக எல்லாரிடத்திலும் காணப்படும் மொத்தக் குறிகளில் இத்தனிக் குணமும் காணப்படுமாயின் இதைக் கவரும் மருந்து (இதர குறிகளுடன்) விசேஷ ஔஷதமாக (Specific) எல்லாருக்கும் பயன்படும். சோருவினுல் நீடித்த நாள் வியாதிகளுக்கு இரையாகாதவருக்கும், பொதுவாய் நல்ல சுகம் அனுபவிப்பவருக்கும், இம்மருந்து மேற்கூறிய, குறிப்பான பரவும் முறை ஜ்வரத்திற்கு பயன்படும்.

242) இவ்வித பரவும் தன்மையுள்ள முறை ஜ்வரத்தின் முதல் உக்கிரமம்,குணப்படுத்தப்படாமலோ அல்லது சரியற்ற அலோபதி சிகிற்சையின் மூலம் வியாதியஸ்தன் மிகவும் பலவீனப்பட்டிருப்பானுயின், அமைதியாய் இருந்த சோரு தன் தலையை தூக்கி, சோருவுக்கு எதிரான மருந்துகளின்றி இதர மருந்துகளினுல் குணப்படக்கூடிய நிலையை மாற்றி, அதுவே முறை ஜ்வரத்தின் தோற்றத்தை விளைவிக்கும். இந்நிலை கூடுதல் வீரியங்கொண்ட சிறிதளவு ஹெபர் சல்ப் (Hepar Sulph) என்ற மருந்தினுலோ அல்லது கால்சியம் சல்ப் (Calcium Sulph) என்ற மருந்தினுலோ குணமாக்கப்படும்.

243) பிடிவாதமான முறை ஜ்வரம், ஒருவனை தாக்கும்பொழுது, அது தீவிர வியாதியாக கருதப்பட்டு, சோருவுக்கு எதிரான மருந்துகளின்றி இதர மருந்துகளின் மூலம் சில நாள் சிகிற்சிக்கப்படவேண்டும். ஆனுல் வியாதி குணமடைவதற்கு கூடுதல் நாட்களாகு

மாயின், சோரா தன் தலையை தூக்குவதற்கு சமயம் ஆகிவிட்டது என்பதை அறிந்து, சோராவுக்கு எதிரான மருந்துகளை கொடுத்தே விரைவில் குணப்படுத்த முடியும்.

244) சதுப்பு நிலப்பிரதேசங்களிலும், ஜலபெருக்கு ஏற்படும் பிரதேசங்களிலும், எப்பொழுதும் காணப்படும் முறை ஜுரங்கள் அலோபதியர்களுக்கு சிகிற்சிப்பது மிக கடினம். சுகமான ஒருவன் வாலிப பருவத்திலிருந்து இப்பிரதேசங்களில் வசித்து தன் ஜீவியத்தை நல்ல ஆகாரங்களுடன் ஒழுங்காய் நடத்துவானாயின் பாதிக்கப் படுவதில்லை. முதல் முதலாவதாக இப்பிரதேசங்களில் வந்து குடியேறும் பொழுதே எப்பொழுதும் அப்பிர தேசத்தில் காணப்படும் முறை ஜுரம் ஒருவனை தாக்கு கிறது. இந்நிலையில், கூடுதல் வீரியம்கொண்ட சைனா என்ற மருந்து ஒன்றிரண்டு வேளைகளில், தன் ஜீவிய ஒழுங்கை சரியாய் காப்பாற்றுவானாயின் குணப்படுத்தி விடும். ஜீவியஒழுங்கை சரியாய் கடைப்பிடிக்கும் ஒருவனை சைனா குணப்படுத்தாவிடில், சோரா இருக்கிறதென்பதை அறிந்து, சோராவுக்கு எதிரான சிகிற்சை செய்வதுதான் அவனை குணப்படுத்தும். ஆனால் இப்பிரதேசத்தை விட்டு திரும்பவும் இவ்வியாதியில்லாத பிரதேசங்களுக்கு இவ்வியாதியால் ஆழமாய் பீடிக்கப்படுமுன் போய் விடுவானாயின், முறை ஜுரம் அவனை விட்டு மாறி, சோரா தன் பழைய, மறைந்த சோரா நிலையை அடைந்து விடும். ஏனெனில் முழுமையாய் சோரா தலை தூக்கும் நிலையை இன்னும் அடையவில்லை. ஆனால் அவன் சோராவுக்கு எதிரான சிகிற்சைக்கு பின்பே பூரண சுகத்தை அனு பவிக்க முடியும்.

245) வியாதியின் தனிப்பட்ட நிலைமைகளின்படி நாம் என்னென்ன கவனங்களை ஹோமியோ சிகிற்சை யில் எடுக்க வேண்டுமென்பதை அறிந்து கொண்டோ மாகையால், மருந்துகளையும், அவற்றை எப்படி கொடுக்க வேண்டுமென்பதையும், மருந்துகள் வேலை செய்யும் பொழுது என்னென்ன ஒழுங்குகளை கடைப்பிடிக்க வேண்டுமென்பதையும் ஆராய்வோம். தீவிர வியாதிகளி லும், நாள்பட்ட வியாதிகளிலும், ஏற்படும் சுகம்,

மட்டான நிலையுள்ளதாயிருந்தாலும், கண்டு கொள்ளக் கூடிய அளவு தொடர்ந்து முன்னேறிக்கொண்டிருக்குமாயின், திரும்ப மருந்து கொடுக்கலாகாது. ஏனெனில் கொடுக்கப்பட்ட மருந்தின் சரியான செய்கை இன்னும் தீரவில்லை. திரும்ப, சமயத்திற்கு முன் மருந்து கொடுப்பதின் மூலம், குணமடைவதற்கு ஏற்பட்ட நிலை குலைக்கப்படும்.

246) ஒரு பொழுது சரியான ஹோமியோ மருந்து, சரியான வீரியத்தில் கொடுக்கப்படும்பொழுது அதன் வேலையை தடங்கல் செய்யாமல் இருப்போமானால், 40, 50 அல்லது 100 நாட்களில் அதன் பூரண நல்ல வேலையை செய்து முடிக்கும். ஆனால் இந்நிலை சாதாரணமாய் ஏற்படுவதில்லை. மருந்தை திரும்ப கொடுக்க வேண்டிய சமயத்தை நிச்சயிப்பது வைத்தியனையும், நோயாளியையும் பொறுத்ததாகும். சரியான மருந்தை, சரியான வீரியத்தில், சரியான வேளையில் திரும்ப கொடுப்பதுதான் முக்கியம். இங்ஙனம் செய்வோமாயின் குணப்படுத்துதலை துரிதப்படுத்தலாம். ஆனால் மருந்துகளின் மூலம் ஏற்படும் செயற்கை வியாதி மனிதனின் சக்தியை பாதிக்கும் அளவில் முறைகளை மாற்றக் கூடாது.

247) சரியாய் தெரிவு செய்யப்பட்ட ஹோமியோபதி மருந்தை 14, 12, 10, 8 அல்லது 7 நாட்களுக்கொரு தடவையும், நாள்பட்ட வியாதிகள், தீவிர வியாதிகளின் நிலையை அடையும் பொழுது இன்னும் குறைந்த இடைவேளையிலும் திருப்பிக் கொடுக்கலாம் ஆனால் தீவிர வியாதிகளில் 24, 12, 8, 4 மணிக்கொரு தடவையும், மிகவும் தீவிர வியாதிகளில் ஒரு மணிக்கொரு தடவை முதல் 5 நிமிடத்திற்கொரு தடவை வரை, குறைந்த இடைவேளையிலும் கொடுக்கலாம்.

248) மருந்தின் அளவை வியாதி குணமாகும்வரை மாற்றக்கூடாது. ஆனால் வியாதி பூரணமாக குணமாகாவிடில் தற்போதிருக்கும் எல்லாக் குறிகளுக்கும் ஒத்த வேறு மருந்தை கொடுக்கவேண்டும்.

249) சரியற்ற மருந்துகள் கொடுக்கப்படும்பொழுது உபத்திரவப்படுத்தும் குறிகள் தோன்றும். இக்குறிகள்

மிகவும் தீவிரமானவையாயின் முறிக்கும் மருந்து (Antidote) உடனடி கொடுக்கப்படவேண்டும். தீவிர மற்றதாயின், இக்குறிகள் தோன்றின பின் இருக்கும் நிலைக்கொத்த சரியான மருந்தை கொடுக்க வேண்டும்.

250) அவசரமான சந்தர்ப்பங்களில் 6, 8 அல்லது 12 மணி வேளைக்குள் வைத்தியனின் எண்ணத்திற்கு வியாதியில் மாறுதல் இல்லை என்று காணப்பட்டால், அவனுடைய தொழிலின் முக்கியத்துவத்தை உணர்ந்து, கொடுக்கப்பட்ட மருந்து சரியல்ல என்று நிச்சயித்து, அப்பொழுதிருக்கும் நிலைக்கொத்த சரியான மருந்தை தெரிவு செய்து கொடுக்கவேண்டும்.

**குறிப்பு:** வெவ்வேறு தருணங்களில் இருக்கும்நிலை என்பது, ஆரம்ப குறிகளும் அதாவது மருந்து கொடுக்கப்படுவதற்கு முன் இருந்த குறிகளும், தப்பான மருந்தால் அல்லது தப்பான வீரியத்தால் உண்டாக்கப்பட்ட குறிகளும் சேர்ந்து இருக்கும் நிலை என்பது பொருள். எனவே அடுத்து கொடுக்கப்படும் மருந்து தப்பான மருந்தால் அல்லது வீரியத்தால் உண்டாக்கப்பட்ட குறிகளையும் வியாதியின் குறிகளோடு சேர்த்து கவருவதாய் இருக்கவேண்டும்.

251) இக்னேஷியா, ப்ரையோனியா, றஸ்டாக்ஸ், சில சமயங்களில் பெல்லடோனு முதலிய மருந்துகள் தமது ஆரம்ப செய்கையிலேயே மாறி மாறி வரும் நிலையை சரீரத்தில் உண்டு பண்ணக்கூடியவையாய் இருக்கின்றன. தீவிர வியாதிகளில் குறிகளுக்கொத்ததாய் இவை சரியாய் தெரிவு செய்து கொடுக்கப்பட்ட பின் கூட, சில மணி நேரங்களில் வியாதியில் குறைவில்லாமலிருந்தால் அதே வீரியத்தில் திரும்ப கொடுப்பதின் மூலம் குணம் கிடைக்கும்.

252) ஆனுல் சோரு சம்பந்தப்பட்ட நாள்பட்ட வியாதிகளில் சோருவுக்கு எதிரான சரியான மருந்து கொடுக்கப்பட்டும்கூட வியாதியில் மாறுதல் இல்லையெனில், வியாதியை ஸ்திரமான நிலையில் வைத்திருக்கும் காரணம் இன்னும் மாற்றப்படவில்லை என்ற அறிகுறியாகிறது. மேலும் நோயாளியின் வாழ்க்கை நிலை

யிலும் ஏதோ பிசகு இருக்கிறதென்பதை அறிந்து அதையும் மாற்றவேண்டும். இவ்வித ஒழுங்குகள் தான் வியாதியை நிரந்தரமாக குணமாக்க உதவும்.

253) தீவிர வியாதிகளில் குறிப்பாகவும், ஆனால் பொதுவாக எல்லா வியாதிகளிலும் நோயாளியின் மனநிலையும், அவன் போக்கும் அல்லது நடந்துகொள்ளுதலும், வியாதி சிறிதளவு கூடுவதைகூட எடுத்துக்காட்டும் நிச்சயமான குறிகளாகும். ஆனால் இதை எல்லாராலும் கண்டு கொள்ள முடிகிறதில்லை. ஆனால் வியாதியில் சிறிதளவு குறைவு ஏற்படும் பொழுதுகூட நோயாளி ஆறுதலடைந்தவனாயும், சாந்தமுள்ளவனாயும், மனநிலை இயற்கை நிலை அடைந்ததாயும், அவனுடைய சக்தி உயிர் பெற்றதாயும், அவனுடைய நடத்தைகள் யாவும் இயற்கையானதாகவும் காணப்படும். வியாதி சிறிதளவு கூடும் பொழுதுகூட இதற்கு சுத்த எதிரிடையானவை ஏற்படும். இத்தன்மையில் நோயாளியின் (மனம், சுபாவம், நடத்தல் இருக்கும் அல்லது படுக்கும் விதங்கள்) முதலியவற்றை வார்த்தைகளால் கூறமுடியாது.

254) மருந்து கொடுக்கப்பட்டபின் ஏற்படும் புதுக் குறிகள், இருந்த குறிகளின் ஏற்றம், அல்லது புதுக் குறிகள் தோன்றாமல், இருந்த குறிகள் மறைதல் முதலியவற்றிலிருந்து சரியாய் ஆராயும் தன்மையுள்ள வைத்தியன் வியாதிகூடியிருக்கிறதா அல்லது குறைந்திருக்கிறதா என்பதை சந்தேகமின்றி அறிந்துகொள்வான். வியாதிகூடியிருக்கிறதா அல்லது குறைந்திருக்கிறதா என்பதை சொல்ல முடியாத நோயாளிகளும், சொல்லமறுக்கும் நோயாளிகளும் உண்டு.

255) இறுதியில் கூறப்பட்ட தன்மை உள்ள[illegible] களில் கூட, தற்சமயம் நோயாளியின் நிலையை முன்[illegible] அவன் கூறிய குறிகளுடன் ஒப்பிட்டு பார்த்து, உண்[illegible] யை நிச்சயமாக அறிந்து கொள்ளலாம். புதுக்குறிக[illegible] தோன்றாவிட்டாலும், பழைய குறிகள் ஏற்றம் அடையாவிட்டாலும், மனநிலையிலும், அவன் போக்கிலும் அல்லது ஒழுக்கத்திலும் அபிவிருத்தி இருக்கிறதெனில் வியாதி குறைந்து விட்டதென்றும், மருந்து கொடுத்து சிறிது நேரம் தான் கழிந்திருக்குமாயின் வியாதி குறையத்

தொடங்கிவிட்டதென்றும் அறிந்து கொள்ளலாம்· மருந்து சரியாய் தெரிவு செய்யப்பட்டும் வியாதி குறைவதற்கு சமயம் ஆகிறதெனில், நோயாளி, வைத்தியனால் கூறப்பட்ட ஒழுங்குகளை கடைப்பிடிக்கவில்லையென்றோ அல்லது குறிகளின் ஏற்றம் நீடித்திருக்குமாயின், மருந்து கூடுதல் அளவில் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றோ அறிந்து கொள்ளலாம்.

256) முக்யத்துவம் கொடுக்கக்கூடிய புதிய குறிகள் தோன்றுமாயின், கொடுக்கப்பட்ட மருந்து சரியல்ல என்பதையும், நோயாளி நன்றாயிருக்கிறது என்று கூறினால் கூட, வைத்தியன் அதை நம்பாமல், வியாதி மோசமாயிருக்கிறதென்பதையும் அறிந்து கொள்ளவேண்டும். இவ்வுண்மை, சீக்கிரம், காணத்தக்க அளவில் நோயாளியில் ஏற்படும்.

257) உண்மையான வைத்தியன் தற்செயலாக ஏற்படுத்திய வெற்றிகளின் நிமித்தம் அம்மருந்துகளை கைகண்ட ஔஷதங்களாக கருதமாட்டான். இங்ஙனம் கருதுவது கூடுதல் பயன் தரும் சரியான ஹோமியோ மருந்தை தள்ளிவிட நேரிடும்.

258) அதே மாதிரி சில சந்தர்ப்பங்களில் தோல்வியை தந்த மருந்துகளையும் கைவிட்டு விடக்கூடாது. அவை சரியான முறைப்படி தெரிவு செய்யப்படாதவையாய் இருக்கலாம். குறிகளுக்கொத்த சரியான மருந்தையே எப்பொழுதும் தெரிவு செய்யவேண்டும்.

259) ஹோமியோ முறையில் குறைந்த அளவு மருந்தே கொடுக்கப்படுவதால் மருந்து சக்தியுள்ள எல்லா சாதனங்களும் அவன் ஆகாரத்திலும், வாழ்க்கை ஒழுங்குகளிலும் மாற்றப்பட்டு, கொடுக்கப்பட்ட மருந்தின் சக்தி குறையாமலும், அழிக்கப்படாமலும் காக்கப்படவேண்டும்.

260) முக்கியமாக தீவிர வியாதிகளில் இதை முக்கியமாய் கவனிக்கவேண்டும். ஏனெனில் இத்தவறுகளினால் (கண்டுகொள்ள முடியாத தவறுகள்) வியாதி ஏற்றமடையும்.

261) நாள்பட்ட வியாதிகளில் துறந்த வெளிக்காற்றில் உலாவுதல், இலகுவான உடற்பயிற்சி, மருந்துகள் சேர்க்கப்படாத ஒத்துக்கொள்ளும் சுவையான ஆகாரங்கள் முதலியவை கொடுக்கப்படுவதுடன், குணமடைவதை தடை செய்யும் யாவும் மாற்றப்படவேண்டும்.

262) ஆனல் (மனமாறுதலற்ற) தீவிர வியாதிகளில், நோயாளி விரும்புபவை அவனுடைய முக்கிய தத்துவத்தின் தூண்டுதலே என்பதால், வைத்தியன் இயற்கைக்கு விரோதமாய் போகாமல், அவன் கேட்பதை கொடுக்க அனுமதித்து அவனுக்கு கெடுதல் விளைவிப்பவற்றை கட்டாயப்படுத்திக் கொடுக்காமல் காத்துக் கொள்ள வேண்டும்.

263) தீவிர வியாதிகளில் நோயாளியால் விரும்பப்படும் ஆகாரங்களும், பானங்களும் தற்கால சாந்தி அளிப்பவையே. அவற்றிற்கு மருந்து சக்தி யாதும் கிடையாது. அவை சரியான வரம்பிற்குள் மாத்திரம் கொடுக்கப்படுமாயின், குணமடைவதை சிறிதளவு பாதித்தால் கூட, கொடுக்கப்படும் ஹோமியோபதி மருந்தின் கூடுதல் சக்தியால் அவை மடக்கப்பட்டு, வியாதிசொஸ்தமடையும். தீவிர வியாதியில், அறையின் சீதோஷ்ணமும், படுக்கையின் தன்மையும் அவன் விரும்புவதுபோல் இருக்கவேண்டும்.அதேமாதிரி அவன் மனசாந்தியை குலைக்கும் யாவற்றையும் அகற்றவேண்டும்.

264) உண்மையான வைத்தியன், மருந்துகள் சுத்தமானதாயும், சரியான நிலையிலும் இல்லாவிடில் அவற்றின் குணமாக்கும் சக்தியை நம்பமாட்டான். எனவே மருந்துகளின் சுத்தத்தை அவன் அறிந்துகொள்ள தகுதியுள்ளவனயிருக்கவேண்டும்.

265) அவனல் தெரிவு செய்யப்பட்ட சரியான மருந்தே நோயாளிக்கு கொடுக்கப்படுகிறது என்பதை அவனுடைய மனசாட்சி திருப்தியடைவதற்காக, நிச்சயப்படுத்தவேண்டும்.

266) பிராணி வர்க்கத்திலும், தாவரவர்க்கத்திலிருந்து பெறும் சாதனங்கள் அவற்றின் மூல பாகத்தில்

அல்லது சுய பாகத்தில் மாத்திரமே மருந்து சக்தியுள்ள வையாய் இருக்கும்.

267) தன் இடத்திலேயே அல்லது சுதேசமாய் கிடைக்கும் தாவரங்கள் வாடாமல் புதிதாய் இருக்குமாத லால், அவற்றின் சாறு எடுக்கப்பட்டவுடன் அதே அளவு மதுசாரத்துடன் கலக்கப்படவேண்டும். இங்ஙனம் செய் வதால் தாவரத்தின் தீரம் அல்லது மருந்து சக்தி உறி யப்படும். மூடியிட்ட குப்பிகளில் இவற்றை பாதுகாக்கும் பொழுது 24 மணி நேரத்தில் சுத்தமாய் வடிகட்ட முடி யும். இங்ஙனம் மதுசாரம் சேர்க்கப்படுவதால் மருந்து புளிப்படையாமல் பாதுகாக்கப்படும். இம்மதுசாரம் இருண்ட இடத்தில் சரியாய் மூடியிட்டு பாதுகாக்கப் பட்டால், எக்காலங்களிலும் கெட்டுப்போகாமல், மருந் தின் சக்தி பாதுகாக்கப்படும்.

268) அன்னிய அல்லது புற தேசத்திலிருந்து வரும் மூலிகைகளை பச்சையாய் அடையமுடியாததால் அவற் றின் பட்டை, வேர், விதை முதலியவற்றை பொடி செய்த பாகத்தில் உண்மையான வைத்தியன் வாங்க மாட்டான். அவற்றின் சுத்தத்தை தெரிந்துகொள்ள பொடியாக்கப்படாமல் முழுமையாகவே வாங்குவான்.

269) அவற்றின் மூல அல்லது சாதாரண நிலையில் சரீரத்தில் எந்த மாறுதலையும் உண்டுபண்ண முடியாத சாதனங்கள் கூட ஹோமியோ முறையில் தயாரிக்கப் படும்பொழுது நல்ல மருந்துகளாக மாறுகின்றன. இம் முறை இதுவரை கேட்கப்படாததும், பரீட்சிக்கப்படா ததும், தனிப்பட்டதுமாகும். இம்முறையால் பொரு ளெனக் கண்டுகொள்ள முடியாதவகையில், மருந்துக ளின் சக்தி கூட்டப்படுகின்றன.

(270 & 271) இப்பகுதிகளில் ஹனிமான் மருந்துகளை 30-ம் வீரியம் வரை உயர்த்தும் வகைகளை எழுதியி ருக்கிறார். ஹோமியோ மருந்துகள் செய்யும்விதம் இயற் கனவே புத்தகத்தின் ஆரம்பப்பகுதியில் கூறப்பட்டிருப் பதால் இங்கு விடப்பட்டிருக்கிறது.

272) ஒரே சமயத்தில் ஒரு மருந்துடன் இன் னொரு மருந்தை கலந்து கொடுக்கக்கூடாது.

273) ஒரே சமயத்தில் ஒருமருந்திற்குப் பதில் பல மருந்துகளை சேர்த்து கொடுப்பது இயற்கைக்கு எவ்வளவு நியாயமானது என்று எழும் சந்தேகத்தை எள்ளளவு கூட புரிந்துகொள்ள முடிகிறதில்லை.

274) உண்மையான வைத்தியன் கூட்டு சேர்க்கபடாத தனி மருந்துகளிலேயே இயற்கை வியாதிகளை குணப்படுத்துபவற்றை அறிந்திருக்கும்பொழுது, கூட்டு மருந்துகளின்றி தனி மருந்தை கொடுப்பதுதான் அறிவான மார்க்கம். இரண்டு மருந்துகள் கூட்டாக ஒரே சமயத்தில் கொடுக்கப்படும்பொழுது என்னென்ன செய்கை அவை செய்யும் என்பது பரீட்சிக்கப்படவில்லை. குறிகளுக்கொத்த தனி மருந்து குணமளிக்கிறது என்று அவன் அறிந்திருக்கிறான்.

275) ஹோமியோபதி மருந்துகளின் பொருத்தம் குறிகளுக்கு ஒத்தபடி மாத்திரம் அன்றி, அளவிலும் குறைவாக இருந்தால்தான் ஹோமியோ முறையாகும். அளவுக்குக் கூடுதலாக மருந்து கொடுக்கப்படும் பொழுது, அதன் செய்கை இயற்கை வியாதியால் பாதிக்கப்பட்டிருக்கும் பாகங்களில் தீவிரமாய் வேலை செய்து நோயாளிக்கு கேடு விளைவிக்கும்.

276) மருந்து எவ்வளவுக்கெவ்வளவு கூட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறதோ, விளையும் கேடும் அவ்வளவு கூடுதலாய் இருக்கும். மேலும் குறிகளுக்கொத்த சரியான மருந்து கூடுதல் அளவில் கொடுக்கப்படும் பொழுது விளையும் கேடும் இன்னும் கூடுதலாய் இருக்கும். ஏனெனில் ஏற்கனவே இயற்கை வியாதியால் பாதிக்கப்பட்டிருக்கும் பாகங்கள் கூடுதலளவு மருந்தின் மிக உக்கிரமமான தாக்குதலால் பாதிக்கப்பட்டு, அவற்றின் நிலை மிக உச்சத்திற்கு எட்டி விடுவதுமன்றி, மருந்தை சிறிய அளவில் கொடுத்திருந்தால் கிடைக்கும் சுகமும் மாறி விடுகிறது. இறுதியில் நோயாளி மிகவும் பலவீனன் ஆகிவிடுவான்.

277) நோயின் முக்கிய, தனிப்பட்ட குறிகள் யாவற்றிற்கும் ஒத்த சரியான ஹோமியோ மருந்தை சிறிய அளவில் கொடுப்பது வியாதியை சாதுவாகக் குணப்படுத்த போதுமானது.

278) எனவே இப்பொழுது எழும் கேள்வி ஹோமியோ மருந்துகள் கொடுக்கப்படவேண்டிய மிகக்குறைந்த அளவு எவ்வளவு என்பதே. இக்கேள்வியை எவ்வித விளக்கத்துடனும் ஒவ்வொரு மருந்தின் சிறிய அளவை தனியாக கூறமுடியாது. பரீட்சையின்மூலமே இதை அறியமுடியும். அலோபதி முறையில்கூடுதலளவு மருந்து கொடுக்கப்படுகிறதே என்பதை வைத்து இச்சட்டத்தை எதிர்க்கக்கூடாது. அலோபதி மருந்துகள் வியாதியுற்றிருக்கும் பாகங்களை மாத்திரம் தனியாய் தாக்குவதில்லை. பொதுவாக வியாதியால் பாதிக்கப்படாத பாகங்களிலும் வேலை செய்யும்.

279) நாள்பட்டதும் சிக்கலானதுமான வியாதிகூட ஒரு முக்கிய அவயவத்தின் சீர்குலைந்த நிலையினுல் உண்டாக்கப்படாததாயின், வேறு எல்லா மருந்துகளையும் நிறுத்தி குறிகளுக்கொத்த சரியான ஹோமியோ மருந்தை சிறிய அளவில் கொடுக்கும்பொழுது, குறிகளில் ஒரு சிறிய ஏற்றத்தை உடனடி உண்டுபண்ணுமாயின், அல்லது சிறிதளவு புதுக்குறிகள் தோன்றுமாயின், வியாதியில் ஓரளவு முன்னேற்றம் காணலாம்.

280) அனுபவத்தை அடிப்படையாகக்கொண்ட தர்க்கிக்க முடியாத இத்தத்துவம், ஹோமியோ முறையின் ஒவ்வொரு மருந்தும் மிகவும் நுண்ணியமான அல்லது சிறிதான அளவாக்கப்பட்டு கொடுக்கப்படவேண்டும் என்ற சட்டத்தை ஏற்படுத்துகிறது. நுண்ணியமான அளவென்றபோது, அது சரீரத்தில் வேலை செய்யும்பொழுது ஏற்படும் ஏற்றம் அல்லது கூடுதல் அறியக்கூடாததாய் இருக்கவேண்டுமென்பதாகும். இங்ஙனம் நுண்ணியமாக்குவதை அலோபதியர்கள் ஒத்துக்கொள்ளாமலிருப்பது அதாவது சாத்தியமாகாது என்று அவர்கள் கூறுவது நமக்கு முக்கியமல்ல. ஏனெனில் பொருளெனக் காணக்கூடியவற்றையே அவர்கள் நம்புவர். ஆனல் பிழையற்ற அனுபவத்தில் நாம் கண்டுகொள்ளும் உண்மை, அவர்களுடைய வாதங்கள் பயனற்றது என்று விளக்கும்.

281) எல்லா வியாதிகளுக்கும் குறிகளுக்கொத்த மருந்து கொடுப்பதின்மூலம் மாறுதல் அடையும் அசாதா

ரணமான போக்குண்டு. சிறிதளவு ஹோமியோ மருந்து எவ்வளவு பலத்த சரீரமுள்ளவனிலும்கூட, அவன் நாள்பட்ட வியாதியாலோ அல்லது குறிப்பிட்ட பாகத்தில் வரும் வியாதியாலோ பீடிக்கப்படும்பொழுது, ஒரு ஆதரவான மாறுதலே உண்டுபண்ண தவறுவதில்லை. சுருங்க சொல்லின், பிறந்த 24 மணி நேரத்திற்குபிறகு, நல்ல சுகம் அனுபவிக்கும் ஒரு குழந்தையில் என்ன தாக்குதலை செய்யுமோ அதைவிட கூடுதலாக இவனில் செய்யும்.

282) இயற்கை வியாதியின் குறிகளுக்கொத்த குறிகளை உண்டுபண்ணும் ஒரு ஹோமியோ மருந்து எவ்வளவு குறைவாக கொடுக்கப்பட்டாலும், இயற்கை வியாதியினுல் அவதியுறும் பாகங்களில், செயற்கையாக கூடுதல் உக்கிரமத்தோடு அக் குறிகளை உண்டுபண்ணி, அவற்றிற்குப்பதிலாக அந்த அவயவங்களில் அமர்ந்து கொள்ளும். இச் செயற்கை வியாதியானது மருந்து மிகவும் குறைவாக கொடுக்கப்பட்டதின்மூலம் உண்டாக்கப்பட்டதால் உயிரென்னும் சக்தி அவயவங்களை அவற்றின் இயற்கையான நிலைக்குக் கொண்டுவரச் செய்யும் எதிர் தாக்குதலினுல் விரட்டப்பட்டு, அவதியுறும் பாகங்கள் சுகப்படுத்தப்படுகின்றன.

283) இங்ஙனம் சிறிய அளவில் மருந்து கொடுக்கப்படுவதால், மருந்து சரியாய் தெரிவு செய்யப்படாததாயிருந்தாலும், கூடுதல் கெடுதல் ஏற்படாமல், அடுத்தாற்போல் சரியாய் தெரிவு செய்து கொடுக்கப்படும் சிறிய அளவு மருந்து, குணமளிக்கமுடிகிறது.

284) ஒவ்வொரு வீரியத்திற்கும் மதுசாரமோ சர்க்கரையோ சேர்த்து மருந்தின் அளவு குறைக்கப்படுவதற்கு தக்க அதன் சக்தி குறைவதில்லை. இரண்டு சொட்டு மருந்து தாக்குவதைவிட நாலு மடங்கு கூடுதலாக எட்டு சொட்டு மருந்து ஒரே சமயத்தில் அருந்தினுல் தாக்குவதில்லை. ஏகதேசம் இருமடங்கு கூடுதலாக இருக்கலாம். எனவே எவ்வளவு கூடுதலாக வீரியம் கொடுக்கப்பட்டாலும், மருந்தின் அளவு குறைக்கப்படுவதால் அதன் சக்தி குறைவதில்லை.

285) ஆனால் ஒரு சொட்டு மருந்தின் செய்கையை விட, அச்சொட்டை பல பாகங்களாகப் பிரித்து, அதில் ஒரு பாகம் கொடுக்கப்படும்பொழுது, உண்மையாகவே அதன் செய்கையில் குறைவு ஏற்படுகிறது. மருந்தின் அளவு அல்லது பரிமாணம் மிகமிகக் குறைவாயிருப்பதால் குறைந்த நரம்புகளிலேயே வேலை செய்யும். இங்ஙனம் மருந்தின் செய்கை ஏற்படும் நரம்புகளின் எண்ணம் குறைவாக இருந்தாலும், உண்மையில் அச் செய்கை சரீரம் பூராவும் பரவத்தான் செய்கிறது. ஆனால் அச் செய்கையின் சக்தி, குறைவானதாயிருக்கும்.

**குறிப்பு:** மருந்தின் திராவகத்தில் மூழ்க்கப்பட்ட கடுகளவு குளிகை ஒரு வேளைக்குப் போதுமானது. நோயாளி கூடுதல் உணர்ச்சி உள்ளவனாயின் மருந்தை மணத்துவதே போதுமானது.

286) மேற்கூறிய காரணத்தினால், மருந்தின் செய்கையை கூட்டுவதற்காக, ஹோமியோ மருந்தை கூடுதலளவு பானத்தில் கரைத்து கொடுக்கலாம். இங்ஙனம் கொடுப்பதால், பானத்தின் கூடுதலளவின் நிமித்தம், கூடுதல் நரம்புகளில் மருந்து தன் தாக்குதலை ஆரம்பிக்கும். விளக்கம் கொடுப்போர், மருந்துகள் பானங்களில் கலக்கப்படுவதின் நிமித்தம், அவற்றின் செய்கையில் பலவீனம் அடைந்து விடுகிறது என்று கூறினாலும், ஹோமியோ மருந்துகளின் செய்கையில் இது உண்மையன்று என்று அனுபவமும், பரீட்சைகளும் நிரூபிக்கிறது.

287) ஹோமியோ மருந்துகளின் தயாரிப்பில், மிருதுவான சரீரமுள்ளவர்கள்கூட அருந்தத்தக்கவிதத்தில் மருந்தின் சக்தி குறைக்கப்படவேண்டும்.

288) திராவகமாக கொடுக்கப்படும் மருந்து மிகவும் ஆழமாகவும் துரிதமாகவும் வேலை செய்யும்.

289) சரீரத்தில் உணர்ச்சியுள்ள எல்லா பாகங்களும் மருந்தின் செய்கையை உட்கொண்டு இதர பாகங்களுக்கு அனுப்பும்.

290) இரைக்குடலுக்கு அடுத்தாற்போல், நாக்கும், வாயும் மருந்தின் சக்தியை எளிதில் உட்கொள்ளக் கூடியவை. இதைப்போலவே உணர்ச்சி கூடிய எல்லா பாகங்களும் மருந்தை விரைவில் உட்கொள்ளும். எனவே தான் துறந்த புண்களில் வைக்கப்படும் மருந்து, வாயி னுல் அருந்தும் மருந்தைப்போல் சரீரத்தின் எல்லா இடங்களுக்கும் பரவுகிறது.

291) உணர்வை இழந்த பாகங்கள்கூட (உ-ம் நாக்கு சுவையற்றுப்போதல், மூக்கு முகரமுடியாதிருத் தல்) மருந்தை உட்கொண்டு சரீரத்தின் இதர பாகங் களுக்கு அனுப்பும்.

292) சரீரத்தின் வெளிப்பாகம் சருமத்தால் பொதி யப்பட்டிருப்பினும் சருமத்தின் உணர்ச்சி கூடிய பாகங் கள் மருந்தை உட்கொள்ள சக்தி வாய்ந்தவை. ஆனுல் மருந்து நீர் பாகத்தில் தடவப்படவேண்டும்.

293) மெஸ்மர் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட மெஸ்மரிசம் என்பதைப்பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

(மெஸ்மரிசம் என்பது ஒருவனுல் இன்னொருவனின் நரம்பு பிரமாணம் மனசக்தியின் மூலம் வசீகரிக்கப்பட்டு, அவனுடைய இயற்கை நிலையை இழக்க வைத்தல்)

இல்லற வாழ்க்கையின் இச்சைகளை அடக்கி விந்தை சீரணிக்காதவரே இம்முறையில் வெற்றி காணமுடியும். குறிப்பிட்ட எண்ணத்தோடு மனதை நிலைநிறுத்தி, நோ யாளியின் தலையிலிருந்து கால்வரை, மெஸ்மரிசம் செய் கிறவன் தன் கையை கொண்டுபோவதின் மூலம் வியாதி குறையும்.

294) மெஸ்மரிசம் இருவகைப்படும். ஒன்று இயற் கை நிலையை இழக்கச்செய்தல் (Positive mesmerism) மற்ருென்று இயற்கை நிலையை இழந்திருப்பவர்களை விழிக்கச் செய்தல். (Negative Mesmerism)

**குறிப்பு:** 110-ம் பக்கம் 205-ம் பிரிவின் 6-வது வரியில் 'குறிகளால்' என்பதை 'குறிகளாதலால்' என்று திருத்தி வாசிக்கவும்.

## பயோகெமிஸ்டிறி. (Biochemistry)

இம்முறை சிகிற்சை டாக்டர் ஷஷ்லர் (Schussler) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. சரீரத்திற்கு போதுமான அளவில் வேண்டிய உப்பு (Inorganic salt content in the cells is deficient or unbalanced) சத்துக்கள் இல்லாமல் ஆகும்பொழுதே வியாதிகள் உண்டாகிறதென்றும், இம்மருந்துகள் மூலம் அவற்றைக் குணப்படுத்தலாம் என்பதுமே. இங்ஙனம் உப்புச்சத்துக்கள் குறைந்துபோதல், வியாதிகளின் விளைவேயன்றி வியாதிகளின் காரணமல்ல என்று டாக்டர் ஷஷ்லரே ஒப்புக்கொண்டிருக்கிறார். இம்முறைக்கு 12 மருந்துகள் மாத்திரமே உண்டு. கால்காரியா ப்ளூரிக்கா, கால்காரியா பாஸ்பாரிக்கா, கால்காரியா சல்பூரிக்கா, பெர்ரம் பாஸ்பாரிக்கம், காளிமூரியாடிக்கம், காளி பாஸ்பாரிக்கம், காளி சல்பூரிக்கம், மெக்னேஷியா பாஸ்பாரிக்கா, நட்ரம் மூரியாடிக்கம், நட்ரம் பாஸ்பாரிக்கம், நட்ரம் சல்பூரிக்கம், சிலிசியா முதலியவை. இவைகள் பொதுவாக 6 × வீரியத்தில் உபயோகப்படுத்தப்படுகின்றன. ஆனால் 200 × வீரியம் வரை தயாரிக்கப்படுகிறது. ஹோமியோ மருந்தாகவும் சென்டிசிமல் அளவில் 6 × வீரியத்திற்கு மேல் தயாரிக்கப்படும். இம்முறைக்கும் தனி மெட்டீரியா மெடிக்காவும், களஞ்சிய புத்தகங்களும் இருக்கின்றன. இம்மருந்துகளை, எந்த முறை சிகிற்சை செய்யும்பொழுதும், அதன் கூட கொடுக்கலாம். கால்காரியா சல்ப் என்ற மருந்தை தவிர்த்து பாக்கி பதினொரு மருந்துகளையும் ஒன்றாய் சேர்த்து உபயோகிப்பது சரீர வளர்ச்சிக்கேற்றதாக (Tonic) கருதப்பட்டு, இவையாவும் சேர்த்து ஒரே குளிகையாக இன்று கிடைக்கிறது.

## எலக்ட்ரோ ஹோமியோபதி.
## (Electro Homoeopathy)

இம்முறை, இத்தாலி நாட்டைச் சார்ந்த கவுன்ட் சீசர் மேட்டி (Count Caesar Mattei) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. மருந்துகள் யாவும் மூலிகையில் இருந்து தயாரிக்கப்படுபவையே. இம்முறையின் தத்துவ

மானது, சரீரம், நீரும், இரத்தமும் கொண்டதென்றும், இவைகளில் ஏற்படும் மாறுதல்கள் வியாதிகளை உண்டு பண்ணுகிறதென்பதுமே. (Lymph And Blood) இம் முறையில் 38 மருந்துகள் மாத்திரமே உண்டு. நீரை சுத்தப்படுத்த 8 மருந்துகளும், இ ர த் த த் தை சுத்தப் படுத்த 3 மருந்துகளும், தசைகளை சீர்படுத்த 8 மருந்து களும், தனிப்பட்ட அவயவங்களுக்கு 13 மருந்துகளும், எலக்டிரிசிடி என்று 5 மருந்துகளும், சருமத்திற்கு ஒரு மருந்துமாகும். எவ்வித மின்சார சக்தியோ அல்லது மின்சார தயாரிப்போ இம்மருந்துகளில் கிடையாது எலக்ட்ரோ ஹோமியோபதி என்று பெயரிட்டிருப்பதால் மின்சாரம் உண்டு என்று நினைப்பது தவறு. எலக்டிரி சிடி என்ற 5 ம ரு ந் து க ள் கூட, தாவர மருந்துகளே யன்றி மின்சாரம் அல்ல. இம்மருந்துகளின் வீரியங்களை எவ்வித இயந்திரமுமின்றி நாமே எளிதில் தண்ணீரில் செய்துகொள்ளலாம். மருந்துகளின் விலை கூடுதல் ஆயி னும், பலவீரியங்கள் தயாரிக்க ஒரு குளிகை போதுமாத லால், மொத்தத்தில் விலை கூடுதல் என்று சொல்வதற் கில்லை. இதிலும் தடுப்பு மருந்துகள் (Prophylactics) இருக்கின்றன. ஆனல் பொதுவாக இம்முறை, கூட்டு முறை ஔஷதமாகும். ஏனெனில், மொத்தத்தில் 38 மருந்துகள் மாத்திரம் உள்ளதெனினும், பல மருந்துகள் சேர்ந்தே ஒரு மருந்தாகிறது. இம்முறையின் தத்துவங் களும், மருந்துகளும், வியாதிகளும் அவற்றின் சிகிற்சை யும்விரைவில் ஆசிரியரால் தமிழில் வெளியிடப்படும். இம் மருந்துகளில் சிலவற்றை வெளிப்பிரயோக மருந்துகளா கவும், உபயோகிக்கலாம். இப்பொழுது வட இந்தியாவில் இதற்கென்று ஒரு தனி கல்லூரி நடத்தப்படுகிறது.

## க்ரோமோபதி (Chromopathy)

இம்முறை சிகிற்சைக்கு மருந்துகள் கிடையாது. காற்றும், தண்ணீரும், சூரிய வெளிச்சமும், உடற்பயிற்சி யுமே மருந்துகள். சூரிய வெளிச்சத்தை பல நிறங்களின் வழியாக சரீரத்தில் படச்செய்யவேண்டும். மருந்துகளி ஞல் ஏற்படும் எந்தவித அபாயமும் இம்முறைக்கு கிடை யாது. பயோகெமிக் மருந்துக்களை வியாதிக்கொத்தாற் போல், பற்பல நிற கண்ணுடிகளின் வழி சூரிய வெளிச்

சத்தை செலுத்தி பின்பு உபயோகிப்பது கூடுதல் பலனைத்தரும். முழு விபரங்கள் தமிழில் ஆசிரியரால் விரைவில் வெளியிடப்படும்.

## ப்ளாரல் மருந்துகள். (Floral Remedies)

இம்முறை டாக்டர் எட்வர்ட் பாச் (Edward Bach) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. இம்முறையிலும் 38 மருந்துகளே உள. எலக்ட்ரோ ஹோமியோபதி மருந்துகளை விட இம்மருந்துகள் மிகவும் மலிவானவை. இதனைப்பப்பற்றி விபரம் வேண்டுவோர் ஆசிரியருக்கு நேரில் எழுதவும்.

## இதர பற்பல முறை சிகிற்சைகள்

ஆஸ்டியோபதி நேச்சரோபதி, ஹைட்ரோபதி, யுனை முறை, ஹிப்னாடிசம் முதலிய எத்தனையோ முறைகள் இருக்கின்றன. ஆனல் எந்த முறையிலும் மியாசங்களைப்பற்றிக் கூறப்படவில்லை. மியாசங்களையும், அவற்றின் உறவுகளையும் அதற்கெதிரான மருந்துகளையும் கண்டு பிடித்து, மனிதனின் சுகத்தை சீர்படுத்த உதவிய மகிமை ஹனிமானையே சாரும். ஆனல் ஹோமியோ முறை இதர முறைகளைப் போல் எளிதில் செய்யக்கூடியதல்ல. இம்முறையின் தத்துவங்களை சரியாய் புரிந்து, அதன்படி செயல்படும் பொழுது கிடைக்கும் வெற்றிகள் ஆச்சரியப்படத்தக்கவை. ஆனல் பொறுமையும், அனுபவமும், ஆராய்ந்தறியும் சக்தியும், வேண்டாதவைகளை செய்யாத மனப்பான்மையும் ஹோமியோ வைத்தியனுக்கு தேவை.

# ஹோமியோபதியின் தத்துவஞானம்
# (Philosophy of Homoeopathy)

[ஹோமியோபதியின் தத்துவஞானம் என்பது ஆர்கனனின் விளக்கமே யாகும். விளக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் எண்ணங்கள், ஆர்கனனின் அதே எண்ணங்களுக்குரியது]

வைத்திய தொழிலுக்கு விதிகள் உண்டென்று ஹோமியோபதி வற்புறுத்துகிறது. டாக்டர் ஹனிமானின் காலம் வரை இத்தொழிலின் எந்த விதிகளும் அங்கீகரிக்கப்படவில்லை. அலோபதியர்கள் யாதொரு விதியும் கிடையாதென்று கூறினர். மருந்துகளை வியாதியஸ்தர்களுக்கு கொடுத்து, கிடைக்கும் அனுபவங்களே விதிகள் என்று அவர்கள் கூறினர். அவர்களால் மாற்றப்படும் விஞ்ஞானத்திலிருந்தும், நூதன கண்டு பிடித்தல்களிலிருந்தும், பின்பு அவற்றை விட்டு விடுதலிலிருந்தும், மருந்துகளை கொடுத்து கிடைக்கும் அனுபவங்களே, விதிகள் என்று அவர்கள் கூறுவது உண்மையாகிறது. அலோபதியிலிருந்து, ஹோமியோபதி இங்கு பிரிந்து, வைத்திய தொழிலில் விதிகள் உண்டு என்று வற்புறுத்துகிறது. அலோபதியர்கள் வியாதிகளின் விளைவுகளை மாத்திரம் கவனிப்பரேயன்றி, மனிதன் யார், அவன் எங்கிருந்து வந்தான், சுகத்திலும், சுகவீனத்திலும் அவனுடைய தன்மை என்ன, என்பதைப்பற்றி யாதொரு அறிவும் இல்லாதவர்கள். அவயவங்களின் தசைகளில் ஏற்படும் மாறுதல்களையே Tissue Changes வியாதி என்றும், அதுதான் வியாதியின் ஆரம்பமும் முடிவும் என்று கூறுகின்றனர். வியாதி காரணமின்றி தோன்றுவதென்றும் கூறுகின்றனர். விரல்களால் உணரக்கூடியதையும், கண்களால் பார்க்கக்கூடியதையும், கருவிகளால் அறியக்கூடியதையும் மாத்திரமே ஒப்புக்கொள்வர். மைக்ருஸ் கோப்பின் மூலம் (அணுதரிசினி)

காணும் வியாதியின் விளைவுகளே ஆதியும் அந்தமும் என்று கூறுகின்றனர். அதாவது இவ்விளைவுகளுக்கு முன் வேறொன்றும் கிடையாது என்பது பொருள். இதுதான் அலோபதியின் சுருக்கம். ஆனால் ஹோமியோபதி இவ்விளைவுகளுக்கு முன் வேறொன்று உண்டு என்று கூறுகிறது. சாஸ்திரங்களும், ஆராய்ச்சிகளும் ஒவ்வொன்றிற்கும் ஒரு மூலகாரணம் இருக்கவேண்டும் என்று கூறுகிறது. இதை ஆதாரமாகக் கொண்டுதான், காரணங்களையும் அவற்றின் விளைவுகளையும், ஆதியிலிருந்து அந்தம்வரையும், அந்தத்திலிருந்து ஆதி வரையும் கண்டுபிடிக்க முடியும். இப்படி கண்டு பிடிப்பதின் மூலம் சரியான நிலைக்கு வந்துவிடுகிறோம்.

## ஆர்கனனின் பகுதிகளின் விளக்கம்

1) **நோயாளி** என்ற பதத்தின் மறை பொருளான அர்த்தத்தை, சரியாய் விளங்கவைத்தலின் மூலமே நாம் அதை அறிந்துகொள்ளமுடியும். இப்பதத்திற்கு, ஒவ்வொருவரும், ஒவ்வொருவிதமான வியாக்கியானம் கொடுக்கலாம். ஆனால் அது உத்தேசமானதாக இருக்கும் வரை, ஹோமியோபதியர்கள் அதை அங்கீகரிக்கக்கூடாது. உண்மைகளின் மூலம் மாத்திரமே, வைத்திய சாஸ்திரத்தை நிலை நாட்டவேண்டும். நாம் படித்து முன்னேற்றமடையக்கூடிய விதிகளை ஹனிமான் தந்திருக்கிறார். உலகம் சட்டங்களின் மூலம் அரசாளப்படுகிறதேயன்றி, உத்தேசக் கருத்துக்களினால் அல்ல. உண்மையான ஹோமியோபதியர்களுக்கு, நோயாளி என்று கூறப்படும்பொழுது, எது நோயாளி என்பதை அறிந்து கொள்ளமுடியும். ஆனால் அலோபதியர்கள் **வியாதிகளால் ஏற்படும் தசை மாறுதல்களேயே** (Tissue Changes) வியாதி என்று கருதுகின்றனர். வீரியம் கொடுக்கப்பட்ட மருந்துகளின்மூலம் ஆச்சரியப்படத்தக்க குணங்கள் ஏற்படுவதை ஹோமியோபதியில் காண்கிறோம். மேலும், மருந்துகள் அவற்றின் மூல பாகத்தில் அல்லது தாய் பாகத்தில் வியாதிகளை குணமாக்க சக்தியற்றவை என்பதையும், அவற்றால் ஏற்படும் மாறுதல்கள் உண்மையற்றவை என்பதையும் கண்டு

கொள்கிரும். முக்கிய தத்துவம் என்னும் சக்தியை (Vital Force) சரீரத்தின் வேலையைப்பற்றின சாஸ்திரத்தை (Physiology) பற்றி போதிப்பவர்கள் ஒத்துக் கொள்வதில்லை. வியாதி என்கிறபொழுது, மனிதன்தான் வியாதியுற்றிருக்கிருனே ஒழிய, அவனுடைய சரீரமோ தசைகளோ அல்ல. அனேகர் தங்களை வியாதியஸ்தர் என்று கூறினாலும், அவரே பல பிரத்தியேக சாஸ்திரம் கற்றவர்கள் (Specialists) தங்களை பரிசோதித்துவிட்டு யாதொரு வியாதியும் இல்லையென்று கூறினதாகவும், கூறுவர். பல பக்கங்கள் எழுதக் கூடிய குறிகளை இவர்கள் கூறுவர். என்றாலும் அவர்கள் சரீரத்தில் ஒன்றும் கண்டுகொள்ள முடிகிறதில்லை. அப்படியெனில் அவர்கள் கூறும் குறிகளின் காரணமென்ன? இக்குறிகள், அதாவது அவர்கள் கூறும் குறிகள்தான் அவர்களின் அந்தரங்கமான வியாதியின் தன்மையை காட்டுகிறது. இந்நிலை தொடர்ந்து முன்னேறும்பொழுது பற்பல வியாதிகள் தோன்றுகின்றன. அந்நிலை ஏற்பட்டபின்தான், வைத்தியன் இன்னென்ன வியாதிகள் என்று கண்டுகொள்கிருன். ஆனால், இந்நிலை ஏற்பட்ட பிறகு மாத்திரமே வியாதிகளை கண்டுபிடிப்பதும், ஆரம்பத்தில் நோயாளி கூறிய குறிகள்மூலம் யாதொரு வியாதியும் பல நிபுணர்களால் கண்டுபிடிக்கமுடியாமற்போனதும், அர்த்தமற்றது. ஏனெனில் உண்மையாக நோயாளி பல காலத்திற்கு முன்பே நோய்வாய்ப்பட்டிருந்தான் என்று தெரியவருகிறது. பரம்பரையான வைத்திய சாஸ்திர முறைப்படி, நோயைக் கண்டுபிடித்தபின்பே என்னென்ன சிகிற்சை செய்யவேண்டுமென்பதை நிச்சயப்படுத்துவது அவசியம். ஆனால் அனேக சந்தர்ப்பங்களில், வியாதி கண்டுபிடிக்கப்படும் சமயம், வியாதியின் விளைவுகளால் நோயாளி குணமாக்கமுடியாத நிலையை அடைந்துவிடுகிருன். காரணமின்றி எந்த விளைவும் இருக்கமுடியாது (Cause and Effect). அவயவங்கள் எல்லாம் அல்ல மனிதன். மனிதன் அவற்றிற்கும் முந்தியவன், மனிதனிலிருந்து வியாதி அவயவங்களுக்கு போகிறதே ஒழிய, அவயவங்களிலிருந்து மனிதனுக்கு போகிறதில்லை. ஒரு தனி அவயவம் மாத்திரம் வியாதியுற்று. அதுவே தனியாக வியாதியாகவும் செயல்படு

கிறது என்ருல், அதை எடுத்துவிடுவதின்மூலம் சுகம் அடைந்துவிடலாம் என்று நாம் நம்பலாம். தசைகள் வியாதியுறுவதற்கு ஒரு காரணம் இருக்கவேண்டும். அந்தரங்க மனிதன் என்ருல் என்ன? காணும் சரீரத்தை, அதை இயங்கசெய்யும் சக்தியிலிருந்து எங்ஙனம் பிரிப்பது? அங்காதிபாத (Anatomy) சாஸ்திரத்தின்மூலம், சரீரத்தின் அவயவங்களை மரித்தபின் கண்டு கொள்கிருேம். சுகவீனமான மனிதன் இதற்கு முந்திய நிலையாகும். எதை நாம் கண்டுகொள்ள முடியவில்லையோ அங்குதான் சுகவீனம் இருந்திருக்கிறது. மரணத்திற்கு பின் காணும் சரீரம், எல்லாவற்றிற்கும் இறுதியான நிலையே. மனிதன் பலவற்றை ஆசிக்கின்ருன் காரியங்களை மனதிலாக்கிகொள்கிருன். உணர்வது, பார்ப்பது, ருசிப்பது, கேட்பது யாவும் நினைப்பதின் காட்சியே. ஆசித்தலும் மனதிலாக்கிகொள்ளுதலும் சேர்ந்தே மனிதன் ஆகிறது. இவ்விரண்டும், ஒற்றுமையாய் இயங்கும் பொழுது ஒரு நல்ல சுகமுள்ளவனை நாம் காண்கிருேம். சாஸ்திர முறையான ஹோமியோபதியர்களாக நாம் விளங்க, சரீரத்தின் அவயவங்கள் யாவும், அந்தரங்க மனிதனின் காட்சி என்பதை அறிந்துகொள்ளவேண்டும்.மனிதனின் விருப்பம் அல்லது ஆசை அவனுடைய முகத்தில் தெரிகிறது. கெட்ட செய்கையிலேயே மூழ்கியிருப்பவர்களை அவர்கள் முகத்திலிருந்து அறிந்து கொள்ளலாம் வியாதியின் விளைவுகளை குணப்படுத்துவது அல்ல வைத்தியனின் மேலான வேலை. அந்தரங்கமான ஆசையையும், மனதிலாக்கும் சக்தியையும் ஒழுங்குபண்ணவேண்டும். பற்பல அவயவங்களில் தோன்றும் வியாதிகள் யாவும் வியாதியின் விளைவுகளே. இவைகளை வியாதியெனக்கருதி, அவற்றை நிவிர்த்தி செய்ய எத்தனிப்பது அறிவற்ற செயல். வியாதிகளுக்கு காரணம் என்று கூறப்படும் அணுக்கள்கூட (Bacteria) வியாதியின் விளைவுகளே. பெரிய பெயர்களை வியாதிகளுக்கு சூட்டுவது மாத்திரம் போதாது. பல பக்கங்கள் எழுதக்கூடிய குறிகளுள்ள ஒரு நோயாளியைக்கூட, தக்க சமயத்தில் சிகிற்சிப்போமானல் குணமாக்கிவிடலாம். எந்தவித தசை அழிவும் அதன்பின் அவனுக்கு ஏற்படாது. ஆனல் தக்க சமயத்தில் அவன் சிகிற்சிக்

கப்படாவிடில், நாளடைவில் அவனுடைய தொழில், ஜீவிய ஒழுங்கு, பரம்பரை முதலியவற்றிற்கொத்த வியாதியினுல் பீடிக்கப்படுவான். ஒரே காரணத்தினுல் உண்டாகும் வியாதி, அதன் ஆரம்ப காலத்தில் குறிகளுடனும் உணர்ச்சிகளுடனும் தன்னை வெளிப்படுத்தும். இது ஒரே குடும்பத்தில் ஏற்பட்டாலும், நாளடைவில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமான நோயை உண்டு பண்ணும். இங்ஙனம் ஏற்படுவதின் காரணத்தை அறிந்துகொள்ளல் அவசியம். தீவிரமாய் பரவும் நோய்கள்கூட சிலரை தாக்காமல் விட்டுவிடுகிறது. இதன் காரணமென்ன? அருந்தும் ஆகாரத்திலோ, வேறு இடங்களிலோ வியாதியின் காரணத்தை கண்டுபிடிக்க முயற்சிப்பதில் பயனில்லை. வியாதியின் குறிகளையும், அதற்கொத்த கருத்தையும் கண்டுபிடிக்கவேண்டும். வியாதிகளின் தன்மைகளை, சுகம் அனுபவிப்பவர்களில் மருந்துகளை பரீட்சிப்பதின்மூலம் கண்டுகொள்கிறோம். மனக்குறிகள் மிகவும் முக்கியமானது என்று ஹனிமானும் அவரை பின்பற்றியவர்களாலும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அவன் நினைப்பதையும் விரும்புவதையும் தவிர மனிதனில் வேறொன்றுமில்லை. இவை இரண்டும் ஒற்றுமையாக இயங்காமல் பிரிக்கப்படும்பொழுது புத்தி சுவாதீனமற்ற நிலை, மரணம் முதலியவை சம்பவிக்கிறது. எல்லா மருந்துகளும் ஒருவனுடைய மனநிலையையும், பின்பு தசைகளையும், அவயவங்களையும், உணர்ச்சிகளையும் தாக்குகின்றன. **ஆறம்** என்கிற மருந்தில், அவனுடைய விருப்பங்கள் தீவிரமாக தாக்கப்படுகிறதை காண்கிறோம். மனிதன் மிகவும் கூடுதலாய் விரும்புவது தன் உயிரையே. ஆனுல் ஆறம் என்கிற மருந்து அந்நிலையை மாற்றி தற்கொலை செய்துகொள்ள ஏவுகிறது. இதைப்போல், பரீட்சைகளின்மூலம் நிரூபிக்கப்பட்ட ஒவ்வொரு மருந்திலும் மனம் தாக்கப்படுகிறதை காண்கிறோம். மனம் தாக்கப்பட்டபின்தான், தாக்குதலின் தீவிரம் சரீரத்தின் இதர பாகங்களுக்கு பரவுகிறது. மருந்துகளின் குறிகளையும் நாம் இம்முறையில்தான் படிக்கவேண்டும். மெட்டீரியா மெடிக்காவும் இம்முறையில்தான் எழுதப்பட்டிருக்கிறது. எனவே, நோயாளியால் கூறப்படும் குறிகளும், வைத்தியனுல் கண்டுபிடிக்

கப்படும் குறிகளும் சேர்ந்துள்ள நிலைக்கு ஒத்த குறிகளை, சுகமானவனில் உண்டுபண்ணும் மருந்தை தெரிவு செய்து கொடுப்பதுதான் குணப்படுத்துவது என்கிற கலையின் சரியான மார்க்கம்.

2) ஹோமியோ முறையில் தேர்ச்சி பெருத ஒரு வைத்தியனிடம், வியாதி குணமாகுதல் என்ருல் என்ன என்று நாம் கேட்போமாயின், கண்டுகொள்ளக்கூடிய குறிகள் மறைந்துபோவதே என்று கூறுவான். (உ-ம்) சருமக்குறிகள் மறைதல், மலச்சிக்கலில் மலத்தை வெளிப்படுத்தல், இரண சிகிற்சைமூலம் எடுத்தெறியக் கூடிய பாகங்களை, வியாதியுற்ருல் எடுத்துவிடுதல் முதலியவை. தீவிர வியாதிகளில் மரணம் சம்பவிக்காமலிருப்பதையும் குணமடைந்துவிட்டது என்றே கூறுவர். இதுதான் குணமடைதல் என்று வைத்தியனுல், நோயாளி அறிவிக்கப்படுகிருன். எனவே, சருமக்குறிகள் மறைந்ததும் அவன் வைத்தியனுடைய சாமர்த்தியத்தை மெச்சுகிருன். ஆனுல் சிறிது நாட்களுக்குப்பின் வியாதி முற்றி, தசை மாறுபாடுகள் ஏற்பட்டு வைத்தியனிடம் திரும்பவும் சென்று, முன்பு எனது சருமக்குறிகளை சாமர்த்தியமாக குணப்படுத்தினீரே, எனக்கு இப்பொழுது இருக்கும் இன்ன வியாதியையும் குணப்படுத்தும் என்று கேட்கிருன். ஆனுல் ஆரம்பத்திலிருந்த சருமக் குறிகளின் சிகிற்சையிலேயே வைத்தியன் தோல்வி அடைந்துவிட்டான் என்பதை வைத்தியன் ஒத்துக் கொள்கிறதில்லை. வைத்தியனுடைய மடமையின் நிமித்தம் நோயாளி மரிக்கப்போகிருன் என்பதை வைத்தியனும் அறிகிறதில்லை. ஏனெனில் சருமக் குறிகள் மாறியதை பூரண சுகம் என்று நம்புகிருன். அனுல் சருமக் குறிகள் மாறினதால் மாத்திரம் வியாதி குணமடையவில்லை என்பதையும், அதன் விளைவுதான் இன்று தசை மாறுதல்களோடு நோயாளியை பயங்கர கட்டத்தில் கொண்டு விட்டிருக்கிறது என்பதையும் அறிகிறதில்லை.

குறிகள் மாறுவதினுல் மாத்திரம் வியாதி பூரணமாக சுகமடைகிறதில்லை. வியாதியஸ்தனின் அந்தரங்க நிலையும் குணப்படுத்தப்பட வேண்டும். வியாதி சரியான

முறையில் சிகிற்சிக்கப்படும் பொழுது இந்நிலை தானுகவே ஏற்படும். அவனுடைய மனநிலை மாறி இயற்கையான மனிதனுகிவிடுவான்.

அடுத்ததாக வியாதியானது சடுதியான வழியிலும், சாதுவான வழியிலும், நிரந்தரமாகவும் அதாவது திரும்பவும் ஏற்படாத நிலையில் குணப்படுத்தபட வேண்டும். அதிக சக்தி கூடிய வெளிப்பூச்சு மருந்துகளினுல் சருமக் குறிகளை மாற்றுவது சடுதியான குணமடைதல் ஆகாது. ஏனெனில் இந்நிலை நிரந்தரமாக ஏற்படாமல், திரும்பவும் கூடுதல் உக்கிரமத்தோடு ஏற்படும். ஆனுல் சரியான சிகிற்சை முறையில் வியாதி உள்ளிருந்து வெளியாகவும், மேலிருந்து கீழாகவும், குறிகள் தோன்றிய கிரமத்தின் எதிர் கிரம வரிசையிலும் அகற்றப்பட வேண்டும் இவை யாவும் ஹோமியோ முறையில் தான் செய்யமுடியும். நாள்பட்ட வியாதிகள் சரியான முறையில் சிகிற்சிக்கப்படும்பொழுது சரீரத்தின் வெளிப்பாகத்தில் குறிகள் தோன்றுவதை காணலாம். இரத்தாசயம், மார்பு தலை முதலியவற்றின் வியாதிகள் சிகிற்சிக்கப்படும்பொழுது, கை, கால்களின் இணைப்புகளில் வீக்கம் ஏற்படுவதுடன், சருமக்குறிகளும் தோன்றலாம். இவை, வியாதி குணமடைவதற்குரிய குறிகள் என்று அறியாத வைத்தியன், இக்குறிகளுக்காக வேறு மருந்தை கொடுத்து, அவை திரும்பவும் உள் அவயவங்களை தாக்கும் நிலையை உண்டு பண்ணுகிருன். இதன் விளைவு மரணமே. இவ்விதமாக நாள் பட்ட வியாதிகள் சரியான ஹோமியோ முறையில் சிகிற்சிக்கப்படும் பொழுது ஏற்படும் வெளிப்படையான குறிகள், பல வருடங்களுக்கு முன்னுல் நோயாளியால் அனுபவித்து வந்தவையாகவும் இருக்கலாம். இதை நோயாளிகளே ஒப்புக்கொள்வர். வாத நோய் வெளிப் பூச்சு மருந்துகளின் மூலம் சிகிற்சிக்கப்படும் பொழுது, இரத்தாசயத்திற்கு சென்றுவிடும். சரியான ஹோமியோ மருந்து கொடுக்கப்பட்டதும், அது இரத்தாசயத்திலிருந்து மாறி திரும்பவும் வெளிப்படையாய் தோன்றி குணமடையும். இவ்விதம் சிகிற்சிப்பது நோயாளிக்கு சிறிது நாட்கள் சில அசௌகரியங்களை கொடுத்தாலும், உண்மையான வைத்தியன் வெளிக்குறிகள் தோன்றுவது வியாதி குணமடைவதின் அறிகுறிகள் என்பதை

உணர்ந்து, வேறு மருந்துகள் தனியாக அவற்றிற்கு கொடுப்பதில்லை. வாழ்க்கை ஒழுங்குகளை சீர்படுத்துவதின் மூலமும், தத்துவ முறையான ஹோமியோ சிகிற்சையின் மூலமுமே, நாள்பட்ட வியாதிகள் சடுதியாகவும், சாதுவாகவும், நிரந்தரமாகவும், குணப்படுமேயன்றி, இயற்கைக்கு விரோதமான கட்டுப்பாடுகளினலும், புத்திசாலித்தனமற்ற வழிகளினலும் குணமடையாது.

3) நோயாளி கூறும் குறிகளில் இருந்தும், வைத்தியன் அவனை பரிசோதித்து அறிந்து கொள்ளும் குறிகளிலிருந்தும். முதலாவதாக வைத்தியன் அறிய வேண்டியது, நோயாளியில் குணப்படுத்த கூடியவை எவை என்பதாகும். ஏனெனில், நாள்பட்ட வியாதிகளில் ஏற்பட்டிருக்கும் அவயவங்களின் அழிவுகள் யாவும் குணப்படுத்தக் கூடியதல்ல. மனநிலை பாதிக்கப்பட்டு தான் வ்யாதி இதர பாகங்களுக்கு பரவுகிறதேயன்றி, இதர பாகங்கள் தாக்கப்பட்டு, அதன் விளைவால் மன நிலை பாதிக்கப்படுவதில்லை. குணமடைதலும், மன நிலையிலிருந்துதான் இதர பாகங்களுக்கு செல்கிறது. மனக் குறிகள் எழுதப்பட்டு, அவயவம் அவயவமாகவும் குறிகள் எழுதப்பட வேண்டும். இங்ஙனம் சரியான முறையில் குறிகளை பதிவு செய்வதுதான், மெட்டீரியா மெடிக்காவை ஒத்துப்பார்ப்பதற்கு இலகுவாயிருக்கும். ஏனெனில் மெட்டீரியா மெடிக்காவும் ஹனிமானுல் இங்ஙனம் தான் எழுதப்பட்டிருக்கிறது. இவை யாவும், சரியான மருந்தை தெரிந்து கொள்வதற்கு இலகுவாய் இருப்பதுமன்றி, உண்மையான வைத்தியனின் முறையும் இதுவே.

4) ஆகார மாறுதல்கள், ஒத்துக்கொள்ளாத சீதோஷ்ணங்களுக்கு தன்னை வெளிப்படுத்தல், சதுப்பு நிலங்களில் வசித்தல், வாழ்க்கை ஒழுங்குகள் சீர்குலைதல் முதலியவையும், இன்னும் பல காரணங்களும் வியாதியை உண்டுபண்ணி அவற்றை வளர்க்குமாதலால், வியாதிகள் ஏற்படக்கூடிய காரணங்களை சுகமுள்ளவர்களுக்கு எடுத்துக்கூறி அவர்களை அதிலிருந்து பாதுகாப்பது வைத்தியனின் மேன்மையான வேலையாகும். வியாதிகள் தீவிரமாய் இருக்கும் பொழுதே சரியாய் சிகிற்சிக்கப்

படாவிடில் நாள்பட்ட வியாதிகளாய் மாறி, சரீரத்தின் முக்கிய உள் அவயவங்களில்போய் அமர்ந்துகொள்ளும்.

5) தீவிர வியாதிகள் இருவகைகளாக பிரிக்கப்பட்டிருக்கின்றன. (1) தீவிர மியாசங்களினால் ஏற்படுபவை. (2) சாயல்பிடி வியாதிகள் (Mimicking). இவைகள் தான், சதுப்பு நிலங்கள், துக்கம், அழுக்கடைந்த ஆடைகள் முதலிய வெளிக்காரணங்களால் ஏற்படுபவை. முதலாவது கூறப்பட்ட மியாசங்களினால் ஏற்படும் வியாதிகளுக்கு குறித்த கால வரை உண்டு ஆனால் நாள்பட்ட மியாசங்களுக்கு, குறித்த காலவரை கிடையாது. தீவிர மியாசங்களின் காரணம் நாள்பட்ட மியாசங்களே என்று ஹனிமான் கூறுகிறார். மனிதன் தன் வாழ்க்கை ஒழுங்குகளிலிருந்து தவறும் பொழுது, வெளிக்காரணங்களால் சுகவீனம் அடைகிறான். இந்நிலையில் அவன் மன நிலையும் கூடுதலாக பாதிக்கப்படுகிறது. எனவேதான் குறிகளை சேகரிக்கும் பொழுது மனக்குறிகளுக்கு கூடுதல் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று ஹனிமான் கூறுகிறார். வியாதிகள் யாவும் அந்தரங்க சீர்கேட்டினால் ஏற்படுபவையே. வியாதிகளுக்கு காரணம் அணுக்கள் என்று கூறுவது தவறு. அணுக்கள் வியாதியின்பின் தான் உண்டாகின்றன. அணுக்கள் எவ்வளவு கூடுதலாக இருக்கின்றனவோ அதை ஒத்துவிஷம் குறைவாக இருக்கும். விஷஜுரத்தில் வெளியாகும் மலம், வெளியான உடன் குறைந்த அணுக்கள் கொண்டதாகவே இருக்கும் என்றிருப்பினும், இந்நிலையில் தான் அது கூடுதல் விஷம் கொண்டது. நேரம் செல்லச்செல்ல அணுக்கள் கூடுதலாய் உண்டாகி விஷம் குறைந்து விடும் வியாதியின் அழுக்குகளிலிருந்து நாம் தயாரிக்கும் மருந்துகள் மிகவும் பயன்படுபவை. க்ஷயரோகம் அதன் அணுக்களால் உண்டாகும் வியாதியல்ல. அதன் விஷத்திலிருந்தே (Virus) உண்டாகிறது.

6) எந்த அவயவம் சுகவீனத்தில் தாக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுக்காமல், நோயாளியின் உணர்ச்சி, அவனுடைய மன நிலை, குறிகளின் ஏற்றம் இறக்கம், முதலிய யாவற்றிற்

கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று ஹனிமான் கூறுகிறார். அவயவங்களின் சீர்கேடான நிலைக்கு ஏன் முக்கியத்துவம் கொடுக்கக்கூடாதென்று ஹனிமான் கூறுகிறார் என்றால், அவயவங்கள் சீர்குலைந்த நிலை அடைவதற்குமுன்பே மனிதன் நோயாளியாகிவிடுகிறான். அவயவங்களில் காணப்படும் மாறுதல்கள் நோயாளியின் சரியான நிலையை எடுத்துக் காட்டுவதில்லை. மேலும் அவயவங்களில் ஏற்பட்டிருக்கும் தசை மாறுதல்கள் மருந்தை தெரிவு செய்ய நமக்கு பயன்படுவதில்லை. ஆனால் தசை மாறுதல்களின் நிலைமையை அறிந்து கொள்ளுதல் மூலம் வியாதி எவ்வளவு தூரம்வளர்ச்சி அடைந்திருக்கிறது என்பதை அறிந்து கொள்ள முடியும். மெட்டீரியா மெடிக்காவின் அறிவும், தசைமாறுதல்களின் அறிவும் வெவ்வேறு சாஸ்திரமாகும். தசை மாறுதல்கள் ஏற்படும்முன்பே, நோயாளி கூறிய குறிகளுக்கும் உணர்ச்சிகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் வைத்தியன், அவன் அந்தரங்கமாக நோய்வாய்ப்பட்டிருக்கிறான் என்பதை உணர்ந்து சிகிற்சிப்பதின் மூலம், தசை மாறுதல்கள் ஏற்படாமல் அவனை பாதுகாத்து, அவனை மரணத்திலிருந்து இரட்சிக்க முடியும்.

7) வெளிக்காரணங்களால் ஏற்படும் வியாதிகள் மியாசங்களால் ஏற்படும் வியாதிகளின் சாயல் கொண்டவையாய் இருந்தாலும். வெளிக்காரணங்கள் மாற்றப்படும்பொழுது வியாதியும் அதிகமாய் குணமடைந்துவிடும் தொழிலில் ஏற்படும் தோல்வி, இளம் பெண்களுக்கு காதலில் ஏற்படும் தோல்வி முதலிய காரணங்கள் ஒரு குழப்பமான நிலையை (Indisposition) உண்டுபண்ணுமேயன்றி, உண்மையான வியாதிகள் அல்ல. இக்காரணங்கள் பகிரங்கமானவை (Apparent). இவ்விதமான வெளிக்காரணங்களையும், பகிரங்கமான காரணங்களையும் வைத்தியன் தனித்தனியாக அறிந்து கொள்ள வேண்டும். அகற்றக்கூடிய காரணங்களை உடனடி அகற்ற வேண்டும். அவயவங்களில் காணும் மாறுதல்களை மாத்திரம் குணப்படுத்துவது, நோயாளியை பூரணமாக குணப்படுத்துவது ஆகாது. வெளிக்குறிகளை வெளிப்பூச்சு மருந்துகளின் மூலம் அகற்றுவதும் பூரணகுணமடைதல்

ஆகாது. அந்தரங்க மனிதன் குணப்படுத்தப்படும் பொழுது வெளிக்குறிகள் தாஞகவே மாறிவிடும். மருந்துகளையும் அவற்றின் குறிகளையும் நன்ருய் அறிந்து, நோயாளியை அந்தரங்கமாகவும் குணப்படுத்துபவனே உண்மையான வைத்தியன்.

10, & 11) மனிதனின் அந்தரங்க நிலை சீர்குலையும் பொழுது, அந்நிலை குறிகளின் மூலமும், உணர்ச்சிகளின் மூலமும் வெளிப்படுகின்றன. வியாதியும், வியாதிகளின் விளைவுகளிஞல் காணப்படும் குறிகளும் வித்தியாசமானவை என்பதை ஹோமியோபதி வைத்தியன் அறிந்து கொள்ள வேண்டியது மிக முக்கியம். வியாதிகளின் விளைவுக்காக மருந்து கொடுப்பது நோயாளியை குணப் படுத்தாது. வியாதியின் விளைவுகளுக்கு முந்திய நிலையின் குறிகளுக்கு ஒத்த மருந்து கொடுக்கப்படும்பொழுது வியாதியின் விளைவுகள் தாஞகவே மாறிவிடும். மலம் கழியும்பொழுதும், சிறுநீர் பிரியும்பொழுதும், அந்தந்த அவயவங்களில் ஏற்படும் உணர்ச்சிகள் மிக முக்கிய குறிகள் ஆகும். நோயாளியின் சுற்றத்தாரால் கூறப்படும் குறிகளிலிருந்து நோயாளி வியாதி அடைவதற்கு முன் இருந்த நிலையை, நாம் அறிந்துகொள்ள முடியும். அந்நிலையையும் தற்போது இருக்கும் நிலையையும் ஒத்து பார்க்கும்பொழுது, தற்பொழுது இருக்கும் நிலை, எதிஞல் ஏற்பட்டது என்று கண்டுகொள்ள முடியும். உதாரணமாக, மருந்துகளிஞல் கூட நோயாளியின் நிலை மாற்றப் படலாம். இங்ஙனம் ஒத்துக்கொள்ளாத மருந்துகளின் மூலம் ஏற்படும் மாறுபாடான நிலைக்கு, ஹோமியோ முறையில் சில மருந்துகளை மெட்டீரியா மெடிக்காவில் பார்க்கலாம். பல வருடங்கள் இங்ஙனம், முந்திய நிலையையும் தற்பொழுதுள்ள நிலையையும், நோயாளிகளில் கவலையாய் அறிந்துகொள்ளும் வைத்தியன், நாட்கள் செல்லச்செல்ல, தன் அனுபவத்தின் மூலம், ஆரம்ப நிலை குறிகளில் இருந்து அடுத்ததாக நோயாளிக்கு சப்பவிக்க போவது என்ன என்பதை கிரகித்துகொள்ள முடியும். இவ்விதமாக பற்பலவித குறிகளை ஹோமியோபதியர்கள் கேட்டறிவதை மற்றவர்கள் பரிகசிக்கலாம். ஆஞல், அவர்கள் தங்கள் சிகிற்சையில் காண்பது தோல்வியே சரீர பரீட்சையும் மிகவும் முக்கியமானதே. சரீர பரீட்சை

யில் நாம் கண்டுகொள்ளும் குறிகளும், நோயாளியிடம் இருந்தும் அவன் சுற்றத்தாரிடம் இருந்தும் நாம் அறிந்துகொள்ளும் குறிகளும் சேர்ந்து, சரியான ஹோமியோ மருந்தை தெரிவு செய்வதற்கு வேண்டிய உண்மையான நிலையை வெளிப்படுத்தும்.

13) காரணங்களினல் ஏற்படும் விளைவுகளையே நாம் பொருளென கண்டுகொள்ள முடியும். பொருள் என்றோ, அல்லது உணர்ச்சிகளின் மூலமோ நாம் அறிந்து கொள்வதை மாத்திரம் அலோபதியர்கள் விசுவாசிப்பர். ஆனல் அது தவறு. காரணங்கள் கண்டுகொள்ளக் கூடாதவை. ஆனல் அவற்றின் விளைவுகளை நாம் கண்டுகொள்ள முடியும். நமது மருந்துகள் பற்பல வீரியங்களில் எவ்வளவு சக்திவாய்ந்தவை என்பதை பொருளெனக் கண்டு கொள்ள முடிவதில்லை. ஆனல் சோருவுக்கு எதிரான மருந்துகள், நோயாளியின் பயங்கரமான நிலையைக் கூட ஆச்சரியப்படத்தக்க நிலையில் எவ்வளவு சுலபமாக குணமாக்குகிறது என்பதை நாம் அறிந்துகொள்ள முடிகிறது.

14) குணப்படுத்தக்கூடிய வியாதிகள் யாவும் குறிகளின் மூலமும் அறிகுறிகளின் மூலமும் தம்மை வெளிப்படுத்துகின்றன. குணப்படுத்தமுடியாத வியாதிகளுக்கு குறிகளும் அறிகுறிகளும் மிகக் குறைவாக இருக்கும்

15) மனிதன் மூன்று நிலைகளில் காணப்படுகிறன். 1) இயற்கையான நிலை. 2) இயற்கையான வியாதிகளின் மூலம் ஏற்படும் நிலை. 3) செயற்கையான காரணங்களின் மூலம் ஏற்படும் நிலை. ஒவ்வொரு நிலைக்கும் உள்ள தனி மொத்தக் குறிகளுக்கு ஒத்த மருந்தை தெரிவு செய்ய வேண்டுமேயன்றி வியாதிகளின் பெயர்களை வைத்து மருந்துகளை தெரிவு செய்யக்கூடாது.

16) ஆர்கனனின் பதினருவது பகுதியில், ஹனிமான் சரீரம் எப்படி சுகவீனமடைகிறது என்பதையும், சுகவீனத்தை எப்படி சுகமாக்க முடியும் என்பதைபற்றியும் குறிப்பிடுகிறர். அதிர்ச்சிகளினல் ஏற்படும் நிலை, எவ்வித மியாசங்களையும் சரீரத்தில் உண்டுபண்ணமல் மாறிவிடும். தீவிரவியாதியோ, நாள்பட்ட வியாதியோ அவனுக்கு உண்டாகாது. எனவே உள் இருந்து வெளி

யாக சரீரத்தை சீர்குலையச் செய்யும் சக்திகளின் மூலமே சுகவீனம் ஏற்படமுடியும். இந்நிலை, குறிகள் மூலம் வெளிப்படுத்தப்படும். மருந்துகளினால் ஏற்படும் வியாதிகள் கூட மியாசங்களினால் ஏற்படும் வியாதிகளைப் போன்றவை அல்ல. அந்தரங்க மனிதன் தாக்கப்படுகிற பொழுதுதான் வியாதிகள் தோன்றுகின்றன. அம்மை நோய் கொப்பளத்தின் சருமத்தை உட்கொள்வதினால் கூடுதலான சீர்கேடுகள் ஏற்படுவதில்லை. ஆனால் அம்மை நோய் இருக்கும் இடத்தில் உள்ள காற்றை சுவாசிக்கும்பொழுது, அம்மை நோயால் வெளியாக்கப்பட்ட அந்தரங்க தத்துவத்தின் மூலம் (Aura), அவனுடைய சரீர நிலைமை இடங்கொடுத்தால், மனிதன் தாக்கப்படுகிறான். இதுதான், அந்தரங்க மனிதன் தாக்கப்படுகிறான் என்பது. ஏனெனில் இவ்வியாதிக்கு குறித்த கால ஏற்றமும் இறக்கமும் உண்டு. இவ்வியாதியின் வெளிப்படையான குறிகள் சருமத்தில் காணப்படுகின்றன. காணக்கூடியதும் உணரக்கூடியதும் கருவிகளால் கண்டுகொள்ளக்கூடிய யாவும் வியாதியின்விளைவுகளே. எனவே சுகவீனம் என்பது, அந்தரங்கமனிதன் பொருளென்று கண்டுகொள்ள முடியாத சக்திகளின் மூலம் தாக்கப்படுதலே. ஆகவே வியாதிகளை குணப்படுத்துவதற்கும், அந்தரங்க மனிதன் தாக்கப்பட்டு அவனுடைய நிலையை மாற்றி அமைக்கும் சக்தி கொண்ட மருந்துகள் தேவை. மருந்துகளின் சக்திதான் முக்கியமே அன்றி அவற்றின் அளவு முக்கியமல்ல. இங்குதான் மருந்துகள் வீரியம் கொடுக்கப்படுவதின் உபயோகத்தை நாம் கண்டுகொள்ளுகிறோம். தாய் அல்லது மூல பாகத்தில் கொடுக்கப்படுவதைவிட, வீரியம் கொடுக்கப்பட்டு உபயோகிக்கப்படும் மருந்துகள் அந்தரங்க மனிதனை மாற்றி அமைக்கும் சக்திகொண்டவை. இம்முறையை ஹனிமான் கண்டுபிடித்ததனாலேயே நாம் சோரவை குணப்படுத்த முடிகிறது.

**குறிப்பு:** ஆர்கனனில் முக்கிய தத்துவம் என்று கூறப்பட்டிருப்பதே இங்கு அந்தரங்க மனிதன் என்று கூறப்பட்டிருக்கிறது. இவை இரண்டும் ஒன்றே. ஆங்கிலத்தில் ஹனிமான் இதை **விட்டல் சக்தி** (Vital force) என்று கூறுகிறார்.

17) மொத்த குறிகள் அகற்றப்பட்டுவிட்டால் அது தான் குணமடைவதாகும். அவதியுறும் அவயவத்தை எடுத்து விடுவது மொத்த குறிகளை அகற்றுவது ஆகாது. மொத்த குறிகள் என்பதின் பொருள் மிகவும் விசாலமானது மொத்த குறிகள் என்ருல் என்ன என் பதை ஆர்கனனிலும், ஹோமியோபதியின் தத்துவங் களிலும் நாம் படித்திருக்கிரும். மொத்த குறிகளை சேகரிப்பது தான் சரியான மருந்தை கண்டு பிடிப்ப தற்கு உதவும் சரியான மார்க்கம்.

19) மருந்துகள் நிரூபிக்கபடுவதென்பது, சுகமான வர்களில் அவற்றை பரீட்சிப்பதேயாகும். மருந்துகள் என்ன வீரியத்தில் குறிப்பிட்ட குறிகளுக்கு கொடுக்கப் படவேண்டுமென்பதும் வைத்தியன் அறிந்திருக்கவேண் டும். வேண்டாத இடங்களில் கூடுதல் வீரியங்களை கொடுப்பது எதிர்பார்க்கும் பலனை தராது.

20) மருந்துகள் தெரிவு செய்வதில், மெட்டீரியா மெடிக்காவுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமே அன்றி, ஒருவரால் ஒரு வியாதிக்கு விசேஷ ஔஷதமாக புகழப்பட்டிருக்கிறதென்பதினுல், அவ்வியாதி உள்ள எல்லா நோயாளிகளுக்கும் அதே மருந்தை கொடுப்பது ஹோமியோபதியின் தத்துவமல்ல. நாம் தெரிவு செய் யும் மருந்தை, மெட்டீரியா மெடிக்காவில் படித்து பார்க் கும்பொழுது மொத்தக் குறிகளை கவருவதாய் இருக்க வேண்டும்.

26 & 27) இப்பகுதியில் ஹனிமான் சிமிலியா சிமிலிபஸ் முறைப்படி நாம் தெரிவு செய்யும் மருந்து வியாதியைவிட கூடுதல் சக்தி உள்ளதாய் இருக்க வேண்டுமென்று குறிப்பிட்டு இருப்பது மிகவும் முக்கிய மானது. எனவே தான் அவர் மருந்துகளுக்கு வீரியம் கொடுத்து சக்தியைக்கூட்டினுர்.

30, 31 & 32) மருந்துகள் திருப்பிகொடுக்கப்பட வேண்டிய அவசியத்தை நோயாளியின் சரீர நிலையிலும் வியாதியின் உக்கிரமத்திலும் இருந்து அறிந்துகொள்ள வேண்டும்.

33) இப்பகுதியில் ஹனிமான் நாள்பட்ட வியாதி களில் ஒத்துக்கொள்ளாத மருந்துகளை பல நாட்கள்

தொடர்ந்து நோயாளிக்கு கொடுப்பதின் மூலம், பின்பு சரியான சிகிற்சையின் மூலம்கூட வியாதியை குணப் படுத்த முடியாதநிலே ஏற்படும் என்று எச்சரிக்கிருர்.

44) வீரியம் கொடுக்கப்பட்ட மருந்துகளின் மூலம் கூட செயற்கையான மருந்து வியாதிகள் ஏற்படும். ஒத் துக்கொள்ளும் மருந்தைக்கூட வியாதி குணப்பட்டபின் தொடர்ந்து கொடுப்பதின் மூலம் தீவிர மியாசத்தையோ அல்லது நாள்பட்ட மியாசத்தையோ ஒத்த ஒரு நிலே சரீரத்தில் மருந்தின் சக்திக்கு ஏற்றவாறு ஏற்படும் உணர்ச்சி கூடிய சரீரமுள்ளவர்களில் கூடுதல் வீரியங் களே கையாளுவதும், குறைந்த வீரியங்களே அவசியத் திற்கு கூடுதலாக கையாளுவதும், குறிகளுக்கு ஒத்த மருந்தாய் இருந்தால் கூட மேற்கூறிய அபாயத்தை விளேவிக்கும். உணர்ச்சி கூடிய சரீரமுள்ள நோயாளி களில் மிகவும் உயர்ந்த வீரியங்களினுல் ஏற்படும் செயற்கை நிலே அவனுடைய மரணம் வரை அவனு டைய சரீரத்தை விட்டு மாருமல் இருக்கும்.

49) மெட்டீரியா மெடிக்காவின் சரியான அறிவின் மூலம் மாத்திரமே மருந்து கொடுக்கப்படவேண்டுமே யன்றி, பற்பல மருந்துகளே வியாதியை சாந்தி படுத்து வதற்காக உபயோகிப்பது தவறு. இவ்வித ஹோமி யோபதியர்களேவிட அலோபதியர்கள் மேலானவர்கள். மேலும், அனுவசிய மருந்துகளே கையாளுவதின் மூலம், வியாதியின் குறிகள் மறைக்கப்பட்டு, சரியான மருந்தை தெரிவு செய்ய முடியாமல் போய்விடும். நோயாளியின் சுற்றத்தாரின் மதிப்பை பெறுவதற்காக வேண்டாதவை களே செய்து வியாதியை சாந்தப்படுத்தக்கூடாது. இவ் விதமாக அவனே சிகிற்சிப்பது மரணத்தை நோக்கி அவனே விரட்டுவதாகும்.

ஆர்கனனின் இதர பகுதிகளுக்கும் தத்துவ ஞானத் தில் கொடுக்கப்பட்டிருக்கும் வியாக்கியானத்திற்கும் அதிக வித்தியாசமில்லேயாதலால், அவ்வியாக்கினங்கள் ஆசிரியரால் விடப்பட்டிருக்கின்றன.

---

# மெட்டீரியா மெடிக்கா
# (Meteria Medica)

சில முக்கிய மருந்துகள் மாத்திரமே இப்பகுதியில் எழுதப்பட்டிருக்கின்றன. எல்லா மருந்துகளின் குறிகளையும் படிக்க விரும்புவோர் ஆசிரியரால் விரைவில் வெளியிடப்படும் விரிவான மெட்டீரியா மெடிக்காவை படிக்கவும். மேலும் இப்பகுதியில் மிக முக்கிய குறிகள் மாத்திரமே கொடுக்கப்பட்டிருக்கின்றன. குறிகளுடன் சேர்த்து கொடுக்கப்பட்டிருக்கும் இதர மருந்துகளுக்கு அதே குறிகள் உண்டு என்பது பொருள். தடித்த எழுத்துக்களால் குறிப்பிடப்பட்டிருக்கும் குறிகள் மிக மிக முக்கியமானவை (பொ. கூ) என்றால் பொதுவானக் கூறுபாடுகள் என்றும், (ஒ. ம) என்றால் ஒத்துப்பார்க்கவேண்டிய இதர மருந்துகள் என்றும் பொருள்.

## அகோனைட் நெபல்லஸ்.
## (Aconitum Napellus)

(பொ. கூ) மூளை, முதுகெலும்பு, தசைகள், மாம்சதசைகள், முதலியவற்றைத்தாக்கும். பயம், வேதனை முதலியவை சரீரத்திலும், மனநிலையிலும் ஏற்படும். ஜுரத்தோடு திடீரென தீவிரமாய்த்தோன்றும் வியாதிகளுக்கு அதிகமாய் பயன்படும்.

**மனம் (Mind). கூடுதல்பயம், வேதனை, சஞ்சலம் எல்லா வியாதியுடனும் காணப்படும்.** இறந்து போவானென்ற பயமும், இறந்துபோகிற சமயத்தையும், நோயாளிகுறிப்பிடுவான். பயப்பட்டபின்கோழைத்தனமாய்

இருத்தல். (ஆரம், பெல்லடோனு, சிங்கோனு, இக்னேசியா, பாஸ்பரஸ்.) **அமைதியற்று இருத்தல்.** கோபப்படுவதி ஞல் ஏற்படும் குறிகள்.

**தலை (Head).** பார்வை மங்கலுடன், தலை கிறுகிறுப்பும், குமட்டலும் ஏற்படுதல். காந்தும் தன்மையுள்ள தலைவலி.

**கண்கள் (Eyes).** இரத்தம் குவிந்து காணப்படும். காந்தல், சூரிய வெளிச்சத்திற்கு உணர்ச்சி கூடுதல். (சல்பர்)

**காது (Eyes). சப்தங்களுக்கு உணர்ச்சி கூடுதல்.** சப்தங்களை அனுமதிக்க முடியாதிருத்தல். (பெல்லடோனு, லைக்கபோடியம்) வலது காதில் வலி.

**மூக்கு (Nose).** ஒத்துக்கொள்ளாத வாடைகளுக்கு மூகரும் உணர்ச்சி கூடுதல். மூக்கில்இருந்து இரத்தம் வடிதல்.

**முகம் (Face).** பயம்கொண்ட **முகம்.** முகம் பெரிதாவதாயும் வீங்குவதாயும் தோன்றல்.

**வாய் (Mouth). உலர்ந்து இருத்தல்.** குளிர்ந்த, உலர்ந்த காற்றினுல் பல்வலி. வாய் கசப்பு. வெள்ளை நிறம் கொண்ட நாக்கு, நாக்கு வீங்கி இருத்தல், எச்சில் கூடுதல்.

**தொண்டை (Throat).** காந்தலும், உணர்ச்சியற்று இருத்தலும். சிவந்து உலர்ந்து இருத்தல். டான்சில்ஸ் என்ற கோளங்கள் வீங்குதல்.

**இரைக்குடல் (Stomach).** பசியின்மை. காந்தலுடனும், தீராத நிலையுடனும் உண்டாகும் தாகம். சரீரம் சூடாய் இருக்கும் பொழுது குளிர்ந்த பானங்கள் அருந்துவதினுல் ஏற்படும் குறிகள். வேதனை கொண்ட விக்கல். கிருமியும், பச்சை நிறம்கொண்ட சளியும் வாந்தி எடுத்தல்.

**வயறு (Abdomen).** வலது விலாவில் இறுக்கமும், குத்தெடுப்பும் ஏற்பட்டு, மூச்சு திண்றல். வயறு வீங்கி இருத்தல், சிறுநீர் கழிக்கமுடியாதிருத்தல். சிறுகுடலில் காந்தலும், அறுப்பது போன்ற வேதனையும் ஏற்படுதல். அழுத்தம் கொடுப்பதினுலோ, வலது பக்கம் படுப்பதினுலோ வேதனை கூடுதல்.

**மலம். (Stool)** நீர்போன்றது. இரத்தம் வெளியாகும் மூலவியாதிகள். மூலத்தில் கிருமிக்கடி.

**சிறுநீர் உறுப்புகள். (Urinary organs) சிறுநீர்ச் சொட்டு சொட்டாக வேதனையுடன் பிரிதல்.** சிறுநீருடன் இரத்தம் கலந்திருத்தல். சிறு நீர் பிரியாதிருத்தல். (ஏபிஸ், ஹயோசியாமஸ், ஸ்ட்ராமோனியம்)

**ஆண் உறுப்புகள்.** (Male organs) விதைக்கொட்டையில் வேதனை. விதைக்கொட்டை வீங்குதல்.

**பெண் உறுப்புகள். (Female organs)** பயத்தினால் மாதவிடாய் போகாதிருத்தல். கர்ப்பாசயத்திலிருந்து இரத்தப்பெருக்கு (எர்காட், ஹமாமலிஸ், சீகேல், இபிகாக்) பயம், அலைச்சல் முதலியவற்றால் கர்ப்பசிதைவு ஏற்படல்.

**சுவாச உறுப்புகள். (Respiratory organs) குரலடைப்பு.** தசைகள் வியாதியுறுவதால் உண்டாகும் ஜுரம், உலர்ந்த இருமல், மூச்சுத் திணறல். இருமல் எடுக்கும்பொழுதெல்லாம் குழந்தை தொண்டையைப் பிடித்தல். **வாய்வழியாக பிரகாசமான சிவந்த நிறமுடைய இரத்தம் வெளிப்படுதல்.** வலது பக்கமாகப் படுக்க முடியாதிருத்தல்.

**இருதயமும் நாடியும்.** (Heart and pulse) **இரத்தாசயத் துடிப்பு.** (காக்டஸ், கால்காரியா கார்ப்) நெஞ்சில் இறுக்கமான உணர்ச்சி. இடது கை உணர்ச்சியற்ற நிலையோடு கூடிய இருதய வியாதிகள். பலமான நாடி. ஜுரத்தில் ஒழுங்கற்ற நாடி.

**கழுத்தும், முதுகும்.** (Neck and back) **பிடரி வலி.** விறைத்த கழுத்தும், அசைக்கும் பொழுது வேதனையும், வேதனை வலது தோளுக்குப் பரவுதலும். முதுகு வலியால் மூச்சு எடுக்க அவதிப்படல்.

**கை கால்கள்** (Upper & Lower Limbs) **மணிக்கட்டு**களிலும், விரல்களிலும், மொழிகளிலும், தோள் இணைப்புகளிலும் வேதனை. கைகளில் எறும்பு ஊருவது போன்ற உணர்ச்சி. தொடைகளிலும், கால்களின் இணைப்புகளிலும் வேதனை.

**பொதுக்குறிகள்** (Generalities) **இணைப்புகள்** (Joints) வாதத்தால் வீங்கி, சூடாய் இருத்தலும், இரவிலும், மாலையிலும் கூடுதலும். தொடமுடியாத உணர்ச்சி கூடிய வீக்கங்கள். பல மணிக்கூறுகளுக்கு அமைதியற்ற நிலை.

**சருமம்** (Skin) சிவந்தும், பிரகாசமாயும், சூடாயும், வீக்கத்துடனும், கடும் வேதனையாயும் இருத்தல். அங்கும் இங்கும் ஊசி கொண்டு குத்துவது போன்ற உணர்ச்சி. குழந்தைகளின் சருமத்தில் தணப்பு உண்டாகுதல்.

**உறக்கம்.** (Sleep) இரவில் உறக்கமின்மையும், அமைதியற்றிருத்தலும். பயங்கர சொப்பனங்கள்.

**ஜுரம்.** (Fever) தொட்டாலோ, போர்த்திக் கொள்ளாமலிருந்தாலோ, அசைந்தாலோ குளிர்ச்சி ஏற்படல். உறக்கத்தில் சூடான அதிக வியர்வை. சரீர சூடும் தாகமும்.

**ஏற்றம்.** (Aggravation) மாலை, இரவு, இடது பக்கத்தில் படுத்தல், இரவில் படுத்திருக்கும் பொழுது, காலையில் எழுந்திருக்கும் பொழுது, அடைத்த அறை.

**இறக்கம்** (Amelioration) திறந்த வெளிக்காற்று. அமைதியாய் இருக்கும் பொழுது. (வாத நோய்க்கு மாத்திரம்) வியர்வை எடுத்தலின்பின்.

**வீரியம்** 30–வது வீரியம் வரை உபயோகித்தால்போதுமானது. இருதய வியாதிகளில், ஒத்துக்கொள்ளாத குறிகளுள்ள நிலையில் உபயோகித்தால் ஆபத்தை விளைவிக்கும். இம்மருந்தை உபயோகிக்கும் பொழுது, அடுத்தடுத்துக் கொடுக்கவும். மிகவும் தீவிரமாய் வேலை செய்யும் மருந்து.

## எஸ்குலஸ் ஹிப்போகாஸ்டனம்.

## Aesculus Hippocastanum.

**(பொ. கூ)** அடிக்குடலின் நீர்த்தாரைகளில் நடங்கல் ஏற்பட்டு மலச்சிக்கல் அல்லாத முதுகுவலியுடன் கூடிய மூல வியாதிகள் ஏற்படும். வேதனை கூடுதலாய் இருந்தாலும் அதிகமான இரத்தப் பெருக்கு இராது. கல்லீரலுக்கு இரத்தத்தைக் கொண்டு செல்லும் நரம்பில் இரத்தம்

குவிதல் ஏற்படும் பொழுது மலச்சிக்கல் ஏற்படும். அலுவல்களில் ஈடுபட முடியாத நிலையை முதுகுவலி ஏற்படுத்தும்.

**தலை. முற்கோபம்.** தலைவலி. நெற்றி அழுத்தப்படுவதுபோன்ற உணர்ச்சி. வலது புறத்திலிருந்து இடது புறத்திற்கு நெற்றி வழியாய்ச்செல்லும் தலைவலி. தலைவலி அதிகாலையில் கூடுதல். இருக்கும் பொழுதும், நடக்கும் பொழுதும் தலைகிறுகிறுப்பு.

**கண்கள்.** சூடாய் இருத்தலும், கண்ணீர் வடிதலும், கண்களின் நரம்புகள் தடித்திருத்தலும்.

**மூக்கு.** காற்று குளிராய்த் தோன்றும். காற்றிற்கு உணர்ச்சி கூடுதலாய் இருத்தல். அடி மூக்கில் வேதனை.

**வாய்.** உலோகங்களின் சுவை. எச்சில் கூடுதல். நாக்கில் அதிக அழுக்குப் படிந்திருத்தல்.

**தொண்டை.** சூடாய் இருத்தலும், விழுங்கும்பொழுது காதுகளில் ஊசிகொண்டு குத்துவது போன்ற வேதனை ஏற்படுதலும். இனிப்பான சுவையுடன்கூடிய கயிறு போன்ற கபம்.

**இரைக்குடல்.** கல் இருப்பதுபோன்ற பாரமும், ஆகாரத்தின் 3 மணி வேளையின்பின் வேதனையும்.

**வயிறு.** தொப்புளிலிலும், கல்லீரல் பர்கத்திலும் வேதனை. மஞ்சள் காமாலை.

**மலக்குடல்.** (Rectum) **மலக்குடல் நிறைய சிறிய குச்சிகள் இருப்பது போன்ற உணர்ச்சி.** மலவாயில் புண்கள். மலங்கழித்தபின் அதிகவேதனையும், மலக்குடல் வெளியில் தள்ளுதலும். மூலமுளை. கண்டுகொள்ளக்கூடாத உள்மூலமும், முதுகு வேதனையும், இரத்தப் பெருக்கும், பெண்களுக்கு மாதவிடாய் சம்பூரணமாக நின்றுபோகும் வயதில் இக்குறிகள் கூடுதலும். மூலத்தில் கிருமிக்கடியும் கிருமிகள் வெளிப்படுதலும். **மூலத்தில் காந்தல்.**

**சிறுநீர் உறுப்புகள்.** அடிக்கடி சிறுநீர் பிரிதலும் குறைவாயும், சூடாயும் இருத்தலும். இடது மூத்திரக் காயில் வேதனை. (Kidney)

**ஆண் உறுப்புகள்.** மலம் கழியும் பொழுது, ஊற்ரும்பெட்டியின் (Bladder) முன் பாகத்திலிருக்கும் கோளத்திலிருந்து (Prostate gland) இந்திரியம் போன்ற நீர் (Prostatefluid) வெளிப்படுதல்.

**பெண் உறுப்புகள். புபிஸ் (Pubis) என்ற எலும்பின் பின் பாகத்தில் எப்பொழுதும் துடிப்பு.** முதுகுவலியோடு கூடிய வெள்ளை படுதல் (Leucorrhoea) மாதவிடாயின் பின் வெள்ளை படுதல் கூடுதல்.

**கை, கால்கள்.** வேதனையும், மிகவும் கடுமையான நோவுணர்ச்சியும். விரல்களின் நுனிகள் உணர்ச்சியற்றிருத்தல்.

**முதுகு.** தோள்பட்டை எலும்புகளுக்கிடையில் வேதனை. முதுகெலும்புப்பாகம் பலவீனமாய்த் தோன்றல். இடுப்பு வலி. நடக்கும்பொழுதும் குனியும்பொழுதும் இடுப்பு வலி கூடுதல்.

**ஜுரம்** மாலை 4 மணிக்கு குளிர். மாலை 7 மணி முதல் இரவு 12 மணி வரை ஜுரம். மாலை ஜுரம். ஜுரத்தோடு அதிக வியர்வை.

**ஏற்றம்.** காலையில் எழுந்ததும், அசைதல், நடத்தல் மலம் கழிந்ததும், ஆகாரத்திற்கு பின், மத்தியானம் நின்றுகொண்டிருத்தல்.

**இறக்கம்.** திறந்த வெளிக்காற்று.

**வீரியம்.** தாய் திராவகம் முதல் எல்லா வீரியங்களும் உபயோகிக்கலாம்.

## ஏலியம் சீபா. (Allium Cepa)

(பொ. கூ) உறைப்பான கூடுதல் நீர்வடியும் ஜலதோஷம். நமைச்சல் எடுக்காமல் கண்களிலிருந்து நீர் வடிதல்.

**தலை.** ஜலதோஷத்துடன் கூடிய, நெற்றியில் மாத்திரம் வேதனை எடுக்கும் தலைவலி. மாதவிடாய் காலத்தில் தலைவலி இல்லாதிருத்தல். மாதவிடாய் நின்றதும் திரும்பவும் தலைவலி ஏற்படுதல்.

**கண்கள்.** காந்தலும், உறைப்பான கண்ணீர் வடிதலும். **வெளிச்சத்தில் கண்கள் கூசுதல்.**

**காதுகள்.** காதுகளின் தாரைவரை ஊடுருவிச் செல்லும் காதுவலி.

**மூக்கு.** சூடான அறைக்குள் சென்றதும் தும்மல் எடுத்தல். **உறைப்பான கூடுதல் நீர்வடிதல்.** அடிக்கடி ஜலதோஷம் பிடித்தல். மூக்கில் சதை வளருதல்.

**இரைக்குடல்.** அதிகப்பசி, தாகம், ஏப்பமெடுத்தல், குமட்டல்.

**வயிறு.** உறுமும் சப்தம், துர்நாற்றமுள்ள காற்று வெளிப்படுதல், வயிற்று வலி.

**மலக்குடல்.** துர்நாற்றமுள்ள காற்ருேடு கூடிய வயிற்றுப்போக்கு. மூலவாயில் கடி, மலக்குடலில் அதிக உஷ்ணம்.

**சிறுநீர் உறுப்புகள்.** ஊற்ரும்பெட்டியும், சிறுநீர் வெளியாகும் தாரையும் பலவீனமடைந்தது போன்ற உணர்ச்சி. ஜலதோஷத்துடன், சிறுநீர் கூடுதலாய் பிரிதல், சிவந்த சிறுநீரும், சிறுநீர் தாரையில் காந்தலும்.

**சுவாச உறுப்புகள்.** குரலடைப்பு, **உள்மூச்சு வாங்கும்பொழுது கடுமையான** இருமல். தொண்டையின் பின் பாகத்தில் கூச்சம். குரல்வளை கிழிக்கப்பட்டிருப்பது போன்ற உணர்ச்சி.

**கை, கால்கள்.** பலமில்லாத இணைப்புகள், விரல்களிலும், நகக்கண்களிலும வேதனை.

**உறக்கம்.** தலைவலியும், சோம்பலும், கொட்டாவி விடுதலும். பலவித சொப்பனங்கள். காலையில் 2 மணிக்கு உறக்கம் விழித்தல்.

**ஏற்றம்.** மாலையிலும், சூடான அறையிலும்.

**இறக்கம்.** திறந்த வெளிக்காற்றும் குளிர்ந்த அறையும். (ஒ. ம.) ஜெல்சமியம், ஈப்ரேஷியா, அகோனைட், இபிகாக்.

**வீரியம்.** மத்திய வீரியங்கள் வரை உபயோகித்தால் போதுமானது.

## அலு சொகட்ரிஞ Aloe Socotrina.

(பொ.கூ) வியாதியின் குறிகளும், கூடுதல் மருந்துகள் அருந்தியிருப்பதால் ஏற்பட்டிருக்கும் குறிகளும் கலந்திருக்கும் நிலமையில், இம்மருந்து அவயவங்களின் வேலையைச்சீர்படுத்த மிகவும் பயன்படும். எப்பொழுதும் உட்கார்ந்திருக்கும் ஜீவியத்திஞல் (Sedentary life) ஏற்படும் கெடுதல்கள். நீர் தேகமுடையவர்களுக்கும் உணர்ச்சிகூடிய சரீரமுள்ளவர்களுக்கும் அதிகமாய் பயன்படும்.

**தலே.** தலே வலியும், இடுப்பு வலியும், குடல் வியாதிகளிலும், கர்ப்பாசய வியாதிகளிலும் மாறி மாறி வருதல். மன வேலேக்கு பிரியமில்லாதிருத்தல். **நெற்றியின் மேல் பாகத்தில் வேதனேயும், வேதனேயோடு கண்கள் பாரமாய்த் தோன்றி அவைற்றை அசப்பூரணமாக அடைக்கத் தோணுறுதலும்.**

**கண்கள்.** நெற்றி வேதனேயில் கண்களேச்சுருக்கி மூடுதல். கண்களுக்கு முன் சிறகடிப்பதுபோல் தோன்றல். கண்கள் சிவந்து மஞ்சள் நிறங்கொண்ட பார்வை.

**முகம்.** உதடுகள் சிவந்திருத்தல்.

**காதுகள்.** சவைக்கும் பொழுது காதுகளில் நறு நறுவென்று கேட்டல்.

**மூக்கு.** நுனி குளிர்ச்சியாய்த் தோன்றல். காலேயில் எழுந்ததும் இரத்தம் வடிதல்.

**வாய்.** கசப்பானதும், புளித்ததுமான சுவை. சுவையற்ற ஏப்பம். உதடுகள் உலர்ந்தும், வெடித்தும் இருத்தல்.

**தொண்டை.** கட்டியான, இறுகிய கபத்துண்டுகள்.

**இரைக்குடல்.** மாம்சத்திற்கு வெறுப்பு. காய்கனிகளின் சாறுக்கு விருப்பம். ஆகாரத்திற்குப்பின், வாயுப்பொருமலும், மலக்குடலில் துடிப்பும், ஜனனேந்திரிய உறுப்புகளில் நமைச்சலும்.

**வயிறு.** தொப்பிளேச்சுற்றி வேதனேயும், அழுத்திஞல் கூடுதலும். கல்லீரலின் பாகம் நிரம்பியிருப்பது போன்ற உணர்ச்சி. வயிறு நிரம்பியும், கனமாயும், சூடாயும்,

பொருமியும் தோன்றல். வயிற்றுப்பெருக்கு உண்டாவது போன்ற உணர்ச்சி. கீழ்நோக்கி அழுத்தம் கொடுத்து அடிக்குடலில் கலக்கத்தை உண்டுபண்ணும் கூடுதலான வாய்வு. முதுகெலும்பின் அடிப்பாகத்திலுள்ள எலும்பிற்கும், புபிஸ் என்ற எலும்பிற்கும் இடையில் அடைப்பு இருப்பது போன்ற உணர்ச்சியும், மலம் கழிக்கத் துரிதப் படலும். மலம் கழிப்பதற்கு முன்பும், மலம் கழிக்கும் போதும் வேதனை.

**மலக்குடல்.** எப்பொழும் கீழே தள்ளப்படுவது போன்ற உணர்ச்சியும், இரத்தப் பெருக்கும், புண்களும், சூடாயும் இருத்தல். இக்குறிகள் குளிர்ந்த ஜலத்தினுல் சாந்தியடையும். மலவாயின் மாம்ச தசைகள் பலனற்றிருப்பது போன்ற உணர்ச்சி. **வாய்வு கழியும்பொழுது மலமும்** கழிந்துவிடுமோ என்ற பயம். முயற்சியின்றி, அறிந்து கொள்ள முடியாமலே மலம் கழிதல். **கூடுதல் சளியும் மலம் கழிந்தபின் மலக்குடலில் வேதனையும்.** மூலமுளை திராட்சைக் குலையைப்போல் வெளியில் தள்ளியிருத்தல். மலக்குடலிலும், மலவாயிலும் காந்தல்.

**பெண்ணுறுப்புகள்.** மாதவிடாய் காலத்திலும், நின்று கொண்டிருக்கும் பொழுதும் மலக்குடல் கீழே தள்ளப் படுவது போன்ற உணர்ச்சி. கர்ப்பாசயம் பாரமாய்த் தோன்றி அதிகம் நடக்கமுடியாதிருத்தல். பிரசவவேதனை போல் இடுப்பு வேதனையும், அவ்வேதனை கால்களுக்கு பரவுதலும். மாதவிடாய், காலத்திற்கு முந்தியும், அதிக மாயும் இருத்தல்.

**சிறுநீர் உறுப்புகள்.** முதிர்ந்த வயதில் மூத்திரம் அடக்க முடியாதிருத்தல். பிராஸ்டேட் கோளம் பெரிதாயிருத்தல். குறைவான, கட்டி நிறங்கொண்ட சிறு நீர்.

**ஏற்றம்.** அதிகாலையும், சூடும், சூடான காலமும், ஆகாரத்திற்குப் பின்னும், பானங்கள் அருந்திய பின்னும்.

**இறக்கம்.** குளிரும், திறந்த வெளிக்காற்றும்.

**(ஒ.ம)** காளிபைக், லைக்கப்போடியம், ஏலியம் சாடிவா.

**வீரியம்.** பொதுவாக 6-ம் வீரியத்திலிருந்து எல்லா உயர்ந்த வீரியங்கள் வரை உபயோகிக்கலாம். மலக்குடல் வியாதிகளில் 3-வது வீரியத்தில் சில வேளை மருந்து கொடுத்து, பொறுத்துப்பார்ப்பது நல்லது.

## ஆன்டிமணி குரூடம். (Antimony Crudum)

பொ.கூ)முற்கோபம். நாக்கில்கட்டியான வெண்மை நிறம் கொண்ட அழுக்குப் படிந்திருத்தல். உஷ்ணத்திலும் குளிர்ந்த வெள்ளத்தில் குளிப்பதாலும் குறிகள் ஏற்றம் அடைதல்.

**மனம்.** அவனுடைய வியாதியைப்பற்றி கவலையுற்றிருத்தல். பேசுவதற்குப் பிரியமில்லாதிருத்தல். **குழந்தை பிறர் தன்னைப் பார்ப்பதையோ தொடுவதையோ விரும்பாதிருத்தல்.**

**தலை.** தலைவலி உயர்ந்த இடங்களில் ஏறும் பொழுதும், குளிப்பதினாலும், இரைக்குடல் வியாதியினாலும் அதிகப்படல்.

**மூக்கு** வெடித்தும் அழுக்கடைந்துமிருத்தல்.

**முகம்.** பருக்களும், கொப்பளங்களும். மஞ்சள் நிறம் கொண்ட பல சரும வியாதிகள்.

**வாய்.** **வாயின் மூலைகள் வெடித்திருத்தல்.** உலர்ந்த உதடுகள். உப்புச் சுவையுள்ள எச்சில். **வெள்ளை அடிக்கப்பட்டது போன்ற வெண்மையான நாக்கு.** பல்வலி.

இரைக்குடல். **பசி இன்மை. ஊறுகாய்க்கும் புளிப்பான சாதனங்களுக்கும் கூடுதல் பிரியம்.**

**மலம்.** மல வாயில் கடி. வயிற்றுப்பெருக்கும், மலச்சிக்கலும் மாறி மாறி வருதல். புளிப்பான சாதனங்கள், கூடுதல் ஆகாரம் முதலியவற்றால் வயிற்றுப்பெருக்கு. **சளி நிறைந்திருத்தல்.**

**சிறுநீர்.** காந்தலோடும் முதுகு வலியோடும் அடிக்கடி பிரிதல்.

**ஆண்.** விதைக்கொட்டை பையிலும், மர்ம ஸ்தானத்தைச் சுற்றியும் சரும வியாதிகள். ஆண் தன்மை இழத்தல், விதைக் கொட்டைகளும், ஆண் குறியும் மெலிந்து போதல்.

**பெண் உறுப்புகள்.** மாதவிடாய்க்கு முன்பு பல்வலி. மாதவிடாய், சமயத்திற்கு முன்பு வருதலும் அதிகமாய்

இருத்தலும் குளிர்ந்த ஜலத்தில் குளிப்பதினுல் மாத விடாய் அடக்கப்படல், வெள்ளைபடுதல்.

**சுவாச உறுப்புகள்.** சூடான அறைக்குள் செல்லும் பொழுது அதிகரிக்கும் இருமல், சரீரம் கூடுதல் உஷ்ணம் அடைவதின் நிமித்தம் குரல் அடைப்பும், சப்தத்தில் மாறுதல்களும்.

**சருமம்.** (Skin) அஜீரணக் கோளாறுகளோடு கூடிய சரும வியாதிகள், படுக்கையின் உஷ்ணத்தால் சொறி அதிகப்படல். பால் உண்ணி (Wart) (தூஜா, சாபீனு காஸ்டிகம்)

**உறக்கம்.** வயது முதிர்ந்தவர்களில் சோர்போடுகூடிய நீடித்த உறக்கம்.

**ஜுரம்.** உஷ்ணமான அறையில்கூட குளிராய்த் தோன்றல், வாந்தி, ஏப்பம், வெண்மையான நாக்கு முதலியவற்ருேடு கூடிய ஜுரம்.

**சிறுநீர்.** காந்தலோடும், முதுகு வலியோடும் அடிக்கடிப் பிரிதல்.

**ஆண்.** விதைக்கொட்டை பையிலும், மர்மஸ்தானத்தைசுற்றியும் சரும வியாதிகள். ஆண் தன்மை இழத்தல். விதைக் கொட்டைகளும், ஆண் குறியும் மெலிந்து போதல்.

**ஏற்றம்.** மாலையிலும், உஷ்ணத்தாலும், குளிப்பதாலும்.

**இறக்கம்.** திறந்த வெளிக்காற்று, அமைதியாயிருத்தல் (ஒ.ம) பல்சடில்லா, இபிகாக், சல்பர்.

**வீரியம்** மத்திய வீரியங்கள் வரை போதுமானது. தேவைப்பட்டால் உயர்ந்த வீரியங்களும் உபயோகிக்கலாம்.

## ஏபிஸ் மெல்லிபிக்கா. Apis Mellifica

(பொ. கூ) சரீரத்தின் பல பாகங்களில் வீக்கமும், நீர்க் கொள்ளுதலும், சிவந்திருத்தலும், தேனீக்கள் கொட்டியது போன்ற வேதனையும். இறுக்குவது போன்ற உணர்ச்சி. அதிக சோர்பு. மனம் சோம்பலும், உணர்ச்சியற்றிருத்தலும். **கையிலிருந்து அடிக்கடி சாதனங்களை நழுவ விடல்.** மயக்கம். இறந்து போவது போன்ற உணர்ச்சி. படிப்பதற்கும் வாசிப்பதற்கும் மனதை நிலை நிறுத்த முடியாதிருத்தல்.

**தலை.** தும்மலோடு கூடிய தலை கிறு கிறுப்பும், படுத்திருக்கும்போதும் கண்களை மூடும்பொழுதும் கூடுதல். தலையை தலையணையில் அழுத்தி வைத்து சத்தம் போடுதல்.
**கண்கள்.** இமைகள் வீங்கியும், சிவந்தும், நீர் கொண்டும் இருத்தல். சூடானக்கண்ணீர் வடிதல். **ஊடுருவிச் செல்லும் வேதனை திமிர் திமிர் என்று ஏற்படும்.** கண்களில் சீழ் கட்டல். கட்டிகள் உண்டாகுதல். கட்டிகள் திரும்ப வராமல் தடுப்பதற்கும் இம்மருந்து உதவும்.
**முகம்.** வீக்கமும், சிவந்த நிறமும், ஊடுருவும் வேதனையும். தேனீக்கள் கொட்டியது போன்ற வேதனையோடு கூடிய அதிக வீக்கம் கொண்ட சரும வியாதிகள்.
**வாய்.** ஊன் அல்லது எகிர் (gums) வீங்கி இருத்தல். நாக்கு தடித்து, சிவந்து பளபளப்பாயிருத்தல். நாக்கில் புற்று நோய்.
**தொண்டை.** இறுக்கமும், குத்தெடுக்கும் வேதனையும் நெருப்பு போன்ற சிவந்த நிறத்துடன் கூடிய வீக்கமும். மீன் முள் குத்திக் கொண்டிருப்பது போன்ற உணர்ச்சி.
**இரைக்குடல்.** தாகமில்லாதிருத்தல். **பால் சாப்பிட அதிக விருப்பம்.**
**வயறு.** நீர் அடித்தல்.
**மலம்.** அசையும் பொழுது தன்னை அறியாமலே கழிதல் **மலவாய் திறந்திருப்பதுபோல் தோன்றல்.** குத்தெடுக்கும் நோவோடு கூடிய மூல வியாதிகள்.
**சிறுநீர் உறுப்புகள்.** சிறுநீர் கழிக்கும்பொழுது காந்தல். சிறு நீர் குறைவாயும், கட்டி நிறம் கொண்டதாயும் இருத்தல். கடைசி சொட்டுகள் பிரியும் பொழுது அதிகமானக் காந்தல்.
**பெண் உறுப்புகள்.** மர்மஸ்தானத்தின் உதடுகளில் நீர் கொள்ளலும், குளிர்ந்த ஜலத்தால் குறைதலும். வலது முட்டைப்பை (ovary) குறிப்பாய் நீர் கொள்ளுதல். மாதவிடாய் பிரியாதிருத்தல். முட்டைப்பை வேதனையோடு கூடிய அதிகமான மாதவிடாய் வேதனை. அதிகமான இரத்தம் பிரிதல்.
**சுவாச உறுப்புகள்.** குரலடைப்பு, மூச்சுதிணரல். குரல் வளையில் நீர் அடித்தல்; **அடுத்த மூச்சு வாங்க முடியா**

தென்ற பயம்.

**கை, கால்கள்.** நீர் அடித்தல். கால் முட்டுகள் வீங்கியும் பளபளப்பாயும் இருத்தல், குத்தெடுக்கும் வேதனை. முதுகிலும், கை, கால்களிலும் வாத வேதனை. கைகளும் விரல்களின் நுனிகளும் உணர்ச்சியற்றிருத்தல். நீரோடு கூடிய வீக்கங்கள்.

**சருமம்.** நீரோடு கூடியவீக்கங்களும், பிளவைகளும். சரீரம் பூராவும் திடீரென்று வீங்குதல்.

**தூக்கம்.** மத்தியானம் குளிர்ச்சியும், தாகமும் உஷ்ணத்தாலும், அசைவதாலும் கூடுதலும்,வியர்வை எடுத்தலும், உடன் உலர்ந்து போதலும்.

**ஏற்றம்.** உஷ்ணம். தொடுதல், உறக்கத்திற்குப்பின், அடைத்திருக்கும் உஷ்ணமான அறைகள், வலது பக்கம்.

**இறக்கம்.** திறந்த வெளிக்காற்று, குளிர்ந்த ஜலத்தில் குளிப்பது, போர்த்திக் கொள்ளாமலிருப்பது.

**வீரியம்.** எல்லா வீரியங்களும் உபயோகப் படுத்தலாம் இதன் வேலையை அறிந்து கொள்ளப்பல நாட்கள் ஆகும்.

## அர்ஜென்டம் நைட்ரிக்கம்
## Argentum Nitricum.

(பொ. கூ) சரீர நிலையை மன நிலையால் கட்டுப்படுத்த முடியாதிருத்தல். இனிப்பு கூடிய சாதனங்களுக்கு அதிக விருப்பம். அதிக மன வேலையால் மெலிந்துபோன சரீரம்.

**மனம்.** மன நிலை சீர் கெட்டு விடும் என்று நினைத்தல். நரம்பு பலவீனம். ஞாபக சக்தி குறைவு. பயங்கர வியாதி வருமென்ற பயம். **நேரம் மெதுவாய்க் கழிதல். காரியங்களை துரிதமாய் செய்ய விரும்பல். தலை குளிர்ச்சியோடும், நடுக்கத்தோடும் கூடிய தலை வலி.** கிறுகிறுப்பு. துளைக்கும் வேதனையும், இறுகக் கட்டுவதால் வேதனைக்குறைதலும்.

**கண்கள்.** புள்ளி புள்ளியாய்த் தோன்றும் பார்வை. **சீழ் கொள்ளும் கண் வியாதிகள்.** தைப்பதினல் ஏற்படும் கண் வேதனை.

**மூக்கு.** முகரும் சக்தி இல்லாதிருத்தல். தலை வலியோடு கூடிய ஜலதோஷம்.

**முகம்.** முதிர் வயது கொண்ட பார்வை.

**வாய்.** எகிர்களிலிருந்து இலகுவாய் இரத்தம் வடிதல். செம்பு உலோகச் சுவை.

**தொண்டை.** கட்டியான சளியும், அடிக்கடி காறி சுத்தம் செய்ய விருப்பமும். கூடுதல் புகைப் பிடிப்பதினால் ஏற்படும் தொண்டை வியாதிகள்.

**இரைக்குடல்.** அஜீரணக் கோளாறுகளுடன் ஏப்பம் விடுதல். மினுமினுக்கும் சளியுடன் கூடிய வாந்தி. இரைக்குடல் குழி வேதனையுடன் வீங்கி இருத்தல். இனிப்பான பதார்த்தங்களுக்கு அதிக விருப்பம். குடிகாரருக்கு **ஏற்ப**டும் அஜீரணக் கோளாறுகள். இடது விலா எலும்புகளின் கீழ் புண் இருப்பது போன்ற வேதனை. இரைக்குடலில் ஏற்படும் புண்கள்.

**வயறு.** வேதனையும், **அதிக வாயுவோடு கூடிய வயிற்றுப்பொருமலும்.**

**மலம்.** பச்சை நிறமாயும், தண்ணீர் போன்றும், அதிக சப்தத்துடனும் வெளிப்படல். துர்நாற்றம் கொண்ட சளி. ஆகாரம் அல்லது நீர் அருந்தியவுடன் வயிற்றுப் பெருக்கு. மூலத்தில் கடி.

**சிறுநீர் உறுப்புகள்.** இரவும் பகலும் சிறு நீர் தன்னை அறியாமலேயேப் பிரிதல். சிறு நீர்த் தாரையில் காந்தலும், வேதனையும், நமைச்சலும். சிறு நீர் குறைவாயும் இருக்கும். சீழ் வெளியாகும் மேக நோயின் ஆரம்பகாலத்தில் இம்மருந்து பயன்படும். கூடுதலான சீழ் வடிதல். இரத்தம் கலந்த சிறு நீர்.

**ஆண் உறுப்புகள்.** ஆண் தன்மை இல்லாமை. ஸ்திரீயோடு சேர விரும்பும் பொழுது ஆண் குறி தன் விறப்பை இழந்துவிடல். ஸ்திரீ சேர்க்கைக்கு விருப்பமில்லாதிருத்தல். ஸ்திரீ சேர்க்கை செய்யும் பொழுது வேதனை.

**பெண் உறுப்புகள்.** மாதவிடாயின் ஆரம்பத்தில் வாய்வு உபத்திரவம். அதிகமான வெள்ளைப் படுதல். மாதவிடாய் களித்த இரண்டு வாரங்களுக்குப்பின் கர்ப்பாசயத்திலிருந்து இரத்தப்பெருக்கு.

**சுவாச உறுப்புகள். உரத்த சப்தம் செய்தால் இருமல் எடுத்தல்.** தொண்டையில் முடி இருப்பதுபோன்ற உணர்ச்சியும், மூச்சு திணரலோடுகூடிய இருமலும். நெஞ்சை சுற்றி அடை (Bar) இருப்பது போன்ற உணர்ச்சி. இருதயத்துடிப்பும் வலது பக்கமாய் படுத்தால் கூடுதலும்.

**முதுகு.** அதிக முதுகு வலி.
**கை கால்கள்.** நடுநடுக்கமும்,பலவீனமும். பக்க வாதம், குனிந்தால் திமிர் கொண்டிருத்தல். கைகள் உணர்ச்சி யற்றிருத்தல்.
**உறக்கம்.** உறக்கமில்லாமல் இருத்தல். பாம்புகள் காணும் பயங்கர சொப்பனங்களும், சிற்றின்பத்தில் ஈடுபடுவதைப் போன்ற சொப்பனங்களும்.
**ஏற்ற**. உஷ்ணம். இரவு. குளிர்ந்த ஆகாரம். இனிப்பு கூடிய சாதனங்கள். ஆகாரத்திற்குப்பின். மாதவிடாய் காலம். இடது பக்கம்.
**இறக்கம்.** ஏப்பம் எடுத்தல். காற்று.
**வீரியம்.** எல்லா வீரியங்களும் உபயோகப்படும்.

## ஆர்னிக்கா Arnica

(பொ. கூ) அடிபடுதல், விழுதல் முதலியவற்ருல் ஏற்படும் குறிகள்.
**மனம்.** தொடப்படுவதற்கும், யாரும் அடுத்து வருவதற்கும், பயம். சுகவீனமாயிருந்தாலும் தனக்கு ஒன்றுமில்லை என்றுக் கூறல்.
**தலை. சரீரம் குளிர்ச்சியாயும், தலை, சூடாயும் இருத்தல்.** நாட்பட்ட தலை கிறு கிறுப்பு.
**கண்கள்.** புண்கள், மாமிசத்தசைகளில் வாதம் முதலியவற்ருல் பார்வைக்கு சாதனங்கள் இரண்டாய்த்தோன்றல். திரைப்படம் முதலியவை பார்த்தபின் கண்களில்வேதனை
**காதுகள்.** காதுகளினுள் சப்தம் உண்டாகுதலும், காதுகளிலிருந்து இரத்தம் வடிதலும்.
**மூக்கு.** இருமலுக்குப்பின் மூக்கிலிருந்து இரத்தம்வடிதல்.
**வாய். துர்நாற்றம்.** உலர்ந்தும் தாகம்கூடுதலாயும், இருத்தல். பற்கள் பிடுங்கப்பட்ட பின், இரத்தம் நிற்காமல் பாய்ந்து கொண்டே இருத்தல்.
**இரைக்குடல்.** மாமிசமும், பாலும் சுவையற்றிருத்தல். அதிகப்பசி. இரத்த வாந்தி. ஆகாரம் அருந்தும் பொழுது இரைக்குடலில் வேதனை. மேலும் கீழும் செல்லும்வாய்வு. **இரைக்குடல் முதுகெலும்போடு ஒட்டிக்கொண்டிருப்பது போன்ற உணர்ச்சி.**
**வயறு.** குத்தெடுக்கும் வேதனை. வயிற்றுப் பெருக்கில் மலக்குடலில் வேதனையும், அதிகமாய் முக்குதலும். துர்

நாற்றம். இரத்தம் கலந்திருத்தல். தன்னை அறியாமலே கழிதல். க்ஷயரோகத்தில் ஏற்படும் வயிற்றுப் பெருக்கு. இடது பக்கமாய்ப் படுத்தால் கூடுதலும், சிறு நீர் பிரியாதிருத்தலும்.

**பெண் உறுப்புகள்.** பிரசவத்திற்குப்பின் பாகங்கள் நசுக்குண்டு அல்லது உரைந்திருத்தல். பிரசவத்திற்குப் பின் அதிக வேதனை. சம்போகத்திற்குப் பின் கர்ப்பாசயத்திலிருந்து ஏற்படும் இரத்தப்பெருக்கு. குழந்தை கர்ப்பாசயத்தில் குறுக்கே இருப்பது போன்ற உணர்ச்சி.

**சுவாச உறுப்புகள்.** இருதயக் கோளாறுகளினால் ஏற்படும் இருமல். இரவிலும், உறக்கத்திலும், சரீரத்திற்கு அசைவு கொடுக்கும் பொழுதும் கூடுதல். தீவிர டான்சில் வியாதியும், இடது பாகம் வீங்கி இருத்தலும். நிமோனியா வியாதியில் சுவாசகோசங்கள் தன் சக்தியை இழந்துவிடுதல். குரலடைப்பு. இரத்தம்வெளிப்படுதலும், மூச்சுத் திணரலும்.

**இரத்தாசயம்** (heart) **இரத்தாசயத்தில் வேதனை ஏற்பட்டு தோள்பட்டை வழியாக விரல்கள்வரை வேதனை பரவும், ஆஞ்சினா பெக்டோரியஸ்** (Angina pectorias) **என்ற வியாதி.** இரத்தாசயத்தில் குத்தெடுக்கும் வேதனை. இரத்தாசயத்தில் கொழுப்படைதலும், இரத்தாசயம் பெரிதாகுதலும்.

**கை, கால்கள்.** சந்து வாதம் (gout). யாரும் தொட்டு விடுவார்கள் என்ற பயம். முதுகிலும், கை கால்களிலும் அடிபட்டு நொறுங்கியது போன்ற வேதனை. படுக்கை கடினமாய்த் தோன்றல். இடுப்பு வேதனையால் நிமிர்ந்து நடக்கமுடியாதிருத்தல்

**சருமம். கறுத்தும், நீலமாயும் இருத்தல். சிறிய பருக்கள் கூட்டமாய்வருதல்.**

**உறக்கம்.** அதிக சோர்பாய் இருந்தாலும்,உறக்கமில்லாதிருத்தல். மரணம் காணும் சொப்பனங்கள். உறக்கத்தில் தன்னை அறியாமலே மலம் கழிதல்.

**ஜுரம்.** விஷ ஜுரத்தை ஒத்த ஜுரக்குறிகள். சரீரம் பூராவும் நடுங்குதல். சரீரம் குளிராயும் தலை சூடாயும் சிவந்தும் இருத்தல், இரவில் வியர்வை.

**ஏற்றம்.** தொடுதல், அசைதல், அமைதியாய் இருத்தல், கடுங்குளிர்.

**இறக்கம்.** படுத்திருத்தலும், தலையைத் தாழ்த்தி வைத்தலும்.

(ஒ. ம) அகோனைட், பேப்டிஷியா, ஹமாமலிஸ், ரஸ்டாக்ஸ், ஹைப்பரிக்கம்.

**வீரியம்.** எல்லா விரியங்களும் பயன்படும். தாய் திராவகம் வெளிப்பூச்சாக உபயோகப்பட்டாலும், சூடாகவோ, உரிபட்டிரும் சருமத்திலோ பூசக்கூடாது.

## ஆர்சனிக்கம் ஆல்பம். Arsenicum Album.

(பொ. கூ) ஏகதேசம் எல்லா அவயவங்களிலும் தசைகளிலும் வேலை செய்யும் ஓர் மருந்து. மிகவும் உயர்ந்த வீரியத்தில் கொடுத்தால் உயிர் பிரிவதற்கு இலகுவாயிருக்கும். அதாவது நோயாளி நிச்சயமாக மரித்து விடுவான் என்று வைத்தியன் கண்டு கொண்ட பிறகு, உயிர் பிரிவதற்காக நோயாளி அவஸ்தைப்படும் பொழுது இங்ஙனம் சாந்தி மருந்தாக உபயோகிக்கலாம் என்பதே பொருள். ஏனெனில் கூடுதல் அவஸ்தையின்றி நோயாளி மரித்து விடுவான். கூடுதல் மதுபானத்தால் ஏற்படும் குறிகள், ஆகாரவிஷங்கள். விஷக்கடிக்ள் முதலியவற்றிற்கும் பயன்படும்.

**மனம்.** **அதிகவேதனையும் அமைதியற்றுமிருத்தல்.** மரித்து விடுவானென்றும் அல்லது தனியாய் விடப்பட்டு விடுவானென்றும் பயம். குளிர்ந்த வியர்வை. மருந்து சாப்பிடுவதில் பயனில்லை என்று நினைத்தல். நம்பிக்கையின்மையால் இடம் விட்டு இடம் மாறுதல். கஞ்சத்தனமும், சுயநலமும், தைரியமில்லாத நிலையும்.

**தலை.** தலைவலி மாத்திரம் குளிரினால் குறைதலும், இதரக் குறிகள் அதிகப்படலும். ஜன்னியும், ஜன்னியில் சபித்லும். நமைச்சல் எடுத்தலும் செதிழ் பிடித்திருத்தலும். முடியைக் கோர முடியாதிருத்தல்.

**கண்கள்.** **காந்தலும், சூடான நீர்வடிதலும்.** கண்களைச்சுற்றி நீர். **வெளிச்சத்தில் கண்கூசல்.**

**காதுகள்.** கட்டியில்லாத துர்நாற்றமுள்ள சீழ் வடியும் காது வியாதிகள்.

**மூக்கு.** **சருமத்தை உரிக்கும் தன்மையுள்ள நீர் வடிதல்.** மூக்கடைப்பு. மூக்குவீங்கியும், வியர்வை நிறைந்தும் இருத்தல்.

**வாய்.** எளிதில் இரத்தம் கசியும் எகிர். வாயில் வாய்ப் புண். நாக்கில் காந்தலோடு கூடிய வேதனை.
**தொண்டை.** வீங்கியும் நீர் கொண்டும் இருத்தல், காந்தல்.
**இரைக்குடல். ஆகாரத்தைப் பார்ப்பதையும் அதன் வாசனையையும் சகிக்க முடியாதிருத்தல். கூடுதல் தாகம்.** ஒவ்வொரு வேளையும் கொஞ்சம் கொஞ்சமாக அதிக பானம் அருந்தல். ஏதும் குடித்த பின்போ அல்லது உண்ட பின்போ வாந்தி. காந்தலோடு கூடிய வேதனை. இரத்தம், பித்தம், பச்சை நிறங்கொண்ட சளி முதலியவை வாந்தி எடுத்தல். ஆகாரம் இரைக்குடலுக்குப் போக வேண்டியத்தாரை வழியாய்ப்போகாமல், நடுவில் தங்கி இருப்பது போன்ற உணர்ச்சி. **காய்கறி, பழங்கள் முதலியவற்றால் உண்டாகும் குறிகள்.** குளிர்பானம் அருந்துவதால் ஏற்படும் குறிகள்.
**வயறு. நெருப்புக்கனல் தங்கியிருப்பது போன்ற காந்தலோடு கூடிய வேதனை. கல்லீரலும் மண்ணீரலும் பெரிதாகி வேதனைக்கொடுத்தல்.** கிருமி உபத்திரவங்கள். வயறு பொருமி இருத்தல். இருமல் எடுக்கும் பொழுது வயிற்றில் வேதனை.
**மலக்குடல். காந்தலோடுகூடிய வேதனை. துர்நாற்றமும், மலம்கழித்தபின் அதிக சோர்வும், ஆகாரங்கள் அருந்திய பின்பும், பானங்கள் குடித்த பின்பும், இரவிலும், குளிர்ந்த சாதனங்கள் உட்கொள்ளுவதாலும், கூடுதல் மதுபானத்தாலும், கெட்ட மாமிசத்தாலும் கூடுதல்.** வாந்திபேதி நோயில் அதிக வேதனையும், காந்தலோடு கூடிய தாகமும், சோர்பும். இரத்த பேதி. சரீரம் பனிக்கட்டிபோல் குளிர்ச்சியாயிருத்தல். உஷ்ணத்தால் சாந்தி அடையும் கூடுதல் காந்தலுள்ள மூல வியாதி.
**சிறுநீர் உறுப்புகள்.** குறைவாயும், காந்தும், தன்மை உள்ளதாயும், தன்னை அறியாமலே பிரிவதுமாய் இருத்தல். அல்பீமனும், சீழும், இரத்தமும் கலந்திருத்தல். மூத்திரக்காய் வியாதி. நீரழிவு.
**பெண் உறுப்புகள்.** மாதவிடாய் அதிகமாயும் சமயத்

திற்கு முந்தி வருதலும், சூடானதும். காந்தும் தன்மையுள்ளதும், துர் நாற்றமுள்ளதுமான வெள்ளை படுதல்.
**சுவாச உறுப்புகள்.** படுக்க முடியாது. மூச்சு திணறல் வந்து விடும் என்ற பயம். நடுச் சாமத்தில் அதிகப்படும் இழுப்பு. நடுச்சாமத்திற்குப்பின் அதிகப்படும் இருமல். மலந்து படுத்தால் இருமல் கூடுதல். காந்தல் கொண்ட நெஞ்சுவலி, வலது சுவாசகோசத்தின் வழி ஊடுருவிச் செல்லும் வேதனை. இரத்த வாந்தியும், தோள்களுக்கு இடையில் வேதனையும். பானங்கள அருந்துவதின் பின் இருமல்.
**இரத்தாசயம்.** துடிதுடிப்பு, வேதனை, மூச்சு திணறல், மயக்கம். புகை பிடிப்பவர்களுக்கும், புகையிலை உபயோகிப்பவர்களுக்கும் ஏற்படும் இருதய வியாதிகள். இரத்தாசயம் விரிதல்.
**கை, கால்கள்.** நடுக்கம், பலவீனம், மாமிச தசைகள் துடிப்பு முதலியவை. நீரழிவு வியாதியில் உண்டாகும் தசைகள் அழுகிப் போகும் நிலை. கால்கள் வாத நோயால் சூம்பிப் போதல்.
**உறக்கம்.** பல தலையணைகள்வைத்து தலையை உயரமாய் வைக்க விருப்பப்படல். பயங்கரமான சொப்பனங்கள்.
**ஜுரம்.** கூடுதல் சூடு, ஜுரத்திற்குப்பின் அதிக சோர்பு, விட்டுவிட்டுவரும் ஜுரம்,குளிர்ந்தவியர்வை, விஷஜுரம்.
**ஏற்றம்.** குளிர்ந்த காலம், நடுச் சாமத்திற்குப் பின், ஈரமான காலம், குளிர்ந்த பானம், குளிர்ந்த ஆகாரம், கடற்கரை, வலது பக்கம்
**இறக்கம்.** உஷ்ணம், உஷ்ணமான பானங்கள், தலையை உயரமாய் வைத்தல்.
(ஒ. ம) அயோடம், பாஸ்பரஸ், சைனு, வெருற்றம் ஆல்பம்.
**வீரியம்.** குறைந்த வீரியம்முதல் மிகஉயர்ந்த வீரியங்கள் வரை உபயோகிக்கலாம்.

## ஆண்டிமணி டார்டாரிக்கம்.
## Antimony Tartaricum.

(பொ. கூ) சுவாச உறுப்புகளின் வியாதிகளுக்கு அதிகமாய் பயன்படும். பெரிய அம்மை நோய்க்கு மிகவும் பயன்படும்.
**மனம்.** தனியாய் இருக்க பயப்படல்.

**தலை**. கிறு கிறுப்பு. இறுக்கமாய் கட்டியிருப்பது போன்ற உணர்ச்சியோடு கூடிய தலைவலி.

**நாக்கு**, வெண்மை நிறம், சில சமயங்களில் காவி நிற மாயுமிருக்கும்.

**மூகம். குளிர்ந்த வியர்வை.**

**இரைக்குடல்**. பானங்கள் அருந்தியதுவெளிப்பட்டுவிடு தல். வலதுபக்கமாக படுத்திருப்பதை தவிர்த்து, இதர பாகங்களில் படுத்தால் வாந்தி. அடிக்கடி சிறிதளவு குளிர்ந்த ஜலத்திற்கு தாகமும், பழவர்க்கங்களுக்கு விருப்பமும்.

**வயிறு**. வேதனையும், அதிக வாயுவும். சரும வியாதிக ளில் வயிற்றுப்பெருக்கு.

**சிறுநீர் உறுப்புகள்**. சிறுநீர்பிரியும்பொழுதும், பின்பும்தா ரையில்காந்தல். இறுதிசொட்டுகள்இரத்தம்கலந்திருத்தல்

**சுவாச உறுப்புகள்**. குரலடைப்பு. அதிக சளி இருப்பது போல் கிறுகிறுவென்று சப்தம் கேட்டாலும் சிறித ளவே வெளிப்படல். மூச்சு திணறல். இருமலும், மூச்சு திணறலும், வலது பக்கமாய் படுப்பதால் குறைவு.

**மூதுகு**. முதுகுவலி கூடுதல் சிறு சரீர அசைவினல்கூட முதுகு வியர்த்தல்.

**சருமம்**. சரும வியாதிகள். பால் உண்ணி.

**ஜுரம்**. குளிருடனும், நடுக்கத்துடனும் கூடிய ஜுரம். கூடுதல் சூடும், வியர்வையும். முறை ஜுரம்.

**உறக்கம்**, அதிகசோர்பு. எப்பொழுதும்உறங்கவிரும்புதல்.

**ஏற்றம்**. மாலை இரவில் படுத்தபின். உஷ்ணம். பால்.

**இறக்கம்** எழுந்து நேராக அமர்ந்திருத்தல். ஏப்பமெ டுத்தல் கபம் வெளிப்படல்.

(ஒ. ம) காளிசல்ப், இபிகாக்.

**வீரியம்**. மிகக் குறைந்த வீரியங்கள் கொடுப்பதால் குறி கள் ஏற்றமடையலாம். 6 முதல் 30–வது வீரியம் வரை போதுமானது.

## பெசில்லினம்

## Bacillinum.

(பொ. கூ) க்ஷயரோகம், நாள்பட்ட வியாதிகள், வயது முதிர்ந்தவர்களுக்கு உண்டாகும் மூச்சு திணறல், அடிக்

கடி ஜலதோஷம் பிடித்தல்முதலியவற்றிற்கு பயன்படும்,
**தலை.** தலைவலி, தலையில் உண்டாகும் சரும வியாதிகள்.
**வயறு.** வயிற்று வலி, இடுப்பிலுள்ள கோளங்கள் வீங்குதல் காலை ஆகாரத்திற்கு முன்பு திடீரென வயிற்றுப் பெருக்கு. துர்நாற்றமுள்ள வாயுவோடுகூடியமலச்சிக்கல் சுவாச உறுப்புகள். **பழுவாய்த் தோன்றல், மூச்சு திணறல், இழுப்பு.**
**சருமம்.** படர் தாமரை (ring worm). கழுத்திலுள்ளக் கோளங்கள் பெரிதாகுதல்
**ஏற்றம்.** அதிகாலை, இரவு, குளிர்ந்த காற்று
**வீரியம்.** முப்பதிற்கும் கூடுதலான வீரியங்களே கொடுக்கவேண்டும் அடிக்கடி திரும்ப கொடுக்கக்கூடாது. பல நாட்களுக்கு ஒரு தரம் கொடுக்கவேண்டும்.

## பேப்டிஷியா.

## Baptisia.

(பொ. கூ) மாம்ச தசைகளில் அதிகமான வலி. சரீரத்திலிருந்து வெளிப்படும் யாவும் மிகவும் துர் நாற்றமுள்ளதாய் இருக்கும். விஷ ஜுரத்திற்கு தடுப்பு மருந்து கொடுக்கப்பட்டபின் உண்டாகும்குறிகள். பெரியஅம்மை நோய்க்கு மிகவும் பயன்படும்.
**மனம்.** சிந்திக்க முடியாதிருத்தல். மனக்குழப்பம். **சரீரம் உடைந்துபோய் இருக்கிறது என்று எண்ணி உடைந்த துண்டுகளை ஒன்று பண்ணுவதற்காக, படுக்கையில் அங்குமிங்கும் பிரளல்.** பேசிக்கொண்டிருக்கும்பொழுதே உறங்குதல்,
**தலை.** கிறுகிறுப்பு, பெரிதாயும், பாரமாயும் தோன்றல். விஷஜுரத்தில் சீக்கிரம் செவிடாகுதல்.
**வாய்.** எகிர் புண்ணாகுதல். துர் நாற்றமுள்ள மூச்சு. நாக்கில் காந்தல். மஞ்சளோடு கூடிய காவி நிறம் கொண்ட நாக்கும், நுனி நாக்கு பிரகாசமுமாயிருத்தல். பானங்கள் மாத்திரம் அருந்த முடிதல்.
**தொண்டை.** வேதனை, விழுங்குவதற்கு கஷ்டப்படல்
**இரைக்குடல்.** பசி இன்மை, வேதனை.
**வயறு.** வலது பாகத்தில் வேதனை. துர் நாற்றமுள்ள இரத்தம் கலந்த பேதி. முதிர்வயதில் இரத்தபேதி.

**பெண் உறுப்புகள்**. மன சோர்பு, அதிர்ச்சி, சாதுவான ஜுரம் முதலியவற்ருல் கர்ப்ப அலசல் உண்டாகுதல், மாதவிடாய் முந்தியும், கூடுதலாயும் இருத்தல். பிரசவத் திற்குப் பின் உண்டாகும் ஜுரம்.
**சுவாச உறுப்புகள்**, மூச்சு திணறல், நெஞ்சில் இறுக்க மான உணர்ச்சி.

**முதுகும், கை, கால்களும்**. வேதனையும், புண்ணுய் இருப்பது போன்ற வேதனையும்.
**உறக்கம்**. உறக்கம்இல்லாமலும், அமைதியற்றுமிருத்தல்
**ஜுரம்**. குளிரும் வாத வேதனையும் சரீரம் பூராவும் புண் ணுய் இருப்பதுபோன்ற வேதனை. விஷ ஜுரமும் அதைப்போன்ற இதர ஜுரங்களும்.

**ஏற்றம்**, அறைக்குள்ளும், தண்ணீர் அணுக்கள் ஆகாயத் தில் கலந்திருக்கும் போதுள்ள சூடும்.

(ஒ. ம.) ஆர்சனிக், ப்ரையோனியா, ரஸ்டாக்ஸ், மூரியா யாடிக்ஆசிட், ஆர்னிக்கா, எச்சினேஷியா, பைரஜினியம்.
**வீரியம்**. மத்திய வீரியம் வரை போதுமானது

## பெரிட்டா கார்ப்.

## Baryta Carb.

முக்கியமாக குழந்தை பருவத்திலும், முதிர் வயதி லும் பயன்படுகிறது. மன வளர்ச்சியும் சரீர வளர்ச்சி யும் பாதிக்கப்பட்ட குழந்தைகள். கோளங்கள் வீங்கு தல். கோளங்கள் = (Glands).
டான்சில்ஸ் வீங்குதல். வாலிபப்பருவத்தில், விந்தை சீரழிப்பதின்மூலம் ஏற்படும் அஜீரணக் கோளாறுகள்.
**மனம்**. ஞாபக சக்தி குறைவு. அற்ப சங்கதிகளுக்குகூட அதிக துக்கப்படல்.
**தலை**. கிறுகிறுப்பு, சூரிய வெளிச்சத்தில் நிற்கும்பொழுது தலையில் குத்தெடுத்தல். முடி கழிதல்.
**கண்கள்**. கண்களின் முன் திரைபோடப்பட்டிருப்பதாய் தோன்றல். வெளிச்சத்தில் கூசல். முத்துக்கள் உண் டாகி, பார்வை மங்கல் (CATARACT)
**காதுகள்**. கேட்கும் சக்தி குறைதல். நெறு நெறுக்கும் சப்தம், **காதுகளை சுற்றியுள்ள கோளங்கள் வேதனை**

**யுடன் வீங்கியிருத்தல்.**
**மூக்கு.** மேல் உதடும் மூக்கும் வீங்கியிருத்தலோடுகூடிய ஜலதோஷம்.
**முகம்.** சிலந்தி கூடு இருப்பது போன்ற உணர்ச்சி.
**வாய்.** இரத்தம் கசியும் எகிர். மாதவிடாய்க்கு முன் வலி. வாய் பூராவும் கொப்பளங்கள். நாக்கு திமிரடைதல். காலையில் எச்சில் ஒழுகுதல். ஆகாரம் இரைக் குடலில் போய் சேராமல், உடன் வெளியாகுதல்
**தொண்டை.** கோளங்கள் வீங்குதல், **இலகுவில்ஜல தோஷம் பிடித்தல். ஜலதோஷம் பிடிக்கும்போதெல்லாம் டான்சில் பழுத்தல்.** தொண்டையில் ஏதோ அடைத்திருப்பதுபோன்ற உணர்ச்சி.
**இரைக் குடல்.** கல் அழுத்துவது போன்ற பாரமும், ஏப்பம், விக்கல் முதலியவற்ருல் விடுதலையும், பசியாய் இருந்தாலும் ஆகாரத்திற்கு வெறுப்பு, வயது முதிர்ந்தவர்களில் அஜீரணக் கோளாறு
**வயறு.** கட்டியாயும், பொருமியும் இருத்தல். பசியோடுகூடிய வயற்று வேதனையும் ஆனல்ஆகாரத்திற்கு வெறுப்பும்.
**மலக்குடல்.** மலச்சிக்கல், சிறுநீர் கழிக்கும்பொழுது மூலமுளை வெளியில் தள்ளுதல்.
**சிறுநீர் உறுப்புகள்.** சிறுநீர் தாரையில் காந்தல்.
**ஆண் உறுப்புகள்.** ஸ்திரீ சேர்க்கை விருப்பமில்லாமையும், ஆண் தன்மை இழந்துபோதலும்.
**சுவாச உறுப்புகள்.** வயது முதிர்ந்தவர்களில், உலர்ந்த மூச்சு திணறலோடுகூடிய இருமலும், கபத்தை வெளிப்படுத்த முடியாத நிலையும் நெஞ்சு வேதனையும், சுவாச கோசத்தில் புகை நிறைந்திருப்பதுபோன்றஉணர்ச்சியும்,
**இரத்தாசயம்.** இருதய துடிப்பு இடதுபக்கமாக படுத்தால் கூடுதல். பாதவியர்வை அமுக்கப்படுவதால் உண்டாகும் இருதயக்கோளாறுகள்.
**முதுகு.** பெலனற்ற முதுகெலும்பு.
**கை, கால்கள்.** துர் நாற்றமுள்ள பாத வியர்வை. உணர்ச்சியற்றுப்போதல்.
**உறக்கம்.** உறக்கத்தில் பேசுதல்.
**ஏற்றம்.** வியாதியைப்பற்றி சிந்தித்தால் குறிகள் ஏற்ற

மடைதல். குளித்தல், வேதனைகொண்டபக்கம் படுத்தல் **இறக்கம்** திறந்த வெளிக்காற்று.
(ஓ. ம.) டிஜிட்டாலிஸ், ரேடியம்.
கால்காரியா கார்போனிக்கா என்னும் மருந்தை இதன் பின்னால் கொடுக்கக்கூடாது
**வீரியம்.** எல்லா வீரியங்களும் பயன்படும். ஜலதோஷம் பிடிப்பதை அகற்ற 30 வீரியத்தை உபயோகிக்கவும். மிகவும் மெதுவாகவே வேலை செய்யுமாகையால், தொடர்ந்து கொடுக்கவும்.

## பெல்லடோனா
## Belladonna.

(பொ, கூ) பொதுவாக நரம்பு கிரமத்தில் வேலை செய்யும். குறிப்பாக மூளையில் வேலை செய்யும்.

**மனம்.** கற்பனைகளில் ஈடுபடல். பயங்கர பிராணிகளை காண்பதாய் தோன்றல். ஜன்னி பக்கத்திலிருப்பவர் களை கடித்தலும், அடித்தலும், தப்பிக்க முயற்சித்தலும், தலை. இடதுபக்கமாகவோ, பின்பக்கமாகவோ விழும் கிறு கிறுப்பு. ஜலதோஷம் அமுக்கப்படுவதால் உண்டாகும் தலைவேதனை, ஆகாய விமான பிரயாணிகளுக்கு ஏற்படும் உபாதைகளுக்கு தடுப்பு மருந்தாக உபயோகிக்கலாம். தலைவலி. **சப்தம், வெளிச்சம், படுத்தல், மத்தியானம் முதலிய நிலைகளில் ஏற்றமடைதல்,** வலது பக்க தலைவலி. முடிசிங்காரத்தின்பின் உண்டாகும்தலைவலி.
**முகம்.** சிவந்தும், இரத்தம் குவிந்தும், சூடாயும், வீங்கியும் பிரகாசமாயும் தோன்றல்.
**கண்கள்.** துடிதுடிப்பு, கண்மணிகள் விரிந்திருத்தல்.
**காதுகள்.** வேதனை, இரைச்சல். காதுவலியால் ஜன்னி. உறக்கத்தில் குழந்தை கரைதல்.
**வாய்.** பல்வலி. ஈகிறில் பருக்கள் உண்டாகுதல். புள்ளி புள்ளியாய் இருக்கும் நாக்கு.
**தொண்டை.** சிவப்பு நிறமும் வலது பக்கம் கூடுதலும். டான்சில்ஸ் வீங்கி இருத்தல், இறுக்கமான உணர்ச்சியும் வேதனையும்.
**இரைக்குடல்,** பசிஇன்மை, மாம்சத்திற்கும், பாலுக்கும் வெறுப்பு. **குளிர்ந்த ஜலத்தை விரும்பும் அதிகதாகம்**
**வயறு.** பொருமியும். சூடாயும் இருத்தல். பலவிதமான

தீவிர வயிற்று வேதனை.

**மலம்.** பச்சை நிறமாயும், இரத்தம் கலந்தும் அல்லது வெண்மையாயும் இருக்கும். மலக்குடலில் வேதனை.

**சிறுநீர்.** சிறுநீர் பிரியாதிருத்தல, சிறுநீர்கடுப்பு.

**ஆண் உறுப்புகள்.** விதக்கொட்டைகள் வீக்கம்கொள்ளல். வியர்வை.

**பெண் உறுப்புகள்.** வெளியே தள்ளப்படுவது போன்ற உணர்ச்சி. அதிக சூடு. **மாதவிடாய் சூடாயும், பிரகாசமான சிவந்த நிறம் உடையதாயும் காலத்திற்கு முந்தியும் அதிகமாயும்** இருத்தல். சூடான இரத்தபெருக்கு. துர்நாற்றம்கொண்டமாதவிடாய், மார்பில் கட்டிகள் உண்டாகுதல்.

**சுவாச உறுப்புகள்.** குறுகிய உலர்ந்த இருமலும், இரவில் கூடுதலும். குரல் அடைப்பு முனங்குதல்.

**இரத்தாசயம்.** அதிக துடிதுடிப்பு, இரத்தாசயம் பெரிதாய்த் தோன்றுதல்.

**கை கால்கள்.** இணைப்புகள் வீங்கி சிவப்பாயும் பிரகாசமாயும் இருத்தல் இடம் மாறும் வாத வேதனை. **உறுப்புகள் குளிராய் இருத்தல்.**

**முதுகு.** விறைப்பானக் கழுத்து கழுத்தின் கோளங்கள் வீங்குதல் இடுப்பு வலி.

**சருமம்.** உலர்ந்தும், சூடாயும், வீங்கியும், காந்தலோடும்இருத்தல். கொப்பளங்கள். சிவந்தநிறமும் வெண்மை நிறமும் மாறிமாறி வருதல்.

**ஜுரம்.** மிகவும் உஷ்ணம் கூடிய ஜுரம், **நீராவி போன்ற காந்தலோடுகூடிய உஷ்ணம்.** பாதங்கள் குளிர்ச்சியாயிருத்தல். தலையில் மாத்திரம் வியர்வை. **ஜுரத்தில் தாகமில்லாதிருத்தல்.**

**உறக்கம்.** அமைதியற்றிருத்தலும், சப்தம் போடுதலும், பற்கடிப்பும்.

**ஏற்றம்.** தொடுதல், சப்தம், மத்தியானம், படுத்திருத்தல்,
**இறக்கம்.** சாய்ந்திருத்தல்

**வீரியம்.** எல்லா வீரியங்களும் பயன்படும். தீவிர வியாதிகளில் அடிக்கடி கொடுக்கவேண்டும்.

## பெர்பரிஸ் வல்காரிஸ்
## Berberis Vulgaris

(பொ. கூ) இடம் விட்டு இடம் மாறும் வேதனை. பித்தக் கல், ஈரல் வியாதி, சிறுநீர் உபத்திரவங்களோடுக்கூடிய வாத நோய்.

**தலை.** பெரிதாவதுபோன்ற உணர்ச்சி, கிறுகிறுப்பும் பிரமை இழத்தலும். **தலையில் இறுகிய தல்லா இருப்பது போன்ற உணர்ச்சி.**

**வாய்.** ஒட்டும் தன்மையுள்ள எச்சில்

**இரைக்குடல்.** காலை ஆகாரத்திற்கு முன் குமட்டல்.

**வயறு.** பித்தப்பை பாகத்தில் குத்தெடுப்பு. அழுத்தினால் கூடுதலும், இரைக்குடலுக்கு தாவுதலும். பித்தப்பை வியாதிகளும், மலச்சிக்கலும், மஞ்சள் நிற சருமமும், மூத்திரக் காய்களில் குத்தெடுப்பும், கல்லீரலுக்கும், மண்ணீரலுக்கும், இரைக்குடலுக்கும், இடுப்பிற்கும் பரவுதலும்.

**மலம்.** அடிக்கடி மலம் கழிக்க ஏவப்படல். களிமண் நிறம் கொண்ட வயிற்றுப்பெருக்கும், மூலத்திலும், தொடைகளுக் கிடையிலுள்ள பாகத்தில் (Perineum) காந்தலும். மூலத்தில் சீழ் வடியும் தாரை (Fistula).

**சிறுநீர் உறுப்புகள்.** சிறுநீர் பிரிந்தபின்பும், சிறிது தங்கியிருப்பதுபோன்ற உணர்ச்சி.

**சிறுநீரில் கட்டியான பழுப்பும் சிவந்தநிற வண்டல் படிதலும்.** மூத்திரக்காய்களில் நீர்க்குமிழ்கள் உண்டாவது போன்ற உணர்ச்சி. **சிறுநீர் பிரியும்பொழுது தொடைகளிலும் இடுப்பிலும் வேதனை.**

**ஆண் உறுப்புகள்.** விதக்கொட்டைகளிலும், நரம்புகளிலும் வேதனை.

**பெண் உறுப்புகள்.** சம்போகம்செய்யும்பொழுது வேதனை வெள்ளை படுதல்.

**முதுகு.** கழுத்திலும், முதுகிலும் வேதனை. இரண சிகிற்சைகளுக்குபின் ஏற்படும் முதுகுவலி.

**கை, கால்கள்.** தோள்களிலும், கை, கால்களிலும் வாத வேதனை. அதிக தூரம் நடக்கமுடியாதிருத்தல்,

**சருமம். மலதுவாரத்தைசுற்றிலும் கைகளிலும் சரும வியாதிகள்.**

**ஏற்றம்.** அசைதல், நின்றுகொண்டிருத்தல்
**வீரியம்.** தாய் திராவகம் முதல் 30 வீரியம் வரை போதுமானது, குறிப்பாக இடது மூத்திரக்காய் வேதனைக்கு 10 நிமிடத்திற்கொருதடவை 30 வீரியத்தில் கொடுக்கவும். பற்பல பாகங்களில் நீர்க்குமிழ்கள் உண்டாவதுபோன்ற உணர்ச்சி, இம்மருந்தை தெரிவுசெய்யமிகவும்பயன்படும்.

## ப்ளாட்டா ஓரியன்டாலிஸ்
## Blatta Orientalis

(பொ. கூ.) இழுப்பு நோய். ஆர்சனிக் ஆல்பம் என்ற மருந்து பயன்படாவிட்டால், அதன்பின் இது பயன்படும். கூடுதல் கபம் வெளிப்படும் இருமல்.
**வீரியம்.** இழுப்பு இருக்கும்பொழுதும், இருமல் அதிகமாய் இருக்கும்பொழுதும், தாய் திராவகம் உபயோகிக்கவும். (5—10 சொட்டுகள்) அதன்பின், வீரியம் உபயோகிக்கவும். வியாதியில் முன்னேற்றம்கண்டவுடன்மருந்தை நிறுத்தவும்

## ப்ரையோனியா.
## Bryonia.

(பொ. கூ.) அசைந்தால் கூடுவதும், அமைதியாய் இருந்தால்குறைவதுமானகுத்தெடுக்கும்தன்மையுள்ளவேதனை. வாத வேதனைகளும், வீக்கமும். தனது வேலையை தீவிரமாய் செய்ய வலது பக்கத்தையும், மாலை நேரத்தையும், திறந்தவெளிக்காற்றையும்,குளிர்ந்தநாட்களை தொடர்ந்து ஏற்படும் உஷ்ணமான கால நிலையையும் தெரிந்துகொள்ளல். மெதுவாக தோன்றும் குறிகள். குழந்தைகள், எடுப்பதையோ, எடுத்துக்கொண்டு அலைவதையோ விரும்பாதிருத்தல்.
**மனம். தீவிர முற்கோபம்.** ஜன்னியில் வீட்டிற்குப்போக விரும்புதலும், தன் அலுவல்களைப்பற்றி பேசுதலும்.
**தலை.** கிறுகிறுப்பு. குமட்டல். எழுந்தால் மயக்கம்.
**தெறிக்கும் தலைவலி.** உள்ளிருந்து சுத்தியல்கொண்டு அடிப்பது போன்ற தலைவலி.
**மூக்கு.** மாதவிடாய் வரவேண்டிய காலத்தில் மூக்கிலிருந்து இரத்தம் வடிதல், ஜலதோஷம்.
**காதுகள்.** இரைச்சல்.

**கண்கள்.** தீவிர வலி.

**வாய். உதடுகள் உலர்ந்தும் வெடித்தும் இருத்தல். நாக்கும் தொண்டையும் உலர்ந்து, கூடுதல் தாகம்.** நாக்கு மஞ்சள் அல்லது காவி படிந்து இருக்கும். அஜீரணக்கோளாறுகளில் வெண்மை படர்ந்து இருக்கும்.

**இரைக்குடல். எழுந்தால் குமட்டலும், மயக்கமும்.** கூடுதல் பசியும், சுவையின்மையும். கூடுதல் பானம் ஒரே சமயத்தில் அருந்தும் தாகம் உஷ்ணமான பானங்கள் அருந்தினால் வாந்தி எடுத்தல். **ஆகாரத்திற்குப் பின் கல் இருப்பதுபோன்ற பாரம்.**

**வயறு.** கல்லீரல்பாகம்வீங்கியிருத்தல். **குத்தும் தன்மையுள்ள வேதனையும், அசையும்பொழுதும்மூச்சுவிடும் பொழுதும் இருமல் எடுக்கும்பொழுதும், அழுத்தினாலும் கூடுதலும்.**

**மலம்.** மலச்சிக்கல். கட்டியாயும் காவிநிறம் உள்ளதாயும் இரத்தம் கலந்து இருக்கும். காலையிலும் உஷ்ணகாலத்திலும் அசைவதாலும் சரீரம் உஷ்ணம் அடைவதாலும் குளிர்ந்த பானங்களினாலும் அதிகப்படல்.

**சிறுநீர் உறுப்புகள்.** சிறுநீர் சிவந்தும் காவி நிறமாயும் குறைவாயும், சூடாயும் இருக்கும்.

**பெண் உறுப்புகள்.** மாதவிடாய், காலத்திற்கு முந்தியும் அதிகமாயும் இருக்கும்.

**தெறிக்கும் தலைவலியோடு மாதவிடாய் தடைபட்டிருத்தல்.** ஒழுங்கற்ற மாதவிடாயும் வேதனையும். (ஹமாமலிஸ்)

**சுவாச உறுப்புகள்.** குரல் அடைப்பும், திறந்த வெளிக்காற்றில் கூடுதலும். இரவில் உலர்ந்த இருமல். **எழுந்து உட்கார்ந்திருக்க விருப்பம். ஆகாரத்திற்கும் பானத்திற்கும் பின்னால் கூடுதல்.** நெஞ்சில் குத்தெடுக்கும் வேதனையோடு வாந்தி. **உஷ்ணமான அறைகளுக்குள் செல்லுவதால் இருமல் உண்டாகுதல்.** (நட்ரம் கார்போனிக்கம்)

**முதுகு.** குத்தெடுப்போடுகூடிய வேதனை.

**கை, கால்கள்.** கால் முட்டுகள் விறைத்திருத்தல்,

வேதனை. பாதங்கள் வீங்கியும் உஷ்ணமாயும் இருத்தல். **இணைப்புகள் குத்தெடுக்கும் வேதனையோடு சிவந்தும் வீங்கியும், சூடாயும், இருத்தல்.** இடது காலும் கையும்அசைந்துகொண்டிருத்தல். (ஹெல்லி போரஸ்)

**சருமம்.** மஞ்சள் நிறமாயும், வெளுத்தும், வீங்கியும், நீர் கொண்டும், வேதனை கொண்டும், சூடாயும் இருத்தல். **ஜுரம்,** நாடி துரிதமாயும், கட்டியாயுமிருக்கும். குளிர். சரீரத்தில் உள் உஷ்ணம். சிறிதளவு அசைவினால் கூட புளித்த வியர்வை இலகுவில் அதிக வியர்வை எடுத்தல் வாதஜுரம். இரத்தாசயத்தைத்தாக்கும் வாதஜுரம்.
**ஏற்றம்.** சூடு, அசைதல், காலை, உஷ்ணமான காலநிலை, ஆகாரம் அருந்தல்.
**இறக்கம்.** வேதனையுள்ள பக்கமாய் படுத்தல். குளிர்ந்த சாதனங்கள்.
(ஒ, ம.) காளி மூர்.
**வீரியம்.** எல்லா வீரியங்களும் பயன்படும்.

## காக்டஸ் கிருன்டிப்ளோரஸ்
## Cactus Grandiflorus.

(பொ. கூ.) இருதய வியாதிகள்.
**மனம்.** மரணம் சம்பவிக்கும் என்ற பயம். சரீரம் பூராவும் இறுக்கப்படுவதுபோன்ற உணர்ச்சி.
(Constrictive Feeling)

**இரத்தாசயம். உள்தசையில் வியாதியுற்று (Endo-carditis) இரத்தாசயத்தின்வேலை தீவிரமாகுதல்.**
துடிதுடிப்பு. இடதுபக்கமாய் படுக்கும்பொழுதும் மாதவிடாய் ஆரம்பிக்கப்போகும்பொழுதும் கூடுதல். இருதயம் இரும்புக்கையினால் அமுக்கப்படுவதுபோன்ற உணர்ச்சியும். குளிர்ந்த வியர்வையும், வேதனை, இடது தோள்வழியாக கை விரல்களுக்கு பரவுதலும்.
**கை, கால்கள்.** வீங்கியிருத்தல்.
**ஏற்றம்.** மத்தியானம், இடது பக்கமாய் படுத்தல், நடப்பது, படிகளில் ஏறுவது.
**இறக்கம்.** திறந்த வெளிக்காற்று.
(ஒ. ம.) டிஜிட்டாலிஸ், ஸ்பிஜிலியா, கால்மியா, நாஜா.

**வீரியம்.** தாய் திராவகம் முதல் 3-ம் வீரியம் வரை. நரம்பு பலவீன இருதய துடிப்புகளில் கூடுதல் வீரியம்.

## கால்காரியா கார்போனிக்கா.
## Calcarea Carbonica.

(பொ. கூ.) இது ஒரு முக்கிய சரீரப் பிரகருதி மருந்து. (Constitutional). கோளங்கள் வீங்குதல், கூடுதல் வியர்வை, பெரிய தலையும், வயறும் உள்ள குழந்தைகள், அடிக்கடி ஜலதோஷம் பிடித்தல் முதலியவை. குழந்தைகள் பேச படிப்பதற்கும், நடப்பதற்கும் பிந்துதல்.

**மனம்.** பயம். துர்பாக்கியம், பரவும் வியாதிகள் முதலியவற்றைபற்றிய பயம். வேலை செய்யபிரியமில்லாதிருத்தல்.

தலை. குளிர்ந்த கையும், கால்களோடும்கூடிய **தலைவலி**. தலையணையை நனைக்கும் வியர்வை. சொறியெடுத்தல்,

**கண்கள்.** வெளிச்சத்தில் கூசுதல் பொட்டுகளும் புண்களும் உண்டாகுதல். கண்மணிகள் விரிதல். பற்பல கண் வியாதிகள்

**காதுகள்.** நெறுநெறுவென்றசப்தம் இரத்தம்கசியும்சதை வளருதல். கோளங்கள் வீங்குதல். சீழ் வடிதல்.

**மூக்கு. சீதோஷ்ண நிலை மாறும்பொழுதெல்லாம் ஜலதோஷம் பிடித்தல்.**

**முகம்.** மேல் உதடுவீங்குதல். கண்களைச்சுற்றி இருண்ட வட்டங்கள்.

**வாய்.** எப்பொழுதும் **புளித்த சுவை.** எகிரிலிருந்து இரத்தம் கசிதல். பல்வலி, வாயிலிருந்து துர்நாற்றம் வீசுதல்.

**தொண்டை.** டான்சில் கோளங்கள் வீங்குதல்

**இரைக்குடல்.** மாமிசத்திற்கு வெறுப்பு. ஜீரணமாகாத சாதனங்களுக்கு விருப்பம். (சாக்கட்டி, கரி, பென்சில் முதலியவை) பால் ஒத்துக்கொள்வதில்லை.

**புளித்த ஏப்பமும் வாந்தியும்.** அதிக வேலை செய்தால் பசியின்மை. வயிற்றுப்பொருமல்.

**வயறு.** இடுப்பிலுள்ள (Inguinal) கோளங்களும், வயிற்றிலுள்ள நீர்தசையின் (Mesenteric) கோளங்களும், வீங்குதலும், வேதனையும். இடுப்பைச்சுற்றி ஆடையை இறுக்கமாய் அணிய முடியாதிருத்தல். **பித்தக்கல்லால்**

ஏற்படும் வேதனை.

**மலம்.** மலக்குடலில் இறுக்கமும், ஊருவதும். காந்தல் கொண்ட மூலவியாதி. குழந்தைகளுக்கு ஏற்படும் வயிற்று பெருக்கு.

**சிறுநீர் உறுப்புகள்.** குழந்தைகள் படுக்கையில் சிறுநீர் கழித்தல்(Enuresis).

**ஆண் உறுப்புகள். அடிக்கடி இந்திரியம் கழிதல்.** விரைவில் இந்திரியம் பிரிதல். சிற்றின்பத்தின்பின் பல வீனம்.

**பெண் உறுப்புகள்.** மாதவிடாய்க்கு முன்பு தலைவலியும் குளிரும், வெள்ளை படுதலும், வேதனைகொண்ட மாதவிடாயும். **சமயத்திற்கு மூந்தியும், அதிகமாயும், அதிக நாட்கள் காணப்படுவதுமான மாதவிடாய்.** பால் போன்ற வெள்ளை படுதல் (செபியா). கூடுதல் மாதவிடாயோடுகூடியமலட்டுதனம்.கர்ப்பாசயத்தில்சதைவளருதல்

**சுவாச உறுப்புகள்.** மூச்சு திணறல், உயரமாய் ஏறும் பொழுது வேதனை. நெஞ்சிலிருந்து முதுகிற்கு செல்லும் கூரிய வேதனை.

**இரத்தாசயம்.** துடிதுடிப்பும், இரவிலும் ஆகாரத்திற்கு பின்னும் கூடுதலும்.

**மூதுகு.** இடுப்பு வலி. விறைப்பான கழுத்து.

**உறக்கம்.** பற்பல எண்ணங்களினல் பெண்கள் உறங்க முடியாதிருத்தல். இறந்துபோனவரை சொப்பனத்தில் காணுதல்

**ஜுரம்.** மாலை 2 மணிக்கு இரைக்குடலில் இருந்து குளிர் ஆரம்பித்தல். வியர்வையோடுகூடிய ஜுரம். இரவில் குறிப்பாக தலையிலும், கழுத்திலும் நெஞ்சிலும் வியர்வை எடுத்தல்

**சருமம்.** சிறிய புண்கள்கூட எளிதில் குணமடைவதில்லை. பருக்கள்.

**ஏற்றம்,** வேலை செய்தல், மனவேலை, உயர ஏறுதல். ஏற்றங்களில் நடத்தல், குளிர், குளித்தல், **பௌர்ணமி, நின்றுகொண்டிருத்தல்.**

**இறக்கம்.** உலர்ந்த சீதோஷ்ணம். வேதனைகொண்ட

பக்கமாய் படுத்தல்.
(ஒ. ம.)லைக்கபோடியம், சிலிசியா, பல்சடில்லா,சாமமில்லா
**வீரியம்.** எல்லா வீரியங்களும் பயன்படும். அடிக்கடி கொடுக்கக்கூடாது.

## கான்னபிஸ் சாட்டிவா
## Cannabis Sativa.

(பொ. கூ) சிறுநீர் உறுப்புகளிலும், சுவாச உறுப்புகளிலும், ஜனனேந்திரிய உறுப்புகளிலும், வேலை செய்யும்.
**தலை.** கிறுகிறுப்பு, தலையில் குளிர்ந்த தண்ணீர் விழுவது போன்ற உணர்ச்சி.
**கண்கள்.** மேல் தசையில் (Cornea) சீழ்பிடித்து, ஒளியூடுருவும் தன்மையை இழத்தல். மேகநோயால் உண்டாகும் கண் வியாதிகள்.
**சிறுநீர் உறுப்புகள்.** மலச்சிக்கலோடு சிறுநீரும் வெளிப்படாமல் இருத்தல். **சிறுநீர் பிரியும்பொழுது மூத்திரப்பை வரை பரவும் காந்தல்.**
**ஆண் உறுப்புகள்.** ஆண் குறி வீங்குதல். சீழ் வடியும் மேக நோயின் ஆரம்பம்
**பெண் உறுப்புகள்.** மலச்சிக்கலோடுகூடிய மாதவிடாய் தடை.
**சுவாச உறுப்புகள்.** அமுக்கத்தோடுகூடியமூச்சுவாங்கல். மஞ்சள் அல்லது இரத்தம் கலந்த கபத்தோடு கூடிய இருமல்.
**இரத்தாசயம்.** இரத்தாசயத்திலிருந்து சொட்டு சொட்டாக குளிர்ந்த தண்ணீர் விழுவதுபோன்ற உணர்ச்சி.
**உறக்கம்.** பயங்கர சொப்பனங்கள். காலையில் சோர்பும், பகலில் உறங்க விருப்பமும்.
**வீரியம்.** மேக நோய்க்கு 3 ம் வீரியத்திலும், இதர குறிகளுக்கு 30 வீரியம் வரையும் உபயோகிக்கலாம்.

## காந்தரிஸ்
## Cantharis

(பொ. கூ.)ஜனனேந்திரிய உறுப்புகளையும்,சிறுநீர் உறுப்புகளையும் பொதுவாக தாக்கும்.
**மனம்.** தீவிர ஜன்னி. சிவந்த முகத்தோடு திடீரென

பிரமை இழத்தல்
**தலை.** மூளையில் காந்தல். மூளையில் கொதிக்கும் தண்ணீர் இருப்பதுபோன்ற உணர்ச்சி.
**கண்கள்.** மஞ்சள் நிறமான பார்வை.
**காதுகள்.** காதுகளிலிருந்து காற்று வெளிப்படுவது போன்ற உணர்ச்சி.
**முகம்.** சரும வியாதிகளும், வீக்கமும், காந்தலும்.
**தொண்டை. காந்தல்.** வாய் பூராவும் கொப்பளங்கள். **பானங்கள் விழுங்கமுடியாத நிலை.**
**நெஞ்சு.** மூச்சு திணறல். சோகம்.
**இரைக்குடல்.** காந்தல். ஒன்றும் அருந்துவதற்கு விருப்பமில்லாமை. காந்தலோடுகூடிய தாகம். வாந்தி. **காப்பி குடிப்பதால் கூடுதல்.**
**மலம். மலம் பிரியும்பொழுது காந்தலோடு நடுக்கம்.** இரத்தபேதி.
**சிறுநீர் உறுப்புகள்.** அடிக்கடி சிறுநீர் கழிக்கவிரும்பல். மூத்திரக்காய் வியாதியும் (Nephritis) இரத்தம் கலந்த சிறுநீரும். கூடுதலான காந்தல்.
**சொட்டு சொட்டாக சிறுநீர் பிரிதல்.**
**ஆண் உறுப்புகள்.** சம்போகத்திற்கு அதிக விருப்பம். சீழ் வடியும் மேக நோய்.
**பெண் உறுப்புகள்.** நஞ்சுக்கொடி விழாதிருத்தல். (செபியா). இறந்துபோன கரு, மச்சம் முதலியவற்றை வெளிப்படுத்தும். மாதவிடாய், சமயத்திற்கு முந்தியும் கூடுதலாயும் இருத்தல்.
**இரத்தாசயம்.** துடிதுடிப்பு.
**சருமம்.** பற்பல சரும வியாதிகளும், காந்தலும்.
**ஏற்றம்.** சிறுநீர் பிரிதல், குளிர்ந்த ஜலம் அருந்தல், காப்பி குடித்தல்.
**வீரியம்.** 30 வீரியம்வரை போதுமானது. அடிக்கடி திரும்ப கொடுக்கலாம். சூடால் வெந்துபோன சரீரத்தை கழுவ தாய் திராவகம் பயன்படும்.

## கார்போ வெஜிட்டாபிலிஸ்
## Carbo Vegetabilis.

(பொ. கூ.) இரத்தப்பெருக்குக்கும் வியாதிகளிலிருந்து பூர

ணமாகக் குணமடையாதவருக்கும் மரணத்தறுவாயிலும் பயன்படும்.

**மனம்.** இருட்டிற்கும், பேய்பிசாசுகளுக்கும் பயம். ஞாபக மறதி.

**தலை. கூடுதல் மன நிலையால் தலைவலி.** இலகுவில் முடி கழிதல்.

**கண்கள்.** பார்வையில் கறுத்த புள்ளிகள் தோன்றல்.

**காதுகள்.** சரும வியாதிகளைத் தொடர்ந்து காதுகளிலிருந்து சீழ் வடிதல்.

**மூக்கு. தினமும் மூக்கிலிருந்து இரத்தம் வடிதல்.**

**வாய்.** வாய் பூராவும் புண். பல் விளக்கும்போது எகிரிலிருந்து இரத்தம் வடிதல்.

**இரைக்குடல்.** ஏப்பமும், பாரமாயிருத்தலும். உறக்கமில்லாதிருத்தல். சுருங்குவதுபோன்றவேதனையும், நெஞ்சுக்கு பரவுதலும், **வயிற்றுப்பொருமலும் சாதாரண ஆகாரங்கள்கூட உபத்திரவம்** கொடுத்தலும். பால், மாமிசம், கொழுப்பான சாதனங்கள் முதலியவற்றிற்கு வெறுப்பு

**வயறு.** பாரத்தைத் தூக்குவதுபோன்ற வேதனை. வாகனங்களில் பிரயாணம்பண்ணும்போது வேதனை. கூடுதலான துர்நாற்றமுள்ள வாயு வெளிப்படுதல். இடுப்பையும் வயிற்றையும் சுற்றி இறுக்கமாய் ஆடை அணிய முடியாதிருத்தல். வயிற்றுப்பொருமல்.

**மலக்குடலும் மலமும்.** மலக் குடலில் காந்தல், மலக் குடலிலிருந்து சூடான நீர் வெளிப்படுதல். துர் நாற்றம் உள்ள தன்னை அறியாமலே அடிக்கடி பிரியும் மலம். நீல நிறம்கொண்ட மூலமுளை.

**ஆண் உறுப்புகள்.** மலம் கழிக்கும்பொழுது ப்ரூஸ்டேடிக் நீர் வெளிப்படல்.

**பெண் உறுப்புகள்.** சமயத்திற்கு முந்திய அதிகமான மாதவிடாய். மாதவிடாய்க்கு முன்பு கட்டியான பச்சை நிறம் கொண்ட அல்லது பால்போன்ற நமைச்சலை உண்டுபண்ணும் வெள்ளைபடுதல்.

**சுவாச உறுப்புகள்.** கப வாந்தியோடுகூடிய இருமல். கக்குவானின் ஆரம்பகாலம். குரல் அடைப்பு. நெஞ்சில் காந்தல், **எப்பொழுதும் வீசவிரும்பல்.** சுவாசகோசத்திலிருந்து இரத்தபெருக்கு. வயதுமுதிர்ந்தவர்களில்நீலநிற

சருமத்தோடு கூடிய இழுப்பு நோய்.
**ஜுரம்.** தாகத்தோடுகூடிய குளிர். பற்பல பாகங்களில் குளிர். ஆகாரம் அருந்தும்பொழுது வியர்வை.
**சருமம்.** நீல நிறமும் குளிர்ச்சியும். முடி கழிதல்.
**ஏற்றம்,** மாலை, இரவு, திறந்தக் காற்று, குளிர், கொழுப்புள்ள ஆகாரம், காப்பி, பால்.
**இறக்கம்.** ஏப்பம் எடுப்பதாலும் எப்பொழுதும் வீசிக் கொண்டிருப்பதாலும்.
(ஒ. ம.) லைக்கோபோடியம் ஆர்சனிக்கம், சைஞ.
**வீரியம்.** வயிற்றுக்கோளாறுகளுக்கு மூன்றுவது வீரியம் வரையும் மரணத் தறுவாயிலும் நாட்பட்ட வியாதிகளுக்கும் முப்பது வீரியத்திற்கு கூடுதலாகவும் கொடுக்கவும். குறிகளுக்கு ஒத்துகொடுப்போமாயின் பல சந்தர்ப்பங்களில் மரணத்தைத்தவிர்க்கும்.

## காஸ்டிகம்.
## Causticum.

(பொ.கூ.) நாள்பட்ட வாதநோய்களுக்கும், பக்கவாதத்திற்கும் பயன்படும்.
**மனம்.** குழந்தை தனியாய் படுக்கைக்கு போக விருப்பம் இல்லாதிருத்தல். நாள்பட்ட துக்கம், விகாரம் முதலியவற்ருல் உண்டாகும் வியாதிகள்.
**தலை.** நெற்றிக்கும் மூளைக்கும் இடையில் இடம் காலியாய் இருப்பதுபோன்ற உணர்ச்சி.
**முகம்.** வலதுபக்க பக்கவாதம், பால்உண்ணிகள். வேதனை
**கண்கள்.** காட்டராக்ட் அல்லது முத்துக்கள் உண்டாகுதல். திரைபோல் பார்வை மறைதல்.
**காதுகள்.** கூடுதல் அழுக்கு சேருதல். செவிடு.
**மூக்கு.** குரலடைப்போடுகூடியஜலதோஷம்,பால்உண்ணி
**வாய்.** சவைக்கும்பொழுது கன்னம் கடிபடுதல். நாக்கில் பக்கவாதம். இரத்தம் கசியும் எகிர்.
**இரைக்குடல்.** இனிப்புக்கு வெறுப்பு. சுண்ணும்பை இரைக்குடலில் நீற்றுவதுபோன்ற உணர்ச்சி. தொண்டையில் பந்துபோன்ற வஸ்து ஏறி அடைப்பதான உணர்ச்சி. அஜீரணம்.
**மலம்.** சளி பொதிந்த மலம். எழுந்து நின்ருே அல்லது

மிக சிரமத்தின்பேரில் மாத்திரம் மலம் கழிக்க முடிதல். மலக்குடல் செய்கையற்று போதல். பெரிய மூலமுளைகளும், சீழ்வடியும் தாரையும்.

**சிறுநீர் உறுப்புகள்.** தும்மும்பொழுது அல்லது இருமல் எடுக்கும்பொழுதுசிறுநீர் தானகவேபிரிதல். (பல்சடில்லா) மிகவும் மெதுவாக சிறுநீர் பிரிதலும் அல்லது பிரியாதிருத்தலும். இரண சிகிற்சைக்குப்பின் சிறுநீர் பிரியாதிருத்தல்.

**பெண் உறுப்புகள். பிரசவகாலத்தில் சிறுநீர் பிரியாதிருத்தல். இரவில் மாதவிடாய் போகாமலும், பகலில் வெளிப்படுதலும்.** மிகவும் பலவீனம் கொடுக்கும் வெள்ளைபடுதல், இரவில் மாத்திரம். சமயத்திற்கு பிந்திய மாதவிடாய் (கோனியம், க்ரேபைட்டிஸ், பல்சடில்லா)

**சுவாச உறுப்புகள்.** நெஞ்சு வலியோடு கூடிய குரலடைப்பு. இடுப்பு வலியோடுகூடிய இருமல். இரவில் படுக்க முடியாதிருத்தல்.

**கை, கால்கள்.** தனி பாகங்களில் வாதம். உணர்ச்சியற்றுபோதல். பலனற்ற கரண்டைகள். சரியாய் நடக்கமுடியாதிருத்தல். நடக்கும்பொழுது முட்டுகளில் சப்தம்.

**சருமம்.** பால் உண்ணி. பற்பல சரும வியாதிகள்.

(ஒ. ம) ரஸ்டாக்ஸ். ஆர்சனிக், அம்மோனியா பாஸ்.

**வீரியம்.** எல்லா வீரியங்களும் பயன்படும். அடிக்கடி கொடுக்கக்கூடாது. நாள்பட்ட வியாதிகளில் உயர்ந்தவீரியத்தில் ஒருபொழுது கொடுத்து, பல நாட்களுக்குப்பின் சோருவுக்கு எதிரான இன்னெரு மருந்தைக் கொடுத்து, திரும்பவும் இம்மருந்தை வேறுவீரியத்தில் கொடுக்கவும்.

## சாமமில்லா.
## Chamomilla.

(பொ. கூ.) குழந்தைகளுக்கு அதிகமாய் பயன்படும், இரவில் வியர்வை.

**மனம்.** அமைதியற்றிருத்தல் குழந்தை பல சாதனங்களை விரும்பும். ஆனல் கொடுக்கும்பொழுது வேண்டாம் என்று கூறும். எடுத்துக்கொண்டு நடப்பதின்மூலம் மாத்திரமே குழந்தையை சாந்திபண்ண முடியும்.

**தலை** தெறிக்கும் தலைவலியும், தலையை பின்பக்கமாக

சாய்க்க விரும்புதலும்.

**காதுகள்.** தீவிரக் காதுவலி

**முகம்.** ஒரு கன்னம் சூடாயும் சிவந்தும் இருக்கும். மறு கன்னம் வெளுத்தும், குளிராயும் இருக்கும். பல் வலியும் சூடான பானங்களால் கூடுதலும். குழந்தைகளுக்கு பற்கள் முளைக்கும்பொழுது உண்டாகும் குறிகள். கெர்ப்ப கால பல்வலி.

**இரைக்குடல்.** ஏப்பம், காப்பிகுடித்தால் குமட்டல், ஆகாரங்களும், பானங்களும் அருந்தியபின் வியர்வை.

**மலம்.** சூடாயும், பச்சையாயும் துர் நாற்றம் உள்ளதாயும் இருக்கும். பற்கள் முளைக்கும்போது உண்டாகும் வயிற்றுப்பெருக்கு.

**பெண் உறுப்புகள்.** கர்ப்பாசயத்திலிருந்து இரத்தப் பெருக்கு. பிரசவகாலத்தைப்போன்ற வேதனை. மஞ்சள் நிறம்போன்ற சூடான வெள்ளை படுதல்.

**சுவாச உறுப்புகள்.** குரல் அடைப்பும், கூச்சமுண்டாகும் இருமலும், குழந்தையின் நெஞ்சில் சளி கட்டியிருக்கும் சப்தம்.

**கை, கால்கள்.** இரவில்தீவிர வாதவேதனையால் எழுந்து நடத்தல்.

**ஏற்றம்.** சூடு, கோபம், திறந்த காற்று, இரவு.

**இறக்கம்.** உஷ்ணமானக் காலநிலை. குழந்தையைதூக்கி நடத்தல்.

**வீரியம்.** 3 முதல் 30 வீரியம் வரை பயன்படும்.

## சிக்குட்டா விரோசா.
## Cicuta Virosa.

(பொ. கு.) நரம்புக்கிரமத்தில் வேலைசெய்து, விக்கல், வலிப்பு முதலியவைகளை உண்டுபண்ணும். தலையையும், கழுத்தையும் முதுகெலும்பையும் பின்பக்கமாக வளைத்து பெருவிரல்களை தரையில் ஊன்றி வில்போல் நிற்பது முக்கியக் குறியாகும்.

**மனம்.** பாடுதல், நாட்டியம் ஆடுதல் முதலியவற்றோடு கூடிய ஜன்னி, காக்காய் வலி.

**தலை. ஒருபக்கமாகத் திரும்பி இருத்தல்.** மூளையைத் தாக்கும் மெனிஞ்சைட்டிஸ் (Meningitis) என்ற வியாதி

**கண்கள்.** வாசிக்கும்பொழுது எழுத்துக்கள் மறைதல். சாதனங்கள் இரண்டாய்த் தோன்றல்.

**காதுகள்.** செவிட்டுத்தனம். காதுகளிலிருந்து இரத்தம் வெளிப்படுதல்.

**முகம்.** தலையிலும் முகத்திலும் பல கொப்பளங்கள் ஒன்றுசேர்ந்து கட்டி பிடித்தலும், காந்தலும்

**இரைக்குடல்.** தாகம், விக்கல், விரும்பத்தகாதவைகளை விரும்பல், அஜீரணம்.

**சருமம்.** பற்பல சரும வியாதிகள்.

**வீரியம்.** 6 முதல் 200.

## சிமிசுபூகா.

## Cimicifuga Racemosa. (Actea Racemosa.)

**(பொ. கூ.)** கெர்ப்பாசயத்திலும் முட்டைப் பைகளிலும் மாம்ச தசை கிரமத்திலும் வேலை செய்யும்.

**மனம்.** மேகம் அவளை பொதிவது போன்ற உணர்ச்சி. அடைத்த வாகனங்களில் பிரயாணம்பண்ண பயம். எலி சுண்டெலி முதலியவற்றை சொப்பனத்தில் காணுதல்.

**தலை.** மனக்கவலை, கூடுதல் படித்தல் முதலியவற்ருல் உண்டாகும் தெறிக்கும் தலைவலி.

**கண்கள்.** தீவிர வலி. கண்கள் முதல் உச்சந் தலைவரை வேதனை.

**இரைக்குடல்.** குமட்டலும், வாந்தியும்.

**பெண் உறுப்புகள்.** மாதவிடாய் தடைபட்டிருத்தல் மாதவிடாய்க்கு முன்பு வேதனை. முதுகு வலியோடுகூடிய இருண்ட கட்டி பிடிக்கும் துர் நாற்றமுள்ள மாதவிடாய். இடுப்பில் ஒருபுறம் இருந்து மறுபுறத்திற்கு செல்லும் வேதனை. மாதவிடாய் எவ்வளவு கூடுதல் இருக்கிறதோ அதற்குத்தக்க வேதனையும் கூடுதல்.

**இரத்தாசயம்.** ஒழுங்கற்ற இரத்தாசய வேலையும் நடுங்கும் நாடியும். இடது கை உணர்ச்சியற்றுப்போதல்.

**கை, கால்கள்.** வேதனை. பெரிய மாமிச தசைகளைத் தாக்கும் வாதம்,

**ஏற்றம்.** காலை, மாதவிடாய் சமயம்.

**இறக்கம்.** உஷ்ணம். ஆகாரம் அருந்தல்.

**வீரியம்**. மிகக் கூடுதல் வீரியங்கள் வரை, பல நாட்களுக்கொருதடவை உபயோகப்படுத்தவும்.

## சிஞ.

## Cina.

(பொ. கூ.) குழந்தைகளுக்குள்ள மருந்து. கிருமிகளால் உண்டாகும் உபாதைகள். வலிப்பு.

**மனம்.** குழந்தைக்கு கோபக்குணம். தொடுவதையோ, எடுப்பதையோ, குழந்தை விரும்புவதில்லை. பல சாதனங்களை விரும்புவதும், ஆனல் கொடுத்தால் வேண்டாமென்று கூறுவதும்.

**தலை.** தலை வலியும், வயிற்று வலியும் மாறி மாறி வருதல். வாசிக்கும்பொழுது அல்லது கண்களை கூர்மையாய் உபயோகிக்கும்பொழுது தலைவலி.

**கண்கள்.** தனக்குள்தானே சிற்றின்பம் அனுபவிப்பதால் (Masturbation) கண் பார்வை மங்கல்.

**மூக்கு.** எப்பொழுதும் மூக்கில் கடி. இரத்தம் வரும்வரை மூக்கைக் குடைதல்.

**முகம்.** கூடுதல் சிவப்பு கண்களைச் சுற்றி இருண்ட வட்டம். உறக்கத்தில் பற்கடி.

**இரைக்குடல்.** ஆகாரம் அருந்தியதும், திரும்பவும் பசி. ஆகாரத்திற்கு பின்போ அல்லது பானங்கள் அருந்தியதுமோ, வாந்தியும் வயிற்றுப்பெருக்கும். இனிப்பான சாதனங்களுக்கு விருப்பம்.

**வயறு.** தொப்புளைச்சுற்றி வேதனை. வயிற்றுப்பொருமல்.

**மலம்.** வெண்மை நிறம். மூலத்தில் கடி கிருமிகள். (சாபடில்லா, நப்தலின், பாஸ்பரஸ்)

**சிறுநீர்.** வெண்மை நிறம். கழித்து சிறிது நேரம் சென்றபின் பால்போல் ஆகுதல்.

**பெண் உறுப்புகள்.** வயது அறிவதற்கு முன் கர்ப்பாசயத்திலிருந்து இரத்த பெருக்கு.

**சுவாச உறுப்புகள்.** கக்குவான். உக்கிரமமான இருமலினல் கண்ணீர் வெளிப்படுதல். இருமல் உண்டாகிவிடும் என்ற பயத்தினல், குழந்தை பேசாமலும், அசையாமலும் இருத்தல்.

**உறக்கம்.** வயிற்றிலோ, அல்லது கைகளையும், கால் முட்டையும் ஊன்றியோ தூங்குதல். தூக்கத்தில் பேசுதல்.
**ஜுரம்.** சுத்தமான நாக்கோடு ஜுரம், அதிகப்பசியும், தாகமும். குளிர்ந்த முகமும் சூடான கைகளும். கிருமிகளால் உண்டாகும் ஜுரம்
**வீரியம்.** 3 முதல் 200 வரை போதுமானது.

## சிங்கோனு அபிசியானில்ஸ். அல்லது சைனு
## Cinchona or China

(பொ. கூ.) தீவீர வியாதிகள், சரீரத்தின் தாதுவை துர்வினியோகம்செய்தல் முதலியவற்ருல் ஏற்படும்பலவீனம்
**மனம்.** உற்சாகமின்மை. கீழ்ப்படியாமை. பல எண்ணங்கள் மனதில் தோன்றி உறக்கமின்மை.
**தலை.** தெறிக்கும் தலைவலி. கண்களைச் சுற்றி நீலநிறம். **காதில்** இரைச்சல். காலையில் எழுந்ததும் மூக்கிலிருந்து இரத்தம் வடிதல். பல்வலி. உஷ்ணத்தால்பல்வலிகுறைவு ஆகாரம் அதிக உப்புள்ளதாய் சுவைத்தல்.

**இரைக்குடல்.** ஆகாரம் ஜீரணமாகாமல் வாந்தி. தேயிலை கூடுதல் அருந்துவதால் உண்டாகும்உபாதைகள். ஆகாரத்திற்குப் பிரியமில்லாத பசி. பால் ஒத்துகொள்வதில்லை.
**வயறு.** கூடுதல் வாயுவோடுகூடிய வேதனை. பொருமல். கல்லீரலும், மண்ணீரலும் வீங்கல்.
**மலம்.** ஜீரணமாகாமல் மலம்கழிதலும், இரவிலும், ஆகாரத்திற்கு பின்னும், பழவர்க்கங்கள் அருந்துவதாலும், பால் குடிப்பதாலும் கூடுதலும்.
**ஆண்.** அடிக்கடி இந்திரியம் கழிதலும், பலவீனமும்.
**பெண்.** சமயத்திற்குமுந்தும் மாதவிடாய். வேதனையோடு கூடிய அதிகமான மாதவிடாய். இரத்தம் கலந்த வெள்ளை மாதவிடாய்க்கு பதில் ஏற்படல்.

**சுவாச உறுப்புகள்.** பலவீனத்தோடுகூடிய பெருவாரி காய்ச்சல். மூச்சு திணறலோடுகூடிய ஜலதோஷம். மார்பில் கூடுதல் சளி. ஈரமான காலத்தில் அதிகப்படும் இழுப்பு நோய்.
**இரத்தாசயம்.** ஒழுங்கற்ற வேலையினுல், சோவையும், நீரும் உண்டாகுதல்.

**கை, கால்கள்.** வேதனை, இணைப்புகள் வீங்குதல்.
**சருமம்.** கோளங்கள் வீங்குதல். குளிராய் இருத்தல். மஞ்சள்காமாலை.
**உறக்கம்.** சோர்பு. அதிக நேரம் தூங்குதல். பயங்கர சொப்பனங்கள்.
**ஜுரம்.** விட்டு விட்டு முறைவைத்து வருதல் காலையில் குளிர். இரவில் வியர்வை எடுத்தலும் பலவீனமும். சரீரம் சிறிது அசைவினுல்கூட கூடுதல் வியர்வை.
**ஏற்றம்.** தொடுதல். இரவு. ஆகாரத்திற்குப் பின் விந்துவை சிரழித்தல்.
**வீரியம்.** தாய் திராவகம் முதல் 200 வரை.

## கோலோசிந்திஸ்

## Colocynthis

(பொ. கூ) தலைவலியும் வயிற்றுவலியும். முற்கோபத்தினுல் உண்டாகும் உபாதைகள். சிறுநீர் வாடைகொண்ட வியர்வை. தீவிர வயிற்றுவலி.
**மனம்.** முற்கோபம். கேள்வி கேட்டால் கோபப்படல்.
**தலை.** இடது பக்கம் திருப்பும்பொழுது கிறுகிறுப்பு. குமட்டலும் வாந்தியோடும்கூடிய தலைவலி.
**முகம்.** குத்தெடுக்கும் வேதனையும் வீக்கமும்.
**இரைக்குடல்.** கசப்பான சுவை. கூடுதல் பசி.
**வயறு. இரண்டாய் மடங்கவைக்கும் தீவிர வயிற்றுவலி, இரத்தம் கலந்த மலமும், ஆகாரத்திற்குப்பின்னும், பானங்கள் அருந்திய பின்னும் கூடுதலும். பொருமல்.**
**பெண்.** முட்டைப்பையில் துளைக்கும் வேதனையும், நோயாளியை இரண்டாய் மடங்க வைத்தலும்.
**சிறுநீர்.** மலம்கழிக்கும்போது சிறுநீர் தாரையில் காந்தல். சிறுநீர் பிரியும்பொழுது வயிறு பூராவும் வலி.
**கை. கால்கள்.** மாம்ச தசைகள் சுருங்குதல். இடது பக்கம் உண்டாகும் நரம்பு வேதனைகள்.
**ஏற்றம்.** கோபம்.
**இறக்கம்.** இரண்டாய் மடங்குதல். அழுத்தம், சூடு.
**வீரியம்.** மத்திப வீரியங்கள் வரை போதுமானது.

## குப்ரம் மெட்டாலிக்கம்.
## Cuprum Metallicum

(பொ. கூ.) விரல்களில் ஆரம்பிக்கும் நரம்பு வேதனைகள், வலி, காக்காய் வலி, உணர்ச்சியற்றுப்போதல், வாயில் நுரை தள்ளுதல், நாடாப் புழு (tape worm) சரும வியாதிகள்.

**தலை.** பயம். பேசும்போது வேண்டாத வார்த்தைகளை உபயோகித்தல். தலையில் தண்ணீர் வந்து விழுவதுபோன்ற உணர்ச்சி.

**கண்கள்.** மேல்பாகத்தில் வலி. கண்களை விரைவாய் உருட்டுதல்,

**முகம்.** நீல நிறம், வாயில் நுரை தள்ளுதலும் நாடி சுருங்குதலும்.

**வாய்.** அடிக்கடி நாக்கை பாம்பைப்**போல்**வெளியேதள்ளுதல், நாக்கில் பக்கவாதம்.

**இரைக்குடல்.** வலி உண்டாவதற்கு முன் விக்கல் வேதனை, வயிற்றுப்பெருக்கு முதலியவற்றோடுகூடிய வாந்தியும், குளிர்ந்த ஜலம் அருந்துவதால் சாந்தி அடைதலும். **பானங்கள் அருந்தும்பொழுது மடமட வென்னும் சப்தத்தோடு உள்செல்லல்.**

**வயறு.** விட்டு விட்டு வரும் தீவிர வேதனை.

**மலம்.** இரத்தம் கலந்தும் கறுப்பாயும் இருத்தல்

**பெண்.** மாதவிடாய் தாமதித்து வருதலும், அதிகநாள் நீடித்து இருத்தலும். மாதவிடாய்க்குமுன்போ, மாதவிடாய் சமயத்திலோ அல்லது மாதவிடாய் தடைபட்டிருப்பதினாலோ நெஞ்சுவலி.

**இரத்தாசயம்.** துடிதுடிப்பு. ஆஞ்கினு பெக்டோரியஸ்.

**சுவாச உறுப்புகள்.** இருமலும், குளிர்ந்த ஜலம் அருந்துவதால் குறைதலும். காலை 4 மணிக்கு மூச்சு திணறல். இறுக்கும் தன்மையுள்ள நெஞ்சுவேதனை. மாம்சதசைகள் சுருங்கிச் சுருங்கிவிடும் நிலையுடன் உண்டாகும் இழுப்பு நோயும், வாந்தியும் மாறி மாறி ஏற்படல். கக்குவான்.

**கை, கால்கள்.** வெட்டி வெட்டி இழுத்தல். கைகளில் குளிர்ச்சி. உள்ளங்கையில் வேதனை. பெருவிரல்கள் மடங்கி இருத்தல்.

**சருமம்.** நீல நிறம். பற்பல சரும வியாதிகள்.
**உறக்கம்.** உறக்கத்தில் வயிற்றில் மடமடவென்று சப்தம் கேட்டல்.
**வீரியம்.** 6 முதல் எல்லா வீரியங்களும் பயன்படும்.

## டிரோசிரா.

## Drosera.

(பொ. கூ.) குறிப்பாக சுவாச உறுப்புகளில் வேலை செய்யும், கக்குவானுக்கு மிக முக்கிய மருந்து.
**தலை.** திறந்த வெளிக்காற்றில் நடக்கும்பொழுது இடது பக்கமாக விழும் தன்மையுள்ள கிறுகிறுப்பு

**சுவாச உறுப்புகள்.** உலர்ந்த இருமல் **உக்கிரம் தீர்ந்தவுடன் திரும்பவும் இருமல் உண்டாகுதல்.** மஞ்சள் நிறமான சளியும், மூக்கிலும் வாயிலும் இருந்து இரத்தம் பிரிதலும் குரல் அடைப்பு இறகு அல்லது பற்பல துண்டுகள் தொண்டையில் இருப்பதுபோன்ற உணர்ச்சி. குழந்தைகளுக்கு இரவில் தலையை படுக்கையில் சாய்த்ததும் இருமல் உண்டாகுதல். பிரசங்கிகளுக்கு ஏற்படும் தொண்டை உபாதைகள். இழுப்பு.

**ஏற்றம்.** நடு சாமத்திற்குப்பின், படுத்திருக்கும்பொழுது பானங்கள் அருந்துவதால், பாடுவதால், சிரிப்பதால்.
**வீரியம்.** 30-வது வீரியம் வரை போதுமானது. தீவிரமாய் பரவும் கக்குவான் நோய்க்கு 30 வீரியத்தில் ஒருபொழுது மருந்து கொடுத்து, திரும்ப மருந்து கொடுக்காமல் இருப்போமாயின் 10 தினங்களுக்குள் குணம் அளிக்குமென்று ஹனிமான் கூறுகின்றார்.

## டல்கமரா.

## Dulcamara.

(பொ. கூ.) சருமம், கோளங்கள், ஜீரண உறுப்புகள் முதலியவற்றைத் தாக்கும், ஈரமான இடங்களில் இருப்பதால் உண்டாகும் உபாதைகள்.
**தலை.** மனக்குழப்பம், பேசுவதால் குறையும் தலைவலி. சரும வியாதிகள்.
**மூக்கு.** உலர்ந்த ஜலதோஷம், மூக்கடைப்பு. பிறந்த

தும் குழந்தைகளுக்கு உண்டாகும் ஜலதோஷம்.
**கண்கள்.** கட்டியான சீழ் வடிதல். கண்ணீர் வடிதல்.
**காதுகள்.** காதுவலி. (மெர்குரி, காளிமூர்)
**வாய்.** கட்டியான எச்சில் குளிர்காலத்தில் ஏற்படும் இருமலும், அடிக்கடி தொண்டையை சுத்தம் செய்ய விருப்பமும், குளிருக்கு வெளிப்படுத்துவதால் உண்டாகும் நரம்புவலி.
**இரைக்குடல்.** வெண்மையான சளி வாந்தியெடுத்தல். ஆகாரத்திற்கு விருப்பமில்லாமை. குளிர்ந்த பானங்களுக்கு விருப்பம்.
**வயிறு.** குளிரினால் ஏற்படும் வேதனை. தொப்புளைச் சுற்றி வேதனை.
**மலம்.** பச்சை நிறமும், இரத்தம்கலந்த சளியும், உஷ்ண காலத்தில் திடீரென குளிர் உண்டாகும்பொழுது ஏற்படல், அல்லது சரும நோய்கள் அமுககப்படுவதால் ஏற்படல்.
**சிறுநீர்.** சரீரம் குளிரடைந்ததும், சிறுநீர் கழிக்க விருப்பம். சிறு நீர் கழிக்கும்பொழுது எரிச்சல்.
**பெண்.** குளிரினால் மாதவிடாய் தடைபடல். மாதவிடாய் தோன்றுவதற்குமுன் சருமத்தில் தணப்பு உண்டாகுதல். (Rash). வேதனையோடுகூடிய மாதவிடாய்.
**சுவாச உறுப்புகள்.** குளிர்காலத்தில் இருமல் கூடுதல். மூச்சுத் திணறலோடுகூடிய இழுப்புநோய். சரீர வேலைக்குப்பின் இருமல்.
**முதுகு.** விறைத்த கழுத்து. சரீரத்தை நனைப்பதால் அல்லது சரீரம்குளிர் அடைவதால் உண்டாகும்முதுகுவலி
**கை, கால்கள்.** பக்கவாதம். பனிக்கட்டிபோல் குளிராயிருக்கும் பாதங்கள். கைகளில் பால் உண்ணி. கைகள் வியர்த்தல். வாதமும், வயிற்றுப்பெருக்கும், மாறிமாறி வருதல்.
**சருமம்.** பற்பல சரும நோய்கள். குளிர்காலத்திலும், ஈரமான காலத்திலும் கூடுதல்.
**ஜுரம்.** கூடுதல் உஷ்ணம். குளிர்ச்சியும், தாகமும்.
**ஏற்றம்.** இரவு, குளிர், ஈரமான காலம்.
**இறக்கம்.** நடந்து திரிவதால்.
**வீரியம்.** 2 முதல் எல்லா வீரியங்களும் பயன்படும்.

## ஈப்ரேஷியா.
## Euphrasia.

(பொ கூ ) கண்களை தாக்கி, கூடுதல் கண்ணீரைவெளிப் படுத்தும். துர்நாற்றமுள்ள கபம்.

**தலை.** வெடிக்கும் தலைவலியும், கூசும் கண்களும். ஜல தோஷத்தோடு கூடிய தலைவலியும், மூக்கிலும், கண்களி லும் இருந்து கூடுதல் நீர்வடிதலும்.

**மூக்கு.** கூடுதல் நீர் வடிதலோடுகூடிய இருமல்.

**கண்கள். எப்பொழுதும் கண்களில் நீர்.** சூடான கண்ணீர். இமைகள் காந்தலும், வீங்குதலும்.

**இரைக்குடல்.** கபத்தை வெளிப்படுத்த முயற்சிக்கும் பொழுது வாந்தி.

**மலக்குடல்.** இரத்தபேதி, மலச்சிக்கல்.

**பெண்கள். வேதனையோடுகூடிய மாதவிடாய். ஒரு நாள் அல்லது சில மணி நேரத்திற்கு மாத்திரம் வெளிப்படுதல். கண் வியாதியோடு** மாதவிடாய் வெளிப்படாதிருத்தல்.

**ஆண்.** கட்டுப்படுத்தமுடியாமல் மூத்திரம் சிறிதளவில் வெளிப்படுதல்.

**சுவாச உறுப்புகள்.** திறந்த வெளிக்காற்றில் நடக்கும் பொழுது கொட்டாவி விடுதல். காலையில், நீர் கூடுதலாய் வெளிப்படும். ஜலதோஷத்துடன் கூடிய இருமலும், கூடுதல் கபம் வெளிப்படுதலும். பகலில் மாத்திரம் கக்குவான் இருமல்.

**சருமம்.** மண்ணென் நோயின் ஆரம்பம்.

**ஏற்றம்.** மாலை, அறைகளுக்குள், உஷ்ணம், வெளிச்சம்

**இறக்கம்.** காப்பி, இருட்டு.

**வீரியம்.** 3 முதல் 30 வீரியம் வரை போதுமானது.

## பெர்ரம் மெட்டாலிக்கம்.
## Ferrum Metallicum.

(பொ. கூ.) இளம் வயதில் பலவீனமாய் இருப்பவர்களுக் கும், சோவை பிடித்தவர்களுக்கும், உணர்ச்சி கூடியவர்க ளுக்கும் பயன்படும்.

**மனம்.** கோபம். சிறு சப்தங்களைக்கூட வெறுத்தல்.

**தலை.** பாயும் தண்ணீரைப்பார்த்தால் கிறுகிறுப்பு. கொட்

டாபுளிகொண்டு அடிப்பதுபோன்ற தலைவலி

**கண்கள்.** எழுத்துக்கள் ஒன்ருய் சேர்ந்து காணுதல்.
**வாய்.** வேதனையும் குளிர்ந்த ஜலத்தால் குறைதலும்.
**இரைக்குடல்.** மிகக்கூடுதல் பசி அல்லது பசி இன்மை. புளித்த சாதனங்களுக்கு விருப்பம். ஏப்பம் ஆகாரம் கழித்ததும் வாந்தி. நடுச்சாமத்திற்குமேல் வாந்தி. முட்டை அருந்துவது ஒத்துக்கொள்ளாதிருத்தல்

**மலம்.** இரவிலும், ஆகாரம் அருந்தும்பொழுதோ அல்லது பானங்கள் அருந்தும்பொழுதோ மூலத்தில் குறிப்பாக குழந்தைகளுக்குக் கடி.
**சிறுநீர்.** தன்னை அறியாமல் பிரிதலும், பகலில்கூடுதலும்
**பெண் உறுப்புகள்.** மாதவிடாய் ஒன்றிரண்டு நாட்களுக்கு இல்லாமலிருத்தலும், திரும்ப வருதலும். கர்ப்பாசயத்திலிருந்து இரத்தம் நீளமான துண்டுகளாய்வெளிப்படுதல்.
**சுவாசஉறுப்புகள்.** நெஞ்சில்அழுத்தம், ரத்தம்துப்புதல்.
**இரத்தாசயம்.** துடிதுடிப்பு. அசையும்பொழுது கூடுதல்.
**கை, கால்கள்.** தோளில் வாத வேதனை. இடுப்புவலி, நீரடித்தல்.
**சருமம்.** வெளுத்திருத்தலும், அமுக்கினால் குழிவிழுதலும்.
**ஜுரம்.** கைகளும், கால்களும் குளிர்ந்திருத்தலும், தலையும் முகமும் சூடாய் இருத்தலும். பலவீனப்படுத்தும் அதிகமான வியர்வை.
**ஏற்றம்.** வியர்வை எடுக்கும்பொழுதும், அமைதியாய் இருக்கும்பொழுதும், குளிர்ந்த ஜலத்தில் குளிப்பதினாலும் சரீரத்தை அதிக உஷ்ணப்படுத்துவதாலும். நடுச்சாமத்திற்குப் பின்.
**இறக்கம்.** மெதுவாய் நடக்கும்பொழுது.
**வீரியம்.** பலவீனத்திற்கும், இரத்தத்தை விருத்தி செய்யவும், தாய்பாகத்திலும் இரத்தப்பெருக்கு, சரீரத்தில் நீர் முதலியவற்றிற்கு மிகக்குறைந்த வீரியங்களும் உபயோகிக்கலாம்.

## பெர்ரம் பாஸ்பாரிக்கம்.

## Ferrum Phosphoricum.

(பொ. கூ.) ஜுரத்தின் ஆரம்பக்காலம். இரத்தபுஷ்டியு

யுடன்கூடிய திடகாத்திரமான சரீரம் இல்லாமல், நரம்பு பலவீனம், சோவை, நீர், எளிதில் இரத்தம் குவிதல் முதலியத்தன்மை உள்ளவர்களுக்குப் பயன்படும்.

**தலை.** இரத்தம் குவிதல். தெறிக்கும் தலைவலியும் குளிரடைவதால் குறைதலும்.

**கண்கள்.** சிவப்பு. காந்தும் தன்மை.

**காது.** இரைச்சல், காது வேதனை.

**மூக்கு.** ஜலதோஷத்தின் ஆரம்பம். இரத்தம் பாய்தல்.

**தொண்டை.** புண். டான்ஸில் வீங்குதல்.

**இரைக்குடல்.** மாமிசத்திற்கும் பாலுக்கும் விருப்பமில்லாதிருத்தல். **ஜீரணமாகாத ஆகாரம் வாந்தியெடுத்தல்.** இரத்த வாந்தி. புளித்த ஏப்பம்.

**வயறு.** வேதனை. நீர்போன்ற இரத்தம் கலந்த மலம். இரத்தபேதியின் ஆரம்பகாலம்.

**சிறுநீர்.** இருமல் எடுக்கும்பொழுதெல்லாம் மூத்திரம் தெறித்தல்.

**பெண்.** தலைவலியும் கர்ப்பாசயத்தை கீழ் தள்ளும் உணர்ச்சியோடுகூடிய மூன்று வாரத்திற்கொருமுறை வெளிப்படும் மாதவிடாயும்.

**சுவாச உறுப்புகள்.** சுவாசகோசத்தில் இரத்தம் குவிதல், இருமல், குரல் அடைப்பு, இரத்த வாந்தி.

**இரத்தாசயம்.** துடிதுடிப்பு. இருதய வியாதிகளின் ஆரம்பம்.

**கை, கால்கள்.** இணைப்புகளில் ஏற்படும் வாதம்.

**உறக்கம்.** உறக்கமில்லாமல் அமைதியற்றிருத்தல். பயம் உண்டாக்கும் சொப்பனங்கள். சோவை உள்ளவர்களுக்கு இரவில் வியர்வை.

**ஜுரம்.** மத்தியானம் ஒருமணிக்கு தினமும் குளிர். தசை வீக்கத்துடன்ஏற்படும்எல்லா ஜுரங்களின் ஆரம்பகாலம்.

**வீரியம்.** 3 முதல் மிக உயர்ந்த விரியங்கள் வரை.

## ஜெல்சமியம்.

## Gelsemium.

(பொ. கூ.) நரம்பு கிரமத்தை தாக்கும்.

சோர்பு. தனிப்பாகங்களில் ஏற்படும் வாதம். பெருவாரிக்

காய்ச்சல் (Influenza):

**மனம்.** அமைதியாய் இருப்பதற்கும், தனியாய் இருப்பதற்கும் விருப்பம் தன் வியாதியைப்பற்றி கவலையற்றிருத்தல், உறக்கம் வந்ததும் ஜன்னி. பயம், உணர்ச்சி ஊட்டும் செய்தி முதலியவற்ருல் வரும் உபாதைகள்.

**தலை.** கிறுகிறுப்பு கண் பார்வை மங்குதலும் அதைத் தொடர்ந்து தலைவலியும். அதிகம்சிறு நீர் கழித்தபின் தலை வலிக்குறைவு. தலையை உயர்த்தி தலையணை மீது வைக்க விருப்பம்.

**கண்கள்.** பார்வை மங்கல். பற்பல கண் வியாதிகள்

**முகம்.** உஷ்ணமும் இரத்தம் குவிதலும், நரம்புகளில் வேதனை, கீழ்நாடி தொங்குதல். துர் நாற்றம் நாக்கில் வாதம்.

**தொண்டை.** உஷ்ணமான ஆகாரங்களை விழுங்கமுடியாதிருத்தல், தொண்டையில் கட்டியான ஒரு துண்டு இருப்பதுபோன்ற உணர்ச்சியும் அது விழுங்க முடியாதிருத்தலும்.

**இரைக்குடல்.** தாகம் இல்லாதிருத்தல், விக்கலும் மாலையில் கூடுதலும்.

**மலம்.** துக்கம், கெட்ட செய்திகள் முதலியவற்ருல் ஏற்படும் வயிற்றுப்பெருக்கு.

**சிறுநீர்.** விட்டு விட்டுப்பிரிதல். சிறுநீர் கடுப்பு.

**பெண் உறுப்புகள்.** கர்ப்பாசயத்தின் வாய் விறைப்பாயிருத்தல். வேதனை கொண்ட மாதவிடாய்.

**ஆண்.** ஆண்குறி எழும்பாமல் இந்திரியம் கழிதல், விதக் கொட்டை பையில் வியர்வை. மேகநோயின் ஆரம்பம். சிறு நீர் துவாரத்தின் வாயில் காந்தல்.

**சுவாச உறுப்புகள்.** நெஞ்சு பாரமாய் தோன்றல்.

**இரத்தாசயம். எப்பொழுதும் அசைந்துகொண்டிருக்கவேண்டுமென்றும் அல்லது இரத்தாசயம் நின்றுவிடும் என்றும் பயப்படுதல்.** முதிர் வயதின் பலனற்ற நாடி.

**கை, கால்கள்.** எல்லா மாமிச தசைகளிலும் இணைப்புகளிலும் வேதனை.

**ஜுரம்.** கூடுதல்குளிர். தாகமில்லாதிருத்தல். அதிகசோர்பு.

**சருமம்.** மண்ணனும் அதைப்போன்ற சருமக்குறிகளும். அமுத்தப்பட்ட மண்ணனை வெளிப்படுத்தும்.

**ஏற்றம்.** ஈரமான காலம், கெட்ட செய்திகள். காலை 10 மணி.

**இறக்கம்.** முன் பக்கமாகக் கமருதல், கூடுதலாக சிறு நீர் பிரிதல், திறந்த வெளிக்காற்று.

(ஒ. ம) இக்னேஷியா, பேப்டிஷியா. இப்பிகாக், அக்கோனைட், பெல்லடோனு, சிமிஸிபூகா, மெக்னீஷியாபாஸ்.

**வீரியம்.** தாய் திராவகம் முதல் 30 வது வீரியம் வரை பயன்படும்.

## க்ரேபைட்டிஸ்.
## Graphites.

(பொ கூ.) சரும வியாதிக்கும், மலச் சிக்கலும் உள்ள திடகாத்திரம் உள்ளவர்களுக்கும் பொதுவாக பயன்படும்

**மனம்.** பெண்களுக்கு சங்கீதம் பொருந்துவதில்லை. கோழைத்தனம்.

**தலை.** ஒருபக்கமாய் வருவதும் வாந்தி எடுக்க வருவதும் காலையில் தோன்றுவதுமான தலைவலி. நீர் வடியும் சரும வியாதிகள்.

**கண்கள்.** இமைகள் சிவந்தும் வீங்கியும் இருத்தல். சரும வியாதிகள்.

**காதுகள்.** ஆகாரம் அருந்தும்பொழுது நருநருவென்ற சப்தம். **காதுகளுக்குப்பின்னல் நீர் வடியும் சருமக் குறிகள்.** செவிட்டுத்தனம்.

**மூக்கு.** வாசனைகளுக்கு கூடுதல் உணர்ச்சி மலர்களின் வாசனை பொருந்தாதிருத்தல்.

**முகம்.** சிலந்திக்கூடு இருப்பதுபோன்ற உணர்ச்சி. நீர் வடியும் சரும வியாதிகள்.

**வாய்.** துர் நாற்றம். புளித்த ஏப்பம்.

**இரைக்குடல்.** மாமிசத்திற்கு பிரியம் இல்லாதிருத்தல். இனிப்பு பதார்த்தங்கள் குமட்டலை உண்டுபண்ணும். சூடான பொருட்கள் ஒத்துக்கொள்வதில்லை. காந்தலும் பசியும். இறுக்கும் வேதனை.

**வயறு.** நிரம்பியிருப்பது போன்ற உணர்ச்சி. கூடுதல் வாய்வு. துணிகளைத் தளர்த்திவிட விரும்புதல். நாட்பட்ட

வயிற்றுப்பெருக்கும் துர் நாற்றம் கொண்ட மலமும்.
**மலம்.** மலச்சிக்கல். சளியால் பொதிந்திருத்தல். மூல வியாதிகள்.
**பெண் உறுப்புகள்.** மாதவிடாய்கூடுதலும, தாமதித்து வருதலும், மலச்சிக்கல், வேதனைகொண்ட மாதவிடாய். **சருமத்தைஉரிக்கும் வெள்ளைபடுதலும், கூடுதலான வெள்ளைபடுதலும்.** மூலைக்காம்புகள் வெடித்திருத்தல். சேர்க்கைக்கு விருப்பம் இல்லாதிருத்தல்
**ஆண் உறுப்புகள்.** சேர்க்கைக்கு அதிக விருப்பமும், ஆணல்சேர்க்கையால் அதிகசோர்பும். சேர்க்கைக்கு விருப் பம் இல்லாதிருத்தல். அதி விரைவில் இந்திரியம் பிரிதல்.
**சுவாச உறுப்புகள்.** நெஞ்சில் இறுக்கமான உணர்ச்சி. இழுப்பு. மூச்சு திணறல்.
**கை, கால்கள்.** கழுத்திலும் தோள்**களி**லும் முதுகிலும் வலி. தொடைச்சந்துகள் உரிந்து போதல். இடது கை உணர்ச்சியற்றிருத்தல். நகங்கள் வியாதியுறல். துர் நாற் றமுள்ள கால் வியர்வை.
**சருமம்.** சரும வியாதிகள் இல்லாத இடங்களில் உலர்ந் தும் கட்டியாயும் இருத்தல். **ஒட்டும் தன்மையுள்ள நீர் வடியும்சரும வியாதிகள்.** சிறுகாயங்கள்கூடபழுத்தல்
**ஏற்றம்.** உஷ்ணம், இரவு, மாதவிடாய் காலத்திலும் அதன் பின்பும்.
**இறக்கம்.** இருட்டிலும், பொதிந்துகொள்வதாலும்.
(ஒ. ம.) பெட்ரோலியம், செபியா, சல்பர், ப்ளூரிக் ஆசிட்.
**வீரியம்.** 6 முதல் மிக உயர்ந்த வீரியங்கள்வரை பயன் படும்.

## ஹமாமலிஸ்.

## Hamamelis.

(பொ. கூ.) இரத்தப்பெருக்கு.மூலவியாதிகள்முதலியவை.
**தலை.** நெற்றியில் உணர்ச்சிஇல்லை என்று தோன்றுதல்.
**கண்கள்.** சிவந்திருத்தல். வேதனை.
**மூக்கு.** கூடுதலாக இரத்தம் வடிதல், மூக்கிலிருந்து துர் நாற்றம்.
**நாக்கு.** நெருப்பால்சுடப்பட்டிருப்பதுபோன்றஉணர்ச்சி.

**இரைக் குடல்.** தாகம், கறுத்த இரத்தம் வாந்தி எடுத்தல். தேனை.

**மலம்.** மூலத்தில் புண்கள் இருப்பதுபோன்ற உணர்ச்சி. **அதிக இரத்தப்பெருக்கெடுக்கும்** மூல **வியாதிகள்,** இரத்தப்பேதி, மூலத்தில் நாடி அடித்தல்.

**சிறுநீர்.** சிறுநீர் கடுப்பும், இரத்தம் கலந்த சிறுநீரும்.

**பெண்.** கூடுதலான மாதவிடாய். கர்ப்பாசயத்திலிருந்து இரத்தப்பெருக்கு. இருண்ட நிற மாதவிடாய், கூடுதலான வெள்ளை நோய்.

**ஆண்.** விதக்கொட்டைகளில் வேதனை. அடி நரம்பில் (Spermatic Cord) வேதனை, விதக்கொட்டைகள்வீங்கல்.

**சுவாசஉறுப்புகள்.** இரத்த வாந்தி, நெஞ்சில்வேதனை

**சருமம்.** அடிபடுதலால் ஏற்படும்வீக்கம், சூடுமுதலியவை.

(ஒ. ம.) மூலவியாதிகளுக்கு, கால்காரியா ப்ளூரிக்கா, அலு, மூரியாடிக் ஆசிட், இதர வியாதிகளுக்கு, ஆர்ணிக்கா, காலண்டுலா, டிறில்லியம், சல்பூரிக் ஆசிட், பல்சடில்லா.

**வீரியம்.** தாய் திராவகம் முதல் மத்திப வீரியங்கள் வரை போதுமானது.

## ஹெபர் சல்பூரிஸ் கால்காரியம்(ஹெபர்சல்ப்)
## Hepar Sulph.

(பொ. கூ.) குறிப்பாக கோளங்கள் வீங்கும் சரீரம் உடையவர்களுக்கும் நீர் தேகம் உடையவர்களுக்கும் பயன்படும் சீழ் அல்லது பழுப்பு அதிகமாய் உண்டாகுதல் ஒரு முக்கிய குறியாகும்.

**மனம்.** மிகச்சிறிய காரணங்களுக்கும் கூட அதிகமாய் கோபப்படல்.

**தலை.** தலையை அசைக்கும்பொழுது வேதனையும் கிறுகிறுப்பும். காந்தலும் நமைச்சலும் நீர்வடியும்தன்மையோடும்கூடிய சரும வியாதிகள்.

**கண்கள்.** வெளித்தசையில் (Cornea) புண்கள் உண்டாகுதல். கண்களின்முன் பெரிய வட்டங்கள் தோன்றுதல். கண்களின் உள் சீழ் பிடித்தல்.

**காதுகள்.** துர் நாற்றமுள்ள சீழ் வெளிப்படுதல்.

**மூக்கு.** குளிர்ந்தகாற்றில்போனால் அடைபடுதல். பழைய பாலாடை கட்டி போன்ற வாடை.

ரூகம். மஞ்சள் நிறம். முகத்தில், குறிப்பாக எலும்புகளில் தொடும்பொழுது வலி.
**வாய்**. கூடுதல் எச்சில் ஊறுதல். எகிரில் இருந்து இரத்தம் வெளிப்படல்.
**தொண்டை**. விழுங்கும்பொழுது ஏதோ அடைத்திருப்பது போன்ற உணர்ச்சி. ஜுரத்தோடுகூடி பழுக்கும் தறுவாயுடன் டாண்சில்கள் வீங்குதல்.
**இரைக் குடல்**. காட்டமான சுவையுள்ள ஆகாரங்களை விரும்பல். அடிக்கடி ஏப்பம் எடுத்தல். வயிற்றுப்பொருமலும் காந்தலும்.
**வயறு**. இருமும்பொழுதோ, நடக்கும்பொழுதோ, மூச்சு விடும்பொழுதோ அல்லது தொட்டாலோ கல்லீரலின் பாகத்தில் வேதனை.
**சிறுநீர்**. சக்தியற்று வெளிப்படல். வயது முதிர்ந்தவர்களுக்கு ஏற்படும் மூத்திரப்பை உபாதைகள்.
**ஆண்**. மாருத பிடிவாதம் கொண்ட மேக நோய்.
**பெண்**. துர் நாற்றம்கொண்ட வெள்ளை படுதல்.
**சுவாச உறுப்புகள்**. சரீரத்தின் ஏதாவதொரு பாகம் குளிரால் தாக்கப்படும்பொழுது இருமல் உண்டாகுதல். மூச்சுத் திணறல். உலர்ந்த குளிர்ந்த காற்றில் இழுப்பு நோய் ஏற்றம் அடைதல்.
**சருமம்**. சிறு காயங்கள் கூட சீழ்பிடித்தல். பற்பல சரும வியாதிகள்.
**ஏற்றம்**. உலர்ந்த குளிர்ந்த காற்று.
**இறக்கம்**. ஈரமான காலநிலை.
**வீரியம்**. எல்லா வீரியங்களும் பயன்படும். சீழ் உண்டாகுவதைத் தடுக்க உயர்ந்த வீரியங்களும், சீழ் உண்டாக்குவதற்கு 2x வீரியத்தையும் உபயோகிக்கவும். க்ஷயரோகிகளில் அல்லது சுவாசகோசத்தின் இதர வியாதிகளில் கூடுதல் வீரியங்கள் ஆபத்தை விளைவிக்கும்.

## ஹயோசியாமஸ்.
## Hyoscyamus.

(பொ. கூ.) நரம்புக் கிரமத்தில் கூடுதலாய் வேலைசெய்யும்
**மனம்**. எல்லாவற்றையும் சம்சயித்தல். மடத்தனமானக் காரியங்களைப்பற்றி கூடுதலாகப் பேசுதல். எல்லாக் காரி

யங்களுக்கும் சிரித்தல்.
**தலை.** மூளை வியாதியுறலும் மயக்கமும்.
**வாய்.** நாக்குஉலர்ந்தும் வெடித்தும் சிரமத்துடன்வெளியில் நீட்டப்படுதலும். வாயில் நுரை தள்ளுதல்.
**தொண்டை** இறுக்கமும் பானங்கள் அருந்த முடியாதிருத்தலும்.
**இரைக்குடல்.** விக்கல். தீவிர வேதனையும் வாந்தி எடுப்பதால் குறைதலும்.
**மலம்.** வயிற்றுப்பெருக்கும் தன்னை அறியாமல்கழிதலும் உறக்கத்தில் கூடுதலும்
**சிறுநீர்.** தன்னை அறியாமலே பிரிதல்.
**ஆண்.** ஆண் தன்மை இல்லாமை. ஜுரத்தில் ஆண் குறியை பிடித்து விளையாடுதல்.
**பெண்.** மாதவிடாய்க்கு முன்பு மாம்ச தசைகள் வெட்டி வெட்டி இழுத்தல். சேர்க்கைக்கு விருப்பம் கூடுதல்.
**சுவாச உறுப்புகள்.** உர்லந்த இருமலும் இரவில் கூடுதலும். கபத்தோடு இரத்தம் கலந்திருத்தல்.
**ஏற்றம்.** இரவு, மாதவிடாய் சமயம், ஆகாரத்திற்குப்பின்,
**வீரியம்.** 6 முதல் 200 வரை.

## ஹைப்பரிக்கம்.
## Hypericum.

(பொ. கூ.) விரல்களிலும் நகங்களிலும் ஏற்படும் காயங்களுக்கு மிகவும் பயன்படும். வாய் பூட்டு ஏற்படுவதைத் தடுக்கும். இரண சிகிற்சைக்குப்பின்உள்ள வேதனைக்கு மிகவும் பயன்படும்.
**மனம்.** ஆகாயத்தில் எடுத்துச் செல்லப்படுவதுபோன்ற உணர்ச்சி. முடி கழிதல்.
**இரைக்குடல்.** இரைக்குடலில் கட்டியான சாதனம் தங்கி இருப்பது போன்ற உணர்ச்சி.
**சுவாச உறுப்புகள்.** மூடுபனியுள்ள சீதோஷ்ணத்தில் ஏற்றம் அடையும் இழுப்பு நோயும், கூடுதல் வியர்வையால் குறைதலும்.
**சருமம்.** சருமம் கிழிக்கப்படும் காயங்கள்.
**ஏற்றம்.** குளிர் காலமும் மூடுபனியுள்ள காலமும்.
**(ஒ. ம.)** லெடம், ஸ்றேபிஸ்கரியா, கேலண்டுலா,

றூட்டா, கொபியா.
**வீரியம்.** தாய் திராவகம் முதல் எல்லா வீரியங்களும் பயன்படும்.

## இக்னேஷியா.
## Ignatia.

(பொ. கூ ) துக்கம், கவலை முதலியவற்றால் ஏற்படும் உபாதைகள். ஹிஸ்டீரியா என்னும் வியாதிக்கு மிகவும் பயன் படும்
**மனம்.** துக்கமும் அழுதுகொண்டு இருத்தலும்.
**தலை.** பாரமாய்த் தோன்றல், ஆணி அடித்திருப்பது போன்ற தலைவலி.
**முகம்.** மாம்ச தசைகள் வெட்டி வெட்டி இழுத்தல்.
**வாய்.** புளித்த சுவை, பல்வலியும், காப்பி குடிப்பதாலும் புகைபிடிப்பதாலும் கூடுதலும்.
**தொண்டை.** கட்டியான வஸ்து தங்கியிருப்பதுபோன்ற உணர்ச்சி, டான்சில்கள் வீங்குதல்
**இரைக்குடல்.** புளித்த ஏப்பம், கூடுதல் வாய்வு.
**மலக்குடல்.** கடி எடுத்தல், வெளியில் தள்ளுதல், சிரமத்தோடு மலம் கழித்தல், கூர்மையான வஸ்து குத்தி வைக்கப்பட்டிருப்பதுபோன்ற உணர்ச்சி.
**பெண்.** கறுத்த நிறம் கொண்ட மாதவிடாயும் காலத்திற்கு முன்பு வெளிப்படுதலும். அதிகமாயும் அல்லது குறைவாயும் இருத்தல், துக்கத்தால் மாதவிடாய் வெளிப் படாதிருத்தல்.
**ஏற்றம்.** காலையிலும் திறந்த வெளிக்காற்றிலும் ஆகாரத்திற்கு பின்பும், காப்பி குடிப்பதாலும் புகை பிடிப்பதாலும்.
(ஒ, ம.) காளிபாஸ், செப்பியா, சிமிசுபூகா.
**வீரியம்.** 6 முதல் எல்லா வீரியங்களும் பயன்படும்.

## அயோடம்.
## Iodum.

(பொ. கூ.) கூடுதல் பசியும் ஆனால் எவ்வளவு ஆகாரம் அருந்தினாலும் சரீரத்தில் சதை வைக்காமல் இருத்தலும், எளிதான வேலை செய்தால்கூட விரைவில் வியர்த்தல், கோளங்கள் வீங்குதல்.
**மனம்.** அமைதியாய் இருக்கும்பொழுது பயம்.

**தலை.** கிறுகிறுப்பும் கமருவதாலும் சூடான அறையில் செல்லுவதாலும் ஏற்றம் அடைதலும்.
**கண்கள்.** கூடுதல் நீர் வடிதல்.
**வாய்.** எகிறில் இருந்து இரத்தம்வடிதலும் வாயிலிருந்து துர் நாற்றமும்.
**தொண்டை.** கோளங்கள் வீங்குதல்.
**இரைக்குடல்.** கூடுதல் பசியும், தாகமும், ஏப்பமும்.
**வயறு.** கல்லீரலும், மண்ணீரலும் பெரிதாய் இருத்தல். மஞ்சள்காமாலை.
**மலம்.** மலம் கழிக்கும்போதெல்லாம் இரத்தப் பெருக்கு. மலச்சிக்கலும் வயிற்றுப்பெருக்கும் மாறி, மாறி வருதல்.
**ஆண்.** விதக்கொட்டைகள் வீங்கல். ஓதம்.
**பெண்.** மாதவிடாய் காலத்தில் தீவீர பலவீனம். வெள்ளை படுதல்.
**சுவாசஉறுப்புகள்.** அறைகளினுள்ளும், உஷ்ணகாலத்திலும், மழை காலத்திலும், ஏற்றமடையும் இருமல்
(ஒ. ம.) ப்ரோமியம், ஹெபர், மெர்குறி, பாஸ்பரஸ், அப்ரேட்டனம், நட்ரம் மூர், சானிக்குலா, டுபர் குலினம்
**வீரியம்.** எல்லா வீரியங்களும் பயன்படும்.

## இபிகாக்.
## Ipecacuanha.

(பொ. கூ.) தீராத குமட்டலும், வாந்தியும். பிரகாசமான சிவந்த இரத்தம் வெளிப்படும் இரத்தப்பெருக்கு.
**மனம்.** கோபம், பலவற்றை விரும்பல்.
**தலை.** தலை நொறுங்குண்டதுபோன்ற வேதனை.
**கண்கள்.** கூடுதல் நீர் வடிதல், அசைந்துகொண்டிருக்கும் சாதனங்களைப் பார்ப்பதனால் குமட்டல்-
**முகம்.** கண்களைச் சுற்றி நீலவட்டம்.
**மூக்கு.** மூக்கடைப்புடன் கூடிய ஜலதோஷம், குமட்டலும் மூக்கிலிருந்து இரத்தம் வடிதலும்.
**இரைக்குடல்.** எப்பொழுதும் குமட்டலும், வாந்தியும், ஆகாரம், பித்தம், இரத்தம், சளி முதலியவை வாந்தியாய் வெளிப்படுதலும்.
**வயறு.** இரத்தபேதியும், மலக்குடலில் கடுப்பும்.

**மலம்.** பச்சை நிறம். இரத்தபேதி.
**பேண்.** பிரகாசமான சிவந்த நிறமுடைய இரத்தப்பெருக்கும், குமட்டலும். காலத்திற்கு முந்தின மாதவிடாயும், மாதவிடாய் கூடுதலாய் வெளிப்படுதலும்.
**சுவாச உறுப்புகள்.** மூச்சு திணறல். இழுப்பு நோய். தீவிர இருமல், சுவாசகோசத்திலிருந்து இரத்தம் வெளிப்படுதல். கக்குவானும், மூக்கிலிருந்தும், வாயிலிருந்தும் இரத்தம் வெளிப்படுதலும்.
**ஜுரம்.** விட்டு விட்டு முறை வைத்து வரும் ஜுரம்.
(ஒ. ம) ப்ளாட்டா ஓரியன்டாலிஸ்.
வீரியம். 3 முதல் 200 வரை.

## காளி பைக்ரோமிகம்.
## Kali Bichromicum.

(பொ. கூ..) இரைக்குடல், குடல் முதலியவற்றின் தசைகளை தாக்கும். மூத்திரக்காய், இரத்தாசயம், கல்லீரல்முதலியனவும் தாக்கப்படும். கபம் நூல்போல் நீளமாய் இழுக்கும் தன்மை உள்ளதாய் இருப்பது இம்மருந்தின் ஒரு முக்கியக் குறியாகும்.
**தலை.** ஆசனத்திலிருந்து எழும்பும்பொழுது கிறுகிறுப்பு கண் புருவங்களின் மேற்பாகத்தில் வலி.
**கண்கள்.** இமைகளில் காந்தலும் வீக்கமும் நீர் கொண்டிருத்தலும். கண்களின் வெளி தசைகளில் புண்கள்.
**காதுகள்.** கட்டியான துர் நாற்றமுடைய மஞ்சள் நிறம் கொண்ட நூல்போல் இழுக்கக்கூடிய சீழ் வெளிப்படுதல்.
**மூக்கு.** மூக்கிலிருந்து துர் வாடை, தீவிர தும்மல்.
**வாய்.** நாக்கில் முடி இருப்பதுபோன்ற உணர்ச்சி.
**தொண்டை.** வீக்கமும் சிவந்த நிறமும். இரைக்குடல் வரை பரவும் காந்தல். டிப்தீரியா, வாயிலிருந்தும் தொண்டையிலிருந்தும் வெளிப்படுபவை கட்டியாயும் நூல்போல் இழுக்கக்கூடியதாயும் இருக்கும்.
**இரைக்குடல்.** ஆகாரத்திற்குப்பின் வேதனை. கல்லீரலின் பாகத்திலும் மண்ணீரலின் பாகத்திலும் முதுகெலும்புவரை ஊடுருவிச்செல்லும் வேதனை. மாமிசம் ஜீரணிக்கிறதில்லை. வாந்தி.
**வயறு.** ஆகாரம் அருந்தியதும் வேதனை.

**சிறுநீர்.** சிறுநீர் கழித்தபின் ஒரு சொட்டு இன்னும் தங்கி இருப்பதுபோன்ற உணர்ச்சி. சிறுநீரில் சீழ், சளி, இரத்தம் முதலியவை கலந்திருத்தல்.
**ஆண்.** சிபிலிஸ் என்னும் கிரந்தி நோயின் புண்கள்.
**பெண்.** மஞ்சள் நிறம்கொண்ட கட்டியான வெள்ளை படுதல்.
**சுவாச உறுப்புகள்.** மஞ்சள் நிறம் கொண்ட கபம் கூடுதலாய் வெளிப்படுதல். கபம் ஒட்டும் தன்மை உள்ளதும் நூல்போல் நீளமாய் இழுக்கக்கூடியதுமாய் இருக்கும்.
**வீரியம்.** 3 முதல் எல்லா வீரியங்களும் பயன்படும்.

## காளி கார்போனிக்கம்.
## Kali Carbonicum.

(பொ. கூ.) ஊசிகொண்டு குத்துவது போன்ற வேதனை.
**மனம்.** முற்கோபம். குணம் திடீர் திடீரென்று மாறுதல்.
**தலை.** திரும்பும்பொழுது கிறுகிறுப்பு, முடி கழிதல்.
**கண்கள்.** மேல் இமைகளின் மேற்பாகத்தில் வீக்கம்.
**வாய்.** எகிரிலிருந்து சீழ் வடிதல் புண்கள், கூடுதல் எச்சில்.
**தொண்டை.** காலையில் தொண்டையில் கபம் ஒட்டுதல்.
**இரைக்குடல்.** இனிப்பான சாதனங்களுக்கு விருப்பம். வயது முதிர்ந்தவர்களின் அஜீரணக் கோளாறுகள், புளித்த ஏப்பமும், வாந்தியும்.
**வயறு.** கல்லீரலின் பாகத்தில் குத்தெடுக்கும் வேதனை. மஞ்சள்காமாலையும் சரீரத்தில் நீரும்.
**மலக்குடல்.** வேதனை கொடுக்கும் மூலவியாதி. மலத்தோடுகூடுதல் இரத்தம் பிரிதல்.
**சிறுநீர்.** இரவில் அடிக்கடி சிறுநீர் பிரிதல். இருமும் பொழுதும், தும்மும்பொழுதும் சிறுநீர் பிரிதல்.
**ஆண்.** சேர்க்கைக்குப்பின் அதிக பலவீனம்.

**பெண்.** மாதவிடாய் முந்தியும் கூடுதலாயும் அல்லது பிந்தியும் குறைவாயும் இருத்தல். இளம் வயது பெண்களுக்கு மாதவிடாய் வர தாமதமாகுதல்.
**சுவாச உறுப்புகள்.** நெஞ்சில் அறுக்கும் வேதனையும் வலது பக்கமாய் படுத்தால் கூடுதலும். ஊசியால் குத்து

வதுபோன்ற வேதனை. க்ஷயரோகம்.

**ஏற்றம்.** குளிர்ந்த காலநிலையிலும் சேர்க்கைக்குப்பின்னும், இடதுபக்கமாப் படுக்கும்பொழுதும்.

**வீரியம்.** 30 ம் அதற்குக் கூடுதலும். நாட்பட்ட வியாதிகளில் மிகவும் கவலையாக கொடுக்கப்படவேண்டும்.

## காலமியா லாடிபோலியா.
## Kalmia Latifolia.

(பொ. கூ.) வாத நோய்க்கு பயன்படும் மருந்து. இரத்தாசயத்தையும்தாக்கும். சிறுநீரில் அல்புமின் கலந்திருக்கும்.

**தலை.** கிறு கிறுப்பு, முன் பாகத்தில் வலி.

**கண்கள்.** பார்வை மங்குதல், வேதனையும் அசைப்பதால் ஏற்றமும்.

**முகம்.** வலது பக்க நரம்பு வேதனை.

**இரைக்குடல்.** குமட்டலும், வாந்தியும். இரைக்குடல் பாகத்தில் வேதனையும், முன் பக்கமாய் சரிவதால் கூடுதலும், நேராய் நிமிர்ந்து உட்கார்ந்தால் குறைதலும்.

**இரத்தாசயம்.** துடிதுடுப்பு, முன்பக்கம் சரிவதால் கூடுதல். வாதநோய், இடம்பெயர்ந்து இரத்தாசயத்தை வந்தடைதல். மூச்சு திணறலை உண்டுபண்ணும் கூர்மையான வேதனை.

**பெண்.** மாதவிடாய், காலத்திற்கு முந்தி வருதல். மாதவிடாய்க்குப்பின் வெள்ளை படுதல்.

**கை, கால்கள்.** வலது பக்க வாதநோய். இடுப்பிலிருந்து பாதங்கள்வரை வேதனை.

**வீரியம்.** தாய்த்திராவகத்திலிருந்து எல்லா வீரியங்களும் பயன்படும்.

## கிரியோசோட்டம்.
## Kreosotum.

(பொ. கூ.) சிறு காயங்களிலிருந்துகூட அதிகமான இரத்தப்பெருக்கு. சருமத்தை உரிக்கும், காந்தல்கொண்ட, துர்நாற்றமுள்ள மாதவிடாய், வெள்ளை படுதல், கபம் முதலியவை.

**மனம்.** சங்கீதம், அழுகையையும், இரத்தாசயத் துடுதுடுப்பையும் உண்டுபண்ணும். ஞாபகசக்தி இல்லாமை. முற்கோபம்.

**தலை.** மாதவிடாயோடு கூடிய தலைவலி.
**கண்கள்.** உப்புசுவைகொண்ட கண்ணீர் வெளிப்படுதல்
**காதுகள்.** கேள்வி மந்தம், காதுகளைச்சுற்றி சருமநோய்.
**வாய்** சிவந்த, இரத்தம் கசியும் உதடுகள். பற்கள் முளைக்கும்பொழுது அதிக வேதனை. பற்கள் அதிக விரைவில் கெட்டுப்போதல், வாயிலிருந்து துர்நாற்றம்.
**இரைக்குடல்.** குமட்டல், ஆகாரத்தின் பின் பலமணி நேரங்களுக்குப் பிறகு வாந்தி எடுத்தல். வாய்கசப்பு.
**வயறு.** வயற்றுப்பொருமல். காந்தல்கொண்ட மூலவியாதிகள். துர்நாற்றமுள்ள வயிற்ருேட்டம். குழந்தைகளுக்கு பற்கள்முளைக்கும்பொழுதுஏற்படும்வயிற்ருேட்டம்.
**சிறுநீர்.** துர் நாற்றம். படுத்திருக்கும்பொழுது மாத்திரம் சிறுநீர் கழிக்க முடிதல். சிறுநீர் கழிக்கவேண்டுமென்ற உணர்ச்சி ஏற்பட்டதும், துரிதமாக விரைதல்.
**பெண்.** சருமத்தை உரிக்கும், நமைச்சல் கொண்ட வெள்ளைபடுதல். மர்மஸ்தானத்தைச் சுற்றி அதிகமான கடி எடுத்தல், மாதவிடாய் காலத்தில் செவிடு. சேர்க்கைக்குப்பின் இரத்தப்பெருக்கு. விட்டு விட்டு வெளிப்படும் மாதவிடாய்.
**சுவாச உறுப்புகள்.** குரலடைப்பும், மூச்சுக்குழாயில் வேதனையும். மாலையில் ஏற்றமடையும் இருமல். வயது முதிர்ந்தவர்களின் குளிர்காலத்தில் ஏற்படும் இருமல்.
**சருமம்.** சொறியெடுத்தலும், மாலையில் கூடுதலும். பாதங்களில் காந்தல்.
**ஏற்றம்.** திறந்த வெளிக்காற்று, குளிர்காலம், படுத்திருத்தல், இளைப்பாறுதல், மாதவிடாய்க்குப்பின்.
**இறக்கம்.** அசைதல், உஷ்ணம், சூடான ஆகாரம்.
**வீரியம்.** 3 முதல் உயர்ந்த வீரியங்கள்வரை.

## லாக் கானினம். Lac Caninum

(பொ. கூ.) தொண்டை புண், டிப்தீரியா, வாதம் முதலிய வியாதிகளுக்கு பயன்படும். வேதனைகள் ஒருபக்கத்திலிருந்து மாறி மறுபக்கத்திற்கு செல்லும். அதிக சோர்பு.
**மனம்.** ஞாபக மறதி கூடுதல். எழுதும்பொழுது கூடுதல் பிழைகள் போடுதல். அவனுடைய வியாதி குணமாகாது என்று தீர்மானித்தல்.

**தலை.** ஆகாயத்தில் நடப்பது அல்லது மிதப்பது போன்ற உணர்ச்சி. தலை வலியும், தீவிரமான தலைவலியில் குமட்டலும், வாந்தியும், பார்வை மங்குதலும்.
**வாய்.** சவைக்கும்பொழுது தாடைகளில் (Jaws) சப்தம் உண்டாகுதல்.
**தொண்டை.** விழுங்கும் பொழுது வேதனை. டான்சில்கள் வீங்குதலும், டிப்தீரியா என்றவியாதியும் திரும்பத் திரும்ப பக்கம்விட்டு பக்கம் மாறுதல்.(டிப்தீரியா என்பது தொண்டையின் தசைகளில் நீர் கட்டி ஏற்படும் ஒரு பயங்கர பரவும் நோய். அதிகமாக மரணம் விளையும்)
**பெண்.** மாதவிடாய், காலத்திற்கு முந்தியும் அதிகமாயும் திடீர் திடீரென்று பாய்வதுமாயும் இருக்கும். மாதவிடாய்க்கு முன்பு முலைகள் வீக்கம்கொள்ளுதலும் வேதனையும். பால் வற்ற வைப்பதற்கு குறிகள் ஒத்திருந்தால் இம்மருந்து மிகவும் பயன்படும்.
**உறக்கம்.** பாம்புகள் காணும் சொப்பனம்.
(ஒ. ம.) லேச்சசிஸ், கோனியம்.
**வீரியம்.** 30 விருந்து உயர்ந்த வீரியங்கள் வரை.

## லேச்சசிஸ். Lachesis.

(பொ. கூ.) இரத்தப்பெருக்கு, டிப்தீரியா. மாதவிடாய் இறுதியாக நிற்கும் சமயம்.
**மனம்.** அதிகமாய்ப் பேசுதல். அமைதியற்றிருத்தல்.
**தலை.** காலையில் எழுந்ததும் தலைவலி. தலை வலியும், பார்வை மங்குதலும், வெளுத்த முகமும். கிறுகிறுப்பு,
**கண்கள்.** டிப்தீரியா என்னும் வியாதிக்குப் பிறகு சரியற்ற பார்வை.
**மூக்கு.** இரத்தப்பெருக்கு, தலைவலிக்குப் பின்னால் ஜலதோஷம்.
**வாய்.** எகிர் வீங்குதலும் இரத்தம் கசிதலும். நாக்கை வெளியே நீட்டும்பொழுது தாக்கு நடுநடுங்குதல். காதுகள் வரை பரவும் பல்வலி.
**தொண்டை.** டிப்தீரியா, சூடான பானங்களால் வேதனை கூடுதல். கழுத்தைச் சுற்றியுள்ள ஆடை இறுக்கமற்றிருக்க விரும்பல்.
**இரைக்குடல்.** மதுபானத்திற்கு விருப்பம். அதிக பசி.

**வயறு.** கல்லீரல் பாகத்தில் உணர்ச்சி கூடுதல். இடுப்பைச் சுற்றி இறுக்கமான ஆடை அணிய முடியாதிருத்தல்.

**மலம்.** மலச்சிக்கல். துர் நாற்றமுள்ள மலம். கறுத்த இரத்தம் வெளிப்படுதல்.

**பெண்.** இறுதியாக மாதவிடாய் நிற்கும் காலத்தில் ஏற்படும் உபாதைகள். இரத்தப்பெருக்கு. மாதவிடாய் வேதனையும், மாதவிடாய் வெளிப்பட்டதும் வேதனை மறைதலும். மாதவிடாய் ஆரம்பத்திலும், இறுதியிலும் இம்மருந்து நன்ருய் வேலை செய்யும்.

**சுவாச உறுப்புகள்.** படுத்தால் மூச்சு திணறல். ஜன்னல்களை திறக்க விரும்பல்.

**இரத்நாசயம்.** துடி துடிப்பு. இறுக்கும் உணர்ச்சி.

**சருமம்.** சூடான வியர்வை, கட்டிகள், பருக்கள், பிளவைகள் முதவியவை நீல நிறமாய் இருக்கும்.

**ஏற்றம்.** உறக்கத்திற்குப்பின். சுடு தண்ணீரில் குளித்தல். சூடான பானங்கள்.

**இறக்கம்.** சரீரத்திலிருந்து வெளிப்பட வேண்டியவை வெளிப்படுதல்.

(ஒ. ம) நட்றம்மூர், நைட்ரிக் ஆசிட், நாஜா.

**வீரியம்.** 30 முதல் உயர்ந்த வீரியங்கள்.

**குறிப்பு.** ஒருபொழுது மருந்தின் வேலை முடிந்த பின்பே திரும்ப மருந்து கொடுக்க வேண்டும். இம்மருந்தின் குறிகள் இடது பக்கத்தில் ஆரம்பித்து வலது பக்கத்திற்கு செல்லும்.

## லெடம். (Ledum)

(பொ. கூ.) வாதம். வாதநோய் பாதங்களில் ஆரம்பித்து மேல் நோக்கிப் பரவும். கூர்மையான ஆயுதங்களால் ஏற்படும் காயங்கள். டெட்டேனஸ் (Tetanus)

**கண்கள்.** புண்கள்.

**சுவாச உறுப்புகள்.** இரத்தம் கலந்த கபம், மூச்சு திணறல். கக்குவான்.

**கை, கால்கள்.** சிறிய இணைப்புகளில் வேதனை. பாதங்களில் தீவிர வேதனை. கரண்டைகள் இலகுவில் பிரளுதல்

**இறக்கம்**. குளிர். குளிர்ந்த ஜலத்தில் கால்களை மூழ்க வைத்தல்.
**ஏற்றம்.** இரவு. படுக்கையின் உஷ்ணம்.
(ஒ. ம.) றூட்டா, ஹமாமலிஸ், ஆர்னிக்கா.
**வீரியம்.** 3 முதல் உயர்ந்த வீரியங்கள் வரை.
**குறிப்பு**. இம்மருந்தால் டெட்டானஸ் ஏற்படாமல் தடுக்கலாம்.

## லைக்கோபோடியம். Lycopodium.

(பொ. கூ.) குறிகள் வலது பக்கத்தில் ஆரம்பித்து இடது பக்கத்திற்குச் செல்லும்.
**மனம். தனியாய் இருக்க பயப்படுதல்.** ஞாபக மறதி.
**தலை.** காரணமின்றி தலையை அசைத்துக்கொண்டிருத்தல். மாலை நான்கு மணியில் இருந்து எட்டு மணிவரையும், படுப்பதாலும் ஏற்றம் அடையும் தலைவலி. முடி கழிதல். இளம் வயதிலேயே முடி நரைத்தலும், வழுக்கு விழுதலும் (Baldness).
**கண்கள்**. பகல் அல்லது இரவில் மாத்திரம் பார்வை மங்கல். சாதனங்களின் ஒருபகுதிமாத்திரம் காணப்படுதல்
**காதுகள்**. கட்டியான மஞ்சள் நிறம்கொண்ட துர்நாற்றமுள்ள சீழ் வடிதல், செவிடு.
**மூக்கு**. முகரும் சக்தி தீவிரம். மூக்கடைப்பு.
**முகம்**. விஷஜுரத்தில்கீழ்நாடிதொங்குதல்- (லேச்சஸிஸ் ஓப்பியம், நைட்ரிக் ஆசிட்)
**வாய்**. பல் வலியும், கன்னங்கள் வீங்குதலும், சூடான ஒத்தணத்தால்குறைதலும். நாக்கில் புண்கள். துர்நாற்றம்
**தொண்டை**. டான்ஸில்கள் வீங்குதலும் பழுத்தலும்.
**இரைக்குடல்.** அஜீரணம், கூடுதல் பசி. இனிப்பான சாதனங்கள் விரும்பல், புளித்த சுவை.
**வயறு**. ஆகாரத்திற்குப்பின் வயிற்றுப்பொருமல்.
**மலம்.** வயிற்றுப் பெருக்கு, மூலவியாதிகள்.
**சிறுநீர்.** சிறுநீர் கழிக்கும்பொழுது முதுகில் வேதனை. சிறுநீர் கழிக்குமுன் குழந்தை கரைதல் (சரஸ்பரில்லா).
**ஆண்**. ஆண் தன்மை இல்லாமை. துரிதமாய் இந்திரியம் பிரிதல். (கலேடியம், ஸெலீனியம், அக்னஸ்)

**பெண்.** கூடுதலான அதிக நாட்கள் நீடித்திருக்கும் மாதவிடாய். தாமதித்துவரும் மாதவிடாய். சேர்க்கை சமயம் வேதனை. சூடான காந்தும் தன்மையுள்ள வெள்ளை படுதல்.

**சுவாச உறுப்புகள்.** மூச்சு திணறல். இரவில் ஏற்றம் அடையும் இருமல்.

**இரத்தாசயம்.** இரவில் துடிதுடிப்பு. இடது பக்கமாய் படுக்கமுடியாதிருத்தல்.

**கை, கால்கள்.** உணர்ச்சியற்றுப்போதல். ஜுரம். மாலை மூன்று மணிக்கும் நான்கு மணிக்கும் இடையில் குளிர். குளிருக்குப் பின் வியர்வை.

**உறக்கம்.** பகலில் உறங்க விரும்புதல். விபத்துகள் காணும் சொப்பனம்.

**சருமம்.** தீவிர சொறி, பற்பல சரும வியாதிகள்.

**இறக்கம்.** அசைதல் நடுச்சாமத்திற்குப்பின், சூடான ஆகாரமும் பானமும். போர்த்துக்கொள்ளாதிருத்தல்.

**ஏற்றம்.** வலது பக்கம், உஷ்ணம்.

(ஒ. ம) சல்பர், ரஸ்டாக்ஸ், மெர்குறி, ஹெபர், அலுமினு ஆண்டிமணி குரூடம், ப்ரையோனியா, நக்ஸ்வாமிகா.

**வீரியம்.** மிகக்குறைந்த வீரியங்களிலிருந்து மிகக் கூடிய வீரியங்கள் வரை பயன்படும். மத்திப வீரியங்களையும் உயர்ந்த வீரியங்களையும் அடிக்கடி கொடுக்கக்கூடாது.

## மலான்டிரினம். Malandrinum.

அம்மை நோயைத் தடுக்க மிகவும் சக்தி வாய்ந்த மருந்து. அம்மைகுத்துவதால்ஏற்படும் கெடுதல்களுக்குபயன்படும்.

**வீரியம்.** 30 முதல் மிக உயர்ந்த வீரியங்கள் வரை.

## மெடோரினம். Medorrhinum.

(பொ. கூ.) மிகவும் ஆழமாய் வேலை செய்யும் மருந்து. சீழ் வடியும் மேக நோய் (கனோரியா) அமுக்கப்படுவதால் ஏற்படும் உபாதைகள். நாள்பட்ட வாதம். அதிகமாய் மேக நோய் சீழை திரும்ப வெளிப்படுத்தும்.

**மனம்.** ஞாபகசக்தி குறைவு. சமயம் மிகவும் மெதுவாய் கடருவதாகத் தோன்றல். தற்கொலையைப்பற்றிய எண்ணங்கள்.

**தலை.** காந்தல் எடுக்கும் வேதனை. **செள் பிடித்தல்.**
**காதுகள்.** கேட்கும் சக்தி குறைவு.
**மூக்கு.** நாட்பட்ட ஜலதோஷம்.
**இரைக்குடல்.** அதிக தாகம். மதுபானம், உப்பு, இனிப்பான பதார்த்தங்கள், உஷ்ணமான பானங்கள் முதலியவற்றை விரும்பல்.
**வயறு.** கல்லீரலிலும் மண்ணீரலிலும் தீவிர வேதனை. வயிற்றுப்பக்கமாய் படுக்க விரும்பல். கெர்ப்பகால வாந்தி.
**மலம்.** பின்பக்கமாக சரிந்தே மலம் கழிக்க முடிதல். மூலத்தில் கடி.
**சிறுநீர்.** சிறுநீர் பிரியும்பொழுது காந்தலும் கடுப்பும், மிகவும் மெதுவாக சிறுநீர் பாய்தல்.
**பெண்.** துர் நாற்றமுள்ள மாதவிடாய், மாதவிடாய் கறையை துணிகளிலிருந்து அகற்றுவது மிகக் கடினம். மாதவிடாய்காலத்தில் சிறுநீர் அடிக்கடி பிரிதல். சூடான சருமத்தை உரிக்கும் மீன் வாடை கொண்ட வெள்ளை படுதல். மலட்டுத்தனம். தீவிர மாதவிடாய் வேதனை.
**ஆண்.** தானுகவே இந்திரியம் பிரிதலும், கூடுதல் பலவீனமும். ஆண் தன்மையற்றிருத்தல். நாள்பட்ட மேகநோய்.
**சுவாச உறுப்புகள்.** மூச்சு திணறல் ஆஸ்துமா.
**கை, கால்கள்.** தீவிர வேதனை. நடக்கும்பொழுது கரண்டைகள் இலகுவில் பிரளுதல்.
**இறக்கம்.** கடற்கரை. வயிற்றுப்பாகத்தில் படுத்தல், ஈரமான காலம்.
**ஏற்றம்.** காலைமுதல் மாலை வரை. உஷ்ணம்.
**(ஒ. ம.)** சல்பர், சிபிலினம், ஸிங்கம்.
**வீரியம்.** மிக உயர்ந்த வீரியங்கள் மாத்திரம் பயன்படும் அடிக்கடி கொடுக்கக்கூடாது.

## மெர்குரியஸ் சோலுபிளிஸ். (Merc. Sol.)

(பொ. கூ.) எல்லா அவயவங்களும், தசைகளும், பொதுவாகத் தாக்கப்படும். கிரந்தி நோயின் இரண்டாந்தர நிலையில் (Secondary stage of syphillis) அடிக்கடி பயன்படும், கிரந்தி நோயின் உபாதைகளுக்கு 2x வீரியத்தில் உபயோகிக்கவும். சரீரத்திலிருந்து வெளிப்படும் யாவும்

துர் நாற்றம் உள்ளதாய் இருக்கும்.

**மனம்.** கேள்விகளுக்கு தாமதித்து பதில் கூறல். பலவீனம்கொண்ட ஞாபகசக்தி.

**தலை.** மலந்து படுக்கும்பொழுது கிறுகிறுப்பு முடி கழிதல். எண்ணெய் போன்ற வியர்வை

**கண்கள்.** சிவந்த இமைகள், கண்ணிலிருந்து வெளியாகுவது அதிகமாயும் காந்தல், கொண்டதாயும் சூடானதாயும் இருக்கும்.

**காதுகள்.** கட்டியான மஞ்சள் நிறம் கொண்ட துர் நாற்றமுள்ள சீழ் வெளிப்படுதல்.

**மூக்கு.** அதிகத் தும்மல். சீழ்போன்ற துர் நாற்றமுள்ள மூக்கு சளி. மூக்கினுள் இரணங்கள்.

**வாய்.** இனிப்பு கலந்த, உலோகங்களின் சுவை. கூடுதல் எச்சிலும் துர் நாற்றமும். நடுநடுங்கும் நாக்கால் பேசத்திணறல். கூடுதல் தாகம். பற்கள் நாக்கில் பதிதல்.

**தொண்டை.** சிவப்பு நிறங்கொண்ட வீக்கம், அடிக்கடி விழுங்க விரும்புதல்.

**இரைக்குடல்.** துர் நாற்றம் கொண்ட ஏப்பம்.

**வயறு.** கல்லீரல் வீங்குதல் மஞ்சள்காமாலை.

**மலம்.** மலம் கழிந்தாலும் திருப்தி அற்றிருத்தல்.

**சிறுநீர்.** அடிக்கடி கழிதல், சிறுநீர் தாரையில் இருந்து பச்சை நிறம் கொண்ட சீழ் வெளிப்படுதல்.

**ஆண்.** கிரந்திப் புண்கள். அரையாப்பு.

**பெண்.** வயிற்று வலியோடுகூடிய கூடுதலான மாதவிடாய். சருமத்தை உரிக்கும் வெள்ளை படுதல்.

**கை, கால்கள்.** எண்ணெய்போன்ற வியர்வை. நடுக்கம், பாதங்களும் கால்களும் வீங்குதல்.

**சருமம்.** எப்பொழுதும் ஈரமாய் இருத்தல் அதிக வாடை கொண்ட வியர்வையும், இரவில் கூடுதலும். வியர்வை எடுத்தாலும் உக்கிரமம் குறையாதிருத்தல். சொறி எடுத்தலும் இரவில் கூடுதலும். ஜலதோஷம் பிடிக்கும்போதெல்லாம் கோளங்கள் வீங்குதல்.

**ஜுரம்.** இரவில் கூடுதல் வியர்வை எடுக்கும் ஜுரம்.

**ஏற்றம்.** இரவு, ஈரமான காலம், வலது பக்கம் படுத்தல், வியர்வை எடுத்தல், சூடான அறையும் படுக்கையும்.

(ஒ. ம.) மெசரியம், பாஸ்பரஸ், சிபிலினம், காவிமூர்.
**வீரியம்.** 2x முதல் உயர்ந்த வீரியங்கள் வரை. குறைந்த வீரியங்கள் கட்டிகளை பழுக்க வைக்கும். உயர்ந்த வீரியங்கள் பழுப்பைக் குறைக்கும்.

## மெர்குறி கரோசிவஸ். Mercurius Corrosivus

(பொ. கூ.) மலக்குடல், மூத்திரப்பை முதலியவற்றைத் தாக்கும் மூத்திரக்காய் வியாதிகள், மேகநோய் முதலியவற்றிற்கும் பயன்படும்.
**தலை.** ஜன்னி, பிரக்ஞை இழப்பது, உறக்கம்.
**கண்கள்.** உள் கண்களில் வலி, வெளி தசைகளில் புண்கள். சூடான, கூடுதல் கண்ணீர் வடிதல், கிரந்தி நோயால் கண்களில் உண்டாகும் வியாதிகள். தீவிரக் காந்தல்
**மூக்கு.** இரணங்களும் கூடுதல் நீர் வடிதலும்
**முகம்.** வீக்கம். கறுத்த நிறம்கொண்ட சுண்டுகள்.
**வாய்.** பற்கள் அசைதல். எகிர் வீங்குதலும் சீழ் வடிதலும். கசந்த உப்புசுவையுடன் கூடிய ருசி.
**தொண்டை.** சிவந்த நிறமும் வீக்கமும் வேதனையும். விழுங்கும்பொழுது வேதனை, கோளங்கள் வீங்குதல்.
**இரைக்குடல்.** பச்சை நிறம்கொண்ட பித்த வாந்தி.
**மலம்.** இரத்த பேதி. மூலக்கடுப்பு. சூடான துர் நாற்றம் கொண்ட பேதி.
**சுவாச உறுப்புகள்.** மூச்சுக்குழாயில் அறுப்பதுபோன்ற வேதனை. இரத்தம் கலந்த எச்சில்.
**சிறுநீர்.** சிறுநீர்தாரையில் காந்தல். சூடான காந்தல் கொண்ட சிறுநீர். அல்பியுமன் கலந்த சிறுநீர். பச்சை நிறம்கொண்ட சீழ். சிறுநீர்கழித்தபின் வியர்வைஎடுத்தல்.
**ஆண்.** ஆண் உறுப்புகள் மிகவும் கூடுதலாக வீங்கி இருத்தல், மேகநோய்.
**ஏற்றம்.** மாலை, இரவு.
**இறக்கம்.** இளைப்பாறும்பொழுது.
(ஒ. ம.) ஆர்சனிக்கம், லேச்சசிஸ்.
**வீரியம்.** 6 முதல் உயர்ந்த வீரியங்கள் வரை.

## மெசரியம். Mezereum.

(பொ. கூ.) சருமம், எலும்பு, பல், முதலியவற்றைத் தாக்கும், குளிர்ந்த காற்றிற்கு உணர்ச்சி கூடுதல்.
**தலை**. பேசுவதால் ஏற்றம் அடையும் தலைவலி. சீழ்கொள்ளும் சரும வியாதி.
**மூக்கு**. தும்மல் ஜலதோஷம்.
**கண்கள்.** இரண சிகிற்சைக்குப்பின் வேதனை.
**இரைக்குடல்.** கொழுப்பான பதார்த்தங்களை விரும்பல், எச்சில் கூடுதல். குமட்டலும் ஆகாரம் அருந்துவதால் குறைதலும். காந்தல் எடுக்கும் வாய்வு புண் (Gastric ulcer)
**வயறு.** வாய்வோடுகூடியவேதனையும் மூச்சு திணறலும்.
**மலக்குடல்**. பிரசவத்திற்குப்பின் மலச்சிக்கல். மலக்குடல் வெளியே தள்ளுதல். வயிற்றோட்டம்.
**சிறுநீர்**. சூடானதாயும் இரத்தம் கலந்ததாயும் இருக்கும். சிறுநீர் பிரிந்தபின் சிறுநீர் தாரையின் நுனியில் வேதனை. மூத்திரப்பை வேதனையோடு கூடிய நீர்கடுப்பு. சிறுநீர் பிரிந்தபின் இரத்தம் வெளியாகுதல்.
**பெண்**. மாதவிடாய் அடிக்கடியும் அதிகமாயும்இருத்தல். அரிக்கும் தன்மையுள்ள வெள்ளை படுதல்.
**ஆண்**. விதைக்கொட்டைகள் வீங்குதல். நீர் கடுப்போடு கூடிய மேக நோய்.
**சருமம்.** அதிக சொறி எடுக்கும் சரும நோய் சீழ்பிடிக்கும் சரும நோய்களும் காந்தலும்.
**ஏற்றம்.** குளிர்ந்த காற்று, இரவு, மாலை, சூடான ஆகாரம், அசைதல்.
**இறக்கம்.** திறந்த வெளிக்காற்று.
(ஒ. ம) மெர்குறி, பிட்டலக்கா, ரஸ்டாக்ஸ், சிபிலினம்.
**வீரியம்.** 6 முதல் உயர்ந்த வீரியம்.

## மில்லிபோலியம். Millefolium.

(பொ. கூ.) பிரகாசமான சிவந்த இரத்தத்துடன் சரீரத்தின் பற்பல பாகங்களில் ஏற்படும் இரத்தப்பெருக்கிற்கு மிகவும் பயன்படும்.
(ஒ. ம.) சீகேல், இபிகாக், ஹமாமலிஸ்.
**வீரியம்:** தாய் திராவகம் முதல் முப்பதாம் வீரியம் வரை.

## மூரியாடிக் ஆசிட். Muriatic Acid.

(பொ. கூ.) சிறுநீர் கழிக்கும்பொழுது தன்னை அறியாமலே மலம் கழிதல். கூடுதல் பலவீனத்தினால் நோயாளி படுக்கையில் நழுவுதல். அதாவது படுக்கையின் கீழ்பக்கமாக ஊர்ந்து எல்லையை அடைதல். இரத்தப்பெருக்கு.

**மனம்.** முற்கோபம். அமைதியற்றிருத்தல்.

**தலை.** கிறுகிறுப்பு. வலதுபக்கமாய் படுக்கும்பொழுது கூடுதல்.

**மூக்கு.** இரத்தப்பெருக்கு, கூடுதல் தும்மல்.

**முகம்.** கீழ் நாடி தொங்குதல். உதடுகள் உலர்ந்தும் வெடித்தும் இருத்தல்.

**வாய்.** ஆழம் கூடிய புண்கள். குறிப்பாக நாக்கில். எகிர் வீங்குதல். பற்களில் அழுக்கு படிதல்.

**இரைக்குடல்.** மாமிசத்தைப் பார்ப்பதையோ அல்லது மாமிசத்தைப்பற்றி நினைக்கவோ முடியாதிருத்தல்.

**மலக்குடல்.** சிறுநீர் பிரியும்பொழுது தன்னை அறியாமலே மலமும் கழிதல். மிகவும் வேதனை கூடிய மூல வியாதிகள்.

**சிறுநீர் உறுப்புகள்.** மலம் கழிதலோடுகூடி மாத்திரமே சிறுநீர் கழிக்க முடிதல்,

**பெண்.** சமயத்திற்கு முன்பே மாதவிடாய் வருதல். வெள்ளை படுதல்.

**சருமம்.** பற்பல சரும வியாதிகள். கைகளின் பின்பாகத்தில் காணப்படும் சரும நோய்.

**ஜுரம்.** கை, கால்கள் குளிர்ச்சி அடைதல். கூடுதல் உஷ்ணமும் தாகமற்ற நிலையும். இரத்தப்பெருக்கு. கூடுதல் சோர்பு.

**ஏற்றம்.** ஈரமான கால நிலையிலும். நடுச்சாமத்திற்குமுன்பும்.

**இறக்கம்.** இடதுபக்கமாய் படுத்தல்.

(ஒ. ம.) பாஸ்பாரிக் ஆசிட், ஆர்ஸனிக்கம், பேப்டிஷியா.

**வீரியம்.** ஒன்று முதல் 30 வரை.

## நட்ரம் கார்போனிக்கம். Natrum Carbonicum

(பொ. கூ.) உஷ்ணத்தால் அதிக சோர்பு. சோவை.

**மனம்.** சிந்திக்க முடியாதிருத்தல். சப்தத்திற்கும் குளி

ருக்கும் காலநிலை மாறுதல்களுக்கும் கூடுதல் உணர்ச்சி. இடிமுழக்கத்தோடுகூடிய காற்றிற்கு பயம். சங்கீதத்தால் குறிகள் ஏற்றம் அடைதல்.

**தலை.** இலகுவான மன வேலையினுல்கூட தலைவலி ஏற்றம் அடைதல். சூரிய வெப்பம், பிரகாசமான வெளிச்சம் முதலியவற்ருல் தலைவலி ஏற்றம் அடைதல்.

**மூக்கு** மூக்கிலிருந்து நீர் வடிதல். துர் நாற்றம். கூடுதல் கபம் வெளிப்படுதல்.

**முகம்.** கண்களைச்சுற்றி நீல வட்டங்கள்.

**இரைக்குடல்.** அதிக உஷ்ணமாய் இருக்கும்பொழுது குளிர்ந்த பானங்கள் அருந்துவதால் ஏற்படும் உபாதைகள். அஜீரணம் கசந்த சுவை. பாலுக்கு வெறுப்பு.

**மலக்குடல்.** சட்டென்று மலம் கழிக்கத் தோன்றல் பால் அருந்துவதால் வயிற்றுப்பெருக்கு.

**பெண் உறுப்புகள்.** யாவும் கீழே தள்ளப்படுவது போன்ற உணர்ச்சி. தாமதித்து வரும் மாதவிடாய். துர்நாற்றமுள்ள வெள்ளை. மலட்டுத்தனம்.

**கை, கால்கள்.** நாள்பட்ட சுளுக்குகள். அதிகாலையில் உறுப்புகள் பலனற்றிருத்தல். கரண்டைகள் எளிதில் சுழுக்குதல்.

**சருமம்.** எளிதில் வியர்த்தல்.

**ஏற்றம்.** உட்கார்ந்திருத்தல், சங்கீதம், உஷ்ணம், மன வேலை, இடிமுழக்கத்தோடுகூடிய காற்று. காலநிலை மாறுதல், சூரிய வெளிச்சம்.

**இறக்கம்.** அசைதல்.

(ஒ. ம.) நட்ரம் சல்ப், காஸ்டிகம்.

**வீரியம்.** 6 முதல் மிக உயர்ந்த வீரியங்கள் வரை.

## நட்ரம் மூரியாடிக்கம். Natrum Muriaticum.

(பொ. கூ.) விட்டு விட்டு வரும் முறை ஜுரம். சோவை. தீவிர பலவீனம். நீரழிவு.

**மனம்.** துக்கம், பயம், கோபம் முதலியவற்ருல் ஏற்படும் உபாதைகள். சமாதானம் கூறுவதால் அல்லது சாந்திபடுத்த முயற்சித்தால் குறிகள் ஏற்றம் அடைதல். இரவில் கள்ளன் வீட்டினுள் ஒளிந்திருக்கிருன் என்று

பயந்து அறைகளை சோதித்தல்.

**தலை.** மூளையை பல சுத்தியல்கள் கொண்டு அடிப்பது போன்ற வேதனை. மாதவிடாய்க்கு பின்பு காலையிலிருந்து மாலை வரையும் தலைவேதனை. சோவையினால் மாணவிகளுக்கு ஏற்படும் தலைவேதனை. நாள்பட்ட தலை வலி.

**கண்கள்.** மாணவ மாணவிகளுக்கு தலைவலியோடுகூட உண்டாகும் நொறுங்குண்ட கண் வேதனை. எழுத்துக்கள் யாவும் ஒன்ருய் காணப்படுதல். காந்தல். காந்தலும் சூடும் கொண்ட கண்ணீர். இருமும்பொழுது கண்ணீர் பெருக்கு.

**மூக்கு.** அதிகமான நீர் வடியும் தீவிர ஜலதோஷமும், இரண்டு மூன்று நாட்களுக்குப்பின் ஜலதோஷம் மாறி மூக்கடைப்பு ஏற்பட்டு மூச்சு திணறலும். தும்மலோடு ஏற்படும் ஜலதோஷத்திற்கு முப்பதாம் வீரியத்தில் இம் மருந்தை உபயோகிப்பதால் எளிதில் குணம் அடையும்

**வாய்.** நாக்கில் நுரைபோன்ற அழுக்கு. நாக்கு உணர்ச்சி அற்றுப்போதல். நாக்கில் முடி இருப்பது போன்ற உணர்ச்சி. கூடுதல் தாகம்.

**இரைக்குடல்.** நல்ல பசியும் கூடுதல் ஆகாரம் அருந்துதலும். ஆனல் மெலிந்துபோதலும். ஆகாரம் அருந்தும் பொழுது வியர்வை. உப்பு கூடிய சுவையை விரும்புதல்.

**வயறு.** அறுப்பது போன்ற வேதனை. பொருமல். இருமும்பொழுது வேதனை.

**மலக்குடல்.** மலம் கழிந்தபின் காந்தலும் குத்தெடுக்கும் வேதனையும். மூலத்திலிருந்து இரத்தப்பெருக்கு. மலச்சிக்கல். வயிற்று வேதனையும் அதைத்தொடர்ந்து வயிற்ருேட்டமும்.

**சிறுநீர் உறுப்புகள்.** இருமும்பொழுதும் நடக்கும்பொழுதும் சிறுநீர் தன்னை அறியாமலே பிரிதல்.

**ஆண்.** சேர்க்கைக்குப்பின் கூட இந்திரியம் திரும்பவும் தானகவே கழிதல். ஆண் தன்மை இல்லாமை.

**பெண்.** ஒழுங்கற்ற மாதவிடாய். சூடான வெள்ளைபடுதல்

**சுவாச உறுப்புகள்.** நெஞ்சு முழுவதும் குத்தெடுக்கும் வேதனை. படிகளில் ஏறும்பொழுது மூச்சு திணறல். கக்குவானும் இருமும்பொழுது கண்ணீர் வடிதலும்.

**கை, கால்கள்.** உள்ளங்கைகளில் வியர்வை எடுத்தல்.
**உறக்கம்.** மத்தியானத்திற்குமுன் உறங்க விரும்புதல். கள்ளர்கள் காணும் சொப்பனம்.

**சருமம்.** காந்தலும் தீவிரமாய் சொறி எடுத்தலும். புளு வெட்டால் முடி கழிதல்.
**ஜுரம்.** காலையில் ஒன்பதுமுதல் பதினொருமணி வரை குளிர். ஜுரம் இருக்கும்பொழுது இம்மருந்தை உபயோகிக்கக்கூடாது.
**ஏற்றம்.** சங்கீதம், சப்தம், சூடான அறை, படுத்திருத்தல், கடற்கரை, மனவேலை, ஆறுதல்கூறப்படல், பேசுதல்.
**இறக்கம்.** திறந்த வெளிக்காற்று. குளிர்ந்த ஜலத்தில் குளித்தல். வலது பக்கமாய் படுத்தல். ஆடைகளை இறுக்கமாய் அணிதல்.
(ஒ. ம.) இக்னேஷியா, செபியா, தூஜா, க்ரேபைட்டிஸ், அலுமினா.
**வீரியம்.** பன்னிரெண்டுமுதல் மிக உயர்ந்த வீரியம்வரை. அடிக்கடி கொடுக்கக்கூடாது.

## நைட்ரிக் ஆசிட். Nitricum Acidum.

(பொ. கூ.) குத்தெடுக்கும் வேதனை. வாகனங்களில் பிரயாணம் செய்யும்பொழுது குறிகள் இறக்கம் அடைதல். மின்னல் வேகத்தில் வேதனை தோன்றி மறைதல். இரத்தப்பெருக்கு.
**மனம்.** முற்கோபம். சப்தம், வேதனை, தொடப்படல் முதலியவற்றிற்கு உணர்ச்சிக் கூடுதல். மரணம் சம்பவிக்கும் என்ற பயம்.
**தலை.** தலையைச் சுற்றி இறுகக் கட்டியிருப்பது போன்ற உணர்ச்சி. முடி கழிதல்.
**காதுகள்.** செவிடு. சவைக்கும்பொழுது காதுகளினுள் சப்தம்.
**மூக்கு.** இரத்தப்பெருக்கு, நாள்பட்ட பீனிசமும், துர்நாற்றமுள்ள சளி வெளிப்படுதலும்.
**வாய்.** துர் நாற்றம், எச்சில் கூடுதல். எகிரிலிருந்து இரத்தம் கசிதல்.
**இரைக்குடல்.** கூடுதல் பசியும் இனிப்பான சுவையும்

ஜீரணம் ஆகாத சாக்கட்டி, மண் முதலியவற்றை விரும் பல். கொழுப்புகொண்ட சாதனங்களுக்கும் உப்பான சுவைக்கும் விருப்பம்.

**வயறு.** மலம் கழிந்தபின் பல மணிக்கூறுகள் இருக்கும் வயிற்றுவேதனை. இரத்தப்பெருக்கு. ஆடைகளை இறுக கட்டுவதால் வயிற்று வேதனை குறைதல். இலகுவில் இரத்தப்பெருக்கெடுக்கும் மூல வியாதிகள்.

**சிறுநீர். குறைவாயும், குதிரையின் மூத்திரத்தைப் போல் துர் நாற்றம் உடையதாயும் இருக்கும்.**

**பெண்.** மாம்ச நிறம் கொண்ட அல்லது காவி நிற துர் நாற்றமுள்ள வெள்ளைபடுதல். மர்ம ஸ்தானங்களின் முடி உதிர்ந்துபோதல். சமயத்திற்கு முந்தி வெளிப்படும் மாத விடாயும் அதிக இரத்தமும்.

**சுவாச உறுப்புகள்.** படிகளில் ஏறும்பொழுது மூச்சுத் திணறல்.

**கை, கால்கள்.** துர் நாற்றமுள்ள கால் வியர்வை.

**சருமம்.** பாலுண்ணி, பற்பல சரும வியாதிகள்.

**ஏற்றம்.** மாலையிலும், இரவிலும், குளிர்ந்த காலத்திலும், உஷ்ண காலத்திலும்.

(ஒ. ம.) காளிகார்போனிக்கம், மெர்குறி, தூஜா, ஹெப்பர்சல்ப், கால்கேரியா கார்போனிக்கம்.

**வீரியம்.** 6 முதல் உயர்ந்த வீரியங்கள் வரை.

## நக்ஸ் மாஸ்டா. Nux Moschata.

(பொ. கூ.) காக்காய் வலி. மூர்ச்சையற்றுப்போதல்.

**மனம்.** சிரிப்பும் அழுகையும் மாறி மாறி வருதல். அவளுக்கு இரண்டுதலைகள் இருக்கின்றன என்றுதோன்றல்.

**தலை.** திறந்த வெளிக்காற்றில் நடக்கும்பொழுது கிறுகிறுப்பு. தெறிக்கும்தலைவலியும், அமுக்கினால் குறைதலும்

**கண்கள்.** சாதனங்கள் பெரிதாய் அல்லது தூரத்தில் தோன்றல்.

**மூக்கு.** நறுமணம், நாற்றம் முதலியவற்றிற்கு கூடுதல் உணர்ச்சி. இரத்தப்பெருக்கு.

**வாய்.** நாக்கு, வாயின் மேல்பாகத்தோடு ஒட்டிக்கொள்ளல். கெர்ப்பகால பல்வலி.

**இரைக்குடல்.** கூடுதலான பொருமல். கூடுதல் வாயு

வோடு கூடிய அஜீரணம் விக்கல்.

**வயறு**. மிகவும் கூடுதலான வயிற்றுப்பொருமல். மிகவும் சிரமப்பட்டால்கூட மலம் கழிக்க முடியாதிருத்தல். **மலம் கழிக்கும்போதோ அல்லது அதன் பிறகோ தளர்ச்சி அடைதல்.**

**பெண்**. கெர்ப்பாசயத்திலிருந்து இரத்தப் பெருக்கு. நீண்ட நாட்கள் இருக்கும் இருண்ட கட்டியான மாதவிடாய். மாதவிடாய் தடைபடுதலும், தளர்ச்சி அடைதலும், உறக்கமின்மையும்.

**சுவாச உறுப்புகள்**. காற்றிற்கு எதிராக நடக்கும்பொழுது குரல் அடைப்பு. (ஹெப்பர்சல்ப்) இரவில் படுத்திருக்கும்பொழுது இருமல்.

**இரத்தாசயம்**. ஏதோ இரத்தாசயத்தை பிடித்திருக்குவதுபோன்ற உணர்ச்சி துடிதுடிப்பு.

**கை, கால்கள்**. வலது இடுப்பிலிருந்து முட்டுவரை வேதனையும், படிகளில் ஏறும்பொழுது ஏற்றமும். பாதங்களை நனைப்பதாலும், குளிர்ந்த காற்றிற்கு தன்னை வெளிப்படுத்துவதாலும் உண்டாகும் வாதம்,

**உறக்கம்**. அதிக சோர்பு, கோமா. (Coma)

**ஜுரம்**. இடது கையில் ஆரம்பிக்கும் குளிர், வியர்வையும் தாகமுமற்ற குளிரும் சூடும்.

**ஏற்றம்**. குளிர்ந்த காற்று, குளிர்ந்த ஆகாரம். குளிர்ந்த ஜலத்தில் குளித்தல், வேதனையுள்ள பக்கமாய் படுத்தல் அசைதல்.

**இறக்கம்**. உஷ்ணம், உஷ்ணமான காலநிலை.

**(ஒ. ம.)** நக்ஸ்வாமிகா, பல்ஸற்றிலா, றஸ்டாக்ஸ், இக்னேஷியா, அசபோற்றிடா.

**வீரியம்**. ஒன்று முதல் எல்லா வீரியங்களும்.

## நக்ஸ்வாமிகா. Nuxvomica.

(பொ. கூ.) ஒல்லியான, முற்கோபமுடைய, நரம்பு பலவீனம்கொண்ட, சுறுசுறுப்புள்ளவருக்கு பயன்படும். கூடுதல் மனவேலை செய்பவருக்கும், எப்பொழுதும் தொழிலைப் பற்றியக் கவலை உள்ளவருக்கும், காரியாலயங்களில் அதிக வேலை செய்பவருக்கும், கூடுதல் காப்பி, புகையிலை

ஆகாரம் முதலியவை அருந்துபவருக்கும் பயன்படும்.
**மனம்.** தீவிர முற்கோபம். யாவற்றிற்கும் கூடுதல் உணர்ச்சி, **சப்தம், வாசனைகள், வெளிச்சம் முதலியவற்றைத் தாங்க முடியாத நிலை.** தொடப்படுவதை வெறுத்தல். குற்றம் கண்டுபிடித்தல்.
**தலை.** கிறுகிறுப்போடுகூடிய தலைவலி. காலையிலும், மன வேலையினாலும், புகையிலை, காப்பி, திறந்த வெளிக்காற்று முதலியவற்றாலும் தலைவலி ஏற்றம் அடைதல். மூலவியாதிகளோடுகூடிய தலைவலி. சூரியவெளிச்சத்தில் ஏற்படும் தலைவலி.
**கண்கள்.** வெளிச்சத்திற்கு உணர்ச்சி கூடுதல். போதை வஸ்துக்கள் உபயோகிப்பதால் ஏற்படும்கண் உபாதைகள்.
**காதுகள்.** உள் காதில் கடி எடுத்தல். படுக்கையில் காதுவலி கூடுதல்.
**மூக்கு.** வாசனைகளினால் தளர்ச்சை **உண்**டாகுதல்.
**வாய்.** முன்பாகம் சுத்தமாயும், பின்பாகம் கம்பளி போன்றும் அழுக்கடைந்திருத்தல். (Furred tongue) எகிர் வீங்கியும் வெண்மை நிறமாயும் இருத்தல். இரத்தம் கசிதல்.குளிரானசாதனங்களினால் ஏற்றம் அடையும்பல்வலி.
**இரைக்குடல்.** காலையிலும், ஆகாரத்திற்கு பின்பும் புளித்த சுவையும், குமட்டலும் ஆகாரம் கழித்து சிறிது நேரத்திற்குப்பின் வேதனை. புளித்த, கசப்பான ஏப்பம். போதை வஸ்துக்களுக்கும், கொழுப்புள்ள பதார்த்தங்களுக்கும் விருப்பம். கூடுதல் வாயுவும், வாந்தி எடுக்க விருப்பமும், ஆனால் வாந்தி எடுக்கமுடியாத நிலையும்.
**வயறு.** நொறுங்குண்ட வேதனை. வாயுவோடு கூடிய வயிற்றுப்பொருமலும் வேதனையும். திக்குமுக்காடச்செய்யும் ஹெர்னியா (Strangulated hernia)
**மலம்.** மலச்சிக்கலும் அடிக்கடி மலம் கழிக்க முயற்சித்தலும். திருப்தியற்ற மலம் கழிதல். இன்னும் மலம் தங்கி இருப்பதுபோன்ற உணர்ச்சி. மலச்சிக்கலும் வயிற்றோட்டமும் மாறிமாறி வருதல். குறிப்பாக பேதிமருந்துகள் அருந்தியபின். வேதனை கொடுக்கும் மறைவான மூலவியாதிகள். வாழ்க்கை ஒழுங்குகள் தவறுவதால் ஏற்படும் வயிற்றோட்டமும், அதிகாலையில் கூடுதலும். மஞ்சள் காமாலையோடுகூடிய வயிற்றோட்டம்.

**சிறுநீர்.** நீர்கடுப்பு, சிறுநீர் கழிக்கும்பொழுது சிறுநீர் தாரையில் நமைச்சலும், மூத்திரப்பையின் வாயில் வேதனையும்.

**ஆண்.** சேர்க்கைக்கு அதிகமாய்விரும்பல். கொழுப்பான அதிக ஆகாரம் அருந்துவதால் இந்திரியம் கழிதல். கூடுதல் சம்போகத்தினால் ஏற்படும் உபாதைகள். விதைக் கொட்டைகளில் வேதனையும் வீக்கமும். சொப்பனம், முதுகுவலிமுதலியவற்றோடு, இந்திரியம் தானாகக்கழிதல்.

**பெண்.** நீடித்த நாட்கள் இருக்கும், காலத்திற்கு முந்திய மாதவிடாய். எப்பொழுதும் ஒழுங்கற்ற மாதவிடாயும். கறுத்த இரத்தமும் தளர்ச்சையும். கெர்ப்பாசயம்வெளியே தள்ளப்படுதல். அடிக்கடி மலம் கழிக்கவேண்டும் என்ற விருப்பத்தோடு கூடிய மாதவிடாய் வேதனை. சரியற்ற பிரசவ வேதனையும் அடிக்கடி மலமும் சிறுநீரும் கழிக்க விருப்பமும்.

**சுவாச உறுப்புகள்.** காலையிலும் அல்லது ஆகாரத்திற்குப் பின்னும் ஏற்படும் இழுப்பு நோய். மூச்சு திணறல். இருமும்பொழுது தெறிக்கும் தலைவலி.

**முதுகு.** முதுகு வலி. முதுகெலும்பில் காந்தலும் காலையில் மூன்றுமுதல் நான்கு மணிவரை கூடுதலும். எழுந்து இருந்தே ஒரு பக்கமாக படுக்கையில் திரும்பமுடியும்.

**கை, கால்கள்.** கைகள் செய்கையற்றுப்போதல். சம்பூரணமற்ற பக்கவாதம்.

**உறக்கம்.** காலையில் மூன்று மணிக்குப்பின் உறங்கமுடியாதிருத்தல். சொப்பனங்கள்.

**சருமம்.** குறிப்பாக முகத்தில் காந்தல்கொண்ட உஷ்ணம். சொறி எடுத்தல்.

**ஜுரம்.** எப்பொழுதும் குளிரும் போர்த்திக்கொள்ள விருப்பமும். சரீரத்தின் ஒரு பாகத்தில் மாத்திரம் வியர்வை.

**ஏற்றம்.** காலை, மனவேலை, ஆகாரத்திற்குப்பின், உலர்ந்த கால நிலை, குளிர், போதை வஸ்துக்கள்.

**இறக்கம்.** மாலை, சிறிது நேர உறக்கம், அமைதியாயிருத்தல், ஈரமான காலநிலை.

**வீரியம்.** ஒன்று முதல் உயர்ந்த வீரியங்கள் வரை.

**குறிப்பு.** மாலையில் கொடுத்தால் இம்மருந்து நன்ருக வேலை செய்யும்.

## ஒபியம். Opium

(பொ. கூ..) சரியான மருந்துகூட வியாதியில் முன்னேற்றம் ஏற்படுத்த தவறுதல். பயத்தால்ஏற்படும் வியாதிகள்.
**மனம்.** நோயாளி யாவற்றையும் வேண்டாமென்று கூறுதல். **சம்பூரணமாய் பிரக்ஞை இழந்துபோதல்.** தன் வீட்டில் இல்லை என்று நோயாளிக்குத் தோன்றல், திறந்த கண்களுடன் ஜன்னியில் புலம்பல்.
**தலை.** கிறுகிறுப்பு. வயது முதிர்ந்தவர்களில் தலை பாரமற்றுத் தோன்றல்,
**கண்கள்.** கண்மணிகள் விரிதல் அல்லதுசுருங்கியிருத்தல்
**முகம்.** கீழ் நாடி தொங்குதல், சிவந்த வீங்கிய முகம்.
**வாய்.** கறுத்த, திமிர் கொண்ட நாக்கு.
**இரைக்குடல்.** வேதனை, வலிப்பு உண்டாகுதல் (Convulsion) முதலியவற்ருேடு கூடிய வாந்தி. பசியிருந்தாலும். ஆகாரம் அருந்த விருப்பமில்லாமை.
**மலம்.** பிடிவாதமான மலச்சிக்கல். கட்டியான, உருண்டையான, கறுத்த நிறம் கொண்ட மலம் மலச்சிக்கலும் வயிற்ருேட்டமும் மாறி மாறி வருதல்.

**சிறுநீர்.** பயத்திஞல் மூத்திரம் தாஞகப் பிரிதல்.
**பெண்.** பயத்தால் மாதவிடாய் தடைபடல். பிரசவ வேதனை திடீரென நின்றுபோதலும், கோமாவும். பிரசவசமயம் ஏற்படும் வலிப்புகள். பயத்தால் ஏற்படும் கர்ப்ப சிதைவு.
**சுவாச உறுப்புகள்.** உறங்கியதும் மூச்சு நின்றுபோதல் குறட்டை விடுதல், மூச்சு திணறல், நீலநிறமுகம். இரத்தம் கலந்த கபம் முதலியவற்ருேடு கூடிய இருமல்.
**உறக்கம்.** அதிக சோர்பு, படுக்கை துணிகளை நுள்ளி நுள்ளி எடுத்தல்.
**ஏற்றம்.** உஷ்ணம். உறங்கும்பொழுதும் அதன் பின்பும்.
**இறக்கம்.** குளிர்ந்த சாதனங்கள். நடந்துகொண்டிருத்தல்.
(ஒ.ம.) ஏபிஸ், பெல்லடோஞ, ஜெல்சமியம், நக்ஸ்மாஸ்டா.
**வீரியம்.** 3 முதல் உயர்ந்த வீரியங்கள் வரை.

## பெட்ரோலியம். Petroleum.

(பொ. கூ.) சருமக் குறிகளும் குளிர்காலத்தில் ஏற்றமும். வாகனங்களிலும், கப்பலிலும் பிரயாணம் செய்வதால் ஏற்படும் உபாதைகள். நாள்பட்ட வயிற்றோட்டம்.
**மனம்**. தெருக்களில் நடந்துகொண்டிருக்கும்போது பாதையை மறந்துவிடல். தன்னை இரண்டுபேரென்றோ அல்லது பக்கத்தில் யாரோ படுத்திருப்பதாகநினைத்தல். மரணம் சமீபத்தில் சம்பவிக்கும் என்று நினைத்தல்.
**தலை.** குளிர்ந்த காற்று வீசுவதுபோன்ற உணர்ச்சி. நீர் வடியும் சரும வியாதி. தலைவலியும் இருமும்பொழுது கூடுதலும்.
**கண்கள்.** மங்கலான பார்வை, கண்ணாடியின்றி வாசிக்க முடியாதிருத்தல்.
**காதுகள்.** காதுகளைச்சுற்றி சரும வியாதி. செவிடு.
**இரைக்குடல்.** புளித்த ஏப்பம், பொருமல். மாமிசம் கொழுப்பான பதார்த்தங்கள் முதலியவற்றை வெறுத்தல் மலம் கழித்ததும் பசி. தீவிர பசியும் இரவில் எழுந்து ஆகாரம் அருந்த விரும்பலும்.
**வயறு.** பகலில் மாத்திரம் வயிற்றோட்டம். முட்டைகோஸ் அருந்துவதால் ஏற்றம்.
**பெண்**. மாதவிடாய்க்குமுன்பு தெறிக்கும் தலைவலி. கூடுதலான வெள்ளைபடுதல். முலைக்காம்புகளில் கடிஎடுத்தல்.
**சுவாச உறுப்புகள்**. குரல் அடைப்பு. இருமலினால் தலைவலி உண்டாகுதல்.
**கை, கால்கள்**. விரல்களின் நுனியில் வெடிப்பு. குளிர்காலத்தில் ஏற்றம்.
**சருமம்.** சருமத்தில் வெடிப்புண்டாக்கும் சருமவியாதிகள்.
**ஏற்றம்.** ஈரம், வாகனங்களில் பிரயாணம்செய்தல், குளிர்காலம், ஆகாரம் அருந்தல்.
**இறக்கம்.** சூடான காலநிலை.
(ஒ. ம.) கார்போவெஜிட்,க்ரேபைட்டிஸ், சல்பர்,பாஸ்பரஸ்.
**வீரியம்.** 3 முதல் உயர்ந்த வீரியங்கள் வரை.

## பாஸ்பாரிக் ஆசிட். Phosphoricum Acidum.

(பொ. கூ.) மன சோர்பும் அதைத்தொடர்ந்து சரீர சோர்பும். கூடுதல் மன வேலையினாலும் சரீர வேலையினாலும்

வாலிபப்பருவத்தில் ஏற்படும் உபாதைகள் தீவிர வியாதிகள், துக்கம், விந்துவை சீர் அழித்தல் முதலியவற்ருல் ஏற்படும் பலவீனம். வயிற்ரேட்டம், நீரழிவு, விஷஜுரத்தில் ஏற்படும் இரத்தப்பெருக்கு, புற்றுநோய் வேதனை.
**மனம்.** ஞாபகசக்தி குறைவு, துக்கம், மன அதிர்ச்சி முதலியவற்றின் விளைவு.

**தலை.** தலைவலி, காலத்திற்கு முன்பே முடி நரைத்தலும் கழிதலும். சேர்க்கைக்குப் பின் தலைவலி.
**கண்கள்.** கண்களைச்சுற்றி நீலவட்டம், சூரிய வெளிச்சத்திற்கு கூசுதல்.
**வாய்.** வெடித்தஉதடுகள், எகிரிலிருந்துஇரத்தம்வடிதல்.
**இரைக்குடல்.** புளித்த ஏப்பம், குமட்டல். குளிர்ந்தபால் அருந்த விரும்பல்.

**மலம்.** வேதனையற்ற தன்னை அறியாமலேகழியும் வெண்மையான வயிற்ரேட்டம்.
**சிறுநீர்.** அடிக்கடி அதிகமாக சிறுநீர் பிரிதல். வெண்மைநிறம். இரவில் அடிக்கடி சிறுநீர் பிரிதல்.
**ஆண்.** இரவிலும், மலம் கழிக்கும்பொழுதும் இந்திரியம் கழிதல். ஆண் தன்மை இல்லாமை.
**பெண்.** காலத்திற்கு முந்திய அதிகமான மாதவிடாய் மாதவிடாய்க்குப்பின் சொறி எடுக்கும் வெள்ளை படுதல்.

**சுவாச உறுப்புகள்.** பேசுவதால் நெஞ்சு பலனற்றுத் தோன்றல். நெஞ்செலும்பின்கீழ் அமுத்தமும் மூச்சுதிணறலும். துக்கம். தனக்குள்தானே இன்பமனுபவித்தல் முதலியவற்றிற்குப்பின் இரத்தாசயத் துடிதுடிப்பு.

**சருமம்.** முடி கழிதல். பல இடங்களில் எறும்பு ஊருவது போன்ற உணர்ச்சி.
**உறக்கம்.** சொப்பனங்களோடு இந்திரியம் கழிதல்.
**ஜுரம்.** மட்டமான ஜுரம்.

**ஏற்றம்.** சரீர வேலை, கேள்வி கேட்கப்படுவது, விந்துவை சீர் அழித்தல், சேர்க்கை கூடுதல்.
**இறக்கம்.** உஷ்ணம்.
(ஒ. ம.) சைனு, நக்ஸ்வாமிகா, பிக்றிக் ஆசிட், லேக்டிக் ஆசிட், பாஸ்பரஸ்.

**வீரியம்.** நீரழிவில் மிகக் குறைந்த வீரியமும், இதர வியாதிகளில் மற்ற வீரியங்களும்.

## பாஸ்பரஸ் Phosphorus.

(பொ. கூ.) தசைகளையும் நீர் கொண்ட தசைகளையும், (Mucous membrane and Serous membrane) முதுகெலும்பையும் தாக்கி திமிர் வாதம் உண்டுபண்ணும். எலும்பிலும் இரத்தத்திலும் வேலை செய்யும்.

**மனம்.** முற்கோபம். அறையின் ஒவ்வொரு மூக்கிலிருந்தும் ஏதோ புறப்படுவது போன்ற பயம். யாவற்றிற்கும் தீவிர உணர்ச்சி. ஞாபகசக்தி குறைவு, பைத்தியம்.

**தலை.** முதிர் வயதில் ஏற்படும் கிறுகிறுப்பு முதுகெலும்பில் உஷ்ணம். பெரிய கொத்துகளாக முடி கழிதல்.

**கண்கள்.** முத்துகள் உண்டானால் (Cataract) யாவும் மஞ்சியால் அல்லது திரையால் மறைக்கப்பட்டதாகத் தோன்றல். கண்களின் முன் கறுத்தப் புள்ளிகள். கையால் கண்களுக்கு நிழல் கொடுப்பதின்மூலம் நன்ருகப் பார்க்க முடிதல். புகையிலை அதிகமாய் உபயோகிப்பதால் பார்வை மங்கல்.

**காதுகள்.** குறிப்பாக மனித சத்தத்திற்கு செவிட்டுத்தனம், விஷ ஜுரத்தின்பின் காது மந்தம்.

**மூக்கு.** இரத்தப்பெருக்கு மாதவிடாய்க்குப்பதில் மூக்கில் இருந்து இரத்தம் வடிதல். நாள்பட்ட பீனிசம். தசை வளருதலும் எளிதில் இரத்தம் வடிதலும்.

**முகம்.** கீழ்நாடி எலும்புகள் வியாதியுறல்.

**வாய்.** எகிரிலிருந்து எளிதில் இரத்தம் வடிதலும் எகிர் வீங்குதலும். ஆடைகள் துவைப்பதின் பின் பல்வலி. பால் கொடுக்கும் தாய்மாருக்கு ஏற்படும் வாய் புண்.

**இரைக்குடல்.** ஆகாரம் கழித்ததும் திரும்பவும் பசி. ஒவ்வொரு ஆகாரத்திற்குப் பின்பும் புளித்த சுவையும், புளித்த ஏப்பமும். அருந்தியவை திரும்ப வாய்க்கு வருதல், அருந்திய தண்ணீர் இரைக்குடலில் சூடானதும் வாந்தி எடுத்தல். இரண சிகிற்சைக்குப்பின் ஏற்படும் வாந்தி, வேதனையும் குளிர்ந்த ஆகாரம் அல்லது பானங்களினல் விடுதலையும். அதிக உப்பு அருந்துவதால் ஏற்படும் உபாதைகள்.

**வயறு.** மஞ்சள்காமாலை. வயற்றில் பெரிய மஞ்சள் நிறம் கொண்ட புள்ளிகள்.

**மலம்.** நாய் மலத்தைப்போல் நீளமாய் இருத்தல். மலத்தை வெளியாக்க சிரமப்படல். வேதனையற்ற ஆனால் பலவீனமாக்கும் வயிற்றோட்டம். தன்னை அறியாமலே மலம் கழிதல் மலம் கழிக்கும்போது இரத்தமும் கழிதல் இரத்தப்பெருக்கெடுக்கும் மூலவியாதிகள்.

**சிறுநீர்.** தீவிர மூத்திரக்காய் வியாதியில் நீர்கடுப்பு.

**ஆண்.** ஆண் தன்மை இல்லாமை. சேர்க்கைக்குக் கூடுதல் விருப்பம். சொப்பனங்களோடு இந்திரியம் கழிதல்.

**பெண்.** மாதவிடாய்க்கிடையில் கர்ப்பாசயத்திலிருந்து சிறிதளவு இரத்தம் பிரிதல். காலத்திற்கு முந்தியும் ஆனால் அதிகநாள் நீடித்திருக்கும் மாதவிடாய். மாதவிடாய்க்கு முன்பு கரைதல். கர்ப்பாசயத்தில் சதைவளரல்

**சுவாச உறுப்புகள்.** பிரசங்கிமாருக்கு ஏற்படும் தொண்டைப்புண். மூச்சு குழாயில் ஏற்படும் வேதனையால் பேச முடியாதிருத்தல். தொண்டை கூசலினால் இருமல், நெஞ்சு பாரமாய்த் தோன்றல். இடது பக்கம் படுக்கும் பொழுது கூடுதல். துரிதமாய் வளரும் உயரம்கூடிய வாலிபர்களுக்கு க்ஷயரோகம்.

**இரத்தாசயம்.** இடதுபக்கமாய் படுக்கும்பொழுது துடிதுடிப்பு, இரத்தாசயத்தில் உஷ்ணம்.

**கை, கால்கள்.** விரல்களிலிருந்து மேலாகப் பரவும் திமிர் வாதம். கைகள் உணர்ச்சியற்றுப்போதல்.

**உறக்கம்.** ஆகாரத்திற்குப்பின் அதிக சோர்பு. முதிர் வயதில் உறக்கம் வராதிருத்தல். நெருப்பு, இரத்தப் பெருக்கு முதலியவற்றைப்பற்றிய சொப்பனம்.

**ஜுரம்.** மாலைதோறும் குளிர், அதிக வியர்வை.

**சருமம்.** சிறிய புண்களில் இருந்துகூட அதிக இரத்தம் வடிதல்.

**ஏற்றம்.** தொடுதல், மன அல்லது சரீரவேலை. குளிர்ந்த ஆகாரம் அல்லது பானம், காலநிலை மாறுதல். உஷ்ண காலத்தில் நனைதல். மாலை, இடது பக்கம் அல்லது வேதனையுள்ள பக்கமாய்ப் படுத்தல். இடிமுழக்கம், படிகளில் ஏறுதல்.

**இறக்கம்.** இருட்டு, வலதுபக்கமாய் படுத்தல். குளிர்ந்த ஆகாரம், குளிர்ந்தகாற்று. குளிர்ந்தஜலத்தில் குளித்தல் உறக்கம்.
**வீரியம்.** மூன்று முதல் உயர்ந்த வீரியங்கள் வரை. மிகக் குறைந்த வீரியமோ அல்லது அடுத்தடுத்தோ உபயோகிக்கக்கூடாது.

## ப்ளாடிஞ. Platina.

(பொ. கூ.) பொதுவாக பெண்களுக்கு பயன்படும் மருந்து
**மனம்.** கொலைசெய்யும் மனப்பான்மை. பிறரை வெறுத்தல், பெருமை. சரீரக்குறிகள் மறையும்பொழுது மனக்குறிகள் தோன்றும்.
**தலை.** குறித்த சிறு பாகத்தில் ஏற்படும் வேதனை. உணர்ச்சி அற்றுப்போதலோடு கூடிய வேதனை.
**கண்கள்.** சாதனங்கள் சிறிதாய்த் தோன்றல்.
**முகம்.** வலதுபக்கம் உணர்ச்சியற்றுப் போதல்.
**இரைக்குடல்.** கூடுதல் பசி, குமட்டல்.
**வயறு.** வேதனை. இடுப்புவரை பரவும் வேதனை.
**மலம்.** சிரமத்தோடு மலம்கழித்தல். மலக்குடலில் ஒட்டிக்கொள்ளுதல். பிரயாணத்தில் அடிக்கடி ஆகாரமும், தண்ணீரும் மாறுவதால் ஏற்படும் மலச்சிக்கல்.
**பெண்.** முட்டைப்பையில் காந்தல், காலத்திற்கு முந்தின மாதவிடாயும், அதிகமாயிருத்தலும், கறுத்த துண்டுகள் நிறைந்ததும். மலட்டுத்தனம், சேர்க்கைக்கு அதிக விருப்பம்.
**ஏற்றம்.** இருக்கும்பொழுதும், நிற்கும்பொழுதும், மாலையிலும்.
**இறக்கம்.** நடக்கும்பொழுது.
**வீரியம்.** 6 முதல் உயர்ந்த வீரியங்கள் வரை.

## ப்ளம்பம். Plumbum Metallicum.

(பொ. கூ.) திமிர்வாதம், சோகை, ஜன்னி, இளம்பிள்ளை வாதம், மூத்திரக்காய் வியாதி.
**மனம்.** கொலைசெய்யப்படுவோம் என்ற பயம். ஞாபகசக்தி குறைவு.
**தலை.** வேதனையும், ஜன்னியும் மாறிமாறிவருதல். தொண்

டையிலிருந்து மூளை வரை பந்து உருளுவதுபோன்ற உணர்ச்சி.

**கண்கள்.** மூர்ச்சை அடைந்தபின் திடீரென்று கண் பார்வை இழத்தல்.

**வாய்.** எகிறின் ஓரத்தில் நீலநிறம் நாக்கை வெளியில் நீட்ட முடியாதிருத்தல். கட்டியான ஆகாரம் விழுங்க முடியாதிருத்தல்.

**இரைக்குடல்.** கூடுதல் வாய்வு.

**வயறு.** சரீரத்தின் எல்லா பாகங்களுக்கும் பரவும் கூடுதல் வேதனை, வேதனையும் ஜன்னியும் மாறிமாறி வருதல்.

**மலக்குடல்.** மலச்சிக்கல், மலவாயில் இறுக்கம்.

**சிறுநீர்.** மூத்திரக்காய் வியாதிகள். குறைவான மூத்திரம். சொட்டுசொட்டாய்ப் பிரிதல்.

**ஆண்.** ஆண்தன்மை இல்லாமை

**பெண்.** முலையில் வேதனையும் காந்த**லும்,** கர்ப்பச்சிதைவு

**கை, கால்கள்.** கால்களில் திமிர்வாதம், உணர்ச்சியற்று போதல்.

**ஏற்றம்.** இரவு, அசைதல்.

**இறக்கம்.** பலமாய் அமுத்தல். சரீர வேலை.

(ஒ. ம.) ப்ளம்பம், அசற்றிக் ஆசிட்.

**வீரியம்.** 3 முதல் உயர்ந்த வீரியங்கள் வரை.

## போடோபில்லம். Podophyllum.

**மனம்.** ஜன்னியும் அதிகமாய்ப் பேசுதலும். குறிப்பாக பழம் அருந்தியபின்.

**தலை.** முன்பக்கமாய் விழ வைக்கும் கிறுகிறுப்பு. தலைவலியும் வயிற்றோட்டமும் மாறிமாறி வருதல். தலைஉருட்டல்.

**வாய்.** இரவில் பற்கடி, பற்கள் முளைக்க கஷ்டப்படல்.

**இரைக்குடல்.** சூடான புளித்த ஏப்பமும், குமட்டலும், வாந்தியும். கூடுதல் குளிர்ந்த ஜலம் அருந்தும் தாகம்.

**வயறு.** பொருமல், வயற்றுப்பாகத்தில் மாத்திரமே சுகமாய் படுக்கமுடிதல்

**மலக்குடல்.** குழந்தைகளுக்கு ஏற்படும் வயிற்றோட்டம், பற்கள் முளைக்கும்பொழுதுஏற்படும் வயிற்றோட்டம் மலம் கழிக்கும்பொழுதோ அல்லது அதின் பின்போ மலக்குடல் வெளியில் தள்ளுதல்.

**பெண்.** கர்ப்பாசயத்திலும் வலது முட்டைப்பையிலும் வேதனை. பிரசவத்திற்குப்பின் அல்லது கர்ப்பகாலத்தில் அல்லது தீவிர சரீர அசைவினால் கர்ப்பாசயம் வெளியில் தள்ளுதல்.
**ஜுரம்.** ஜுரத்தில் அதிகமாய்ப்பேசுதல்
**ஏற்றம்.** காலை, உஷ்ணகாலம், பற்கள் முளைத்தல்.
(ஒ. ம) அலு, செலிடோனியம், மெர்குறி, நக்ஸ்வாமிகா, சல்பர்.
**வீரியம்.** தாய் திராவகம்முதல் உயர்ந்த வீரியங்கள்வரை.

## சோரினம். Psorinum.

(பொ. கூ) உஷ்ணகாலத்தில்கூட உஷ்ணமான ஆடைகள் அணிய விரும்பல். குளிர்ச்சிக்கு உணர்ச்சி கூடுதல் **சரியாய் தெரிவு செய்யப்பட்ட மருந்துகூட சுகவீனத்தில் மாறுதல் உண்டுபண்ணாத நிலை.** சரீரத்திலிருந்து வெளியாகும் சாதனங்கள் துர் நாற்றம் உள்ளவையாய் இருக்கும்.
**மனம்.** வியாதி குணமாகாது என்று நினைத்தல், தற்கொலை செய்ய விரும்பல்.
**தலை.** அடிபடுவதினால் ஏற்படும் வேதனைபோல் தலையில் தோன்றி நள்ளிரவில் முளித்தல். நாள்பட்ட தலைவலி. பற்பல சரும வியாதிகள்.
**கண்கள்.** கண்களின் தசைகள் வியாதியுறல்.
**காதுகள்.** காதுகளைச் சுற்றி நீர் வடியும் சரும வியாதி. மிகவும் துர் நாற்றமுள்ள சீழ் வெளிப்படுதல்.
**தொண்டை.** டாண்சில்ஸ்என்ற கோளங்கள் வீங்குதல். விழுங்கும்போது வேதனை. துர் நாற்றமுள்ள கூடுதல் எச்சில்.
**வயறு.** ஏப்பம். எப்பொழுதும் பசி. நடுச்சாமத்தில் ஆகாரம் அருந்த விருப்பம். ஆகாரம் அருந்தியதும் வயற்று வேதனை.
**மலம்.** சளி அல்லது இரத்தம்கலந்த துர் நாற்றமுடைய மலம். மலக்குடலிலிருந்து இரத்தம் வடிதலும் காந்தல் கொண்ட மூல வியாதியும். குழந்தைகளுக்கு மலச்சிக்கல்.
**பெண்.** துர் நாற்றமுள்ள வெள்ளை படுதலும், முதுகு வலியும், சோர்பும்.

**சுவாச உறுப்புகள்.** மூச்சு திணறலோடுகூடிய இழுப்பு நோயும், உட்கார்ந்திருப்பதால் கூடுதலும், படுத்தால் குறைதலும். நெஞ்செலும்பின்கீழ் வேதனை. சருமக்குறிகள் அமுக்கப்பட்டிருப்பதால் குளிர்காலம்தோறும் ஏற்படும் இருமல்.

**கை, கால்கள்.** நகங்களைச்சுற்றி, சரும வியாதி. கால்களில் துர்நாற்றமுள்ள வியர்வை.

**சருமம்.** **தாங்கமுடியாத சொறி.** கோளங்கள்வீங்குதல் ஜுரம். துர் நாற்றமுள்ள கூடுதல் வியர்வை.

**ஏற்றம்.** காப்பி, காலநிலை மாறுதல்.

**இறக்கம்.** உஷ்ணம்.

**வீரியம்.** 200 ம் அதற்கு கூடுதலும். அடிக்கடி கொடுக்கக் கூடாது. அதனுடைய செய்கையை அறிந்துகொள்ள ஏகதேசம் ஒன்பது நாட்களாகும்.

## பல்சடில்லா. (Pulsatilla)

(பொ. கூ.) மிருதுவான, சாதுவான பெண்களுக்கு மிகவும் பயன்படும். அடிக்கடி மாறும் குறிகள். வயதறிந்ததிலிருந்தே சுகவீனமாய் இருக்கும் பெண்கள்.

**மனம்.** இலகுவில் கரைதல், மாலையில் தனியாய் இருக்க பயப்படல்.

**தலை.** முகத்திற்கும் பற்களுக்கும் பரவும் தலைவேதனை. கூடுதல் வேலையினால் ஏற்படும் தலைவேதனை.

**காதுகள்.** சீழ் வடிதல். காது மந்தம்.

**கண்கள்.** கட்டியான மஞ்சள் நிற சீழ் வெளிப்படுதல். நமைச்சலும், காந்தலும். கூடுதல் கண்ணீர் வடிதல்.

**வாய்.** கீழ் உதட்டின் நடுவில் வெடிப்பு. வெண்மை அல்லது மஞ்சள் நிறமான நாக்கு. துர் நாற்றம்.

**இரைக்குடல். கொழுப்புள்ள பதார்த்தங்களுக்கும் உஷ்ணமான பதார்த்தங்களுக்கும் விருப்பமில்லாதிருத்தல்.** ஏப்பம். தாகமில்லாதிருத்தல். அதிக நேரத்திற்கு முன்பு அருந்திய ஆகாரத்தை வாந்தி எடுத்தல்.

**வயிறு.** பொருமல். மடமடவென்று சப்தம்.

**மலம்.** நீர் போன்றதும் இரவில் கூடுதலும். ஒவ்வொரு நேரம் கழிக்கும் மலமும் ஒவ்வொரு விதம். இரத்தபேதி.

**சிறுநீர்.** இருமும்பொழுதும் அல்லது வாய்வு கழியும் பொழுதும் அல்லது இரவிலும் தன்னை அறியாமலேபிரிதல்.

**பெண.** பாதங்களை நனைப்பதால் மாதவிடாய் தடைபடுதலும் சரீரம் நீர் கொள்ளுதலும். சூடான, காந்தல் கொண்ட வெள்ளை படுதல், மாதவிடாய் காலத்திலோ அதன் பிறகோ வயிற்றோட்டம்.

**ஆண்.** விதைக்கொட்டை வீங்குதல் சிறுநீர் தாரையிலிருந்து மஞ்சள் நிறமான, கட்டியான நீர் வெளிப்படுதல். மேக நோய். சிறுநீர் கழிக்கும்பொழுது கடுகடுப்பு.

**சுவாச உறுப்புகள்.** உலர்ந்த இருமலும், மாலையிலும் இரவிலும் கூடுதலும். படுக்கையில் எழுந்து இருக்க விரும்பல். நெஞ்சு வலி.

**உறக்கம்.** திடீரென்று விழித்தல்.

**ஜுரம்.** உஷ்ணமான அறையில்கூட குளிராய் தோன்றல், தாகமில்லாதிருத்தல், மாலையில் நான்கு மணிக்கு குளிர், இரவில் காந்தலோடுகூடிய உஷ்ணம். பசி இல்லாதிருத்தலும் குமட்டலும்.

**ஏற்றம்.** உஷ்ணம். கொழுப்புள்ள ஆகாரம். ஆகாரத்திற்குப்பின். மாலை. இடது பக்கமாய்ப்படுத்தல். கால்களைத் தொங்கவிடல்.

**இறக்கம்.** திறந்த வெளிக்காற்று, அசைதல். குளிரான சாதனங்களைக் கொண்டு ஒத்தல், குளிர்ந்த ஆகாரமும் பானமும்.

**வீரியம்.** 3 ம் அதற்குக் கூடுதலும்.

## பைரஜீனியம். Pyrogenium.

(பொ. கூ.) பதனழிக்கும் அல்லது செப்றிக் ஜுரங்கள். **சரீரத்திலிருந்து வெளியாகும் யாவும் மிகவும் துர் நாற்றம் உள்ளவையாய் இருக்கும்.**

**மனம்.** அமைதியற்றிருத்தல். பயம்.

**தலை.** தெறிக்கும் தலைவலி.

**வாய்.** துர் நாற்றம்.

**இரைக்குடல்.** காப்பிப் பொடியைப்போல் வாந்தி எடுத்தல்.

**வயிறு.** பொருமல், மூத்திரப்பையிலும் மலக்குடலிலும் கடுகடுப்பு.

**மலம்.** துர் நாற்றமுள்ள வயிற்றோட்டம், தன்னை அறியாமலே கழிதல்.
**இரத்தாசயம்.** துடிதுடிப்பு.
**பெண்.** கெர்ப்ப சிதைவிற்குப்பிறகு உண்டாகும் செப்றிக் ஜுரம். துர் நாற்றமுள்ள மாதவிடாய். மாதவிடாய்தோறும் ஜுரம். இரண சிகிற்சைக்குப்பின் உண்டாகும் செப்றிக் ஜுரம்.
**ஜுரம்.** குளிர். செப்றிக் ஜுரங்கள். உஷ்ணமும் உஷ்ணமான வியர்வையும்.
**கை, கால்கள்.** வேதனை. படுக்கை மிகவும் கட்டியாய்த் தோன்றல்.
**இறக்கம்** அசைதல்.
**வீரியம்.** 200 க்கு கூடுதல். அடிக்கடி கொடுக்கக்கூடாது.

## ரானுன்குலஸ் பல்போசஸ்.
## Ranunculus Bulbosus.

(பொ. கூ.) மதுபானம் அருந்துவதால் ஏற்படும் உபாதைகள்.
**நெஞ்சு.** (Chest) விலா எலும்புகளிலும் நெஞ்சிலும் நொறுங்குண்ட வேதனை.
**சருமம்.** காந்தலும் கூடுதல் நமைச்சலும்.
**ஏற்றம்.** திறந்த வெளிக்காற்று. அசைதல். காலநிலை மாறுதல்.
**வீரியம்.** தாய் திராவகம் முதல் உயர்ந்த வீரியங்கள்வரை.

## ரஸ்டாக்ஸ் Rhustoxicodendron

(பொ. கூ.) சரும வியாதிகள், வாத நோய், விஷ ஜுரம் முதலியவற்றிற்கு அடிக்கடி பயன்படும்.
**மனம்.** அமைதியற்ற நிலையும் அடிக்கடி இடம் மாறுதலும், இரவில் பயம் கூடுதலும், படுக்கமுடியாதிருத்தலும்.
**தலை.** கிறுகிறுப்பு, தலைவேதனை. பற்பல சருமவியாதிகள்
**கண்கள்.** வீங்கி சிவந்திருத்தல்.
**காதுகள்.** இரத்தம் கலந்த சளி வெளிப்படுதல்.
**வாய்.** சவைக்கும்பொழுது நாடியில் சப்தம் கேட்குதல். முகம் வீங்குதல். வாயின் அற்றங்களில் புண்கள் உண்டாகுதல்.

**இரைக்குடல்.** பசியற்ற நிலையும் தீராத தாகமும், ஆகாரத்திற்குப்பின் வயிற்றுப்பொருமலும் சோர்பும், வேதனையும், வயற்றில் படுப்பதினால் இறக்கமும்.
**மலக்குடல்.** இரத்தம்கலந்த சளிகொண்ட வயிற்றோட்டம் அல்லது இரத்த பேதி. துர் நாற்றம்.
**சிறுநீர்.** கடுகடுப்பு.
**பெண்.** மாதவிடாய், காலத்திற்கு முந்தியும் அதிகமாயும் சூடாயும் அதிக நாட்களுக்கும் இருக்கும்.
**சுவாச உறுப்புகள்.** நடுச்சாமத்திலிருந்து காலைவரை இருமல். இரத்தம் கலந்த எச்சில். சரீரம் பூராவும் வேதனை எடுக்கும் ஜுரம்.
**முதுகு.** முதுகு வேதனையும் திமிரும்.
**கை, கால்கள்.** சூடான வேதனை கொடுக்கும் வீக்கம் இணைப்புகளில் (Joints) ஏற்படல். சரீரத்தின் பலபாகங்களில் வாதநோயும் அசைவதால் குறைதலும்.
**சருமம்.** நமைச்சலும், காந்தலும் உள்ள சரும வியாதிகள்.
**ஏற்றம்.** உறக்கம், குளிர், மழைகாலம், இரவு, **அமர்ந்திருத்தல் அல்லது இளைப்பாறுதல்.** மலர்ந்து படுத்தல் வலது பக்கம்.
**இறக்கம்.** உஷ்ணம், அசைதல், நடந்துகொண்டிருத்தல். (ஒ. ம) ஆர்னிக்கா, பேப்டிஷியா, லேச்சசிஸ், ஆர்சனிக், ஹயோசியாமஸ், ஓபியம்.
**வீரியம்.** 6 முதல் மிக உயர்ந்த வீரியங்கள் வரை.

## சாபடில்லா. Sabadilla.

(பொ. கூ.) கிருமி, குளிர், ஜலதோஷம், குழந்தைகளுக்கு உண்டாகும் வயிற்றோட்டம்.
**மனம்.** எளிதில் பயம் அடைதல். பல வியாதிகள் இருப்பதாக எண்ணுதல்.
**தலை.** மன வேலையால் தலைவலி.
**மூக்கு.** ஜலதோஷமும் கூடுதல் நீர் வெளிப்படுதலும்.
**இரைக்குடல்.** பசி இன்மை, உஷ்ணமான சாதனங்கள் விரும்பல்.
**பெண்.** காலத்திற்குப்பின் மாதவிடாய் வருதல்.

**ஏற்றம்.** குளிர், குளிர்ந்த ஆகாரம், பானம், பௌர்ணமி.
**இறக்கம்.** உஷ்ணம், உஷ்ணமான ஆகாரம், பானம்.
**வீரியம்.** 3 முதல் 30 வரை.

## சாபினா. Sabina.

(பொ. கூ.) கெர்ப்பாசயம் குறிப்பாய் தாக்கப்படும். இரத்தப்பெருக்கு, குறிப்பாக மூன்ருவது மாதத்தில் கெர்ப்ப சிதைவு முதலியவற்றிற்கு பயன்படும்.

**மனம.** சங்கீதத்தை வெறுத்தல்.

**தலை.** மாதவிடாய் தடைபடுதலுடன் ஏற்படும் கிறு கிறுப்பு, தெறிக்கும் தலைவலி.

**இரைக்குடல்.** இரைக் குடலிலிருந்து முதுகு வரை வேதனை.

**மலக்குடல்.** பிரகாசமான சிவந்த இரத்தம் வெளிப்படும் மூல வியாதிகள்.

**சிறுநீர்.** மூத்திரக்காய் பாகத்தில் காந்தல். இரத்தம் கலந்த சிறுநீர்.

**ஆண்.** மேக நோய். சேர்க்கைக்குக் கூடுதல் விருப்பம்.

**பெண்.** கூடுதலான மாதவிடாய். கெர்ப்ப சிதைவு, சேர்க்கைக்குக் கூடுதல் விருப்பம். மாதவிடாய்க்குப்பின் துர்நாற்றமுள்ள சருமத்தை உரிக்கும் வெள்ளைபடுதல், பிரசவத்திற்குப்பின் இருக்கும் வேதனை. கெர்ப்பாசயத்திலிருந்து கட்டி முதலியவைகளை வெளிப்படுத்தும்.

**ஏற்றம்.** அசைதல், உஷ்ணம்.

**இறக்கம்.** திறந்த வெளிக்காற்று.

(ஒ. ம.) க்ருக்குலஸ், கால்காரியா, டிறில்லியம், இபிகாக், மில்லிபோலியம், எர்காட்.

**வீரியம்.** 3 முதல் 30 வரை. தாய் திராவகத்தை வெளிப்பூச்சாக உபயோகிக்கலாம்.

## சரஸ்பரில்லா. Sarasparilla.

(பொ. கூ.) உஷ்ணகாலத்திற்குப்பின்னும், அம்மை குத்துவதின் பின்னும் ஏற்படும் சரும வியாதிகள்.

**மனம்.** முற்கோபம்.

**வாய்.** வாய்புண். துர் நாற்றம்.

**வயறு.** கூடுதல் முதுகு வலியோடுகூடிய வேதனை. அதிக வாய்வு.

**சிறுநீர்.** குறைவு, இரத்தம்போன்றது. சிறுநீர் கழித்து இறுதியில் அதிக வேதனை. உட்கார்ந்திருக்கும்பொழுது சொட்டு சொட்டாய் வெளிப்படல். சிறுநீரில் மண். வலது மூத்திரக்காய் பாகத்தில் வலி.

**ஆண்.** இரத்தம் கலந்த இந்திரியம் வெளிப்படல். கிரந்தி நோய்.

**பெண்.** முலைக்காம்புகள் சுருங்கி இருத்தல். மாதவிடாய்க்குமுன்பு நெற்றியில் நமைச்சலும் தடிப்புகளும்.

**சருமம்.** பற்பல சரும வியாதிகள்.

**கை, கால்கள்.** வாத வேதனையும், இரவில் கூடுதலும். மேக நோய்க்குப்பின் ஏற்படும் வாத வேதனை.

**ஏற்றம்.** இரவு, ஈரமான காலம், சிறுநீர் கழிந்தபின், மாதவிடாய்க்கு முன்பு.

(ஒ.ம.)பெர்பரிஸ்,லைக்கபோடியம்,நட்ரம்மூர்,பெட்ரோலியம்

**வீரியம்.** 1 முதல் 30 வரை.

## சீக்கேல் கொர்னாட்டம். Secale Cornutum

**(பொ. கூ.)** சோவை, முதிர் வயது. இரத்தப்பெருக்கு.

**தலை.** தலையின் பின்பாகத்திலிருந்து உண்டாகும் தலைவலியும் வெளுத்த முகமும். முடிகழிதல். மூக்கிலிருந்து இரத்தம் வடிதல்.

**கண்கள்.** குழி விழுந்தும், சுற்றிலும் நீல வட்டமும்.

**வாய்.** நாக்கு வெடித்திருத்தலும், வீக்கமும், திமிரும்.

**வயறு.** கூடுதல் பசி, தீராத தாகம், இரத்தமும் காப்பி பொடி போன்ற சாதனமும் வாந்தி எடுத்தல். காந்தல், கெட்ட வாடையுள்ள ஏப்பம்.

**மலம்.** பச்சை நிறம். தன்னை அறியாமலே கழிதல்.

**சிறுநீர்.** மூத்திரப்பை திமிர்கொள்ளுதல். மூத்திரப்பையிலிருந்து கறுத்த இரத்தம் வெளிப்படுதல். மூத்திரம் தன்னை அறியாமலே முதிர்வயதில் பிரிதல்.

**பெண்.** அதிக வேதனைகொண்ட மாதவிடாய். **காவி நிறங்கொண்ட துர்நாற்றமுள்ள வெள்ளை படுதல்.** அடுத்த மாதம் வரை இரத்தம் கலந்த நீர் வெளிப்பட்டுக் கொண்டே இருத்தல். பிரசவ காலத்தில் குறைவான வேதனை. முலைகளில் பால் கட்டுவதில்லை. சிறுநீர் பிரியாதிருத்தல்.

**உறக்கம்.** மதுபானம், இதர லாகிரி வஸ்துக்கள் முதலியவை உபயோகிப்பதால் உறக்கமில்லாதிருத்தல்.
**சருமம்.** நீல நிறம். பருக்கள். சருமம் அழுகுதல்.
**ஏற்றம்.** உஷ்ணம். போர்த்திக்கொள்தல்.
**இறக்கம்.** குளிர். போர்த்திக்கொள்ளாதிருத்தல்.
(ஒ. ம.) எர்காட், கோல்சிகம், ஆர்சனிக், ஆறம்மூர்.
**வீரியம்.** 1 முதல் 200 வரை அடிக்கடி கொடுக்கக்கூடாது. சிறுநீரில் **அல்பிமன்** இருந்தால் இம்மருந்தை உபயோகிக்கக்கூடாது.

## செபியா. Sepia

(பொ. கூ.) கெர்ப்பாசயத்தில் அதிகமாய் வேலை செய்யும்.
**மனம்.** மிகவும் அருமையாய் சிநேகிப்பவரையும் தொழிலையும் குடும்பத்தையும் வெறுத்தல். முற்கோபம்.
குறிகளைச் சொல்லும்பொழுது கரை**தல்.**
**தலை.** உள்ளிருந்து வெளிப்பக்கமாய் தெறிக்கும் தலைவலியும் குமட்டலும் வாந்தியும். மாதவிடாய் காலத்தில் தீவிர தலைவலி.
**மூக்கு.** கட்டியான பச்சை சளி வெளிப்படுதல். நாள்பட்ட மண்டை பீனிசம்.
**கண்கள்.** கண்களின் முன் கரும்புள்ளிகள் தோன்றல்.
**வாய்.** வெண்மை நிறம் கொண்ட நாக்கு. கீழ் உதடு வீங்குதலும் வெடித்தலும். மாலை 6 மணி முதல் நடுச்சாமம் வரை பல்வலி.
**இரைக்குடல்.** ஆகாரத்தைக்கண்டதும் அல்லது ஆகாரத்தின் வாடை தட்டியதும் குமட்டல். ஆகாரத்தின் பின் வாந்தி எடுக்கத் தோன்றல்.
**வயறு.** கூடுதல் வாயுவும், தலைவலியும்.
**மலக்குடல்.** மலம் கழிக்கும்பொழுது இரத்தப் பெருக்கு. மலச்சிக்கல். மலக்குடலில் பந்து இருப்பது போன்ற உணர்ச்சி. மல வாயிலிருந்து எப்பொழுதும் கசிதல், குழந்தைகளுக்கு உண்டாகும் வயிற்ரேட்டமும் பால் அருந்துவதால் கூடுதலும்.
**சிறுநீர்.** சிறுநீரில் சிவந்த மண்.
**ஆண்.** ஆண்குறி குளிர்ச்சியாய் இருத்தல். துர் நாற்றமுள்ள வியர்வை. நாள்பட்ட மேக நோய்.

**பெண்.** யாவும் கீழே தள்ளப்படும் என்று தோன்றல். இதை தடுப்பதற்காக கால்களை ஒன்றின்மேலொன்ருக வைத்தல். மஞ்சள் அல்லது பச்சை நிறம் கொண்ட நமைச்சல் எடுக்கும் வெள்ளை படுதல் குறைவான மாத விடாயும் தாமதித்து வருதலும். கெர்ப்பாசயம் வெளிப்பில் தள்ளுதல்.

**சுவாச உறுப்புகள்.** சோர்பை உண்டாக்கும் உலர்ந்த இருமல். மூச்சுத் திணறல். காலையில் இருமலும், உப்பு சுவையுள்ள அதிக கபம் வெளிப்படுதலும். கக்குவான்.

**முதுகு.** தீவிர முதுகு வலி.

**சருமம்.** நமைச்சல். சொறிந்தால் குறைவதில்லை.

**ஏற்றம்.** காலை. மாலை. சலவை செய்தல். ஈரம், இடது பக்கம், வியர்த்தபின். குளிர்ந்த காற்று.

**இறக்கம்.** தேகப்பயிற்சி. சூடான ஒத்தணம். குளிர்ந்த நீரில் குளித்தல்.

(ஒ. ம.) மூரக்ஸ், சிலிசியா, சல்பர்.

**வீரியம்.** 12 முதல் உயர்ந்த வீரியங்கள் வரை. அடிக்கடி கொடுக்கக்கூடாது.

## சிலிசியா. Silicea.

(பொ. கு.) அம்மை குத்துவதால் ஏற்படும் உபாதைகள். பெரிய தலையும் பொருமிய வயிறும் உள்ள சரீரம். குழிப் புண் (Fistula) சீழ் உண்டாகும் வியாதிகள்.

**மனம்.** உணர்ச்சி கூடுதல். கூர்மையான சாதனங்களுக்கு பயப்படல்.

**தலை.** கிறுகிறுப்பு. கூடுதல் வியர்வை, துர் நாற்றமுள்ள வியர்வை.

**கண்கள்.** வெளிச்சத்திற்கு கூசல். தசைகளில் புண் உண்டாகுதல். கண்களில் முத்து (Cataract).

**காது.** துர் நாற்றமுள்ள சீழ். இரைச்சல்.

**வாய்.** நாக்கில் முடி இருப்பதுபோன்ற உணர்ச்சி.

எகிருக்கு குளிர்ந்த காற்றிற்கு உணர்ச்சி கூடுதல். எகிரில் கட்டிகள் உண்டாகுதல். எகிரிலிருந்து துர் நாற்றமுள்ள சீழும் இரத்தமும் கசிதல்.

**தொண்டை.** டான்சில் கோளத்தில் ஊசிகொண்டு குத்துவதுபோன்ற உணர்ச்சி. விழுங்கும்பொழுது குத்தெ

டுக்கும் வேதனை.

**இரைக்குடல்.** மாமிசமும் உஷ்ணமான ஆகாரமும் வெறுக்கப்படல். பசியின்மையும் கூடுதல் தாகமும். ஆகாரத்திற்குப்பின் புளித்த ஏப்பம். பானங்கள் அருந்திய பின் வாந்தி.

**வயறு.** பொருமி இருத்தல். அறுப்பதுபோன்ற வேதனை

**மலக்குடல்.** குழிப்புண். மூல வியாதிகள். சிரமத்தோடு மலம் கழித்தல். பகுதி வெளியானதும் பகுதி திரும்பவும் உள்சென்றுவிடல். துர் நாற்றமுள்ள வயிற்ருேட்டம்.

**சிறுநீர்.** இரத்தம் கலந்திருத்தல். தன்னை அறியாமலே வெளிப்படல். கிருமி உபத்திரவத்தோடுகூடி குழந்தைகள் படுக்கையில் சிறுநீர் கழித்தல்.

**ஆண்.** தொடைகளின் உட்பாகத்தில் சருமநோய். நாள்பட்ட மேக வியாதி.

**பெண்.** பால்போன்ற சூடான வெள்ளை சிறுநீர் கழிக்கும் பொழுது படுதல். மர்ம ஸ்தானங்களில் கூடுதல் கடி. முலையில் குழிப்புண். குழந்தைகளுக்கு பால்கொடுக்கும் பொழுது மர்மஸ்தானத்திலிருந்து இரத்தம்வெளிப்படல்.

**சுவாச உறுப்புகள்.** படுத்தால் உக்கிரமமான இருமலும் கட்டியான மஞ்சள் நிறம்கொண்ட கபமும்.

**முதுகு.** பலனற்ற முதுகெலும்பு.

**உறக்கம்.** உறக்கத்தில் திடீரென்று எழுந்திருத்தல்.

**கை, கால்கள்.** இடுப்பிலும் கால்களிலும் பாதங்களிலும் வேதனை. நகங்களில் உண்டாகும் வியாதிகள். துர் நாற்றமுள்ள வியர்வை.

**சருமம்.** குழிப்புண், பரு முதலியவை. வெளியிலுள்ள வஸ்துக்கள் ஏதேனும் தசைகளில் தங்கி இருந்தால் அதை வெளியாக்க இம்மருந்து மிகவும் பயன்படும்.

**ஏற்றம்.** அமாவாசை. காலை, சலவை செய்தல், மாதவிடாய் காலம், இடது பக்கமாய் படுத்தல்.

**இறக்கம்.** உஷ்ணம், ஈரமான காலம்.

(ஒ. ம.) ஹெபர், காளிபாஸ், பிக்ரிக் ஆசிட், கால்காரியா, பாஸ்பரஸ்.

**வீரியம்.** 6 முதல் மிக உயர்ந்த வீரியங்கள் வரை பயன்படும். அடிக்கடி கொடுக்கக்கூடாது.

## ஸ்ட்ராமோனியம். Stramonium.

(பொ. கூ.) மூளை, சருமம், தொண்டை முதலியவற்றைத் தாக்கும். ஜன்னி.

**மனம்.** கூடுதல் பேசுதல், சிரித்தல், பாடுதல், ஜெபித்தல். பேய் பிசாசுகளைக் காணுதலும் அவற்ேறாடு பேசுதலும். மதப்பைத்தியம். இருட்டிலும் தனியாயும் இருக்க வெறுப்பு.

**தலை.** தலையணையிலிருந்து அடிக்கடி தலையை உயர்த்தல். காலை 9 மணியிலிருந்து மத்தியானம்வரை தலைவலி.

**கண்கள்.** கண்மணிகள் விரிந்திருத்தல். சிறிய சாதனங்கள் பெரிதாய்த்தோன்றல். யாவும் கறுப்பாய்த்தோன்றல்

**சிறுநீர்.** மூத்திரப்பையில் சிறுநீர் தேங்காத நிலை.

**ஆண்.** எப்பொழுதும் மர்ம ஸ்தானத்தைப் பிடித்துக் கொண்டிருத்தல்.

**பெண்.** கூடுதல் மாதவிடாய். மாதவிடாய் சமயத்தில் பாடுதலும் ஜெபித்தலும். பிரசவத்திற்குப் பின் வலிப்பு (Fits) உண்டாகுதல்.

**ஜுரம்.** கூடுதல் வியர்வையும், வியர்த்தாலும் ஜுரம் குறையாத நிலையும்.

**ஏற்றம்.** இருண்ட அறை. தனியாயிருத்தல்.

**இறக்கம்.** வெளிச்சம். பலரோடு சேர்ந்திருத்தல்.

(ஒ. ம.) ஹயோசியாமஸ், பெல்லடோனா.

**வீரியம்.** எல்லா வீரியங்களும்.

## சல்பர். Sulphur.

(பொ. கூ.) சோருவுக்கு விரோதமான மிகமுக்கியமருந்து. சுத்தமாயிருக்க விரும்பாதிருத்தல். இம்மருந்து பயன் படும் நோயாளிகள் கூடுதல் நேரம் நிலையாய் நிற்க முடிவதில்லை. தீவிர வியாதிகளில் சரியான மருந்து கொடுக்கப்பட்டும் வியாதியில் முன்னேற்றமில்லையெனில் இம்மருந்து பயன்தரும். தீவிர வியாதிகளின் இறுதியிலும் நாள்பட்ட வியாதிகளின் சிகிற்சை ஆரம்பிப்பதற்கும் இதை உபயோகிக்கலாம்.

**மனம்.** ஞாபக மறதி, சுயநலம். சோம்பேறித்தனம். மெலிந்த சரீரம். நல்ல பசி.

**தலை.** தலையின் உச்சியில் எப்பொழுதும் சூடு. தலைவலி

யும் முன் பக்கம் கமருவதால் கூடுதலும். முடி கழிதல். நமைச்சல். சொறிவதால் காந்தல்.

**கண்கள்.** காந்தலும் உஷ்ணமும். தசைகளில் புண்கள் உண்டாகுதல்.

**காது.** சீழ் வடிதல். துர் நாற்றம். செவிடு.

**மூக்கு.** உலர்ந்த சளி குறைவான, நாள்பட்ட மண்டை பீனிசம். சதை வளருதல்.

**வாய்.** சிவந்த காந்தும் தன்மையுள்ள உதடுகள். காலையில் கசப்பான சுவை, வெண்மை நிறமான நாக்கு.

**தொண்டை.** கட்டியான வஸ்தோ அல்லது முடியோ இருப்பதுபோன்ற உணர்ச்சி. காந்தலும் சிவந்த நிறமும்

**இரைக்குடல்.** கூடுதல் பசி அல்லது பசியின்மை. துர் நாற்றமுள்ள ஏப்பம். ஆகாரம் கூடுதல் உப்பு சுவையாய் தோன்றல். பால் ஒத்துக்கொள்வதில்லை. காலை பதினொருமணிக்கு அதிக சோர்பும், பலவீனமும், ஏதாவது அருந்தவேண்டுமென்று தோன்றலும்.

**வயறு.** வயற்றினுள் ஏதோ உயிருள்ள பிராணி இருப்பதுபோன்ற உணர்ச்சி. பானங்கள் அருந்தியபின் வேதனை.

**மலக்குடல்.** மலவாயில் காந்தலும் நமைச்சலும். மூலவியாதி. மலவாயைச்சுற்றி சிவப்பாயிருத்தல். வேதனையற்ற, காலையில் மாத்திரம் ஏற்படும் வயிற்ரோட்டம்.

**சிறுநீர்.** இரவில் அடிக்கடி சிறுநீர்க் கழித்தல். குழந்தைகள் நித்திரையில் தங்களை அறியாமலே சிறுநீர் கழித்தல். சிறுநீர் தாரையில் காந்தல். சிறுநீரில் சீழும் சளியும்.

**ஆண்.** தன்னை அறியாமலே இந்திரியம் கழிதல்.

**பெண்.** மர்மஸ்தானத்தில் கடியும் காந்தலும். துர் நாற்றமுள்ள வியர்வை. குறைவான, தாமதித்து வரும் மாதவிடாய். மாதவிடாய்க்கு முன் தலைவலி. காந்தும் சருமத்தை உரிக்கும் வெள்ளைபடுதல். முலைக்காம்புகள் வெடித்திருத்தல்.

**சுவாச உறுப்புகள்.** நெஞ்சில் காந்தும் உணர்ச்சி. மூச்சு திணறல். ஜன்னல்களை திறந்துபோட விரும்பல். இருமலும் பேசுவதால் கூடுதலும். முதுகுவரை ஊடுருவிச்செல்லும் குத்தெடுக்கும் வேதனை. நடுச்சாமத்தில்

மூச்சுத் திணறலும் எழுந்துஉட்காருவதால் குறைதலும். **கை, கால்கள்**. கைகள் நடுநடுங்குதல். கைகளில் கூடுதல் வியர்வை. இடது தோளில் வாத வேதனை. இரவில் பாதங்களிலும் கைகளிலும் காந்தல். முட்டுகளிலும் கரண்டைகளிலும் திமிர்.

**உறக்கம்**. உறக்கத்தில் அடிக்கடி விழித்தல், பற்பல சொப்பனங்கள். காலையில் இரண்டு மணிமுதல் ஐந்து மணிவரை உறங்க முடியாதிருத்தல்.

**ஜுரம்**. கூடுதல் உஷ்ணம். இரவில் வியர்வை கூடுதல்.

**சருமம்**. செள் பிடித்த சருமம். சிறு காயங்கள்கூட சீழ் பிடித்தல். நமைச்சலும் காந்தலும். சொறிவதாலும் கழுவுவதாலும் கூடுதல்.

**ஏற்றம்**. இளைப்பாறுதல், நின்றுகொண்டிருத்தல். படுக்கையில் உஷ்ணம்,காலைபதினொருமணி,இரவு, மதுபானம்.

**இறக்கம்**. உஷ்ணகாலம். வலதுபக்கமாய் படுத்தல், கை கால்களைச் சுருக்குதல்.

**வீரியம்**. எல்லா வீரியங்களும் பயன்படும். நாள்பட்ட வியாதிகளில் 200 ல் ஆரம்பித்து பின்பு உயர்ந்த வீரியங்கள் கொடுக்கவும்.

## சிம்பிட்டம். Symphytum

(பொ. கூ.) வாய்வு கட்டி. சரீரத்தின் உள் உண்டாகும் புண்கள் (Ulcer). எலும்புகள்வரை ஊடுருவிய புண்கள். எலும்பு முறிவுகள் பொருந்தாத நிலை முதலியவை.

(ஒ. ம.) ஆற்ணிக்கா. கேல்கரியாபாஸ்.

**வீரியம்**. திராவகம் முதல் 30 வரை,

## சிபிலினம். Syphilinum

(பொ. கூ.) காலையில் சோர்பு. இடம் விட்டு இடம் பெயரும் வாத வேதனை. நாள்பட்ட வாதமும் சரும வியாதிகளும்.வாய்,மூக்கு, மர்மஸ்தானம் முதலியவற்றில் புண்கள். ஞாபக மறதி. வியாதி குணமாகாது என்ற பயம், முடி கழிதல். கண்களின் தசை வீங்குதல். கூடுதல் எச்சில் உறங்கும்பொழுது வாயிலிருந்து வடிதல். மதுபானப் பிரியம். பெண்களுக்கு கூடுதல் வெள்ளை. நாள்பட்ட மலச்சிக்கல்.

**ஏற்றம்**. இரவு. கடற்கரை. உஷ்ணகாலம்.

**இறக்கம்**. மலைவாசம். நடமாடுதல்.
(ஒ. ம.) மெற்குறி, நைட்ரிக் ஆசிட், ஆறம், அலுமினை.
**வீரியம்**. மிக உயர்ந்த வீரியங்கள் மாத்திரம். இம்மருந்தை அடிக்கடி உபயோகிக்கக்கூடாது.

## சிஸிஜியம் ஜம்போலினம்.
## Syzygium Jambolanum.

(பொ. கு.) நீரழிவிற்கு மிகவும் பயன்படும். அதிசீக்கிரத்தில் சிறுநீரிலிருந்து சர்க்கரையை மாற்றிவிடும். கூடுதல் தாகம், பலவீனம், மெலிந்துபோதல்.
**வீரியம்**. தாய் திராவகம்.

## டபாக்கும். Tabacum.

**மனம்**. அதைரியம். ஞாபக மறதி.
**தலை**. கண்களைத் திறந்தால் கிறுகிறுப்பு. தலையை ஏதோ இறுக்கமாகக் கட்டி இருப்பதுபோன்ற உணர்ச்சி.
**கண்கள்**. பார்வை மங்கல்.
**முகம்**. குளிரான வியர்வையில் மூழ்கி இருத்தல்.
**இரைக்குடல்**. குமட்டல், புகையிலை புகையின் வாசனையால் குமட்டல் கூடுதல். கெர்ப்பகால வாந்தி.
**மலக்குடல்** மலச்சிக்கல். குமட்டலோடும் வாந்தியோடும் கூடிய வயிற்றோட்டம்.
**இரத்தாசயம்**. துடிதுடிப்பும் இடதுபக்கமாய் படுத்தால் கூடுதலும். நெஞ்செலும்பின் பாகத்திலிருந்து சுற்றி பரவும் வேதனை.
**சுவாச உறுப்புகள்**. நெஞ்சில் இறுக்கமான உணர்ச்சி இருமலும் அதைத்தொடர்ந்து விக்கலும். குளிர்ந்த ஜலம் அருந்துவதால் இருமல் குறைதல்.
**கை, கால்கள்**. பனிக்கட்டிபோல் குளிராய் இருத்தல்
**உறக்கம்**. உறக்கமின்மை.
**ஏற்றம்**. கண்களை திறக்கும்பொழுது. மாலை. கூடுதல் உஷ்ணமும் குளிரும்.
**இறக்கம்**. திறந்த வெள்ளிக்காற்று.
(ஒ. ம.) கேம்பர். வெருற்றம், ஆற்சனிக்கம்.
**வீரியம்**. 3 முதல் உயர்ந்த வீரியங்கள்வரை.

## டாரண்டுலா குபன்சிஸ்.
## Tarentula Cubensis.

(பொ. கூ.) டிப்தீரியா. அரையாப்பு. **மரண வேதனையை சாந்திப்படுத்தி, வேதனையின்றி உயிர் பிரியச்செய்யும்.** ப்ளேக் (Plague) நோயை தடுப்பதற்கும், சுகப்படுத்துவதற்கும் பயன்படும்.

**தலை.** உஷ்ணத்திற்குப்பின்னும், உஷ்ணமான வியர்வையின் பின்னும் மயக்கம்.

**இரைக்குடல்.** பாரமாய்த் தோன்றல், பசி இன்மை.

**முதுகு.** மூத்திரக்காய் பாகங்களில் சிரங்கு.

**கை, கால்கள்.** நடுநடுங்குதல்.

**சிறுநீர்.** தடைபட்டிருத்தல். இருமும்பொழுது சிறுநீர் வெளிப்படல்.

**சருமம்.** சிவந்த பொட்டுகள். பிளவையும், காந்தலும், குத்தெடுக்கும் வேதனையும். வேதனைகூடிய பருக்கள், கட்டிகள் முதலியவை.

**உறக்கம்.** அமைதியற்ற உறக்கம், உக்கிரமமான இருமலினல் உறங்க முடியாதிருத்தல்.

**(ஒ. ம.)** ஆர்சனிக்கம், பைரஜினியம், எச்சினேஷியா, அந்தரசீனம், பெல்லடோனு, ஏபிஸ்.

**ஏற்றம்.** இரவு.

**இறக்கம்.** புகை பிடித்தல்.

**வீரியம்.** 6 முதல் 30 வரை.

**குறிப்பு.** குழந்தைகளுக்கு தொண்டையில் கபம்கட்டியிருப்பதுபோன்ற சப்தம் எப்பொழுதும் கேட்டுக்கொண்டிருக்கும் நிலையை சட்டென குணப்படுத்தும்.

## டெல்லூரியம். Tellurium

(பொ. கூ.) சரீரம் பூராவும் வேதனை. சரீரத்திலிருந்து வெளிப்படுபவை துர்நாற்றம் கொண்டதாய் இருக்கும்.

**தலை.** ஞாபக மறதி. இடதுபக்க தலைவலி, முகத்தின் மாமிச தசைகள் வெட்டி வெட்டி இழுத்தல். சொறியெடுத்தல்.

**கண்கள்.** கட்டியான, சொறியெடுக்கும் இமைகள்' காட்டராக்ட்.

**காதுகள்.** காதுகளின் பின் சரும வியாதிகள். துர் நாற்றமுள்ள சீழ் வடிதல். செவிடு.
**இரைக்குடல்.** காலியாய் இருப்பதுபோன்ற உணர்ச்சி.
**முதுகு.** தீவிரமுதுகுவேதனையும் வலதுபக்கம்கூடுதலும்.
**ஏற்றம்.** இரவில் இளைப்பாறும்பொழுது, குளிர்ந்தகாலம் இருமல், சிரித்தல், வேதனையுள்ள பக்கமாய் படுத்தல்.
**வீரியம்.** 6 முதல் கூடுதல். மிகவும் மெதுவாகவே வேலை செய்யும்.

## டெரிபின்த். Terebinthina.

(பொ. கூ.) மூத்திரக்காய் வியாதி, இரத்தப்பெருக்கு முதலியவை.
**தலை.** இறுகக் கட்டியிருப்பதுபோன்ற வேதனை. பார்வை மங்கலுடன் ஏற்படும் கிறுகிறுப்பு.
**கண்கள்.** தீவிர வேதனை. கூடுதல் மதுபானம் உபயோகிப்பதால் ஏற்படும் பார்வை மங்கல்.
**காதுகள்.** தன் சப்தமே தனக்கு மாறுபாடுள்ளதாகக் கேட்டல். இரைச்சல். சீழ் வடிதல்.
**வாய்.** நாக்கு உலர்ந்தும் சிவந்தும், பிரகாசமாயும் இருக்கும். நாக்கின் நுனியில் காந்தல், துர் நாற்றம். தொண்டை அடைத்தல்.
**இரைக்குடல்.** குமட்டலும், வாந்தியும்.
**வயறு.** கூடுதல் பொருமல். வயிற்றோட்டம். மலம் துர் நாற்றமுள்ளதாயும், தண்ணீர் போன்றதாயும் இருக்கும். குடலிலிருந்து இரத்தப்பெருக்கு, கிருமி, நீர் அடித்தல், மலம் கழித்தபின் தளர்ச்சை.
**சிறுநீர்.** இரத்தம் கலந்திருத்தல், குறைவான சிறுநீர். தீவிர வியாதிகளின்பின் மூத்திரக்காய் வியாதியுறல்.
**பெண்.** கர்ப்பாசயத்தின் பாகத்தில் தீவிர காந்தல்.
**சுவாச உறுப்புகள்.** மூச்சுத் திணறல். இரத்தம் கலந்த எச்சில்.
**இரத்தாசயம்.** துரிதமாய் அடித்தல், விட்டுவிட்டு அடிக்கும் நாடி.
**முதுகு.** மூத்திரக்காய் பாகத்தில் காந்தல் கொண்ட வேதனை.
**சருமம்.** பற்பல சரும வியாதிகள்.

ஜ்வரம். கூடுதல் தாகத்துடன் கூடிய அதிக உஷ்ணம். உலர்ந்த நாக்கு. விஷ ஜ்வரத்தில், இரத்தப்பெருக்கு, ஜன்னி, மயக்கம் முதலியன.
(ஒ, ம.) அலுமென், சீகேல், காந்தரிஸ், நைட்ரிக் ஆசிட்.
**வீரியம்.** ஒன்று முதல் உயர்ந்த வீரியங்கள் வரை.

## டிக்குரியம். Teucrium Marum.

(பொ. கூ.) மூக்கு மலக்குடல் முதலியவற்றைத் தாக்கும். சதை வளருதல் (Polypi). அதிக மருந்துகள் உபயோகப்படுத்தப்பட்டிருந்த நிலையில், இம்மருந்து பயன்படும். நாள்பட்ட பீனிசத்திற்கு மிக முக்கிய மருந்து.
**தலை.** முன் பக்க தலைவலியும், கமருவதால் ஏற்றமும்.
**மூக்கு. சதை வளருதல்.** நாள் பட்ட பீனிசம். துர்நாற்றம். மூக்கின் துவாரங்களில் ஊருவதுபோன்ற உணர்ச்சியும், தும்மலும்.
**இரைக்குடல்.** கறுத்த பச்சை நிறமுள்ள கூடுதல்வாந்தி. முதுகு வேதனையோடுகூடிய விக்கல். அசாதாரணமான ஆகாரம் அருந்தியதும் விக்கல்.
**சுவாச உறுப்புகள்.** உலர்ந்த இருமல், மூச்சுக்குழாய் கூசுதல். கூடுதல் கபம்.
**கை, கால்கள்.** கால் பெருவிரல்களில் வேதனை.
**மலக்குடல்.** மூலவாயில் கடியும், இரவில் படுக்கையில் கூடுதலும். கிருமி மலம்கழித்தபின் மலக்குடலில் கிருமி ஊருதல்.
**சருமம்.** நகங்களின் உள் பழுக்கும் சரும வியாதிகள்.
**வீரியம்.** ஒன்று முதல் உயர்ந்த வீரியங்கள் வரை.

## தூஜா. Thuja Occidentalis.

(பொ. கூ.) சருமம் இரத்தம், மூத்திரக்காய், மூளை முதலியவற்றைத் தாக்கும். பாலுண்ணி, பஞ்சுபோன்ற கழலை முதலியவை உண்டாகுதல் மிக முக்கிய குறியாகும். சருமத்திலும், ஜனனேந்திரிய உறுப்புகளிலும், வேலை செய்து ஹனிமானால் கண்டுபிடிக்கப்பட்ட சைக்கோஸிஸ் மியாசத்தில் உண்டாகும் பாலுண்ணிபோன்ற சரும குறிகள் தோன்றும். அம்மை குத்துவதால் ஏற்படும் கெடுதல்கள், சீழ் வடியும் மேகநோய், மெலிந்துபோதல் சரீரத்தின் இடதுபக்கத்தில் கூடுதல் வேலை செய்யும்.

வைசூரி நோயில் ஆழமான குழிகள் சருமத்தில் விழாமல் பாதுகாக்கும்.

**மனம்.** தன்னுடைய பக்கத்தில் அன்னியர் ஒருவர் இருப்பதாகத்தோன்றுதல் சரீரமும், ஆவியும் பிரிக்கப்பட்டிருப்பதாக தோன்றல். வயிற்றில் உயிர் உள்ள பிராணி இருப்பதாக தோன்றல். சங்கீதம், அழுகையையும் நடுநடுக்கத்தையும் உண்டுபண்ணும்.

**தலை.** ஆணிகொண்டு குத்துவதுபோன்ற வேதனை. தேயிலை அருந்துவதால் ஏற்படும்வேதனை. (செலீனியம்) இடதுபக்கத் தலைவலி, செள்பிடித்தல், முடி உதிர்தல்.

**கண்கள்.** வேதனை, இரவில் இமைகள் ஒட்டிக்கொள்ளுதல். சதை வளர்தல்.

**காதுகள்.** துர் நாற்றமுள்ள சீழ் வெளிப்படுதல், விழுங்கும்பொழுது நறுநறுவென்று சப்தம் கேட்டல், சதை வளர்தல்.

**மூக்கு.** நாள்பட்ட பீனிசம், கட்டியான பச்சைநிறம் கொண்ட சளி. இரத்தமும் பழுப்பும் கலந்த சளி, மூக்கை சிந்தும்பொழுது பற்களில் வேதனை. அடி மூக்கில் வேதனை.

**வாய்.** நுனி நாக்கில் வேதனை. வெண்மை நிறம் கொண்ட கொப்புளங்கள். பானங்கள் மடமடவென்ற சப்தத்தோடு இரைக்குடலுக்கு செல்லுதல்.

**இரைக்குடல்.** பசியின்மை, மாமிசத்திற்கும் உருளைக் கிழங்கிற்கும் வெறுப்பு, கொழுப்பான ஆகாரம் அருந்திய பின் ஏப்பம், வெங்காயம் அருந்த முடிவதில்லை. தேயிலை அருந்துவதால் குமட்டல்.

**வயறு.** பொருமல், நாட்பட்ட வயிற்ருேட்டமும், காலை ஆகாரத்திற்குப்பின் கூடுதலும். வாய்வு அங்குமிங்கும் வந்து முட்டல். மடமடவென்ற சப்தமும் வேதனையும், தீவிர மலக்குடல் வேதனையோடுகூடிய மலச்சிக்கல். வெளியில் வந்த மலம் கீழே விழாமல் திரும்பவும் உள் சென்றுவிடல். (சிலிசியா, சானிக்குலா)-வீங்கிய மூலம். மூலவாய் வெடித்திருத்தல். மூலவாயின் பக்கத்தில் பாலுண்ணி. உயிர்உள்ளபிராணி இருப்பதாய்தோன்றல்

**சிறுநீர்.** சிறுநீர்தாரையில் வீக்கம். சிறுநீர் ஒடுக்கமாயும், பிரிந்தும் வெளிப்படல். சிறுநீர் கழித்தபின் வேதனை.

திடீரென்று சிறுநீர் கழிக்க ஏவப்படலும், அதை அடக்க முடியாதிருத்தலும்.

**ஆண்.** ஆண்குறியின் நுனியில் வீக்கமும் வேதனையும். **மேக நோயால் உண்டாகும் வாதம். மேக நோய்.** விதைக்கொட்டைகள் கட்டியாகுதல். மூத்திரப்பையின் வாயில் காந்தலும், வேதனையும், அடிக்கடி துரிதமாக சிறுநீர்கழிக்க ஏவப்படலும்.

**பெண்.** மர்மஸ்தானத்தில் உணர்ச்சி கூடுதலும் பாலுண்ணியும். கட்டியான பச்சைநிறம்கொண்ட அதிக வெள்ளை படுதல். இடது முட்டைப்பையில் வேதனை. குறைவான மாதவிடாயும், மாதவிடாய் தடைபட்டிருத்தலும். சதை வளர்தல். மாதவிடாய்க்கு முன்பு அதிக வேதனை.

**சுவாச உறுப்புகள்.** நடுப்பகல் உலர்ந்த இருமல். வயற்றின் குழியில் வேதனை. நெஞ்சில் குத்தெடுக்கும் வேதனையும், குளிர்பானங்களினால் ஏற்றமும். **குழந்தைகளின் இழுப்பு நோய்** (நட்ரம் சல்ப்).

**கை, கால்கள்.** நடக்கும்பொழுது உறுப்புகள், மரம் அல்லது கண்ணாடியால் செய்யப்பட்டவை என்றும் எளிதில் உடைந்துவிடும் என்றும் தோன்றல். விரல்களின் நுனி வீங்கியும், உணர்ச்சியற்றும் இருத்தல். இணைப்புகளில் சப்தம். குதிகாலில் வேதனை. நகங்கள் வெடித்தல். உள் நோக்கி வளரும் நகம்.

**சருமம்.** சதை வளருதல். பாலுண்ணி, பிளவை, ஆழமான புண்கள், முதலியவை முக்கியமாக மூலத்திலும் மர்மஸ்தானத்திலும் காணப்படும். இனிப்பு சுவை கொண்ட வியர்வை. கோளங்கள் வீங்குதலும் வேதனையும். மறைக்கப்பட்ட பாகங்களில் மாத்திரம் சரும வியாதியும் சொறிவதால் கூடுதலும்.

**உறக்கம்.** எப்பொழுதும் உறக்கமற்ற நிலை.

**ஜுரம்.** குளிர் துடைகளில் ஆரம்பிக்கும். மறைக்கப்பட்டிருக்கும் பாகங்களில் மாத்திரம் வியர்வை அல்லது தலையைத் தவிர மற்றெல்லாப் பாகங்களிலும் வியர்வை. வியர்வை எடுத்தல் குறிப்பாக உறங்கும்பொழுது இருக்கும். தேன் மணம் கொண்ட அதிக வியர்வை

**ஏற்றம்.** இரவு, படுக்கையின் உஷ்ணம். காலையிலும்,

மாலையிலும் மூன்றுமணிக்கு.
**ஏற்றம்**. குளிர், ஈரமானகாற்று, காலை ஆகாரத்திற்குப் பின், கொழுப்பு, காப்பி, அம்மை குத்துதல்.
**இறக்கம்.** இடது பக்கம். அவயவத்தை சுருக்குதல்.
(ஒ. ம.) கால்கேரியா, சிலிசியா, நட்ரம் சல்ப், ஏபிஸ், பல்சடில்லா, மெடோரினம், மெர்குறி, சினபரிஸ், டெரிபிந்த், நைட்ரிக் ஆசிட், ஆன்டிமனி டார்டாரிகம்.
**வீரியம்.** தாய் திராவகத்தை சருமக்குறிகளில் வெளிப் பிரயோகமாக உபயோகிக்கலாம். அருந்துவதற்கு திரா வகம் முதல் மிக உயர்ந்த வீரியங்கள் வரை.
**குறிப்பு.** குறிகள் ஒத்திருந்தால் அமுக்கப்பட்ட மேக நோய் உபாதைகளுக்கு மிகவும் பயன்படும்.

## டிறில்லியம். Trillium Pendulum.

(பொ. கூ.) அதிக சோர்வுடனும் தளர்ச்சியுடனும் ஏற்ப டும் இரத்தப்பெருக்கு. இரத்தமும் சளியும் கலந்த நாள் பட்ட வயிற்ருேட்டம் கர்ப்பச்சிதைவு.
**தலை.** நெற்றியில் வேதனையும், சங்கீதத்தால் கூடுதலும்.
**கண்கள்.** யாவும் நீலமாய் தோன்றல்.
**மூக்கு.** இரத்தப்பெருக்கு (மில்லிபோலியம்).
**வாய்.** எகிரிலிருந்து இரத்தம் கசிதல், பல் பிடுங்கியபின் உண்டாகும் இரத்தப்பெருக்கு.
**இரைக்குடல்.** உஷ்ணமும், காந்தலும், தோன்றி ஆகா ரக்குழாய்வழி மேலேறுதல் இரத்த வாந்தி.
**மலக்குடல்.** நாள்பட்ட வயிற்ருேட்டம். இரத்தம்கலந்த மலம். இரத்தபேதி.
**பெண்.** கர்ப்பாசயத்திலிருந்து இரத்தப்பெருக்கும், இடுப் பும், முதுகும் துண்டுதுண்டாய் விழுவதுபோன்ற வேதனையும். **இறுகக் கட்டுவதால் குறைவு.** சிறிது அசை வினுல்கூட இரத்தப்பெருக்கு கூடுதல். கர்ப்பாசயம் வெளியில் தள்ளப்படுதல். மஞ்சள் நிறம்கொண்ட நூல் போன்ற வெள்ளை படுதல், பிரசவத்திற்குபின் சிறுநீர் கசிந்துகொண்டே இருத்தல்.
**சுவாச உறுப்புகள்.** இருமலும், இரத்தம் துப்புதலும். மூச்சுத் திணறல்.

(ஒ. ம.) இப்பிகாக் சபீனு, லாச்சஸிஸ், ஹமாமலிஸ்.
**வீரியம்.** திராவகம் முதல் உயர்ந்த வீரியங்கள் வரை.

## டுபர்குலினம். Tuberculinum.

(பொ கூ.) சருமமும், குடலும் தம் வேலையை சரியாய் செய்யாத நிலையில், மிக உயர்ந்த வீரியத்தில் கையாண்டால் கூட இம்மருந்து ஆபத்தை விளைவிக்கும். நாள்பட்ட மூத்திரப்பை வியாதிகளில் மிகவும் பயன்படும். க்ஷயரோகம், வலிப்பு நோய், சோர்வு, குழந்தைகளை மெலிவுறச்செய்யும் நாள்பட்ட வயிற்றோட்டம்.

**மலம்.** முற்கோபம். அடிக்கடி குணம் மாறுதல். மிருகங்களுக்கு, குறிப்பாக நாய்களுக்கு பயம். கெட்ட வார்த்தைகளினுல் ஏசுதல்.

**தலை.** தீவிர தலைவலி. தலையைச்சுற்றி இரும்பு பட்டையால் இறுகக்கட்டியிருப்பதுபோன்ற வேதனை. சிறு பருக்கள் கூட்டம் கூட்டமாய் உண்டாகுதல்.

**காதுகள்.** பிடிவாதமான துர் நாற்றமுள்ள சீழ் வடிதல்.

**இரைக்குடல்.** மாமிசத்திற்கு வெறுப்பு. வயிற்றினுள் ஒன்றுமில்லாதது போன்ற பசிகொடுக்கும் உணர்ச்சி. குளிர்ந்த பால் அருந்த விரும்பல்.

**வயறு.** அதிகாலையில் திடீரென உண்டாகும் வயிற்றோட்டமும், கட்டியான காவி நிறமும் கொண்ட துர் நாற்றமுள்ள மிகுந்த சக்தியுடன் வெளிப்படும் மலமும்.

**பெண்.** முலைகளில் கட்டிகள் உண்டாகுதல். காலத்திற்கு முந்தியும் அதிகமாயும், அதிக நாட்கள் நீடித்திருக்கும் மாதவிடாய், மாதவிடாய் வெளிப்பட்டதும் வேதனை கூடுதல்.

**சுவாச உறுப்பு.** டான்சில்ஸ் வீங்குதல். உறக்கத்தில் உலர்ந்த கடுமையான இருமல். கட்டியான கபம் வெளிப்படல். கூடுதல் காற்றுள்ள இடத்தில்கூட மூச்சு திணறல். குளிர்ந்த காற்றிற்கு விருப்பம், அதிக வியர்வையும், சரீரத்தில் கனம் குறைதலும்.

**முதுகு.** பிடரியிலிருந்து முதுகெலும்பு வழி பரவும் வேதனை. தோள்களுக்கு இடையில் அல்லது முதுகில் மேல்நோக்கிச் செல்லும் குளிர்.

**சருமம்.** நாள்பட்ட சரும நோய். கூடுதல் நமைச்சலும்

சொறியும். இரவில் கூடுதல். க்ஷயரோகக் குழந்தைக ளுக்கு உண்டாகும் சரும வியாதி.

**ஜ்வரம்.** விட்டு விட்டு வரும் ஜ்வரம். அதிக வியர்வை. குளிர்.

**ஏற்றம்.** அசைதல், சங்கீதம். நின்றுகொண்டிருத்தல். ஈரமான காலநிலை, அதிகாலை, உறக்கத்திற்குப் பின்.

**இறக்கம்.** திறந்த வெளிக்காற்று.

**வீரியம்.** ஆயிரமும் ஆயிரத்திற்கும் கூடுதலும்.

**குறிப்பு.** குழந்தைகளுக்கு அடிக்கடி 30-ம் வீரியத்தி லும் அதற்குக் கூடுதலும் கொடுக்கலாம். வயது முதிர்ந்த வர்களுக்கும், நாட்பட்ட வியாதியஸ்தர்களுக்கும் அடிக் கடி கொடுக்கக்கூடாது. இம்மருந்து வேலைசெய்யத்தவ றினால் சிபிலினம் என்னும்மருந்தை இதன்பின் உயர்ந்த வீரியத்தில் கொடுக்கவும். டுபர்குலினத்திற்குப் பின் ஹைட்ராஸ்டிஸ் என்ற மருந்தைக்கொடுப்பதால் சரீரத் தில் சதை உண்டாகும். க்ஷய ரோகத்தில் ஆயிரத்திற் கும் கூடிய வீரியத்தை பல வாரங்களுக்கு ஒருதடவை மாத்திரமே உபயோகிக்கவும். இரத்தாசயத்தின் நிலையை அறிந்தே இம்மருந்தை உபயோகிக்கவேண்டும். பலவீன மான இரத்தாசயத்தில் இம்மருந்து ஆபத்தை விளை விக்கும்.

## யுரேனியம் நைட்ரிகம். Uranium Nitricum.

(பொ. கு.) நீரழிவு, மூத்திரக்காய் வியாதிகள், கல்லீரல் வியாதிகள், இரத்த அமுத்தம், சரீரம் நீர் கொள்ளுதல், தலை. முன்கோபம், தீவிர வேதனை, மனசோர்பு.

**இரைக்குடல்.** அதிக தாகம், குமட்டல், வாந்தி, கூடு தல்பசி, வாய்வு புண், அதிக வாய்வு.

**சிறுநீர்.** கூடுதல், சிறுநீரை அடக்க முடியாதிருத்தல்.

**நீரழிவு.** மெலிந்துபோதல். சிறுநீர் தாரையில் காந்தல். குழந்தைகள் உறக்கத்தில் சிறுநீர் கழித்தல்.

**ஆண்.** ஆண்தன்மையில்லாமை. இந்திரியம் தானுகவே கழிதல். ஆண்குறி, குளிராயும் அதிக வியர்வையுள்ள தாயும் இருக்கும்.

(ஒ. ம.) சிஜியம், பாஸ்பாரிக் ஆசிட், லாக்டிக் ஆசிட், அர்ஜெண்டம் நைட்றிகம், காளிபைக், ஆர்சனிக்கம்.

**வீரியம்.** 2x முதல் உயர்ந்த வீரியங்கள் வரை.

## அர்டிகா அரன்ஸ் Urtica Urens.

(பொ. கூ.) சரும வியாதி, வருடந்தோறும் குறிப்பிட்ட காலத்தில் வரும் குறிகள். சரும நோயும் வாதமும்.

**தலை.** கிறுகிறுப்பு தலைவலியும், மண்ணீரல் வேதனையும்.

**வயறு.** கூடுதல் சளியுடன் மலம் கழியும், நாள்பட்ட வயிற்றோட்டம்.

**ஆண்.** விதைக்கொட்டை பையில் சொறியால் உறங்க முடியாதிருத்தல். விதைக்கொட்டை பை வீக்கம்.

**பெண்.** குறைவான பால். கர்ப்பாசயத்திலிருந்துஇரத்தப் பெருக்கு சருமத்தை உரிக்கும்வெள்ளைபடுதல். முலைகள் அதிகமாய் வீங்குதல்.

**கை, கால்கள்.** கறண்டைகளிலும், மணிக்கட்டுகளிலும் வேதனை.

**சருமம்.** தீவிர சொறியெடுக்கும் சரும வியாதி சரும வியாதியும், வாதமும் மாறி மாறி வருதல்.

**ஜுரம்.** விஷ ஜுரம் வாதஜுரம்.

**ஏற்றம்.** தண்ணீர், குளிர்ந்த ஈரமான காற்று, தொடுதல்.

(ஒ. ம.) நட்ரம்மூர், லர்க்கானினம், ரஸ்டாக்ஸ், ஏபீஸ், பல்சடில்லா.

**வீரியம்.** தாய்திராவகம் முதல் உயர்ந்தவீரியங்கள்வரை.

## வேக்ஸினினம் Vaccininum.

(பொ. கூ.) சருமவியாதிகள், அஜீரணம், குளிர், கக்குவான்.

**மனம்.** முன்கோபம், அமைதியற்றிருத்தல்.

**தலை.** நெற்றியில் வேதனை.

**சருமம்.** வைசூரியைப்போன்ற சரும வியாதிகள்.

(ஒ. ம.) வெரியோலினம், மெலாண்டிரினம், தூஜா.

**வீரியம்.** 6 முதல் உயர்ந்த வீரியங்கள் வரை.

## வெரியோலினம். Veriolinum.

(பொ. கூ.) வைசூரி நோயை தடுக்கவும், உக்கிரமத்தை குறைக்கவும், குணப்படுத்தவும் பயன்படும்.

**தலையும், மனமும்.** வைசூரி வந்துவிடும் என்ற பயம். காது மந்தம்.

**சுவாச உறுப்புகள்.** மூச்சு திணறல். இரத்தம் கலந்த கபம் இருமலுடன் வெளிப்படல். தொண்டையின் வலது

பாகத்தில் அடைப்பு இருப்பதாய் தோன்றல்
**முதுகு**. தீவிர முதுகு வேதனை.
**ஜுரம்**. உஷ்ணம் கூடிய ஜுரமும், துர் நாற்றமுள்ள வியர்வையும்.
**சருமம்**. கொப்பளங்கள், வைசூரி.
(ஒ. ம.) வேச்ஸினினம், மெலான்டிரினம்
**வீரியம்**. 6 முதல் உயர்ந்த வீரியங்கள் வரை.

## வெராட்ரம் ஆல்பம். Veratrum Album

(பொ. கூ.) **குளிர்ந்த, நீலநிற சருமத்துடன் உயிர்பிரியும் தருவாயில் பயன்படும்**. இரண சிகிற்சைக்குப்பின் நெற்றியில் குளிர்ந்த வியர்வை, வெளுத்த முகம், துரிதமான பலனற்ற நாடி முதலிய குறிகளுடன் ஏற்படும் அதிர்ச்சி. **கூடுதல் வாந்தி வயிற்றோட்டம்** முதலியவை மிக முக்கிய குறிகள்.
**மனம்**. அதிக சோர்பு, தன்னை சுற்றி நடப்பது ஒன்றிலும் கவலைகொள்ளாமல் சிலைபோல் இருத்தல். திடீரென்று சப்தம் போடுதல். சபித்தல். யாதொருகுறிக்கோளுமின்றி வீட்டைவிட்டு வெளியேறிஅங்குமிங்கும்அலைந்துதிரிதல்
**தலை**. நெற்றியில் குளிர்ந்த வியர்வை, குமட்டல், வாந்தி வயிற்றோட்டம், வெளுத்தமுகம், முதலியவற்றோடு கூடிய தலைவலி, பலவீனங்கொண்ட கழுத்து.
**கண்கள்**. கண்களைச்சுற்றி நீலவட்டம்.
**முகம்**. சோகம் நிறைந்த தோற்றம். பனிக்கட்டிபோன்ற குளிர்ச்சி. வெளுத்த நீல நிறம் கொண்ட முகம்.
**வாய்**. வெளுத்த குளிரான நாக்கு. நாக்கின் மத்திய பாகம் உலர்ந்திருத்தல். உப்பு சுவைகொண்ட எச்சில். பல்வலி.
**இரைக்குடல்**. தீவிர பசி, குளிர்ந்த தண்ணீருக்கு தாகமும் தண்ணீர் குடித்ததும் வாந்தியும், சூடான ஆகாரங்களுக்கு வெறுப்பு. அசைவதால்வாந்தி கூடுதல். பழவர்க்கங்கள், குளிர்ந்த பானங்கள் முதலியவற்றை விரும்பல். வாந்தி எடுத்தபின் அதிக பலவீனம்.
**வயறு**. குளிர்ச்சியாய் தோன்றல், மலம் கழிக்குமுன் வேதனை.

**மலக்குடல்.** உஷ்ணம் மலச்சிக்கல் முதலியவற்ருேடு கூடிய தலைவலி. மிகக் குளிர்ந்த சீதோஷ்ண நிலையினுல் குழந்தைகளுக்கு ஏற்படும் மலச்சிக்கல். மிகசிரமத்தோடு மலங்கழிததலும் குளிர்ந்த வியர்வையும். மிகசக்தியோடும் வேதனையோடும் வெளிப்படும் வயிற்ருேட்டமும் அதன் பின் பலவீனமும். வாந்திபேதி. (காலரா)

**சுவாச உறுப்புகள்.** குரல்அடைப்பு, நெஞ்சில்கபத்தின் சப்தம், இருமி வெளியில் தள்ள முடியாத கபம். வயது முதிர்ந்தவர்களில் பிராங்கைடீஸ் என்ற நோய். பானங்கள் அருந்துவதால், குறிப்பாக குளிர்ந்த தண்ணீர் அருந்துவதால் ஏற்படும் இருமல். இருமும்போது சிறு நீர் வெளிப்படல்.

**இரத்தாசயம்.** பயத்தோடுகூடிய துடிதுடிப்பு. பலனற்ற நாடி. கூடுதல் புகையிலை உபயோகிப்பதால் இரத்தாசயம் வியாதியுறல். ஹோமியோ முறையில் இரத்தாசயத்தின்வேலையை துரிதப்படுத்த மிகவும்பயன்படும் மருந்து.

**பெண்.** காலத்திற்கு பிந்திய மாதவிடாய் அதிகமாயும், பலவீனப்படுத்தும் தன்மையுள்ள மாதவிடாய். குளிர்ந்த வியர்வை, வயிற்ருேட்டம் முதலியவற்ருேடு கூடிய மாதவிடாய் வேதனை. சிறு சரீர வேலையினுல் கூட மயக்கமடைதல். மாதவிடாய்க்கு முன்பு சேர்க்கைக்கு கூடுதல் விருப்பம்.

**சருமம்.** நீல நிறம், குளிர்ச்சி, ஜுரம், தீவிர குளிரும் தாகமும்.

**ஏற்றம்.** இரவு, குளிர்ந்த காலம்.

**இறக்கம்.** நடந்துகொண்டிருத்தல், உஷ்ணம்.

(ஒ. ம.) குப்ரம், ஆர்சனிகம், குப்ரம் ஆர்சனிக்கம்.

**வீரியம்.** 1 முதல் 30 வரை போதுமானது. வயிற்ருேட்டத்தில் மிகக் குறைந்த வீரியங்கள் உபயோகிக்கக் கூடாது.

## எக்ஸ்றே. X-Ray

(பொ. கூ.) புற்று நோயில் அதிக வேதனை. சரும வியாதிகள் மியாசங்கள் கலந்த நிலை.

**தலை.** குத்தெடுக்கும் வேதனை. விறைத்த கழுத்து.

**வாய்.** உலர்ந்த நாக்கு. விழுங்கும்போது தொண்டை

யில் வேதனை, குமட்டல்.

**ஆண்.** சிற்றின்பத்திற்கு விருப்பமில்லாமை. உள் அமுக்கப்பட்ட மேக நோயை திரும்ப வெளிப்படுத்தும்.

**கை, கால்கள்.** வாத வேதனை.

**சருமம்.** உலர்ந்த கூடுதல் சொறியெடுக்கும் சரும வியாதிகள். நகங்கள் கட்டியாகுதல்.

**ஏற்றம்.** படுக்கை, நடுப்பகல், மாலை, இரவு, திறந்த வெளிக்காற்று.

**வீரியம்.** 12 முதல் உயர்ந்த வீரியங்கள் வரை.

## சிங்கம் மெட்டாலிக்கம். Zincum Metalicum

(பொ. கூ.) நரம்புக்கிரமம், மூளை வியாதியுறுவதால் ஏற்படும் பக்கவாதம். முதுகெலும்பு வியாதியுறல், வலிப்பு நோய், சோவை, சர்மநோய் முதலியவை. சரீரத்திலிருந்து வெளிப்படவேண்டியவை, வெளிப்படுவதால் குறிகள் இறக்கமடையும்.

**மனம்.** ஞாபகசக்தி குறைவு, சப்தத்திற்கு, உணர்ச்சி கூடுதல், வேலை செய்யவோ, பேசவோ விருப்பமில்லாதிருத்தல். குற்றம் செய்திருப்பதால் கைது செய்யப்படுவோம் என்ற பயம்.

**தலை.** இடது பக்கமாய் விழுந்துவிடுவான் என்ற பயம். திராட்ச ரசம் அருந்துவதால் தலைவலி, மூளையில் நீர் கொள்ளல். தலையை அங்குமிங்கும் உருட்டல்.

**கண்கள்.** நமைச்சல், கூடுதல் நீர் வடிதல். இமைகள் சொறி எடுத்தல், கண்களை உருட்டல். ஒருபகுதி பார்வை மங்கிப்போதல். மாறுகண்.

**காது.** துர் நாற்றமுள்ள சீழ் வடிதல்.

**முகம்.** வெழுத்த உதடுகள். கன்னங்களில் சொறி எடுக்கும் சரும வியாதி.

**வாய்.** வாயின் மூலைகள் வெடித்திருத்தல். பற்கள் முளைக்க கஷ்டப்படல். அடிக்கடி கபத்தை தொண்டையிலிருந்து மாற்ற விரும்பல்.

**இரைக்குடல்.** விக்கல், குமட்டல், கசப்பான சளி வாந்தி எடுத்தல். இனிப்பான பதார்த்தங்களால் காந்தல் உண்டாகுதல். காலை 11 மணிக்கு அதிகப்பசி. (சல்பர்) பேராசையுடன் ஆகாரம் அருந்துதல்.

**வயறு.** சிறிதளவு ஆகாரத்திற்குப்பின் கூட வேதனை
**சிறுநீர்.** பின்பக்கமாக சரிந்திருந்து மாத்திரமே சிறு நீர் கழிக்க முடிதல். நடக்கும்பொழுதோ, தும்மும்பொழுதோ இருமும்பொழுதோ, தன்னை அறியாமலேயே சிறு நீர் பிரிதல்.

**மலக்குடல்.** கட்டியான குறைவான மலம். மலச்சிக்கல், குழந்தைகளில் பச்சை நிறம் கொண்ட வயிற்ருேட்டம். வயிற்ருேட்டம் திடீரென்று நின்றுபோவதால் ஏற்படும் உபாதைகள்.

**ஆண்.** விதைக்கொட்டைகள் வீங்கியும், மேல்நோக்கி இழுக்கப்பட்டும் இருத்தல். அடிக்கடி தீவிரமாய் எழும்புதல். முடிகழிதல்.

**பெண்.** இடது முட்டைப்பையில் வேதனை. மாதவிடாய் தடைபடல், அல்லது காலத்திற்குப்பின் வெளிப்படல். வேதனைகொண்ட முலைகள். முலைக்காம்புகளில் புண். இரவில் அதிகமாய்மாதவிடாய் வெளிப்படல். மாதவிடாய் காலத்தில் குறிகள் இறக்கமடைதல்.

**சுவாச உறுப்புகள்.** நெஞ்சில் வேதனையும் இறுக்கமான உணர்ச்சியும். பலவீனப்படுத்தும் உக்கிரமான இருமலும் இனிப்பான சாதனங்கள் அருந்துவதால் கூடுதலும். இருமும்பொழுதுகுழந்தை மர்மஸ்தானத்தை பிடித்துக்கொள்ளும்.

**முதுகு.** அடி முதுகில் வேதனை. முதுகைத் தொடுவது விரும்புவதில்லை. முதுகெலும்பில் காந்தல்.

**கை, கால்கள்.** பலவீனம். நடுநடுக்கம். பாதங்களை எப்பொழுதும் அசைத்துக்கொண்டிருத்தல். கால்களில் நரம்பு பெரிதாகுதல் (Vericose Veins).

**உறக்கம்.** உறக்கத்தில் சப்தம் போடுதல். உறக்கத்தில் பாதங்களை அசைத்துக்கொண்டிருத்தல்.

**சருமம்.** பாதங்களிலும், கால்களிலும், மூட்டைப்பூச்சிகள் ஊருவதுபோன்ற உணர்ச்சியால் உறங்கமுடியாதிருத்தல். சர்ம வியாதிகள்.

**ஜுரம்.** குளிரால் நடுநடுக்கம். இரவிலும், பாதங்களிலும் வியர்வை கூடுதல்.

**ஏற்றம்.** மாதவிடாய் காலம், தொடுதல், மாலை 5 மணி முதல் 7 மணி வரை.

**இறக்கம்.** ஆகாரம் அருந்தும்பொழுது, சரீரத்தில் வெளிப்படவேண்டியவை வெளிப்படுதல். சர்மக் குறிகள் தோன்றல்.
(ஒ ம.) அகேரிக்கஸ், இக்னேஷியா, ப்ளம்பம், பல்சடில்லா, ஹெல்லிபோரஸ்.
**வீரியம்.** 2 முதல் உயர்ந்த வீரியங்கள் வரை.

## சிஞ்சிபர். Zingiber

(பொ. கூ.) ஜனனேந்திரிய உறுப்புகள், சுவாச உறுப்புகள், மூத்திரக்காய் முதலியவற்றை தாக்கும்.
**இரைக்குடல்.** ஆகாரத்தின் சுவை அதிக நேரம் நீடித்திருக்கும். இரைக்குடல் பாரமாய்த் தோன்றும்.
**வயறு.** வேதனையும் அதிகமான வயிற்ருேட்டமும். அழுக்கடைந்த அல்லது சுத்தமற்ற ஜலம் அருந்துவதால் ஏற்படும் வயிற்ருேட்டம். உஷ்ணமான வேதனை கொடுக்கும் மூலவியாதி.
**சிறுநீர்.** அடிக்கடி சிறுநீர் கழிக்க விருப்பம். விஷஜுரத்திற்குபின் சிறுநீர் வெளியாகாதிருத்தல்.
**ஆண்.** கூடுதல் சிற்றின்ப விருப்பம், இந்திரியம் தானுகவே கழிதல்.
**சுவாச உறுப்புகள்.** மூச்சு திணறல். இழுப்பு நோயும், காலையில் கூடுதலும், உலர்ந்த இருமல்.
(ஒ. ம.) கலேடியம்.
**வீரியம்.** 1 முதல் உயர்ந்த வீரியம் வரை.

---

# களஞ்சியம். Repertory.

---

இப்புத்தகத்தின் மெட்டீரியா மெடிக்கா பகுதியில் எழுதப்படாத பல மருந்துகள் களஞ்சியப் பகுதியில் குறிப்பிடப்பட்டிருப்பதை வாசகர்கள் பார்க்கலாம். அம் மருந்துகளின் குறிகளை இதர ஆசிரியர்களின் புத்தகங் ளிலிருந்து அறிந்துகொள்ளவும் களஞ்சியப்பகுதி சம் பூரணமானதாய் இருக்கவேண்டுமென்ற நோக்கத்துட னேயே அம்மருந்துகளும் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஆசிரியரால் வெளியிடப்படவிருக்கும் மெட்டீரியா மெடிக்கா பல சுருள்கள் கொண்டதும், ஆயிரத்திற்கும் அதிகம் மருந்துகளைக்கொண்டதுமாகையால், அப்புத்த கம் வெளிவர சிறிது தாமதமாகலாம். மொத்த குறிக ளுக்கொத்த மருந்தை எளிதில் தெரிவு செய்ய, இப்பகுதி பல தலையங்கங்களாக பிரிக்கப்பட்டிருக்கிறது. களஞ்சி யம் மிகவும் விரிவானதெனினும், குறிகள் சரியான முறையில் பதிவுசெய்யப்பட்டிருந்தால், மொத்த குறிக ளுக்கொத்த மருந்தை தெரிவு செய்வதில் அதிக சிரமம் இராது என்பதே ஆசிரியரின் கருத்து. ஏனெனில், ஏற்றம், இறக்கம், விருப்பம், வெறுப்பு முதலியவைத் தனி தனி தலையங்கமாக பிரிக்கப்பட்டிருப்பதால் குறி களை ஒத்துப்பார்ப்பது மிக எளிது. மேலும், மனக்குறி களும் மிகவும் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. இவை யாவும் ஒன்றுசேர்ந்து வாசகர்களுக்கு மிகவும் பயன்படும் என்பதே ஆசிரியரின் கருத்து. (மு. ம.) என்றால் முக் கிய மருந்துகள் என்றும், (பொ. ம.) என்றால் பொது வான மருந்துகள் என்றும் பொருள்.

## மனம். Mind

**கையிலிருந்து தன்னை அறியாமலே சாதனங்களை நழுவ விடல்.** (மு. ம.) ஏபிஸ், போவிஸ்டா, நட்ரம்மூர் (பொ. ம.) எத்தூசா, ஹெல்லிபோரஸ், இக்னேஷியா லேச்சசிஸ், நக்ஸ்வாமிகா.

**மூளை சோர்பு.** (Brain Fag) (மு. ம.) எத்தூசா, அன கார்டியம், கால்காரியா கார், கால்காரியா பாஸ், கோக்கு

லஸ்: காளி பாஸ், பாஸ்பாரிக் ஆசிட், பாஸ்பரஸ், பிக்ரிக் ஆசிட். (பொ. ம.) எய்லாந்தஸ்,அல்பல்பா, அர்ஜென்டம் நைட், அவனு சாட்டிவா, பேப்டிஷியா, குப்ரம் மெட் ஜெல்சமியம், நட்ரம் மூர், நக்ஸ்வாமிகா, சிலிசியா, ஸிங்கம்.

**சிரமமான கிரகிக்கும் தன்மை.** (Comprehension difficult) (மு. ம.) எய்லான்தஸ், அனகார்டியம், பேப்டிஷியா, ஜெல்சமியம், ஹெல்லிபோரஸ், நக்ஸ்மாஸ், ஸிங்கம். (பொ. ம) அக்னஸ், லைக்கோபோடியம், நட்ரம் கார்ப், ஓபியம். பாஸ்பாரிக் ஆசிட், பாஸ்பரஸ், ப்ளம்பம்.

**உணர்வற்றிருத்தல்.** (Loss of Consciousness) (மு. ம.) எய்லான்தஸ், பெல்லடோனு, கானபிஸ் இன்டிகா, சிக்குட்டா, ஹெல்லிபோரஸ், ஹைட்ரோசியானிக் ஆசிட், ஹயோசியாமஸ், ஸிங்கம். (பொ. ம.) அப்சிந்தியம், ஆர்னிக்கா, ஜெல்சமியம், மூரியாடிக் ஆசிட், நக்ஸ்மாஸ், ஓபியம், ஸ்ட்ராமோனியம்.

**வளர்ச்சி பெருத மனநிலை** (Cretinism) (மு. ம) எத்தூசா, அனகார்டியம், பெரிட்டா கார்ப். (பொ. ம) ஆர்னிக்கா, பெரிட்டாமூர், கால்காரியா பாஸ், ஹெல்லிபோரஸ், இக்னேஷியா, அயோடம், நட்ரம் கார்ப், பாஸ்பாரிக் ஆசிட்.

**ஜன்னி** (Delirium)**மதுபான மிகுதியால்** (மு. ம.) அகரிகஸ், கானபிஸ் இன்டிகா, காப்சிகம், காளிப்ரோம், ஸ்ட்ராமோனியம், (பொ. ம.) அகோனைட், ஆன்டிமனி டார்டாரிக்கம், பெல்லடோனு, சினியம் சல்ப், சிமிசிபூகா, டிஜிட்டாலிஸ், காளிபாஸ், லேச்சசிஸ், நக்ஸ்வாமிகா.

**ஜன்னியில் படுக்கையின் துணி முதலியவற்றை நுள்ளி நுள்ளிஎடுத்தல்.** (Picking at Bedclothes) Carphologia (மு. ம.) பெல்லடோனு, ஹயோசியாமஸ், ஸ்ட்ருமோனியம். (பொ. ம) அகரிகஸ், ஹெல்லிபோரஸ், மூரியாடிக் ஆசிட், ஓபியம்.

**ஜன்னியில் குரைக்கவும்; கடிக்கவும், அடிக்கவும் சாதனங்களை உடைக்கவும் தோன்றல்.** (மு. ம) பெல்லடோனு, காந்தாரிஸ், ஸ்ட்ராமோனியம்.

(பொ. ம) குப்ரம் மெட், ஹயோசியாமஸ், சீக்கேல், வெராட்றம் ஆல்பம், வெராட்றம் விர்.

**ஜன்னியில் எப்பொழுதும் பேசிக்கொண்டிருத்தல்** (Loquacity) (மு. ம.) அகரிகஸ், சிமிசிபூகா ஹயோசியாமஸ், லேச்சசிஸ், ஸ்ட்ருமோனியம். (பொ. ம.) பெல்லடோனு, கானபிஸ் இன்டிகா, ஓபியம், வெராட்ரம் ஆல்பம்.

**ஜன்னியில் பாடுதலும் ஆடுதலும்** (மு. ம.) பெல்லடோனு, ஹயோசியாமஸ். (பொ. ம) அகரிக்கஸ், ஸ்ட்ருமோனியம், வெராட்ரம் ஆல்பம்.

**ஜன்னியில் மெதுவாய் முனங்குதல்** (மு. ம) எய்லாந்தஸ், ஹெல்லிபோரஸ், மூரியாடிக் ஆசிட், பாஸ்பாரிக் ஆசிட், றஸ்டாக்ஸ், (பொ.ம.) அகெரிக்கஸ் ஆற்ணிக்கா, ஏபிஸ், பேப்டிஷியா, பெல்லடோனு, ஹயோசியாமஸ், லேச்சசிஸ், பாஸ்பரஸ், ஸ்ட்ருமோனியம், வெராட்றம் ஆல்பம்.

**ஜன்னியில் துரிதமாய் பதில் உரைத்தல்** (மு. ம.) லேச்சசிஸ். (பொ. ம.) சிமிசிபூகா, ஸ்ட்ராமோனியம், வெராட்ரம் ஆல்பம்

**மெதுவாய் பதில் உரைத்தல்** (மு.ம.) ஹெல்லிபோரஸ், பாஸ்பாரிக் ஆசிட். (பொ. ம.) ஆற்னிக்கா, பேப்டிஷியா, ஹயோசியாமஸ், பாஸ்பரஸ், சல்பர்.

**கோமா** (Coma) (மு. ம.) எய்லாந்தஸ், ஏபிஸ், பேப்டிஷியா, ஹயோசியாமஸ், ஓபியம், பாஸ்பாரிக் ஆசிட், றஸ்டாக்ஸ், ஸிங்கப். (பொ ம) அகெரிக்கஸ், அம்மோனியம் கார்ப், ஆண்டிமனி டார்டாரிக்கம், ஆற்னிக்கா, பெல்லடோனு, ஜெல்சமியம், ஹெல்லிபோரஸ், லேச்சசிஸ், நக்ஸ் மாஸ்டா, ஸட்ருமோனியம், வெராட்ரம், ஆல்பம்.

**அறிவிழந்த நிலே** (Dementia) (மு. ம) அகெரிக்கஸ், அனக்கார்டியம், பெல்லடோனு, ஹயோசியாமஸ், பாஸ்பாரிக் ஆசிட் பாஸ்பரஸ். பிக்ரிக் ஆசிட், வெராட்ரம் ஆல்பம், (பொ.ம.) கால்கேரியாகார்ப், கால்கேரியா பாஸ், கானபிஸ் இண்டிகா, கோனியம் ஹெல்லிபோரஸ், இக்னேஷியா, மெற்குறி, ஓபியம், சல்பர்.

**வலிப்பு நோயால்** (Epileptic) (மு. ம.) பெல்லடோனு,

சிலிசியா, (பொ. ம.) அகோனைட், சிமிசிபூகா, குப்ரம்மெட், ஸ்ட்ருமோனியம், வெராட்ரம் விர்.

**தனக்குள் தானே இன்பம் அனுபவித்தல்**
(Masturbation) (மு. ம.) அக்னஸ், பாஸ்பாரிக் ஆசிட், ஸ்டேபிஸ் கரியா, (பொ.ம.) கால்கேரியா பாஸ், காந்தரீஸ், காஸ்டிகம், நகஸ்வாமிகா, ஓபியம், பாஸ்பரஸ், பிக்ரிக் ஆசிட்.

**பக்கவாத நோயுடன்** (மு. ம.) அகோனைட், பாஸ்பரஸ் ப்ளம்பம். (பொ. ம.) அகரிக்கஸ், ஆற்சனிக், பெல்லடோனா, கானபிஸ் இன்டிகா, சிமிசிபூகா, குப்ரம்மெட், ஹயோசியாமஸ், இக்னேஷியா, மெற்குறி, ஸ்ட்ருமோனியம், வெராட்ரம் விர், ஸிங்கம்.

**மனோவிகாரம்** (Emotion)
